# தண்ணீர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87/50

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

461458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்

கே. டானியல்

விடியல் பதிப்பகம்
*கோவை — 641015*

461458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்பதிப்பு : நவம்பர், 1993

நூல் தலைப்பு : தண்ணீர்

ஆசிரியர் : கே. டானியல்

வெளியீடு :
விடியல் பதிப்பகம்
3. மாரியம்மன் கோயில் வீதி
உப்பிலிபாளையம்
கோவை — 641015

அச்சிட்டோர் :
அலைகள் அச்சகம்,
36, தெற்குச் சிவன்கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை : ரூ. 35–00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

# மதிப்புரை

திரு. டானியலுடைய பிரிவினைக் கேட்டு என் உள்ளம் மிகவும் வருந்தியது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தம்பதிகள் மூலமாகவே அவர் எனக்கு அறிமுகமானார். எனினும், அவரை நேரடியாகச் சந்திப்பதற்கு முன்னரே அவருக்குப் பிரியாவிடை கூறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது.

உலகின் எங்கணுமே சாதாரண மக்கள் தங்களுடைய உணர்வுகளைப் புலப்படுத்த வழியற்றவர்களாயுள்ளனர். சமூக ரீதியிலே ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் உண்மையானதாகும். திரு. டானியல் யாழ்ப்பாணச் சமூக மட்டத்தில் மிகக் கீழ் நிலையைச் சேர்ந்தவர் என அறிகிறேன். இந்நிலையில் சமூகத்தின் அடிநிலை மக்களின் உண்மைக் குரல்களை வெளிப்படுத்த இவர் பொருத்தமான அருமையான ஓர் ஆளாவார். அதாவது, திரு. டானியல் மிகச் சிறந்த உண்மையான மக்கள் கலைஞராவார் (an excellent folk-narrator in a true sense.)

இவருடைய நாவல்கள் எனக்கு திருமதி மிச்சிக்கொ இஷிமுரெ அவர்களையே ஞாபகப்படுத்துகின்றன. நவீன மக்கள் கலைஞரெனப் போற்றப்படும் திருமதி இஷிமுரெ யப்பானிய மக்களின் மன அடித்தளத்தில் மறைந்திருக்கும் உணர்வுகளையும் ஏக்கங்களையும் நன்கு தம் நாவல்களிலே புலப்படுத்தும் திறமை பெற்றவர். இவர் தெற்கு யப்பானில் கியூஷ- என்னும் பிரதேசத்திலுள்ள மிநமத்த என்னும் நகரில் தொழில் புரிகின்றார். இவ்விடம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெர்குரி நஞ்சு காரணமாக ஏற்படும் மிக மோசமான சூழல் அசுத்த நோயாகிய ''மிநமத்த நோய்'' என்பதற்குப் பேர்போனது. யப்பானின் அண்மைய விரைவான பொருளாதார வளர்ச்சியின் தீமைப் பண்பினைக் காட்டும் குறியீட்டுப் பண்புடையதாக மிநமத்த நகர் அமைகின்றது. இங்கு வாழும் மக்களுடைய பேச்சு மொழியை உபயோகித்து, இம்மக்களுக்கும் இயற்கைக்குமிருந்த அமைதி நிலையினை அழித்த அரசின் கொள்கைக்கெதிரான நாவல்களை திருமதி இஷிமுரெ எழுதுகின்றார். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை ஆழமான பரிமாண அடிப்படையில் உலகு தழுவியதாக ஆக்கக்கூடிய பண்பினை இவருடைய எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

திரு. டானியலுக்கும் திருமதி இஷிமுரெக்குமிடையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றுள் மிக முக்கியமான பண்பு இருவரும் தம் ஆழமான அன்பினை மக்களுடன் பிணைத்துக் கொண்டமையாகும். இது ஒரு சிறந்த மக்கட்கலைஞருக்கு வேண்டிய முக்கிய பண்பு மாகும்.

திரு. டானியல் முன்னொரு தடவை எனக்குக் கடிதம் எழுதிய பொழுது தன்னால் ஆங்கிலத்தில் எழுத முடியவில்லை என வருத்தமடைவதாகக் குறிப்பிட்டார். ஆனால், நான் அதை வித்தியாசமான முறையில் நோக்கினேன். ஆங்கில மொழி அறிவின் தாக்கத்திலேற்படும் சிக்கல்களெதுவுமின்றி, வாழும் தமிழ் மொழியினை மிகத் திறமையுடன் கையாண்டு, தன்னுடைய தூய்மையான சுதேசிய மனத்தினுதவியுடன் இவரால் திறமையான நாவல்கள் இதனாலேயே எழுத முடிகின்றது என்று நான் நம்புகிறேன். தற்காலத்தவர் பலர் பிறமொழித் தாக்கத்தால், உண்மை உணர்வுகளை இனங்காண முடியாமற் போய்விடுவதுண்டு. டானியல் இந்நிலையினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல நூல்களை இவர் எழுதுவதற்கு எண்ணியிருந்திருக்கலாம். ஆனால் அவர் தற்சமயம் எமக்களித்துள்ள அழகாக எழுதப்பட்டுள்ள நூல்களை எம்முடைய பொதுச் சொத்தாகக் கொண்டு அவற்றை வாசித்து மகிழ்வோம்.

மானிடவியல் ரீதியிலே திரு. டானியலுடைய நாவல்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினை விவரணஞ் செய்யும் ஒழுங்கான இனச்சரிதைகள் (ethnographies) எனக் கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமுமில்லை. யாழ்ப்பாணத்து மரபுவழிப் பண்பாட்டின் அடிச்சுவடுகளைக் கண்டு கொள்வதற்கான பல அருமையான தகவல்கள் அவருடைய நாவல்களிலே காணப்படுகின்றன. உதாரணமாக, திருமணம், இறப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் கிரியைகள், நடைமுறைகள் ஆகியவற்றைச் சரியாக இவர் அவதானித்துக் கூறியவை பலவற்றால் நான் பெரும் பயன் அடைந்துள்ளேன். இவற்றின் மூலமாக உறவு முறை பற்றியும் சாதிகளுக்கிடையேயுள்ள உறவுகள் பற்றியும் நாம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. அத்துடன் கிராமவாசிகளின் நாளாந்த வாழ்க்கையின் நடத்தை, பேச்சு ஆகியனவற்றின் அவருடைய விவரணம் எம்முடைய ஆய்வுக்குப் பெரிதும் உதவுகின்றது.

எதிர்காலத்தில் யப்பானிய வாசகர்களுக்கு டானியலுடைய எழுத்துக்களை அறிமுகப் படுத்தும் எண்ணமும் எமக்கு உண்டு. **தண்ணீர்** என்னும் இந்நாவலை வெளிக்கொணர முயற்சிகள் செய்யும் பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதிகளைப் பாராட்டுகிறேன்.

**யசுமச செக்கினெ**
மானிடவியல் இணைப் பேராசிரியர்
கக்சுயின் பெண்கள் பல்கலைக் கல்லூரி
தோக்கியோ,
யப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனக்கும் இந்தத் தண்ணீருக்குமிடையே கடந்த மூன்று மாதகாலமாக ஒரு ஓட்டப்பந்தயம் நடந்து இன்று (19-1-86) அது முடிந்திருக்கிறது. இதில் நான் வென்று விட்டேன்.

இப்போது எனக்கு ஒரு கண் பார்வை இல்லை. கால்கள் இரண்டும் முழந்தாளுக்குக் கீழ் செயலிழந்து அந்த நிலை மேலே மேலே தாவிக்கொண்டிருக்கின்றது. தொடர்ச்சியாக ஒருமணி நேரத்திற்கு மேல் ஒரு குறிக்கப்பட்ட விஷயத்தை யோசித்தால் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பு அந்தச் சிந்தனைத் தொடர் விடுபட்டுப்போய் விடுகிறது. இத்தனையும் உட்பட ''உடலில் நோய் காணாத உறுப்புக்கள் ஒன்றுமே இல்லை'' என்று சுருக்கமாகச் சொல்லி விடுவதுதான் பொருத்தமானதாகும். இந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் ''தண்ணீர்'' என்ற இந்த நாவலை எழுத முற்பட்டேன். அப்போதிருந்தே நோய்கள் என்னைத் துரத்திவர நான் வளையமிட்டு ஓடி நோயைப் பின்புறமாகத் துரத்திச் சென்று சென்று இறுதியில் இன்று நான் வென்று விட்டேன் — தண்ணீரை எழுதி முடித்து விட்டேன். முடிந்த அளவு இந்தத் தண்ணீர் தொடர்பாக நீண்டகாலமாக என் மனதோடு நின்ற பல காரியங்களை நினைவுக்குக் கொண்டு வந்து தண்ணீருக்குள்ளே அவைகளைக் கலக்கி விடவேண்டிய இடங்களில் கலந்து விட்டதில் அதிக அளவுக்கு நான் பெருந் தவறுகள் செய்துவிடவில்லை என்றே நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தண்ணீர் நாவல் நிகழ்ந்ததாகக் கொள்ளப் படும் களம் எனக்குப் புதியதல்ல. அல்லது இந்தத் தண்ணீரில் நான் உலவ விட்ட பாத்திரங்களும் எனக்குப் புதியவை அல்ல. எனது காலத்திற்கு முற்பட்ட பாத்திரங் களும் என்னால் கேள்வியில் அறியப்பட்டவைகளே— ஐயந்திரிபற அறியப்பட்டவைகளே!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடிதண்ணீர்ப் பிரச்சனை மிக நீண்ட காலப் பிரச்சனை ஆகும். அதிலும் வடமராட்சிப் பகுதிக்கு இது மிகமிக மோசமான பிரச் சனையாகும் என்பதனை, உன்னிப்பாகக் கவனிப்பவர்கள் நன்குணர்வர். ஒரு குடம் நீருக்காக மூன்று மைல்களுக் கப்பால் நடந்து சென்று தங்கள் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்பவர்கள் மிக அதிகம். பல தலைமுறைகளாக இந்தத் துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகிறது. இன்றுங கூட அப்படியேதான் இருக்கிறது. மிக மோசமான இந்த நடைமுறையைத் தனியாகப் பிரித்தெடுத்து இதை முதன்மைப்படுத்திப் பார்க்க இதற்கான தீர்வைக் காண இன்னும் ஒரு தமிழ்ப் பரம்பரை தோன்றவில்லையே என்று எண்ணும்போது மனதுக்குள் ஆத்திரப்பட்டு தீர்வதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத நிலையில் பலர் இருந்தும் கூட மொத்தமாக எதுவுமே நடந்து விட வில்லை.

சுமார் மூன்றுமாத காலத்திற்கு முன் தாழ்த்தப்பட்ட மக்கள் பலாத்காரமாக நீர் எடுத்ததற்காக, ஒரு நல்ல தண்ணீர்க் கிணற்றில் நஞ்சைக் கலந்து விட்டார்கள். இந்தச் சம்பவத்தை அறிந்து அந்த இடத்திற்கு நேராகப் போயிருந்தபோது, அந்த மக்கள் பட்ட அவதியையும், ஆத்திரத்தையும், வேதனையையும் கண்டபோது எனக்குக் கண்ணீர் வந்தது. ''இப்படி வாழ்வும் ஒரு வாழ்வா?'' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டு சில நடவடிக் கைகளுக்கு ஆலோசனைக் கூறித் திரும்பி விட்டதுமே இந்தத் தண்ணீரை எழுதத் தொடங்கிவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தண்ணீர் நாவல் பிறப்பெடுத்ததற்கான சம்பவச் சுருக்கமாகும்.

இதைப் பத்தாவது அத்தியாயம் வரை எழுதிவிட்டு அதற்குமேல் ஒரு வரிகூட எழுதமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட நான் மறுபடியும் படுக்கைக்குத் தள்ளப் பட்டேன். நாவலைத் தொடர்வது சிரமமாகிவிட்டது. படுக்கையில் கிடந்தபடியேயாவது நான் வாய்மொழியாகச் சொல்ல வேறொருவரைக் கொண்டு எழுதுவிக்கலாமா என்று யோசித்து, எனது கடைசி மகள் தாரகாவைக் கொண்டு எழுத முயற்சித்தேன். அவள் உலகஞானம் அற்றவள். வயது பதின்மூன்றுதான். எனது உணர்வு களைப் புரிந்துகொண்டு நாவலைத் தொடர அவளால் இயலவில்லை. பின்பு எனது அன்புக்குரியவரான தெணி யானை அழைத்து நாவலின் முடிந்த விபரத்தைக் கூறி, இரண்டு நாட்கள் அவரை எனது வீட்டோடு தங்க வைத்து, முடிந்ததை அவர் வாய்மூலமாகவே படிக்க வைத்து மிகுதியை இப்படி இப்படித்தான் செய்ய வேண்டு மென்ற எனது அபிப்பிராயங்களையும் அவரிடம் கலந்து கொண்டபோது, அவர் அதை ஒப்புக்கொண்டு முடிந்த பகுதியை எடுத்துச் சென்றார்.

சில நாட்களில் மறுபடியும் படுக்கையை விட்டு எழுந்தேன். அப்போது வந்திருந்த அவர், ''உங்களால் முடிந்தவரை எழுதுங்கள் முடியாத நிலையில் நான் தொடர்கிறேன்'' என உறுதி அளித்தார்.

மறுபடியும் தண்ணீரைத் தொடர்ந்தேன்.

'கலாமணி' எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு இளைஞர். ஒரு பட்டதாரி ஆசிரியர். என்னிடம் பெரு மதிப்புக் கொண்டவர். தண்ணீர் நாவலைப் பற்றி அவரிடம் நான் கூறியபோது அவர், ''தண்ணீரை எழுதி முடிக்கும் பணி உங்களால்தான் செய்து முடிக்கப்பட வேண்டும். முடியாதபட்சத்தில் தெணியானுக்கு உதவியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் இருந்து முடித்து வைப்போம்'' என்று எனக்கு வாக்குறுதி தந்தார். மறுபடியும் உற்சாகம் பிறந்து விட்டது. ஒவ்வொரு அத்தியாயங்களாக எழுதி எழுதி அவர்கள் பார்வைக்கென அனுப்பி வைத்தேன். இன்றோடு கடைசி அத்தியாயம் எழுதி முடிந்தது. எனது கடமையில் நான் சாவை முந்திவிட்டேன்— வெற்றி பெற்றுவிட்டேன், மறுவாரம் மனத்திருப்தியோடு இழந்துபோன கண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்வதற்காகவும், உடலின் ஏனைய நோய்களைக் கணக்கெடுப்பதற்காகவும் தமிழகம் போக இருக்கிறேன். அதற்கிடையே இந்த முன்னுரையையும் எழுதி முடித்துவிட வேண்டியமையால் இம்முன்னுரையை எழுதுகிறேன். சிலவேளை எனது உடல் தமிழக மண்ணுக்கே உரியதாகி விடவும் கூடுமல்லவா! அங்குள்ள எனது இலக்கிய நண்பர்கள் என்னை எப்படியும் குணப் படுத்தி விடுவதான சபதத்தோடு அழைத்திருக் கிறார்கள்.

இந்தத் தண்ணீருக்குள் நீங்கள் இறங்கும்போது எனது முந்திய நாவல்களில் எல்லாம் கண்டிராத பல புதிய காரியங்களைக் காண்பீர்கள்.

எனது பஞ்சமர் நாவல் வரிசைக்குள் தண்ணீரையும் உட்படுத்தினால் முறையே **பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள்** என்பவைகளோடு தண்ணீரையும் சேர்த்துக் கொள்வீர்கள். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்திலிருந்து பஞ்சம மக்கள் தண்ணீருக் காக பட்ட கஷ்டங்கள், வேதனைகள், மனக்கொதிப்புகள், போராட்டங்கள், ஏனைய நடவடிக்கைகள் ஆகிய வற்றினை தண்ணீருக்குள் நீங்கள் காண்பீர்கள்.

''வர்க்க முரண்பாட்டுக்கு உட்பட்டவைகளே உலகின் சகல நடவடிக்கைகளும்'' என்ற கோட்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான் என்பது எல்லோ ராலும் என்னைப்பற்றி ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். அதேவேளை மனித வரலாற்றில் சிற்சில வேளை களில் விதிவிலக்காகச் சில பாத்திரங்களும் அமைந்து விடுவதுண்டு. இந்தத் தனிமனித செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் மேல்வர்க்க உள் முரண்பாடுகள் காரண மாக மனிதாபிமானத்தை நோக்கி மேலோங்கிவிடுவதும் உண்டு. ஆனால் அது நிரந்தரமானதல்ல. இதனை இந்தத் தண்ணீரில் வரும் இரண்டொரு பாத்திரங்களுக்கூடாக நீங்கள் பார்ப்பீர்கள்.

''முற்காலத்துக் குரங்குதான் இன்றைய காலத்து மனிதன்'' என்பது விஞ்ஞானரீதியாக எவ்வளவு உண்மையோ அதேபோன்றுதான் சற்று முற்காலத்து வேடுவன்தான் இன்றைய நவீன மனிதனுமாவான் என்பதும் உண்மையாகும்.

ஒரு நூறு ஆண்டளவுக்கு முந்திய யாழ்ப்பாணத்து மனிதன், உடும்பு, மரநாவி, கீரி, விலாங்கு, ஆமை, குளத்து மீன்கள், புனுகுப்பூனை போன்ற பலவற்றை வேட்டையாடி உணவாகக் கொண்டிருக்கிறான் என் பதனை தண்ணீரில் நீங்கள் படித்துவிட்டு, இந்த யாழ்ப் பாணத்துத் தமிழன்தானா இன்று சைவமும், புனிதமும், சுத்த போஜனம் பற்றியும் பெருமை அடித்துக்கொள் கிறான்? என்று ஆச்சரியப்படுவீர்கள். பெரும் நீண்டகால வரலாற்று ரீதியில் இதைப் பார்க்க மறுத்தாலும், சமீப காலம் வரை எம்மோடு வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கை யில் நடந்துள்ள இந்த நிகழ்வுகளைப் பார்த்து நாம் வெட்கப்பட வேண்டிய ஒரு அவசியமும் இன்னும் ஏற்பட வில்லை. இந்த வாழ்க்கை உண்மைகளை எழுத்தில் கொடுப்பதற்காக என்மீது ஆத்திரப்பட வேண்டியது மில்லை. ''இப்படியெல்லாம், நமது சமீபகாலத்திலே முன்னோர்கள்கூட நடந்திருக்கிறார்கள்'' என்று மனதுக் குள்ளேயே ஒப்புக்கொண்டு விட்டாலே போதுமானது.

'ஓடாவி' என்ற ஒரு சாதி யாழ்ப்பாணத்தில் இருக் கிறது. இந்தத் தண்ணீரில் பம்பிடிசிங்கி என்ற ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடாவிச் சாதிப் பெண்ணை உலாவவிட்டிருக்கிறேன். பெருஞ்சாதிக்கும் கீழ் சாதிக்குமிடையே அவள் வாழ்ந்த வாழ்வு சித்திரிக்கப்படுகிறது. இறுதியில் அவள் தண்ணீரின் பெருமதிப்புக்குரியவளாகிவிட்ட ஒருஉண்மை வரலாற்றை நீங்கள் படிப்பீர்கள்.

இதுவரை நான் பல நாவல்களை எழுதியிருக்கிறேன். பல பாத்திரங்களைப் படைத்து உலாவவிட்டிருக்கிறேன். ஆனால் தண்ணீரில் வரும் ஓடாவிப் பெண் பப்பிடி சிங்கியைப் பற்றிய ஒரு நிகழ்வு வரும்போதும், மாதன் என்ற தோட்டி ஒருவன் நல்ல தண்ணீருக்காகக் கிணறு தோண்டும் ஒரு பங்காளியாக மாறியபோது நடந்து கொண்ட ஒரு நிகழ்வின்போது, நான் கண்ணீர் விட்டு அழுதுவிட்டேன் என்று கூறினால் நீங்கள் என்னைப் பொய்யன் என்று கூறிவிடமாட்டீர்கள். இவர்களைப் பற்றி நீங்கள் படிக்கத்தான் போகிறீர்கள். படிக்கும்போது கண்டிப்பாக அழத்தான் போகிறீர்கள். எனது நாவல்கள் எதிலும் எந்தப் பாத்திரங்களும் என்னை இப்படிச் செய்த தில்லை.

பிள்ளை வயிற்றோடு செத்துப்போன ஒரு இளம் பெண்ணின் வயிற்றைக் கிழித்து அக்குழந்தைக் கட்டையைத் தாயின் கட்டையோடு வைத்துக் கொளுத்தும் காட்டுமிராண்டி வழக்கத்தை இங்குள்ள பெருந்தமிழன் சிறப்பு நிகழ்ச்சியாகச் செய்து வந்திருக்கிறான்.

''தாழ்த்தப்பட்ட மகன் கடல் மீன் தின்னக்கூடாது குளமீன்தான் அவன் தின்ன வேண்டும்'' என்று எழுத்தில் இல்லாத் தேசவழமைச் சட்டம் வைத்திருக்கிறான்.

பள்ளனோ நளவனோ பறையன்வீட்டில்தின்றுவிட்டால் தனது சாதிக்கு வந்தது இழுக்கெனக் கருதி அதற்கேற்ற தண்டனைகளை வழங்கி, தங்கள் சாதியின் கௌரவத்தை நிலைநாட்டியிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாம் இங்கு நடந்திருக்கின்றன.

இந்த யாழ்ப்பாண மண்ணில் நடந்திருக்கின்றன.

அதுவும் ஒரு நூறு வருடங்களுக்குள் நடந்திருக்கின்றன.

இப்படி எல்லாமான யாழ்ப்பாணத்து அதுவும் வடமராட்சித் தமிழனின் வாழ்க்கை இந்தத் தண்ணீருக்குள்ளே வருகிறது.

சமீபத்தில் எனது படைப்புகளைப் படிப்பவர்கள் ''மனித இனத்தின் புனிதத் தன்மைகளைத்தான் இலக்கியமாக்கி எழுத்தில் கொடுக்கவேண்டும் என்பதற்குப் பதில் அதன் புனிதத் தன்மைகளை விட அருவருப்பானவைகளைத்தான் இவர் படைப்புகளில் காணமுடிகிறது'' என்று குற்றப்பத்திரிக்கை படிக்கின்றனர். அருவருப்பானவைகளும் அசிங்கமானவைகளுந்தான் எமது யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வில் மலிந்தவை என்பதனை இவர்கள் மனதால்கூடத் தொட்டுப் பார்க்கப் பிடிவாதமாக மறுப்பதனால்தான் இந்தவித எண்ணத்திலிருந்து விடுபட முடியாமல் இருக்கிறார்கள்.

''சத்தியமே வாழ்வு, சத்தியத்திற்காகவே இவ்வுடல் பொருள் ஆவி'' என்றெல்லாம் நியாயம் பேசுபவர்கள் நம்முள் அதிகம். இவர்கள் எல்லாம் இன்றைய சமூக அமைப்பில் தங்கள் சத்தியத்தைப் பேணிக்காத்து வாழ முடிகிறதா? ஏன் அப்படி முடியவில்லை. இவர்கள் இந்தச் சமூக அமைப்பு முறையைச் சாஸ்வதமாக நம்பி அதற்கேற்பவே தங்களைப் பழக்கிக்கொண்டுள்ளவர்கள். இந்தப் புதிய அமைப்புக்குமேல் நாளைக்கு ஒரு புதிய சமூகம் அமைக்கப்படும் என்ற எண்ணம் கிஞ்சித்தும் இவர்கள் மனதில் இருப்பதில்லை, அப்படி இருக்குமானால்தான் அந்தப் புதிய சமூக அமைப்புக்கு வழிவிடும் விதத்தில் அவர்கள் தங்களைத் தயார்ப் படுத்திக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னம் இருந்த சமூக அமைப்பு முறைதான், அவர்களது கட்புலனுக்கு இன்று தெரிகிறது. ஆனால் அது அணுப் பிரமாணங்களாக வளர்ச்சியடைந்து வருவதை அவதானிப்பது கடினமான காரியமாயினும் இந்த அணுப் பிரமாண மாற்றங்கள் இறுதியான ஒரு முழு மாற்றத்திற்குக் கொண்டு செல்கின்றன என்பதனை ஏதாவது ஒரு புரட்சிகரமான நிகழ்வுக்குப் பின்புதான் இவர்கள் ஒப்புக் கொள்வார்கள். பொதுவில் இலக்கியகாரனினது கடமை அப்போதைக்கப் போது அணுவளவான இந்தச் சிறு மாற்றங்களுக்கான பாதைகளைத் திறப்பதற்கான பணிகளைச் செய்து கொண்டு, நிகழப்போகும் அந்தப் புரட்சிகர மாற்றத்திற்கான காலத்தைத் துரிதப்படுத்திக் கொண்டே காத்திருக்க வேண்டியதுதான். இதனோடு மட்டும் நின்றுவிடாமல் கலை இலக்கியங்களுக்கப்பால், சமூகத்தால் தோற்றுவிக்கப் படும் சமூக மாற்றத்திற்கான செயற்பாடுகளைக் கண்டும் காணாமலும் இருந்துவிடாது அவைகளை இனங்கண்டு வேண்டியவைகளுக்கு வேண்டிய விதத்தில் உதவி ஒத்தாசை தந்து உற்சாகம் அளிப்பதுதான். இதைச் செய்யத் தவறும் எந்த இலக்கியக்காரனும் தொடக்கத்தி லிருந்து தனது வாழ்நாள் கடைசிவரை வெறும் சமூகத் தைப் பார்த்து சரி பிழை கூறவும் திராணியற்ற ஒருவித முதுகெலும்பற்ற விமர்சனப் பூச்சியாகவே இருக்க முடியும். அவனால் மனித சமூகம் அடையப் போகும் பயன் எதுவுமே இருக்கப்போவதில்லை. வேண்டுமானால் 'நாலும் தெரிந்த கல்விமான்' என்ற பெயரைமட்டும் பெற்றுக்கொண்டிருக்கலாம். அவ்வளவுதான்.

யாழ்ப்பாணத்துக் கிராமிய வாழ்வு என்பது திட்ட வட்டமான ஒரு சமூக அமைப்பை முரசறையும் விதத்தில் இல்லை. பொறுப்புடன் இதைக் கவனிப்பவர்களுக்கு இது புரியாமற் போகாது. மிகவும் விசித்திரமான இந்தக் கலவைச் சமுதாய அமைப்பைக் கற்றுக்கொள்வதென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலேசுப்பட்ட ஒரு வேலை அல்ல. எந்தப் பாடப் புத்தகங்களிலும் இதற்கான வரைவிலக்கணங்கள் கிடைக்கா. உலகத்தில் உள்ள சகல இனங்களுக்குமெனச் சில வரையறுக்கப்பட்ட வாழ்க்கை இலக்கணங்கள் உண்டு. கலைக்கு ஒரு வடிவம், கல்விமுறைக்கு ஒரு வடிவம், வாழ்க்கை முறைக்கு ஒரு வடிவம், உடை நடை பாவனைக்கு ஒருவடிவம், உடல் வாகுக்கு ஒருவடிவம், பேச்சு அணுகுமுறைக்கு ஒரு வடிவம், இப்படி பல உண்டு. இவைகளில் எதற்கும் உட்படாத ஒன்றுதான் தமிழர் என்ற இனத்திற்குரியதாகப் பல காலம் இருந்து வருகிறது.

பெயரளவில் பெருமை தரக்கூடிய பல இலக்கிய ஏட்டுப் பிரதிகள், நீதி நூல்கள், வேதாந்த சித்தாந்தங்கள், வீர காவியங்கள் என்ற வரிசையில் எமக்குப் பல உண்டு. ஆனால் அவனது வாழ்க்கையோடு அவைகள் ஒன்றிப் போய் இருப்பதாக யாரும் விரல் அசைத்துச் சொல்லிவிட முடியாது. இத்தனை கலை வடிவங்களுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பினை நெருக்கப்படுத்தும் கடமை இனிமேல் தான் தமிழ் கலை இலக்கியக்காரரால் தொடங்கப்படவேண்டும். பல ஆயிரம் வருடங்கள் கழித்துத்தான் இந்தத் தொடர்ச்சி ஆக்கப்படப்போகிறது என்பதை எண்ணி யாரும் வெட்கப்படவேண்டியதில்லை. நம்முள் பெரும்பலர் பலவற்றில் பாண்டித்தியம் அடைகிறார்கள். பாண்டித்தியத் தேடலோடு அவர்களின் காலம் போய் விடுகிறது.

நம்முள் சிலர் சர்வகலாசாலைப் பரியாரிமார்களாக ஆகிவிடுகிறார்கள். பரியாரிமார் ஆனதும் அதிகம் மூளையை அலட்டிக் கொண்டதனால் அவர்களில் சிலருக்கு மூளைநோய் வந்துவிடுகிறது. அதனால் அவர்கள் தாங்கள் வந்த வழிகளை— மக்களை அறவே மூளையை விட்டுத் தூக்கி வீசி விட்டு ஒருவித வாழ்வை நடத்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுச் சிலர் வைத்திய நிபுணர்களாக வருகிறார்கள். மறுகணமே முற்றத்தில் குத்து விளக்கேற்றி கடவுள் கும்பிடு நடத்துகிறார்கள். இது பற்றிக் கேட்டால் இது 'நமது கலாசாரம்' என்று சொல்லித் தப்பித்துக்கொள்கிறார்கள்.

எமது யாழ்ப்பாணப் பகுதியில் விமர்சனப் புலிக்குட்டிகள் பல உண்டு. சிருஷ்டிக்கப்படும் ஒரு இலக்கியத்திலிருந்து, அதன் எழுத்தை, அதன் உருவத்தை, அதன் இலக்கண வரம்புகளை மட்டுமே எடைபோடுவார். உள்பொருள் பற்றிய கவலை அவர்களுக்கு இருப்பதில்லை.

பொறியியல் கல்வியைப் பெற்றுக்கொண்ட ஒருவர் அந்தக் கல்வியின் இறுதிப் பரீட்சை எழுதியானதும் பின்பு பொறியியல் சம்பந்தமாக எந்தவித பொறுப்புகளும் அற்றவராகி ஒரு மேசையில் இருந்து கண்களை மூடிக் கொண்டு வெறும் கையாட்டிப் பொம்மை போல கையொப்பம் இடும் வேலையை மட்டுமே செய்துகொண்டு வாழ்க்கையை ஓட்டுகிறார். காலக்கிரமத்தில் அவரால் கற்று அறியப்பட்ட அந்தத் தொழில் பற்றிய எந்தவித வளர்ச்சியையோ முதிர்ச்சியையோ காணமுடிவதில்லை. பதிலுக்கு பொறியியல் நுணுக்கங்களே மனதைவிட்டுப் போய்விடுகிறது.

ஒரு கணக்காளரை எடுத்துக்கொண்டால் பல வருட முயற்சியில் பரீட்சையை முடித்துக்கொண்ட அவர் பின்பு தலையிலிருந்து அடிவரை தன்னும் கணக்கைச் சரி பார்க்காமலே தனது ஒப்பத்தை இட்டுவிடுவதை வழக்கமாக்கிக் கொள்கிறார்.

இப்படிப் பல துறைகளிலும், கல்விக்கும், வாழ்க்கைக்கும், கற்றவைகளுக்கும் தொடர்பில்லாத வேண்டாத காரியங்களே நடந்து வருகின்றன.

இப்படி எதற்கும் பிற நீங்கலான இந்த வாழ்க்கை முறைக்குள் இந்த மனிதர்களைப் படித்து இவர்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான கணிப்பீட்டுக்குட்பட்ட ஒரு இலக்கியம் செய்வது இலகுவான ஒன்றாக முடியாது.

சமூக வாழ்க்கை முறையையும், நடைமுறையையும் கண்டறிந்து உண்மைக்கு விசுவாசமான இலக்கியம் படைக்க வேண்டும் என்று விரும்பும் நேர்மையான எந்த இலக்கியக்காரனுக்கும் இந்தப் பேருண்மையைத் தெரிய வைப்பது அவசியமானதாகும்.

இந்தத் தண்ணீருக்குள் நீங்கள் கைவிட்டு துலாவிப் பார்த்தால், கல்லும், முள்ளும், மாமிசமும், மலமும், நஞ்சும் போன்ற பஞ்ச பொருட்களைக் கண்டெடுப்பீர்கள். அத்தோடு தமிழர் உள்ளங்களின் திரட்சியான அசிங்கமாகத் திரண்டு கிடக்கும் நெஞ்சத் திரட்சிகளையும் கண்டெடுப்பீர்கள்.

வாழ்க்கையில் இழப்பதற்கு எதுவுமில்லாத மக்கள் பெருங்கூட்டத்தில் தன்மான உணர்வுகளையும், அந்த உணர்வுகள் வெடித்துக் கிளம்பும் விதங்களையும், அவைகளை எல்லாம் மகா புத்திசாலித்தமிழன் வெகு இலகுவில் வெற்றி கொள்ளும் உபாயங்களையும் கூடக் காண்பீர்கள்.

''எடுத்த எடுப்பிலேயே தலையைக்கிள்ளி எறிந்துவிட முயற்சிப்பது, அது முடியாத பட்சத்தில், நெஞ்சுக்கு நடுவே இருதயத்தில் குத்துவது, அதுவும் முடியாவிட்டால் அடிவயிற்றில் மொங்கி இடிப்பது, அதிலும் முடியவில்லை என்றால் நூலடி என்ற உயிர் நிலையத்தை நசிப்பது, சரி இவைகளிலெல்லாம் இந்த ஏழை மக்களை வென்றுவிட முடியவில்லை என்றால் இவர்களைப் பொன் மிதிதடியில் ஏற்றி, மிதிதடியையும் காலையும் சேர்த்து ஆணி அடித்து, மிதி தடியையும் நிலத்தோடு சேர்த்து அறைந்து அசைய முடியாமல் அறைந்து வைப்பது என்ற கடைசித் தந்திரோபாயத்தையும் பிரயோகித்து வெற்றி காண்பது'' ஆகியவைகள் யாவும் இந்தத் தண்ணீருக்கூடாக வெளிக்கொண்டு வரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாழ்ந்த சாதிப் பெண்களின் கற்புகள் சூறையாடப் பட்டமைக்குப் பழிதீர்க்கும் நோக்குடன் உயர் சாதிப் பெண்களை தாழ்ந்தசாதி ஆண்களுக்குச் சோரம் போகச் செய்யும் விதத்தில் எழுதி எழுதிப் பழிதீர்த்துக் கொள்கிறேன் என்பது என்மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டில் பிரதானமானதாகும். இதை நான் மறுத்து வருகிறேன். உயர்சாதிப் பெண்கள் தாழ்ந்தசாதி ஆண்களையும் தங்கள் போகப் பொருள்களாகக் கொள்கிறார்கள் என்ற நடைமுறை உண்மையைச் சுட்டிக்காட்டுவதே எனது நோக்கமாகும். அத்துடன் உங்கள் நாவல்களில் அத்தியாயத்திற்கு அத்தியாயம் உயர்ஜாதியினரால் செய்யப்படும் இரணியத்தனங்களைச் சித்தரித்து வந்தீர்கள். இப்படி எல்லாம் செய்தும் உங்கள் வெறி அடங்கவில்லையா? என்ற கேள்விகளைக் கேட்பவர்களுக்கு:

"எனது கடைசி மூச்சுப் போகும்வரை எனது பேனாவுக்கு வலுவிருக்கும் வரை, நான் காண எண்ணும் சமூக் நீதி அதிகாரபூர்வமாக பஞ்சப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும்வரை நான் இதைச் செய்து கொண்டே இருப்பேன். உடை நலங்காத— உடல் வாடாத— நாட்டுப்புற மண்களை மிதித்தும் அறியாத எந்த விமர்சனப் புலிக்குட்டிகளாலும் என்னைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதனை இந்த வேளை சொல்வதோடு "எங்கே முடிந்தால் செய்து பாருங்கள்!" என்று சபதமும் எடுத்துக் கொள்கிறேன்.

இத் தண்ணீருக்கு முன் நான் எழுதிய "பஞ்சகோணங்கள்" என்ற நாவலை எழுதி முடித்து, அது இப்போது அச்சுக்காகத் தமிழகத்தில் காத்து நிற்கிறது. எனது வர்க்க அரசியல் எதிரிகளின் சுயரூபத்தை விமர்சனம் செய்தே பஞ்சகோணங்களை முடித்திருக்கிறேன். இயற்கையால் எனக்கு மரணம் வராதவிடத்து அந்த நாவலால் எனக்கு அகால மரணம் ஏற்படக்கூடும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் எண்ணிக் கொண்டுதான் அதை எழுதினேன், அரசியல் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டும். பஞ்சம மக்கள் மேல் உயர் ஜாதியினர் எப்படிப் போர் தொடுத்து வருகின்றனர் என்பதனை பஞ்சகோணங்கள் சித்திரிக்கின்றது.

மொழிவாதம், இனவாதம், தேசியவாதம், அராஜக வாதம், பயங்கரவாதம் ஆகிய ஐந்து வகை வாதங்களுக் கூடாக இந்தத் தமிழ் — சிங்கள உயர்மட்ட அரசினைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை வெளி உலகிற்குக் கொண்டு வந்து எல்லாமிழந்திருக்கும் பஞ்சப்பட்ட மக்களின் கவனத்தை நியாயத்தின்பால் நிலைகொள்ளச் செய்வதையே பஞ்சகோணங்கள் அடிக்கருவாகக் கொண்டிருப்பதால் இந்த மக்களின் எதிர்காலத்திற்கு அது வெளிச்சமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்த வழியில் தண்ணீரும் கடந்த இந்த நூற்றாண்டு காலத்தை நினைவுக்குக் கொண்டு வரப் பேருதவியாக அமையும் என்பதுவும் எனது நம்பிக்கை.

நான் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைக்கு ஏற்ப எனக்குச் சரியெனப்படுபவைகளை நான் எழுதுவேன்; எனது மூளைக்கும் கைக்கும், பேனாவுக்கும் வலுவிருக்கும் வரை எழுதுவேன்'' என்பதனை மன நம்பிக்கையோடு நான் எஜமானர்களாகக் கொண்டுள்ள மக்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

தண்ணீர் எப்போது நூல் வடிவம் பெறும் என்று என்னால் உறுதிபண்ணிக்கூற முடியவில்லை. என்றோ எப்போதோ இது நூல் உருப் பெற்றாலும் அது அப்போதைக்கும் தேவையானதாகவே இருக்கும்.

ஏனெனில்— இம் முன்னுரையின் நடுப்பகுதியில் காட்டப் பட்டதைப்போல படித்துப் பட்டம் பெற்று, பெற்ற பட்டங்களைச் செயல்படுத்திச் சமூகத்திற்குத் தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகளைச் செய்யத் தவறி நிற்கும் மிகக் குறிப்பிடக் கூடிய குறைந்த பட்ச எண்ணிக்கையானவர்களை விட்டு விட்டால் மீதி இருப்பவர்களோ, மிகப் பெரும்பான்மை யானவர்களாகும். இந்தப் பெரும்பான்மையினர்களை ஒரு மொத்தக் கணக்கீட்டுக்கு உட்படுத்திப் பார்த்தால் அதில் ஒன்றிரண்டு வீதமானவர்களைத் தவிர ஏனையவர் கள் சாதாரண வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர் களாவர். இந்தச் சார்தாரணர்களை வர்க்க அடிப்படையில் ஒன்றுணைய விடாமல் தடுத்துக் கொண்டிருப்பவைகளை மூன்று பிரிவுக்குள் அடக்கிவிடலாம்.

ஒரு பிரிவினர் தமிழினத்தின் பழம் பெருமையில் இன்னமும் இறும்பூதெய்திக்கொண்டிருப்பவர்கள்.

இரண்டாவது பிரிவினர், பாரம்பரிய குடும்பப் பெரு மையை மனனம் செய்துகொண்டிருப்பவர்கள்.

மூன்றாவது பிரிவினர் தங்களுக்குக் கீழ் தங்களை விடத் தரங்குறைவாக மற்றவர்கள் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள்.

இம்மூன்று பிரிவைச் சேர்ந்தவர்களும் வர்க்க அடிப் படையில் தங்களையும் தங்களைச் சுற்றியும் சிந்திப்பார் களாயின் இந்த உலகத்தின் சட்டங்களையும் நியாயங் களையும் தங்களது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து விடுதல் மிகச் சுலபம் என்பதை உணர்வர். அதனால் பெருவாரியான இந்த மக்கள் கூட்டத்தின்மேல் நம்பிக்கை வைத்து அவர்களின் குறிக்கப்பட்ட மேம் பாட்டுக்காக இலக்கியம் செய்வதையே சரியான இலக்கியப் பணி என நான் நம்புகிறேன். நானோ, அன்றி என்னைப் போன்ற யாரோ இதை நம்புபவர்கள் இந்த மக்கள் கூட்டத்தினை ஊடுருவி, இவர்களின் ஆசாபாசங்கள், தேவைகள், சகலதையும் தவறின்றிப் படித்துக்கொள்ளல் அவசியமாகும். இந்த அவசியம் உணரப்பட்டு இந்த மக்களை ஊடுருவிச் செல்லும் போதுதான் இந்த மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திடையே உள்ள, குறைபாடுகள்—சின்ன நினைவுகள், போட்டி பூசல் ஆகியவைகளுக்கான உண்மைக் காரணங்களையும் படித்தறிய வாய்ப்புக் கிடைக்கும். அதன்மேல் தான் அவைகளின் தீர்வுக்கான பாதையையும் இலக்கிய வழியில் காட்டவும் முடியும். இந்த அறிவு கிடைக்கப் பெறாதவர்களால் இந்த மனிதர்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல எழுத முடியாதென்பது தெளிவானதாகும். இந்தத் தெளிவு கிடைக்கப்பெறாத பட்சத்தில் கடந்த காலம்போக இன்னும் ஆயிரம் ஆண்டு காலத்திற்கேனும். நாயன்மார்களையும, சித்தர்களையும், தவசிகளையும், திருஞானிகளையும், சுற்றிச் சுற்றித்தான் எமது கலைகளும்இலக்கியங்களும் வலம்வரப்போகின்றன. ஆனாலும் காலத்தின் தேவை தேரிழுப்பது, காவடி எடுப்பது, பூசைபுனர்க்காரங்கள் நடத்துவது, புராணங்கள் படிப்பது, சாமிகள் தீர்த்தமாடுவது, பழைய காவியங்கள் மேடை ஏறுவது போன்ற இன்னோரன்ன பல இயந்திரமயப்படுத்தப்படலாம். அவ்வளவுதான்.

ஏகலைவன் குருதட்சணைக்காகத் தனது பெருவிரலை வெட்டித் துரோணாச்சாரியாருக்குக் கொடுத்துவிட்டு மன அமைதி அடைந்தான் என்பதும், கண்ணப்பநாயனார் தனது கண்களைத் தோண்டித்தானம் செய்தார் என்பதும், சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக்கறி சமைத்து சாமியாரின் பசியை ஆற்றினார் என்பதும், கர்ணன் போர்க்களத்தில் தான் செய்த புண்ணிய தானங்களையே தானஞ் செய்து தனது உயிரை விட்டு விட்டான் என்பதும், இன்னும் நந்தன் தன்னைத் தானே அக்கினிக்கு இரையாக்கியதும் போன்றவைகள் இன்னும் பல ஆயிரம் வருடங்கள் நமது நீதிக்காகவே இருக்கப் போகிறது என்பது மறுதலிப்பதற்குரியவையாகப் போவதில்லை.

வெறும் பாறாங்கல்லை உடைப்பதைப்போல இந்த நம்பிக்கைகளை வெறுமனே உடைத்துவிட நினைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள்தனமானதாகும். பதிலாக இந்த நீதிகளுக்குப் பதிலாக புதியதோர் நீதி நியாயத்தை மக்கள் மனதில் பதியவைப்பது ஒன்றே இந்த பழையநீதிகளை அகற்றிவிட மார்க்கமாக அமையும். அந்தப் புதிய நீதியை பிறப்பிப்ப தென்பது தனியாக ஒரு இலக்கியக்காரனாலோ, அல்லது தனி ஒரு வீரசாகசக் கதாநாயகனாலோ சாதித்துவிடக் கூடிய ஒன்றல்ல. சமுத்திரம்போல மக்களைத் திரண் டெழச் செய்தவன் மூலந்தான் இதைச் சாதிக்க முடியும். எனவேதான் இந்த நீதியை அமைக்கும் பணியில் ஒரு இலக்கியக்காரன் ஒரு சிறு கல்லைத்தன்னும் இந்தப் பணிக்குத் தன்னால் பாவிக்க முடிந்தால் அதுவே போது மானதாகும். இதை நோக்கித்தான் சீனத்தின் இலக்கியக் காரன் லூசுன் "துப்பாக்கி வேட்டுக்கள் மத்தியில்தான் என்னால் எழுத முடிகிறது" என்று கூறினான்போலும்.

"அமைதியான சூழ்நிலை வேண்டும், ஏகாந்தமான தனிமை வேண்டும். இலேசான தென்றல் வீசவேண்டும். சலசலென்ற நீரோடைச் சத்தம் வேண்டும், தொலை விருந்து இனிய கீதம் காற்றில் மிதந்து வரவேண்டும் அப்போது தான் எழுத்தாளனால் நல்ல இலக்கியங்களைச் செய்ய முடியும்" என்று கூறும் எழுத்தாளர்கள்தான் நமது தமிழ் எழுத்தாளர்களில் பெரும்பான்மையினராகும்.

"கலை இலக்கியங்கள் என்பன பொழுதுபோக்குக்காக" என்ற வாதம் இன்று காலவதியாகிப் பலகாலம் ஆகி விட்டது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அவை பொழுது போக்குக்காகத்தான் என்ற இடத்தில் அவை எதற்காக என்பதை வைத்துப்பார்க்கும் துணிச்சல் இன்னும் பெரும்பான்மையான இலக்கியக்காரர்களுக்கு வரவில்லை."பொழுது போக்குக்காக"என்ற பதம் இருந்த இடத்தைச் சரியான பதத்தைக்கொண்டு நிரப்புவதற்கு அவர்களால் முடியமாட்டேன் எங்கிறது. துணிவுடன் உரியதான அந்தப் பதத்தை அதில் செருக துணிவற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவே இருந்துவிட விரும்பும் இந்தப் பேட்டுத்தன்மை-அல்லது நடுஞ்சகத்தன்மை இன்னும் எவ்வளவு காலம் தான் நீடிக்கப் போகிறது என்பதனைத் தீர்மானித்துச் சொல்வது இன்று கடினமான ஒன்றாகும் — மக்களுக்காக — வாழ்வுக்காக — மறுமலர்ச்சிக்காக — என்ற விதங்களிலான சொற்தொடர்களைக் கொண்டு அந்த இடைவெளியை நிரப்பிவிடுதலைத் தவிர அதற்கும் மேலாக உண்மைக்கு விசுவாசமான ஒரு சொற் தொடர் அவர்கள் நெஞ்சுக்கு வர மறுக்கிறது. ஆயினும் இந்தத் தலைமுறை காலத்துள்ளேனும் அந்த இடைவெளியை சரியான சொற்பதத்தைக் கொண்டு இவர்கள் நிரப்பித்தான் ஆக வேண்டும், ஏனெனில் உலக மாற்றத்தின் வேகம் அவர்களை அப்படிச் செய்யவே வைக்கும்.

**கே. டானியல்**
24—1—86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

# 1

ஆவணி விதைப்பு முடிந்து விட்டால் எப்படியும் பத்து நாட்களுக்கிடையில் மழைத் தூற்றல் புழுதி அடிக்கப் பட்ட நிலத்தின் மேற்பகுதியை நனைத்து ஈரமாக்கி வைத்திருந்தால்தான் நெல்மணிகள் முளைகட்டி புழுதிப் போர்வையைக் கிழித்துக் கொண்டு தலையை மேலே காட்டும். ஆனால் இன்னும் சில தூற்றல் கூட இல்லை. நாட்களும் பதினைந்துக்கு மேலே போய்விட்டன.

இரண்டொருநாள் பொழுது விடியும்போது அடி வானம் கறுத்துக், கோலம் காட்டிவிட்டுப் போய்விட்டது. சாத்திரப்படிக்குத்தன்னும் ஒரு துமியேனும் நிலத்தில் விழவில்லை.

காலை மாலை தவறாமல் வயற் பரப்புக்கு வந்து, வரம்புகளில் நடந்து, கண்களால் வயற்பரப்பை மேய்ந்து, பெருமூச்சுடன் கரத்தைக் கண்களுக்கு மேலாக வைத்து, அடிவானத்தைப் பார்த்து ஏங்கி விட்டுச் செல்லும் கமக் காரர்களை ஒருசேரப்பார்க்கும்போது, அவர்கள் மேல் அளவுக்கு அதிகமான பச்சாத்தாபந்தான் வரும். யார் யார்மேல் பச்சாத்தாபப்பட்டு என்ன பயன்? அடி வானத்தில்—எங்கோ தொலைவில் பஞ்சுக் குவியல்களாகத் தேங்கிப்போய் கிடக்கும் மேகக் கூட்டங்கள் சூல் கொண்டு நடுவானத்தை நோக்கி நகர்ந்து வந்து இந்த மனிதர்களின் காய்ந்து சுருண்ட முகங்களைக் கண்டு பச்சாத்தாபப்பட வேண்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் நான்கு நாட்கள் இப்படி இருந்தால், நெல் மணிகள் அவிந்து போனவைகள் போக, இயல்பாகவே வீரியமான மணிகள் ஆத்திரத்தோடு முளைகட்டி புழுதி மண் திரைக்கு மேலாகத் தலை நிமிர்த்தி, பின்பு மெதுவாகவே மஞ்சளாகிக் கருகி மடிந்துபோய்விடும்! அத்துடன் இந்தப் போகத்தின் கதையும் முடிந்துவிடும்.

பொழுது கருகி நீண்ட நேரம் ஆகிவிட்டது.

அட்டமி நவமிக்கு மழை வரக்கூடும் என்ற நம்பிக்கையும் போய்விட்டது.

அமாவாசை வந்து எட்டு நாட்கள் கடந்துவிட்டன. இனிப் பௌர்ணமிக்காகக் காத்திருக்க வேண்டும். பௌர்ணமி வர இன்னும் ஏழு நாட்கள் காத்திருக்க வேண்டும்! ''கனத்த நாட்களில் மழையைக் காணலாம்'' என்ற பாரம்பரிய நம்பிக்கையும் பொய்த்துக்கொண்டு வருகிறது.

சின்னான் கிழவன் கிடுகுக் கொட்டிலின் தாழ்வாரத்தோடு படுத்திருந்தான்.

சற்று முன்புதான் அவனின் சகதர்மிணி சின்னிக் கிழவி கறிமுருங்கை இலையும், தேறைக்கருவாட்டுத் தூளும் போட்டு நீத்துப்பெட்டியில் அவித்தெடுத்த ஒடியல் பிட்டினைச் சுடச்சுட அவனுக்குக் கொடுத்திருந்தாள்.

ஒடியல் பிட்டு மணங்கணமாக இருந்ததனால் சற்று அதிகமாகவே சாப்பிட்டுவிட்டான். சாப்பிடும்போது பூட்டிப் பெட்டைக்கும், மனைவி சின்னிக்கும் எடுத்து வைக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு! சாப்பிட்டு முடிந்ததுந்தான் பூட்டிக்கும் தனக்குமாகச் சின்னி அடுத்த நீத்துப்பெட்டியை உலையில் வைத்ததை— அவசர அவசரமாக மாவைக் குழைத்ததை அவன் அவதானித்தான், மனதுக்குள் ஒரு சின்ன உதைப்பு! பின்பு சமாளித்துவிட்டுப் படுத்துக் கொண்டான். இத்தனை வயதாகியும், சுருட்டோ சுங்கானோ பற்றவைக்கும் பழக்கம் அவனுக்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பு இப்ப உங்களுக்கு வயது என்ன இருக்கும்?'' என்று யாராவது ஒரு கேள்வியைக் கேட்டால், கைவிரல் மடித்து எதை எதை எல்லாமோ கணக்கெடுத்துவிட்டு ''எழுபது வரையிலை இருக்குந் தம்பி!'' என்று கணக்குச் சொல்லிவிடுவான்.

அவன் கையின் விரலில் கணக்கெடுக்கும்போது, ''கந்தப்பு நயினாரின்ரையுக்கை, இளையதம்பி நயினாரின்ரையுக்கை, சுப்பையா நயினாரின்ரையுக்கை, வேலுப்பிள்ளைக் கமக்காரனின்ரையுக்கை'' என்று பெயர்களைச் சொல்லித்தான் கணக்குச் சொல்வான். குறிக்கப்பட்ட இந்தப் பேர்வழிகளின் நெல்லுவயல்களுக்குள்ளே எத்தனை எத்தனை போகத்துக்குக் கூலியாளாக இருந்தான் என்பதை நினைவுபடுத்திப்படுத்தி, நினைவுபடுத்தியவற்றைச் சேர்த்துச் சேர்த்துத்தான் ''எழுபது வரையிலே', என்ற இந்த வார்த்தை பிறக்கும்.

''பகிடி பகிடிபோலை எனக்கும் இத்தனை வயசு வந்திட்டுது!'' என்று இடையே இரண்டொரு தடவைகள் தான் அவன் நினைத்துப் பார்த்ததுண்டு. கடைசியாக— இப்போது வேலுப்பிள்ளைக் கமக்கரானின் கமத்தோடு வேலை செய்து கொண்டிருக்கும் கடைசிப் பதினைந்து ஆண்டுக் காலங்கள்தான் அவன் நினைவில் இருக்கும் வரிசையில் நீண்டது.

தான் கடுக்கண்ட பருவத்தைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. ''கடுக்கண்ட'' இந்தக் கால வரம்புக்கு இலக்கணம் கூட இன்றுவரை கேள்வியாக இருந்ததில்லை.

மூக்கில் சளிவடிய, வழிந்த சளியைப் புறங்கையால் உரசி எடுத்து, மூக்கை உறிஞ்சிச் சளியை உள்ளிழுத்துக் கொண்டு, அத்துளு அம்மன் கோவிலுக்கு மேற்காலும், உப்பு றோட்டு தாளங்காட்டுக்கு வடக்காகவும் இருந்த வயல் பரப்புகளில் நான்கைந்து கச்சைக்கட்டுப் பெடியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு ஒத்தவிதத்தில் கையில் மண்வெட்டியும் புத்துக் கிளறும் தடியையும் கொண்டு திரிந்து அகிழான் எலியும், உப்பெலியும் பிடித்துத் திரிந்த காலம் இலேசான சாயலாக நினைவுக்குத் தெரிந்தாலும், அதுதான் கடுக்கண்ட காலம் என்று வரையறுத்துவிட மனது நினைப்பதில்லை,

சில வேளைகளில், உடையார் நயினார் தனது வைப்பாடிச்சி வீட்டுக்கு கூட்டிச் சென்று, ''சின்னானை வீட்டோடை வைச்சுக்கொள்ளும். ஏன் வெள்ளாடிச்சியள் மட்டும்தான் அடிமை குடிமையளை வீட்டோடை வைச்சிருக்க வேணுமெண்டு சட்டத்தில் எழுதிக்கிடக்கே? இவன் இஞ்சை நிற்கட்டுக்கும், எங்கடை ஆக்களாலை வாற இடைஞ்சலை நான் பாக்கிறன்; ஏன் பயப்படுறீர்?'' என்று வைப்பாடிச்சியைக் கேட்டுவிட்டு. அங்கே விட்டு வந்த காலம் நினைப்புக்கு வந்தால் அந்தக் காலத்தைத், தான் கடுக்கண்ட காலமாகக் கொள்ளவும் முடியாதுதான்.

உடையார் நயினாரின் வைப்பாடிச்சி வீட்டுப் பேர் பெற்ற உழுந்துத் தோசைதான் உடையாருக்கு நிரந்தர வைப்பாடிச்சியைத் தேடித்தந்தது. அந்த அளவுக்கு அந்த உழுந்துத் தோசை பிரசித்தமானது. அந்த உழுந்துத் தோசையால் உடம்பு மினுமினுத்து, முகம் ஊதி, பொருக்குகள் மறந்து... தன் நிர்வாணத்தைத் தானே பார்த்து வியக்கும் அளவுக்கு வந்த அந்தக் காலம்... அதுவே 'தான் கடுக்கண்ட காலம்' என்று மனதுக்குத் தெரிந்தாலும் அதை மறுபடியும் நினைத்துப்பார்க்க சின்னானுக்கு இப்போதும் பயம்!

அது பொல்லாத பயம்

நெஞ்சினை நடுங்கவைக்கும் பயம்!

அதனால்தான் அந்தக் கடுக்கண்ட காலத்திற்கு முந்திய காலத்தை மொத்தமாக ஒரு பதினைந்து பதினாலுக்குள் அடக்கிவிட்டு, நிலையாக ஒவ்வொரு நயினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரின்கீழ் அடிமை செய்த காலத்தைக் கணக்கிட்டு இந்தக் காலத்தையும் மொத்தமாகப் பதினாறுக்குள் அடக்கி இந்த 'எழுபதுவரையில்' என்ற பாடத்தை இப்போது சின்னான் வெளிப்படுத்துகிறான்.

மொத்தமாகச் சொன்னால், இந்தப் பூமியில் விழுந்த காலத்தை, எழுபதுவரை என ஒப்புக்கொண்டு, அதில் கடுக்கண்ட பருவத்துக்கும் இருபதைக் கழித்துவிட்டுப் பார்த்தால் ''ஐம்பதாண்டுகாலம் பூரண அறிவு அவதானத்தோடு சின்னான் இந்தப்பூமியில் வாழ்ந்துவிட்டான்'' என்றும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

சின்னானுக்கென்று சின்னி பெற்ற பிள்ளைகள் பதின்மூன்று. அதைவிடவும் மேலாக சின்னி சின்னானுடன் வரும்போது செத்துப்போன அவளின் அக்காளின் பிள்ளைகளாகக் கொண்டுவந்த இரண்டையும் சேர்த்தால் சின்னானின் பிள்ளைகள் வரிசை பதினைந்து!

அந்தந்தக்காலத்தில், சீதனம், சீர்வரிசை என்ற தடைக்கற்கள் எதுவுமின்றி ஏழு பெண்பிள்ளைகளும் கட்டிவிட்டார்கள். மிகுதி எட்டுக் குத்தியன்களும் எந்தவித தங்கு தடையுமின்றி மனைவிமார்களைத் தேடியபின்பு இப்போது மூத்த மகனின் மகளின் மகள் மட்டுந்தான் சின்னானுக்கும், சின்னிக்கும் பேச்சுத்துணை! பூட்டியாகிய அவளுக்குத் தன் பொறுப்பில் எல்லாவற்றையும் செய்து வைப்பது என்ற எண்ணமே சின்னானுக்கும், சின்னிக்கும்.

நெல்லியடிச் சந்திப்பிலிருந்து தெற்குப்புற வீதியால் சென்று, அதிலிருந்து கிழக்கே திரும்பி, வரும் வேதக் கோவிலடியையும் தாண்டிச் சாமியன் அரசடிச் சந்திப்பு வரையில் போய் மறுபடியும் தெற்கே திரும்பி சுமார் ஒரு மைல் தூரம் வரை சென்று சில வளைவுகளைத் தாண்டினால் கண்ணுக்கு நேருக்கு நேராக ஒரு வெளிப்பிரதேசம் வரும். அந்த வீதி அந்தம்வரை சென்றால் வல்லைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பிலிருந்து வல்லிபுரக் கோவில்வரை ஒரு சிறு றோட்டு நீளுகிறது. அந்த றோட்டைச் சந்தித்ததும் மறுபடியும் கிழக்கே ஒரு அரை மைல் தூரம் சென்றால் வடக்குப்புறமாக ஒரு வட்டக் குளம். அந்த வட்டக்குளத்துக்கு அருகால் உள்ள பெருவரம்போடு சேர்ந்தாற்போலப் போகும் மணற்பாதையில் சென்றால் அது ஒரு சிறு கோவிலடிக்குச் சென்று அப்பால் போகிறது. அப்படியெல்லாம் போகத் தேவையில்லை. கோவிலடிக்குப் பக்கமாகவுள்ள வடலியை நோக்கித் தலையை நிமிர்த்தினால் கண்ணுக்குத் தெரியும் கொட்டில் எதுவோ அதுதான் சின்னானும், சின்னியும், பூட்டி பொன்னாம்மாப் பெட்டையும் வசிக்கும் மாளிகையாகும்.

நெல்லியடிச் சந்திப்பிலிருந்து சின்னான் குடும்பம் வசிக்கும் இந்த மாளிகைவரை போவதற்கு இன்றுவரை ஒரு பஸ்ஸோ, அல்லது குறுக்குமறுக்காக ஓடித்திரியும் மினிவான்களோ, அன்றிக் குறைந்தபட்சம் தட்டிவானோ கிடையாது. ஆமான தைரியசாலியும் சற்று நீண்ட கவடுகளும் எட்டிவைக்கக் கூடிய ஒருவன் என்றால் ஒரு மணித்தியாலப் பிரயாணத் தூரந்தான் அது. கூப்பிடு தூரக் கணக்கில் பார்த்தால் ஒரு பத்துக் கூப்பிடுதொலை என்று சொல்லலாம். ஆனால் சின்னானுடைய இந்த ஐம்பதாண்டு கால வாழ்க்கையில் இந்தத் தூரம் ஒரு கூப்பிடு தூரமாக இருந்து வந்தது. இப்போது படிப்படியாக உடலின் தெம்பின் அளவோடு சேர்ந்துகொண்டு இந்தத் தூரமும் இருபது கூப்பிடுதொலை ஆகிவிட்டது.

## 2

உடையார் நயினாரின் வைப்பாடிச்சிக் கமக்காரி வீட்டில் சின்னான் வந்து சேர்ந்த— கொண்டுவந்து விடப்பட்ட பருவம் வெறுங் கச்சைத் துண்டோடு சனிவடியத் திரிந்த பருவமல்ல என்பது நிச்சயம். அந்தப் பருவம் சின்னானின் நினைப்பில் இருக்கிறது. அவன் அங்கு வந்து அண்டிய நாளில்தான் வைப்பாடிச்சிக் கமக்காரி மேல் சட்டைக்கு மேலான குறுக்குக்கட்டைக் கைவிட்டுவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிச்சல் தாவணிபோட்டுக் கொண்டாள். அது நினைவுக்கு வரும்போது தனது அப்போதையப் பருவகாலமும் சின்னானின் நினைப்புக்கு வரும்.

சின்னான் வந்த அன்றே கமக்காரிச்சி நூல் பசை மடமடக்க நலமுண்டுத் துண்டொன்றைச் சின்னானுக்கு உடுக்கக் கொடுத்து விட்டு அவன் உடுத்தியிருந்த துண்டை அவன் கையாலே நெருப்பை வைப்பித்துச் சாம்பலாக்கி விட்டாள். சின்னானைக் கோடிவடலியில் ஏறவைத்து, குருத்துப்பருவ ஓலையை வெட்டுவித்து, வாடவைத்து அவன் கையாலேயே தட்டுவம் ஒன்றைக் கோலவைத்தாள். சின்னானுக்குத் தட்டுவம் கோலத் தெரியாததனால் தானாகவே பாடஞ் சொல்லிக் கொடுத்துக் கோலவைத்து விட்டதில் கமக்காரிக்கும் பரம திருப்தி.

சின்னானுக்குப் படுத்தெழும்புவதற்கு இடம் வேண்டும். மாட்டுக் குடிலுக்குப் பக்கமாக பனை ஓலை வேய்ச்சல் வீட்டுத் தாழ்வாரத்துச் சுவரோடு சேர்ந்தாற் போல இரண்டு சாக்குகளைப் போட்டு, ஒன்று விரிப்பாகவும், மற்றையது கால்களைச் சொருகிக் கொண்டு கிடப்பதற்கான போர்வையாகவும் அவனுக்கு உறைவிடத்தையும் ஆக்கிவிட்டாள்.

கமக்காரிச்சிக்கு அடிமை குடிமை வைத்திருப்பது புதிது. இந்த அந்தஸ்து உடையார் நயினாரால் கொடுக்கப் பட்டதுதான். அதனால் தரப்பட்ட இந்த அந்தஸ்தை அதற்கேற்ற விதத்தில் புதிதாகத்தான் அவள் பேண வேண்டி இருந்தது.

சின்னானான புதிய அடிமைக்குக் கொடுக்கப்படும் வேலை, அவனை நடத்தும் விதம், அவனுக்குக் கொடுக்கப் படும் உணவு, அவனைப் பராமரிக்கும் முறை, அவனிடம் பேசிக்கொள்ளும் தோறணை, ஆகியவை யாவற்றையும் மற்றையப் பரம்பரைக் கமக்கார நயினாத்திகள் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்குவளைக்கக் கூடாது என்பதற்காக கமக்காரிச்சி வெகு நிதானமாகவே எல்லாவற்றையும் செய்தாள்.

கமக்காரிச்சி மிகவும் கெட்டிக்காரி.

கொழும்பிலிருந்து வரும் ரயில் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை சரியாக விடியற்புறம் ஐந்து மணிக்குத்தான் ஆனையிறவுப் பாலத்தில் ஏறும். அது பாலத்தில் ஏறி இறங்கும்போது எழும் பேரிரைச்சல் அந்த விடியற்புற அமைதியைக் கிழித்துக்கொண்டு சின்னானின் காதுவரை கேட்கும். அது கேட்கும்போது சின்னான் எழுந்து விடுவான். இந்த ரெயில் ஒன்றுவிட்டொரு நாளாக இருந்தாலும் மற்றும் நாட்களிலும் சரியாக அதே நேரத்திற்குச் சின்னான் எழும்பிவிடுவதன் நுணுக்கம் அவனுக்குத்தான் தெரியும்.

உடையார் நயினார் அங்கு தொடசல் வைத்துக் கொள்வதற்கு முன்பாகவே கமக்காரிச்சியின் குடும்பத் தொழிலாகப் பால்வியாபாரமும் இருந்திருக்கிறது நான் கைந்து கறவை மாடுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாகவே இருந்திருக்கின்றன. அதனால் ''பால்க்காரக் கோவிய வீடு'' என்னும் ஒரு காரணப் பெயர் பெற்றது அந்த வீடு. உடையார் நயினார் குடும்பத்துக்குள் பிணக்குப்பட்டுக் கொண்டு வந்து சேர்ந்ததன் மேல் அந்த வீட்டுக்கான காரணப் பெயரை யாரும் சொல்வதில்லை. சொன்னால் உடையாருக்குக் கெட்ட கோபம் வரும். அதனால் ''உடையார் பண்ணை'' என்ற பெயர் சொல்லிக் கொள்ளாமலே வந்து சேர்ந்துவிட்டது.

கமக்காரியின் முந்திய பால்வியாபார உபதொழிலில் இப்பொழுது கணிசமான திருத்தம்.

மாடுகளுக்கான சிறிய கொட்டகை.

முன்போல தரவை மேய்ச்சலுடன் பொழுது கருக்கலுக்குள் தன்னாலேயே திரும்பிவந்து கட்டையடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துக்கொள்ளும் மாடுகளை, இப்போது காலை ஒன்பது மணிபோலச் சாய்த்துச் சென்று வல்லை வெளித் தரவைகளில் மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு மாலை ஐந்துக் கிடையில் திருப்பிச் சாய்த்துவந்து ஒவ்வொன்றுக்குமான கொட்டில் கால்களுடன் இணைத்தல்.

பொழுது கருகும் வேளையில் பனைஏறி ஒருவன் நேரந் தவறாமல் வந்து ஓலை வெட்டிக் காவிவந்து, வைத்துவிட்டுத் திரும்பி ஏழுமணிபோல இரண்டு பேர் களுடன் வந்து வெட்டிய ஓலைகளைச் சட்டங்களாக்கி, பின்பு தும்பாக்கி விட்டுச் செல்லுதல்,

விடியற்புறமாகவும், மாலைக்கு முன்னமும் ஊரில் உள்ள புதிய கமக்காரிச்சியின் உறவினர்களில் ஒருத்தி வந்து மாடுகளில் பால் கறந்து, கொடுக்கவேண்டிய வாடிக்கைக்காரர்களின் வீடுகளுக்கு எடுத்துச் சென்று சேர்த்துவிட்டுச் செல்லுதல்,

முன்போல மாடுகள் சினைகாணக் குரல்வைக்கும் போது காளை மாடு வளர்ப்பவராகிய துன்னாலை மார்க்கண்டனிடம் கொண்டு செல்லாமல், இப்போது மாடு சினைப்படக் குரல் வைக்கும்போது, மார்க் கண்டனை நல்ல காளையோடு வரச்செய்து மாட்டு மடுவத்துள் வைத்தே சினை ஏற்றுதல், அதுவும கமக்காரிச்சி பார்த்துச் சரிகாணும் வரை அந்தப் புனித காரியத்தைச் செய்தல், ஆகியவைகள் உட்பட இன்னும் பல.

இவை எல்லாம் உடையார் நயினாரின் ஏற்பாடுகள்.

ஆனையிறவுப் பாலத்தில் கொழும்பு ரயில் ஏறியதும் சின்னான் எழுந்திருப்பான். தலைமாட்டில் தணித்து வைத்திருக்கும் சிங்கப்பூர் சிமிலிவிளக்கைத் தூண்டி விடுவான்; அந்த வெளிச்சத்துடன் மாட்டுக் கொட்ட கைக்குள் புகும் அவன், சாணிக் கும்பல்களை வழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி எருக்கும்பத்தில் சேர்க்கவும், கொட்டில்களை துப்பரவு செய்து கொட்டகையைச் சரிசெய்து முடிக்கவும், விடியவும் நேரம் சரியாக வந்துவிடும். அதற்கு அப்புறமாக பால் கறக்க வருபவளுக்கு உதவி ஒத்தாசை.

முற்றம் பெருக்குதல், கமக்காரி குளிக்கும் தண்ணீரை முற்றத்துத் தென்னங் கன்றுகளுக்குப் பாய்ந்துவர வாய்க்கால் அமைத்தல் உட்பட ஏனைய வேலைகள் செய்து முடியப் பொழுது மேலே வந்து விடும்.

அப்புறம் வளவுப் பின்புறத் துரவில் இறங்கி முகம் அலம்புதல், தெற்குப்புற வயல் வெளிக்கு அப்பால் உள்ள கள்ளிப் பற்றை மறைவுக்கு வெளிக்குப் போதல், கமக்காரியால் தரப்படும் பனாட்டுத் தட்டையும் தேங்காய்ப் பால்விட்டுக் கரைக்கப்பட்ட பழங்கஞ்சியையும் மூக்கு முட்ட எடுத்தல்.

மணி பத்தாகிவிடும். அதன்மேல் கமக்காரிச்சியால் தரப்படும் தோசையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு மாடுகளைச் சாய்த்தல். வல்லைவெளித் தரவையை நோக்கிப் போதல்.

மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுக்கொண்டே மதியத்திற்கு மேல் தோசையும் தின்று, உப்புவெளித் தரவின் தண்ணீரையும் குடித்துவிட்டு மாலை ஐந்து மணிக்கு மாடுகளைச் சாய்ப்பானாகில் மாடுகள் கொட்டிலுக்கு வந்து சேர பொழுது கருகிவிடும்.

இரவு பத்து மணிவரை மாட்டடியிலும் ஓலை கிழிப்பவர்கள் மத்தியிலும் தொட்டாட்டு வேலைகள்.

அநேகமாக இந்த இடைவேளையில்தான் உடையார் நயினார் வருவது வழக்கம். இரவுச் சாப்பாட்டை அநேகமாக அவர் இங்கேதான் வைத்துக்கொள்வார்.

கமக்காரியின் தோசை என்றால் அவருக்குப் பேரவா! அந்தத் தோசையிலிருந்து வந்த உறவுதான் இத்தனை தூரம் விரிவுடைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு கமக்காரிச்சி செய்வது நெய்த்தோசைதான்! அதன் வாசனை மூக்கைப் பிடுங்கும்.

இரவுச் சாப்பாட்டுக்காக சின்னான் சகல வேலைகளும் முடிந்து தட்டுவத்துடன் தனது உறைவிடத்தில் காத்திருக்க வேண்டும்.

சின்னானுக்கு மிக விரைவிலேயே எல்லாம் பழக்கத்துக்கு வந்துவிட்டன. அவனுக்கு இந்த நடைமுறைகள் புதிதாயினும் அவன் கெட்டிக்காரன். எல்லாவற்றையுமே தெளிவாகக் கற்றுக்கொண்டான்.

உடையார் நயினார் தனது வைப்பாடிச்சியான சிறைக் குட்டியைக் கமக்காரிச்சியாகப் பழக்கியெடுத்தும், சின்னானை அவளுக்குப் பக்குவமாகப் பணியவைத்து, குறைந்த கமக்காரிச்சி என்று அவளை அசூசைப்பட வைக்க விடாமல் பார்த்தும் கெட்டித்தனமாக நடந்து கொண்டார். அத்தோடு தனது தந்தையான மணியகாரனையும் தடித்த பரம்பரையினரான தனது இரத்த உருத்துக்காரரையும் சமாளித்து இந்தக் காரியங்களைச் செய்தது இரட்டைக் கெட்டித்தனம்.

## 3

உடையார் பண்ணையிலிருந்து சின்னானின் பெற்றோர் வீடு மிஞ்சி மிஞ்சிப் பார்த்தாலும் இரண்டு மைல்களுக்கு மேல் இருக்காது. ஆயினும் சின்னான் உடையார் பண்ணைக்குப் போய் மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இடையே இரண்டு தீபாவளிக்குத் தான் வீட்டுக்குப் போய் வந்தான். அதுவும், ''விடியப்புறத்தோடு போய், மாடுகளை மேய்ச்சலுக்குச் சாய்த்துப் போகும் நேரத்துக்குள் வந்துவிடவேண்டும்'' என்ற கமக்காரிச்சியின் கண்டிப்பான உத்தரவோடுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடைவேளையில் சின்னானைப் பார்த்துப் பேசிப் போக வந்தவர்கள் என்று யாரும் இல்லை. மாட்டு மேய்ச்சலின்போது வல்லைவெளி உப்புத் தரவைக்குள் அவனை யாரும் கண்டு பேசினால் உண்டு. மற்றப்படி அவனுக்கு அந்தச் சந்தர்ப்பங்களும் மட்டுப்படுத்தப்பட்டவையே! மட்டுப்படுத்தப் பட்டால் கூட அதற்கும் ஒரு 'கோட்டா' உண்டு. இந்த மட்டுப்படுத்தப்படுதல் என்பது எந்தவித ஓட்டையோ உடைசலோ இல்லாத மட்டுப்படுத்தப்படுதல்— இறுக்கமான மட்டுப்படுத்தல்!

சின்னானைப் பற்றிக் குசலம் விசாரிக்கவோ, அன்றி அவனைப் பார்த்து விமர்சனப் பார்வையில் பேசவோ யாரும் இருக்கவில்லை'' என்று சொன்னால் அது தவறு. சும்மா சொல்லக்கூடாது, இந்த இரண்டையும் உடையார் நயினாரே இடையிடையே செய்து கொண்டார்.

இரண்டொரு தடவைகள் சின்னான், நயினார் கண்களில் பட்டிருக்கிறான்.

''எட சின்னான் எப்பிடியடா உன்ரைபாடு?'' என்று ஒரு தடவை குசலமும், ''எட சின்னான் நீ மினுமினெண்டு வந்திட்டாய் என்னடா? எனக்குத் தெரியாமல் உனக்கு ஏதோ கள்ளத்தீன் கிடைக்குது போலை கிடக்குது!'' என்று வேறோர் தடவை அவர் விமர்சனமும் செய்திருக்கிறார். இந்த அளவுக்கு உடையார் நயினார் சின்னானின் மேல் அக்கறை கொண்டிருந்ததே பெரிய காரியம்.

ஒரு நாள் சின்னானின் மூத்த அக்காள் பிரசவ வேதனை கண்டு, உரிய வேளையில் அவளைப் பிரசவிக்க வைக்க குடத்தனை மருத்துவிச்சி படாத பாடெல்லாம் பட்டாள். முடியாமற் போயிற்று, அவள் சுமையோடேயே செத்துப் போனாள்.

சின்னானுக்கு இழவு சொல்ல ஆள் வந்தான். அப்போது சின்னான் வீட்டில் இல்லை. ''அவன் மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு தரவைக்குப் போட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாப்போலை அனுப்பி விடுகிறன்'' என்று கமக்காரிச்சி இழவுசொல்ல வந்தவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பி விட்டாள். தரவைக்கு ஆள்சொல்லி அனுப்பிச் சின்னானைத் திருப்பி அழைத்து இழவு வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற எண்ணம் கமக்காரிச்சிக்கு வந்திருந்தால், வந்தவர்களை அனுப்பியே அந்தக் காரியத்தை அவள் செய்திருக்கலாம். அவள் அப்படி எண்ணவில்லை. அப்படி அவள் எண்ணக் கூடியதான அவசியமுமில்லை.

மாலை ஆகிவிட்டது.

மாடுகளைச் சாய்த்துக்கொண்டு யாரும் வரவில்லை.

அவைகள் தம்பாட்டிலேயே உரிய நேரத்தில் மாட்டு மடுவத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டன.

சின்னான் வரவில்லை.

அம்மாளுக்கு விஷயம் புரிந்து விட்டது. ''சின்னானுக்குத் தரவைக்குள் வைத்து இழவு சொல்லி இருக்கிறார்கள். அவன் இழவு வீட்டுக்குப் போய்விட்டான்'' என்பதை ஊகிக்க அவ்வளவு விரிந்த அறிவு தேவையில்லை.

கமக்காரிச்சி மனதுக்குள்ளே கொதித்தாள்.

கொட்டிலடிக் கட்டைகளுக்குள் மாடுகளைக் கட்ட, கொட்டில்களைத் துப்புரவு செய்து வைக்க, தரவையிலிருந்து நடந்து வந்த களைப்பில் மாடுகள் விடும் நீண்ட ஜலத்தை மடுவத்தை விட்டு வழித்து விட, மற்றை வேலைகளைக் கவனிக்க அவளுக்கு முடியவில்லை. சின்னான் வந்து சேர்வதற்கு முன் பழக்கத்தில் இருந்த அந்த வேலை சின்னான் வந்த ஐந்தாண்டுகாலம் இடைவெளி விழுந்து விட்டதால் இப்போது கமக்காரிச்சிக்கு முடியாமல் இருந்தது. ஆயினும் மாலைப் பால் கறக்கிறவனை வைத்துக் கொண்டு கமக்காரியே ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு உடையார் நயினார் வந்தபோது கமக்காரிச்சி மூஞ்சியை 'உம்' என்று வைத்துக்கொண்டிருந்தாள்.

நயினாருக்கு ஒன்றும் புரியவில்லை.

இப்படி அவள் மூஞ்சியை வைத்துக் கொள்வ தெல்லாம் உடையார் நயினாரிடமிருந்து ஏதாவது பெரிதாக எதிர்பார்க்கும் வேளைகளில்தான்.

''என்னப்பா முகஞ்சரியில்லை.''

''உங்கடை சின்னான் போட்டான்''

'எங்கை போட்டான்?''

'மாடுகளைத் தரவையுக்கை விட்டுப்போட்டுத் தன்ரை பாட்டிலை போட்டான்!''

''என்ன தரவையுக்கை விட்டுட்டுப்போட்டானோ? அவன் அப்பிடிச் செய்திருக்கான்! காலமை அவன் தரவைக்குப் போகேக்கை அடிச்சுக்கிடிச்சுப் போட்டீர் போலை கிடக்கு. நான் நெடுகச் சொல்லுறநான் அடிக்கிற துக்கும் ஒருஅளவு வேணுமெண்டு!''

''நான் ஏன் அடிக்கிறன்? நான் என்ன பேயே நெடுக அடிக்கிறதுக்கு?''

''இப்ப ஏனப்பா கோவிக்கிறீர்?''

''பின்னை இப்பிடிக் கேட்டா வேறை எப்பிடி மறு மொழி சொல்லுறது?''

''அப்ப ஏன் அவன் விட்டிட்டுப் போனவன், ம்...?''

''அவன்ரை தமக்கை செத்துப்போனாளாம்! இஞ்சை சொல்ல வந்தவங்கள்! அவன் தரவைக்குப் போட்டான் எண்டு சொன்னன். அவங்கள் தரவைக்கை போய்ச் சொல்லி இருப்பாங்கள்; இவன் போட்டான்!''

''அப்பிடிச் சொல்லுமன்! அதுதானை கேட்டன்! அவன் ஒரு நாளும் பிழை விடான்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன பிழை விடானோ? போகேக்கை என்னைக் கேட்டுக்கொண்டெல்லோ போகவேணும் அவன்! நான் அவன்ரை நயினாத்தி எண்டதைக் கொஞ்சமும் யோசிக்காமல் தன்ரை பாட்டிலை போட்டான்.''

''...............''

''போனவன் மாடுகளைத் தாய்தேப்பனைத் தின்னியள் போலை வயலுக்கை அந்தரிக்க விட்டிட்டுப் போட்டான்!''

''............''

''தன்ரை நயினாத்தியெட்டைக் கேட்காமல் விட்டிட்டுப் போட்டான்! உவைக்கும் அடிமை குடிமையளை வைச்சு நடத்தத் தெரியுமோ எண்டு மற்ற நயினாத்தியவை நாக்கு வளைப்பினம் எண்டதைக் கொஞ்சமெண்டாலும் யோசிச்சானே?''

''............''

''மாடுகள் தன்ரைபாட்டிலை வந்தது எக்கணம் மற்றவைக்குத் தெரியாமலே போகப்போகுது?''

''உப்ப ஏனும் வில்லங்கப் படுகிறீர்? அவன் வரட்டுக்கன். முதுகிலை ரெண்டு போட்டு அச்சறுக்கை பண்ணிறதை விட்டிட்டு நீரே ஊருக்கை போய்ச் சொல்லிப் போடுவீர் போலை கிடக்கு? வேணுமெண்டாக் குத்தூசியைக் காச்சி அவன்ரை முதுகிலை ரெண்டு அறிவு சூடு வையுமன்!''

''அவன் இனி இஞ்சை வேண்டாம்!''

''என்னவுஞ் சொல்லுறீர் உண்மையாய்ச் சொல்லுறீரோ?''

''உண்மையாத்தான் சொல்லுறன். அவன் இனி இஞ்சை வேண்டாம்! வேறை ஒரு நளவனைக் கொண்டு வந்து விடுங்கோ!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"............"

"அவனும் விறுவிறெண்டு வளந்திட்டான், வீட்டிலை வளந்த பெட்டையளும் இருக்கிறாளவை; அவன் வேண்டாம்!"

"மெல்லமாக் கதையப்பா! உதுகள் பிலனாக் கதைக்கிற கதையளே?"

இந்தச் சம்பாஷணைக்குப் பின் உடையார் நயினார் வைப்பாடிச்சிக் கமக்காரி ஆகியோரின் பேச்சு நீடிக்கவில்லை.

கமக்காரிச்சி புளிக்கவைத்த தோசை மாச்சட்டியுடன் மல்லாடப் போய்விட்டாள்.

சற்று வேளைக்குப் பின் நெய்த்தோசையின் வாசனை மூக்கைப் பிடுங்கியது.

அப்போதுதான் ஓலை வெட்டுக்கார முத்தன் பனை ஓலைகளைச் சுமந்துவந்து முற்றத்தில் போட்டுவிட்டு நின்றான்.

"என்ன முத்தன் இண்டைக்கு ஒண்டு பாதியிலை வாறாய்? இனி ஓலை கிழிக்கிறது எப்ப; தும்பாக்கிறது எப்ப?"

குசினிக்குள் இருந்து கமக்காரிச்சி குரல் கொடுத்தாள்.

"இல்லை நாச்சியார். உதிலை ஒரு செத்தவீட்டை போனாப்போலை செண்டுபோச்சாக்கும்! உவன்தான் நாச்சியாற்றை குடிமைப் பொடியன் சின்னான்ரை தமக்கையாக்கும் செத்தது! அதை ஏன் நாச்சியார் கேப்பான்! சவம் தாக்கிற இடத்திலை சண்டை வந்திட்டுது, அது சாதிக்குத் தக்க குணம் நாச்சியார். மூத்ததம்பி நயினார் சொன்னமாதிரிச் செய்யப்போக சின்னான் விடமாட்டன் எண்டிட்டான்! பாவம் சின்னானுக்கு ஐஞ்சாறுபேர் அடிச்சுப்போட்டாங்கள் நாச்சியார்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னானுக்கு ஏன் .அடிச்சவங்கள்?" என்று கமக் காரிச்சி ஒரு வார்த்தையேனும் கேட்கவில்லை.

# 4

அக்காள்காரியின் இழவு வீடும், அக்காள்காரியைக் கிடங்கில் வைத்தபோது ஏற்பட்ட தகராறும், அந்தத் தகராறின் பிரதிபலிப்பாக மூத்ததம்பி நயினாருக்கு வந்த பெரும் சீற்றமும், அதனால் ஏற்பட்ட அல்லோல கல்லோ லமும் சின்னானை நான்கு நாட்களாக உடையார் பண் ணைக்கு வரவிடாமல் தடுத்துவிட்டன. ஐந்தாவது நாள் சின்னானின் அப்பன் அவனையும் அழைத்துக் கொண்டு உடையார் பண்ணையை நோக்கிப் புறப்பட்டான்.

புறப்படும்போதே சின்னானுக்கு நடுக்கம் தொடங்கி விட்டது. "எக்கணம் என்ன நடக்கப்போகிறது?" என்று மனத்துக்குள் வந்த ஏக்கம் சர்வாங்கமும் பரவி ஓடி நடுக் கத்தை வருவித்துவிட்டது.

வல்லை உப்புத் தரவைக்குள் நின்று அக்காளின் மரணத்தைக் கேள்விப்பட்டவன் முதலில் மாடுகளைச் சாய்த்து வந்து கமக்காரியிடம் ஒப்படைத்து, கமக்காரி யிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படத்தான் எண்ணி னான். ஆனால் கமக்காரி அரை மேய்ச்சலோடு மாடு களைச் சாய்த்து வந்ததற்குச் சீறிப்பாய்வாள் என்பதும், மற்றும் வேலைகளைக் கவனியாமல் தன்னை சாவீட்டுக்கு விடப்போவதில்லை என்பதும் மனதுக்குள் பட்டென்று தெரிந்ததால் அந்த எண்ணம் அவனை உடனடியாகவே அக்காளைப் பார்க்கப் போகும்படி செய்துவிட்டது.

அவனின் ஆத்தை சொடுகி அவனைப் பெற்ற வீட்டுக் குள் கண்களை மூடிவிட்ட நாளிலிருந்து அவனின் அக்காள் தெய்விதான் அவனைத் தூக்கி வளர்த்து, ஆளாக்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் சாகும்போது தெய்விக்கு வயது பத்து வரையில்தான் இருக்கும்.

அப்பன் சொடுகன் ஒரு நோஞ்சல்.

சின்ன வயதிலிருந்து அவனுக்கு உடம்பெல்லாம் பொருக்கு அதனால், ஊரில் உள்ள எல்லோருமே ஒட்டு மொத்தமாக அவனைச் ''சொடுகன்'' என்று பட்டம் வைத்துச் சொல்லி விட்டனர் என்று சொல்லிவிட முடியாது. அந்தப் பெயரை முதல் முதலில் அவனுக்கு வைத்தவர் துன்னாலைப் பக்கத்திற்குத் தலைமைக்கார னாக இருந்த விதானையார்க் கமக்காரன்தான்.

விதானையாரின் அக்காள் வீட்டில் சொடுகன் குடிப் பொடியனாக இருந்தபோது அங்கு போய் வந்த விதானையார் இவனின் கோலத்தைக் கண்டு, 'சொடுகன்' என்று பெயர் வைத்துவிட்டார். அதிலிருந்து ஊருக்கெல் லாம் அவன் சொடுகனாகிவிட்டான். கிராமத் தலைமைக் காரன் வைத்த பெயர் வியாபகம் அடையாமல் இருந்து விட முடியுமா?

வேலனாகிய சொடுகன், சொடுகியாகச் செத்துவிட்ட வள்ளியைப் பெண்ணாக எடுத்தபோது 'வள்ளி'யாக இருந்த அவளின் பெயர், வள்ளி வீட்டைச் சுற்றி இருந்த நயினாத்திமார்களால் 'சொடுகி'யாக மாறிவிட்டது. அந்தச் சொடுகி செத்துப்போனபின், பேருக்குச் சொடுகன் அப்பனாக இருந்தாலும் அக்காள் தெய்விதான் அவனுக்கு எல்லாமாக இருந்தாள்.

சின்னான் கச்சை கட்டும் பருவத்துக்கு வந்தபோது தெய்வி சாமர்த்தியப்பட்டு விட்டாள்.

தெய்வி அப்பனைப்போல நோஞ்சலாகவும், வெதும்ப லாகவும் இல்லை. தாயைப்போலக் கறுப்பியாகவும் இல்லை. பார்ப்போர்களுக்கெல்லாம் கண்ணுக்குள் குத்தும் உடல் வாகு அவளுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வி நாற்று நட, புல்லுப் பிடுங்க, அருவி வெட்ட, மற்றும் வேலைகளாக வயல் பரப்புக்குப் போகும் போதெல்லாம், அவளைக் கண்ணுக்குள் வைக்கும் இளம் நயினார்களும், பொறாமையினால் வக்கணைப் பார்வை வீசும் நயினாத்திகளும் அதிகம். சொடுகன் கள்ளுச்சீவு பவனாக இல்லை, அப்படிச் சீவுபவனாக இருந்தால் பல நயினார்கள் அவனிடம் வாடிக்கை வைத்துக் கொண்டிருப்பர்.

தென் மேற்குப் பக்கமாக நாலு பத்து வயல் பாத்திகளைத் தாண்டிப் போனால் வரும் வயல் கிணறு; மூத்த தம்பி நயினாருடையது. அந்தத் திடலில் உள்ள பெண்டுகள் அங்கேதான் நல்ல தண்ணீருக்காகப் போவார்கள்.

கிணற்றடிக்குப் போய்விட்டால் உடனடியாகத் தண்ணீர் எடுத்துவர முடிகிறதா? யாராவது நயினார் மார்களின் — நயினாத்திகளின் வரவுக்காகக் காத்திருக்க வேண்டும். அப்படி யாரும் வந்தால் உண்டு. இல்லையேல் வெறுங் குடங்களுடன் திரும்பிவிட வேண்டியது தான்.

தெய்வியும் அங்குதான் தண்ணீருக்குப் போவாள். அவள் போகும்போது சின்னானும் அவள் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு இழுபட்டுச் செல்வான். தெய்வி எவ்வளவு சொன்னாலும் அவன் கேட்கமாட்டான். அக்காள் தன் பார்வையிலிருந்து சணப்பொழுதும் விடுபட்டுப்போவது அவனுக்கு சம்மதம் இல்லாத ஒன்று.

"தெய்வி, நீ பிஞ்சுப் பெட்டையடி. மத்தியானத்திலை போய் தண்ணிக்காக வெயிலுக்கை நிண்டு சாகிறாயடி! வந்து சந்திக்கிறவங்களும் எத்தனை பேருக் கெண்டெடி அள்ளி ஊத்திறது. நீ விடிய வெள்ளணத் தோடை வந்தியெண்டா நான் அங்காலை தாளையடிக்கு வெளிக்குப் போட்டு அதாலைதான் வாறனான், அள்ளி ஊத்திவிடுவன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு நாள் தெய்வி தண்ணீருடன் திரும்பி வரும்போது நிலவடலித் தொங்கலில் தனது பனங்காணியைப் பார்த்துக் கொண்டு நின்ற மூத்ததம்பி நயினார் தெய்விக்குச் சொன்னார். அப்போது சின்னானும் அக்காளோடுதான் நின்றான். அவனுக்கு அவர் பேச்சின் உள்ளூடல் விளங்கவில்லை. அவனுக்கு மட்டுமல்ல தெய்விக்குமே விளங்கவில்லை.

இரவு குடத்திலிருந்த தண்ணீரை ஏனைய பாத்திரங்களில் ஊற்றி வைத்துவிட்டு தெய்வி விடிந்தபோது கிணற்றடிக்குப் போனாள்.

சற்று வேளைதான் தெய்வி கிணற்றடியில் நின்றாள். தாளங் காட்டைப் பார்த்தாள்.

தாளங் காட்டுக்குள்ளிருந்து மூத்ததம்பி நயினார் அவசர அவசரமாக வந்துகொண்டிருந்தார்.

'நீயும் சரியான சூரிதானடி வந்திட்டாய் என்ன?'

கொடுப்புக்குள் சொருகியிருந்த தடிக் குச்சியைப் பற்களால் கடித்துக் கொண்டே தெய்வியின் குடத்திற்குள் அவர் தண்ணீர் வார்த்தார்.

பதிலுக்கு நன்றி கூடத் தெரிவிக்காமல் தெய்வி வந்து விட்டாள்.

மேல் சட்டை இல்லாத இறுக்கமான குறுக்குக் கட்டுடன் தெய்வி, இடை துவழ வளைந்த இடுப்பில் அநாயாசமாகக் குடத்தைத் தூக்கி எறிந்து நடந்துசெல்லும் அழகை ஒரு கணம் பார்த்து விட்டு, தனக்குள் தன்னையே மறைத்துக் கொண்டு நயினாரும் போய்விட்டார்.

மூத்ததம்பி நயினாருக்கு வயது ஏறக்குறைய ஐம்பது வரையில் இருக்கும்.

இருபத்தைந்தாவது வயது வரை இருக்கும்போது வல்லிபுரச் குறிச்சியிலிருந்து அன்னப்பிள்ளை நாச்சியாரை கலியாணம் செய்து கொண்டு இங்கு வந்தவர் அன்னப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை நாச்சியாரின் சீதனமான நில, புலம்; கமம், புலம்; வீடு, வாசல்; தோட்டம், துரவு சகலவற்றையும் ஆண்டு அநுபவிப்பதற்காகப் பெண் கொண்ட இடத்திலேயே நிலைத்து விட்டார்.

அன்னப்பிள்ளை நாச்சியாருக்கு வயது இவரை விட நான்கோ, ஐந்தோ அதிகம். அதிலும் நாச்சியாரின் சாதகத்தில் செவ்வாய் தோஷம் என்றும் ஊரில் கதை அடிபட்டதால்தான், சாதி மரபில் சற்று வழுவு உள்ள மூத்த தம்பி நயினாருக்கு அன்னப்பிள்ளை நாச்சியாரைக் கட்டிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதெனலாம்.

வல்லிபுரக் குறிச்சியில் கால்நடைகளையும், சுட்டுப் போட்டாலும் விளைச்சல் தர மாட்டாத மணல் வயல் தறைகளையும், வலிக்கண்டிக்குச் சற்றுத் தென்புறமாக வல்லிபுர ஆழ்வார் கோவிலிலிருந்து தென்புறமாக சுமார் எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு வட்டத் தென்னந் தோட்டத்தையும் வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டிய மூத்ததம்பி நயினாரின் குடும்பத்திற்கு இந்தச் சம்பந்தம் கிடைத்ததில் மிகவும் பெருமை! அத்துடன் அவரின் சாதகத்திலும் செவ்வாய்க் குறை இருந்ததால் சந்தாதோட்டம் சாத்திரியார் "பொருந்தினால் இந்தச் சாதகங்கள்தான் பொருந்தும் இல்லாவிட்டால் இரண்டு சாதகங்களுக்கும் மாங்கல்ய பிராப்தமே இல்லை" என்று சொல்லிவிட்டார்.

அன்னப்பிள்ளை நாச்சியாரின் கலியாணத்திற்கு உறவினர்களில் பெரும்பாலானவர்கள் வரவில்லை. 'வாய் நனைக்காத' இடத்துச் சம்மந்தத்தை அவர்கள் பகிஷ்கரித்து விட்டனர்.

"அந்தப் பொடிச்சிக்குப் பொருத்தங்கள் சரி வராததினாலே வந்த ஆமான இடங்களிலை, முதிசங்களோடை வந்த சம்மந்தங்களெல்லாம் குழம்பிப் போச்சு, பாவம் அவள் பெருமூச்சு விட்டு விட்டு நருங்கலடிக்சுப்போனாள்! எண்டாலும் என்ன செய்யிறது! வல்லிபுரக் குறிச்சியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைப் போய் வாய் நனைச்சுப் போட்டா, இஞ்சை கால் மாறி வாறவங்களுக்கும் இஞ்சை செம்பு தண்ணி எடுப்பாங்கள்! விட்டிட்டுருக்கேலுமோ கேக்கிறன்!''

இந்தவித ஒரே கேள்வி அன்னப்பிள்ளை நாச்சியாரின் உறவினர்கள் வீடுகளில் எழுந்து, எழுந்து பரவி விட்டதனால் மொத்தத்தில் கலியாண வீட்டை எல்லாருமே பகிஷ்கரித்து விட்டனர். ஆயினும் கலியாண வீடு நடந்தேறி விட்டது.

மூத்ததம்பி நயினார் வந்து சேர்ந்த சில மாதங்களுக்கிடையில் நிலைமை தானாகவே சீர்பட்டுவிட்டது. மெது மெதுவாக—கண்டும் காணாமலும் அவர் சபை சந்தி ஏறி, சில ஆண்டுகளுக்குள்ளேயே பூரணமாக அரங்கேறியும் விட்டார். அன்னப்பிள்ளை நாச்சியாரின் செல்வச் செழிப்பு அவரை அரங்கேற்றி விட்டது.

அன்னப்பிள்ளை நாச்சியாருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. அந்தப் பாக்கியத்தை அடைய அவள் செய்யாத முயற்சிகள் இல்லை.

நேர்த்திகள், விரதங்கள், வல்லிபுர ஆழ்வாரையும், செல்வச்சந்நிதியானையும் நாகர்கோயிலானையும் வலம் வருதல்கள், ஆகிய தெய்வ காரியங்களில்......

அன்னதானம், வஸ்திரதானம், தர்மகாரியங்களில்...

மாதனைப் பரியாரி, செல்லக்கண்டன் ஆசாரி, தொண்டமானாறு சின்னக்கண்டன் பரியாரி, அல்வாய் ஆறுமுகம் பரியாரி, மட்டுவில் யுனானிப் பரியாரி, ஆவரங்கால் நடராஜாப் பரியாரி, கடைசியாக பறங்கித்தெருக் கந்தன் பரியாரி ஆகியோரின் வைத்தியங்களில்......

ஒரு சாதியென்றில்லாத பரியாரிமார்களின் சூரண வகைகள், குளம்பு வகைகள், செந்தூர வகைகள், குடிநீர் வகைகள், பத்திய வகைகள், எல்லாமே தோற்றுப் போய் விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததம்பி நயினாருக்கு நெஞ்சுக்கு மேல் ஒரு பெரும் பாரம். "தனது சந்ததிக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியம் தன்னோடு மட்டும் நின்றுவிடப் போகிறதே!" என்பதுதான் அது. மனைவியின் வழிவழி வந்த அந்தச் சொத்துக்கள் யாவும் எங்கோ சென்று அடைந்துவிடப் போவதை நினைக்குந்தோறும் அவருக்கு அடக்கமுடியாத மன வேதனை தான் வரும். மனைவிக்காவது அக்காள், தங்கை, அண்ணன், தம்பி இருந்தால்கூட அவர்களுக்காவது அவைகள் சென்றடையட்டும் என்று ஓரளவு மன அமைதியையாவது அடைந்து விடலாம். அப்படி ஒரு இரத்த உரித்துக்கூட மனைவிக்கு இல்லை.

"ஏனப்பா கேக்கிறன் எண்டு கோவிக்காதையும். உமக்கும் பிள்ளைகுட்டி இல்லை. இருந்தாப்போலை ஏதும் ஒண்டு நடந்து போட்டா கிடக்கிறதெல்லாம் ஆருக்கோ எல்லாம் போய்ச் சேர்ந்திடும். அதுதான், அக்காளுக்கும் எட்டுப் பத்துப் பிள்ளையள் இருக்கு. இப்பவும் அவ கெர்ப்பெணியாயிருக்கிறாவாம். பிறக்கிறதைக் கொண்டு வந்து எங்கட பேரிலை பதிவமே?"

இப்படி ஒருநாள் அவர் மனைவியிடம் துணிந்து கேட்டுவிட்டார்.

"உதுகும் ஒரு கதையோ கேக்கிறன்? நான் என்ன கிழவியாகப் போட்டேனோ கேக்கிறன்?"

இப்படிப் படக்கென்று பதில் சொல்லி விட்டாள் அன்னப்பிள்ளை நாச்சியார். இதற்கு மேல் மூத்ததம்பி நயினார் இதுபற்றிப் பேசவில்லை. ஆயினும், தன்னிடமும், தனது வல்லமையிடமும் மனைவியானவள் தளராத நம்பிக்கை வைத்திருப்பதை அவள்வாயால் கேட்ட போது அவருக்கு இளமை நினைவுகள் எல்லாம் புகுந்து கொண்டன.

இந்தச் சூட்டோடுதான் மூத்ததம்பி நயினார் தெய்விக்குத் தண்ணீர் வார்க்கும் வேலையைப் பொறுப்பேற்ற காலம் ஒரு பனிக்காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது உதயத்திற்கு தாளங்காட்டுக்குப் போய் வந்து, தண்ணீர் வார்க்கும் நயினார், "தெய்வி, நாளைக்கு எனக்கு எங்கடை ஊரிலை ஒரு வேலை கிடக்கு. விடிய முன்னம் நான் போகவேணும் நீ கொஞ்சம் வெள்ளாப்போடை வந்தியெண்டால் நான் இருட்டோடை வந்து வாத்துப்போட்டுப் போவிடலாம்!" என்று நயினார் ஒருநாள் சொன்னார்.

மறுநாள் பொழுது விடிவதற்கிடையில் தெய்வி நடுங்கும் குளிரில் குடத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டபோது தற்செயலாக நித்திரை கலைந்த சின்னான் "அக்கை இருட்டுக்கை எங்கே போறாய்? நானும் வாறன்!" என்று கூறிக் கொண்டே அவளோடு சென்றான்.

தம்பி சின்னான் தன்னுடன் வருவதை தெய்வி தடுக்கவில்லை.

நிலம் சரியாக வெளுக்கவில்லை.

நயினார் தெய்விக்காக கிணற்றடியில் காத்திருந்தார்.

ஆடுகால் பூவரசுகளின் இளங்கெட்டுக்கள் நில மட்டத்திலிருந்து கிளம்பிய சடைச்சலுக்கு மறைவில் அவர் நின்றார்.

"தெய்வி ஆரெடி உது?"

நயினார் மெதுவாகக் கேட்டார்.

"அது என்ரை தம்பியாக்கும்; துணைக்கு வந்தவன்!", தெய்வி பதில் சொன்னாள்.

"டேய்; போடா, கொக்காள் தண்ணி எடுத்துக் கொண்டு வருவாள்தானை நீ போடா!"

நயினார் கட்டளை இட்டார்.

சின்னான் தயங்கி நின்றான்.

"போடாண்ணிறன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினார் அதட்டினார்.

சின்னானுக்கு இதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை; அவன் போய்க் கொண்டிருந்தான்.

அவன் வயல் கொத்துக் கட்டிகளில் இடறிக் கொண்டு சற்றுத் தூரம் போயிருப்பான்.........

''நயினார், விட! ஐயோ நயினார் விடவாக்கும்; தம்பி, என்ரை தம்பி.........''

அக்காளின் குரல் கேட்டு சின்னான் கிணற்றடியை நோக்கி ஓடினான்.

வயற்பரப்பின் கொத்துக் கட்டிகளில் இடறி விழுந்து ...........

வரம்புகளில் தடுக்கி.........

சின்னான் கிணற்றடியைக் கிட்டியபோது ஆடுகால் பூவரச மரத்துச் சடைக்கருகே நயினார் அக்காளைப் பிடித்துக் கொண்டு.........

பக்கத்தே கிடந்த குடத்தை எடுத்துச் சின்னான் நயினாரின் மேல் பலமாக மோதினான்.

தெய்வி தன்னை நயினாரிடமிருந்து விடுவித்துக் கொண்டாள்; சின்னானையும் பிடித்துக் கொண்டு அவள் வீட்டுப் பக்கமாக ஓடினாள்.

நன்றாக விடிந்து விட்டது.

நடுப் பொழுதும் வந்தது.

''கிணத்தெடியிலை குடமொண்டு உடைஞ்சுபோய்க் கிடக்காம், ஆற்றை குடமெண்டு தெரியேல்லை!''

இப்படி ஊரில் பல பெண்டுகள் பேசிக் கொண்டனர்.

தெய்வி வாய் திறக்கவில்லை.

சின்னானையும் வாய் திறக்கக் கூடாதென்று தெய்வி சொல்லி இருக்க வேண்டும். அதனால் தானோ என்னவோ அவனும் வாய் திறக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வி தண்ணீர் வாடிக்கையை விட்டுவிட்டாள்.

ஒரு மாத காலங்கூட ஆகவில்லை.

''சொடுகன், உன்ரை மோள் தெய்வியை என்ரை வீட்டிலை தொண்டு துரவு செய்யிற கறுத்தானுக்கு நாளை யிண்டைக்குப் புதன்கிழமை சோறுகுடுப்பிச்சுவிடு, கறுத்தான்ரை தாய் கறுப்பியெட்டையும் சொல்லியிருக் கிறன், ஏதும் தேவைப்பட்டா அங்கை என்ரை அவவெட் டைப் போய்க் கேட்டுப் போட்டு, தோட்டத்துக்கை கிடக்கிற பூசணிக்காயள்ளை இரண்டையும் மற்றக் காய் பிஞ்சுகள்ளை கொஞ்சத்தையும் புடுங்கிக் கொண்டு, அங்காலை வடக்காலை மரவள்ளிக் கட்டையள்ளை நாலு கட்டையையும் இழுத்துக் கொண்டு போ; நெல்லுக்கில்லு வேணுமெண்டா ரெண்டு பறை நெல்லுங் குடுக்கச் சொல்லியிருக்கிறன்!''

இப்படி அத்துளு அம்மன் கோவிலடியில் வைத்துச் சொடுகனுக்குச் சொல்லிவிட்டு மூத்ததம்பி நயினார் போய் விட்டார்.

இதற்கு மேல் மறுபேச்சில்லை.

முதல் ஒரு தாரமிழந்த கறுத்தானுக்கும், தெய்விக்கும் புதன்கிழமை இரவு சோறு குடுப்புக் கலியாணம் சுற்றம் சூழச் சிறப்பாக நடந்து விட்டது.

சோறு குடுப்புக்கு அடுக்குகள் நடந்து கொண்டிருந்த போது, ''என்ன சொடுகன் எல்லாஞ் சரியே?'' என்று எறிக்கும் நிலவில் படலையில் நின்று கேட்டுவிட்டுப்போன ஒரே ஒரு நயினார் மூத்ததம்பி நயினார் தான்.

சில நாட்களுக்கிடையில், தனது நில வடலிக்கரைப் பனந் தோட்டத்துள் ஒரு கொட்டில் போடச் செய்து, அதில் கறுத்தானையும், தெய்வியையும் குடி அமர்த்தி விட்டதன் பின்புதான் நயினாருக்குத் தூக்கம் வந்தது.

அக்காளை விட்டுவிட்டு ஒரு நாளேனும் பிரிந்திருந்து அறியாத சின்னானுக்கு அக்காள் தனியாகக் குடித்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதிலிருந்து பெரும் மனச் சோகை. அவன் அக்கா ளுடன் போவதற்காக அப்பனான சொடுகனிடம் அடம் பிடித்தான். அக்காள் தனிக்குடித்தனம் போன பனங்காணி ஒரு இரண்டு கூப்பிடு தூரந்தானாயினும் அது சொடுகனின் அயலுக்கு அப்பால் கூவென்ற கூக்குரலுக்கு எவரும் உடனடியாக வருவதற்கில்லாத தனிப்பிரதேசமாக இருந்த தால், சின்னானை அக்கைக்காரியுடன் விட்டால் அவளுக் கும்உதவியாக இருக்குமென எண்ணிக்கொண்டு சொடுகன் அவனைக் கூட்டிச் சென்று அக்காள்காரியுடனேயே விட்டு வந்து விட்டான்.

"எட கறுத்தான், உவனை ஏனெடா வைத்திருக் கிறாய்? உன்ரை பெண்டில் குழந்தைப் பெட்டை, வீடும் கொட்டில். எப்பன் கையைக் காலை நீட்டி நீயும் அவளும் படுத்தெழும்புறேல்லையோ? புதுப் பொம்பிளை மாப்பிள்ளைக்கு நேரங் காலங் கிடக்குதோடா? நீ முந்தி ஒண்டைக் கட்டினனி; உனக்கு நேரங்காலந் தெரியும்! அவள் பிஞ்சுப் பொட்டைக்கு என்னடா தெரியும் மடையா? அவனைப் போக்காட்டி விடடா!"

மூத்ததம்பி நயினார் கறுத்தானுக்கு இப்படி ஒரு கட்டளையைப் போட்டுவிட்டதன்மேல் சின்னான் ஒரு நிமிடங் கூட அக்காளுடன் நின்றுவிட முடியுமா? அவன் திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டான்.

சொடுகனுக்குச் சின்னான் இப்போது பெருஞ்சுமை ஆகிவிட்டான். சதா அழுது வடியும் அவனை வைத்துக் கொண்டு அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அதனால்தான் அவனை உடையார் நயினாரிடம் கொடுத்து விட்டான்.

உடையார் நயினாருடன் சின்னான் வைப்பாடிச்சி கமக்காரிச்சி வீட்டுக்கு வந்து சேர்ந்து ஏறக்குறைய ஐந்தாண்டு காலம் ஓடிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்பு இப்போதுதான் அக்காள் தெய்வி தலைப் பிள்ளைத்தாச்சியாக இருக்கிறாள் என்பது மட்டுந்தான் சின்னானுக்குத் தெரிந்திருந்தது.

அந்தத் தலைப்பிள்ளையைப் பெறாமலேயே அக்காள் செத்துப் போய்விட்ட தகவலை வல்லைத் தரவைக்குள் நின்று கேள்விப்பட்ட உடனேயே சின்னான் அழுது துடித்துக் கொண்டு சாவீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான்.

சின்னானின் அழுகை ஓய்ந்து போக நீண்ட நேரம் ஆகிவிட்டது.

இரண்டாவது மனைவியையும் இழந்துவிட்ட ஏக்கத்தில் கறுத்தான் ஓரிடத்தில் குந்தியபடியே இருந்து விட்டான்.

நான்கு பனந் தடிகளை நட்டுவைத்து பச்சைத் தென்னை ஓலைகளைப் பரப்பி ஒரு தட்டுப்பந்தல்,

மூத்ததம்பி நயினாரால் தரப்பட்ட ஒரு முடிச்சுப் புகையிலையும், இரண்டுகுலை பச்சைப் பாக்குகளும்,

நெல்லியடிச் சந்தைக்குள் நயினாரின் கணக்கில் பெற்ற ஒரு சந்தைக்கட்டு வெற்றிலை, ஒரு தடல் சுண்ணாம்பு,

பருத்தித்துறை மூலைக்கடையில் நயினாரின் கணக்கில் பெற்றுக் கொண்ட — சவத்தை மூடிக்கட்டவும், முகத் தீட்டுக்குப் போடவும் போதுமான எட்டுமுழக் காசாத் துணி,

சாம்பிராணி போடுவதற்கான ஒரு புதுச்சட்டி,

நயினார் வீட்டின் கிணற்றடியில் தறிக்கப்பட்ட கமுகைப் பிளந்தும் கீலமாக்கியும் கட்டப்பட்ட பாடைத் தட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்திட்டுத் துணிபோட்டு முதல் கட்டுக் கட்டி, அதற்கு மேல் சவத்தைத் தூக்கி வைத்துச் சுருட்டிக் கட்டுவதற்கு ஒரு பனை ஓலைப்பாய்.

இழவு வீடு சிறப்பாகி விட்டது.

சவம் தூக்கும் நேரம் வந்து விட்டது.

பிரேதம் போகும் வழியிலுள்ள வயல் பரப்பின் எல்லைச் சொந்தக்கார நயினார்களுக்கும் நேரம் சொல்லி யாகி விட்டது.

கோவியச் சின்னப் பொடியன் சொடுகனிடம் வந்தான்; மூத்ததம்பி நயினார் வரச்சொன்னதாகச் சொன்னான்.

சொடுகன் மூத்ததம்பி நயினாரிடம் சென்றான்.

"சொடுகன், உன்ரை மோள் சுமையோடை போட்டாள், அங்காலை அவளின்ரை சுமையை இறக்க ஆளில்லாமல் அவள் அந்தரிச்சுப் போவாள். அவள் அங்கை அந்தரிச்சா அது அவளின்ரை வயித்திலை இருக்கிற பிள்ளையின்ரை தேப்பனுக்குத் தான் கூடாது. அதுதான் நான் சொல்லுறன் சவக்கிடங்குக்கை வைச்சு அவளின்ரை சுமையை இறக்கிப்போடு; மறந்திடாதை!"

நயினாரின் இந்தப் பேச்சைக் கேட்டதும் சொடுகன் திகைச்சுப்போனான்.

தலைப்பிள்ளைத்தாச்சியை சுமை இறக்கிக் கட்டையில் எரிக்கும் வழக்கம் நயினாத்திமாருக்கு மட்டுந்தான் உரியது. அந்தச் சுமை இறக்கும் காரியத்தை, சுடலைக்குள் வைத்து, பரியாரி தனது சவரக் கத்தியாலேயே செய்து வைப்பான். இதை ஊருக்குள் பரியாரிக் குடிமை உள்ளவர்கள் மட்டுந்தான் செய்வார்கள்.

"நயினார் என்ன கதைக்குதாக்கும்? நாம்சொல்லுறது போலை சுமை இறக்க பரியாரி வேணுமாக்கும்!"

சொடுகன் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொடுகன், பரியாரி செய்தாத்தான் சுமை இறங்குமோ கேக்கிறன், ஏன் அவன் உன்ரை மோன் செய்யட்டுக்கு, பாளை அறுக்கிற சூரிக்கத்தியொண்டு குடுத்தியெண்டா அவன் செய்து போடுவான்!"

நயினார் வழிமுறைகளையும் சொல்லிவைத்தார்.

சொடுகன் கைகளைக் கசக்கிக் கொண்டு நின்றான்.

"நீ என்ன யோசிக்கிறாய் எண்டு எனக்கு விளங்குது சொடுகன், நளங்களும் சுமை இறக்க வெளிக்கிட்டிட்டுதுகளோ எண்டு மற்ற நயினாரவை ஏதும் செய்து போடுவினம் எண்டு யோசிக்கிறாய். அவையாலை வாறதுகளை நான் பாக்கிறன்! கறுத்தான் என்ரை குடிமோன். அவனுக்கு பொண்டில் சுமை இறக்காமல் போனாள் எண்டதாலை ஏதாவது இடைஞ்சல் வந்தால் எனக்கெல்லே நட்டம்! அவனுக்கு மற்ற நயினாரவை நட்டம் கட்ட வரப்போகினமே? சொடுகன் நீ போ! போய் சொன்னபடி எல்லாத்தையும் செய்துபோடு!"

இந்தப் பேச்சுக்கு மேல் நயினார் நிற்கவில்லை.

அவர் முற்றந்தாண்டி உள்ளே போய்விட்டார்.

"உமக்கேனும் உந்தத் தேவையில்லாத அலுவலை? நளங்களைக்கொண்டு சுமை இறக்கிற வேலையைச் செய்விச்சுப்போட்டு நாளைக்கு ஊரவை கேக்கிறதுகளுக்கு மறுமொழி சொல்லேலுமோ? கறுத்தானுக்குமேலை பெரிய உருக்கப்படுகிறீர்? இண்டையவரையிலை பரியாரிக் குடிமை இல்லாத மற்றச் சாதியள் ஒண்டும் செய்யாத வேலையை உவங்கள் செய்யிறதோ கேக்கிறன்?"

உள்ளே சென்ற அவரை மனைவி அன்னப்பிள்ளை நயினாத்தி இப்படிக் கேட்டபோது, "அது உமக்கு விளங்காதப்பா நீர் பேசாமல் உம்மடை பாட்டிலை இரும்!" என்று அவர் பதில் சொல்லிவிட்டார்.

சொடுகன் வந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவம் தூக்கப்பட்டது.

சற்றுத்தூரம் சென்று வயல் வரப்புகளைத் தாண்டி விட்டால் அதற்கப்பால் வருவது சுடலைதான்.

வயல் வரப்புக்குள் அந்த வயல்கார நயினார்மார்கள் தங்கள் தங்கள் வயல் பாத்திகளுடன் நின்றார்கள்.

தங்களுடைய வயல் வரம்புகளால் சவம் போவதற்கு அவர்கள் நின்று அனுமதிக்க வேண்டும். அதுதான் முறை.

அவர்கள் கையசைத்து அனுமதித்து விட்டார்கள்.

சவம் சவக் கிடங்குவரை சென்றது.

கிடங்குக்குள் இறக்கப்பட்டது.

ஏற்கெனவே சொடுகன் மற்றவர்களுடன் யோசித்து விட்டதால் கிடங்கு உள்ளே ஓரிருவர் சின்னானுக்கு உதவியாக நின்று சுமை இறக்குவதற்கு வசதியாகச் சற்று விசாலமாக இருந்தது.

''மோனை இஞ்சை வா...... இறங்கு; கிடங்குக்கை இறங்கு!'' என்று சொடுகன் சின்னானை அழைத்தான். சின்னான் கிடங்குக்குள் இறங்கிவிட்டான்.

சின்னானுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''ஏனணை?'' என்று அவன் அப்பனை கேள்வி கேட்டான். அந்தக் கேள்விக்குப் பதில் வருவதற்கிடையில் ஒரு முதிர்ந்தவன் அவன் கையில் பாளை அறுக்கும் கூர்க்கத்தி ஒன்றைக் கொடுத்தான்.

இது சின்னானுக்கு விளங்கவில்லை.

''கொக்காளுக்கு சுமை இறக்க வேணும் மோனை. வாய்க் கட்டை வெட்டிப்போட்டு, முகத்திட்டுச் சீலைக் கட்டையும் வெட்டிப்போட்டு, வயித்திலை கீறு மோனை!''

வேறொரு வயதானவன் பக்குவம் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னானுக்கு விஷயம் இப்போதுதான் புரிந்தது. அவன் பெருங்குரல் வைத்துக் கதறினான்.

அவன் அழுவதை யாரும் தடுக்கவில்லை. சற்றுவேளை விட்டு விட்டனர்.

அழுகை ஓய்ந்தது.

''நான் வெட்டன்; என்ரை அக்காளை நான் வெட்டன்!'' என்று அவன் ஓங்காரமாகக் குரல் வைத்தான்.

எல்லோரும் திகைத்துப்போய் நின்றனர்.

''எட தம்பி, மோனை; மூத்ததம்பி நயினார் தானெடா சொன்னவர், செய்யாட்டி எக்கணம் இருந்த பாடில்லை.''

இப்படிக் கூட்டத்தில் ஒரு குரல் கேட்கவே, ''மூத்த தம்பி நயினாரை வெட்டுவன்; அவன்ரை குடலைக் கிழிப் பன்'' சின்னானின் குரல் பதிலுக்கு வந்தது.

''நாசமறுந்தவன்; எக்கணம் நயினாற்றை காதிலை விழுந்தா... டேய் சின்னான் வெட்டடா!'' என்று கூறிக் கொண்டே ஒருத்தன் சின்னானின் கையைப் பிடித்து தெய்வியின் வயிற்றுக்கு நேரே கொண்டு போனான்.

எப்படித்தான் அவனின் பிடியைச் சின்னான் பறித்துக் கொண்டானோ!

சின்னான் கிடங்குக்கு வெளியே வந்து விட்டான்; கத்தியை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு ''வந்தியளோ வெட்டிப் போடுவன்!'' என்று வர்மமாகக் குரல் வைத்தான்.

நான்கைந்து பேர் சின்னானைப் பிடித்து விட்டனர்; நான்கைந்து பேர் அடித்தனர்.

சூழநின்றவர்கள் அவனை விடுவித்து அப்பால் அழைத்துச் சென்று விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் விளைவுகளை எதிர்பார்க்காமல் "சுமை இறக்கிச் சுடுகிறது நயினார்மார்தான், எங்கட சவத்தைச் சுட விடாயினப்; சுமை இறக்கிற வேலையும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம்!" என்று பலர் நியாயம் சொல்ல முற்பட்டு விட்டனர்.

சுமை இறக்கப்படாமலே; தெய்வியின் கட்டை மண் போட்டு மூடப்பட்டு விட்டது.

இரவு வந்தது.

திடலில் இருந்த சகலருமே "நாளை என்ன நடக்குமோ?" என்று ஏங்கினர்.

விடிந்ததும் திடலில் உள்ள பெண்கள் கிணற்றடிக்குப் போயினர்.

அவர்களுக்குத் தண்ணீர் வார்க்கக் கிணற்றடியில் யாரும் இல்லை.

அவர்கள் யாராவது ஒருவரின் வரவுக்காகக் காத்து நின்றனர்.

கோவியச் சின்னப் பொடியன் வந்தான்.

"திடல்லை இருக்கிறவைக்கு இனி இந்தக் கிணத்துத் தண்ணி இல்லையாம், நயினார் சொல்லச் சொன்னவர்" என்று மொட்டையாகச் சொல்லிவிட்டு அவன் திரும்பி விட்டான்.

திடல் அல்லோல கல்லோலப் பட்டது.

பல ஆண்டுகளாகத் தண்ணீர் தந்த மூத்ததம்பி நயினாரின் கிணறு அவர்களுக்குத் தண்ணீர் தர மறுத்தது. அவர்களையெல்லாம் ஏங்கவைத்துவிட்ட செய்தியாகும்.

மூத்ததம்பி நயினாரைச் சமாதானம் செய்வதற்காக பலர் பல வழிகளில் முயன்றனர். ஆனால் மூத்ததம்பி நயினாரோ சகலரையும் தூக்கி எறிந்து பேசி அனுப்பி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சார் மூத்ததம்பி, நானறியாக் காலத்திலை இருந்து அவங்கள் உன்ரை கிணத்தை நம்பித்தான் இருந் தவங்கள்! எப்பிடி இருந்தாலும் அவங்கள் எங்கடை குடி மக்கள்! அவங்களுக்கு உப்பிடி ஏன் செய்தனி எண்டு எனக்கு எப்பனும் விளங்கேல்லை. எப்பன் விளங்கச் சொல்லன்!"

இப்படி ஊருக்குள் வயதான நயினார் முத்துவேலர் மூத்ததம்பி நயினாரைக் கேட்ட கேள்விக்கு, "அதொண் டும் என்னெட்டைக் கேக்க வேண்டாம், திடலாங்களுக்குத் தண்ணி குடுக்கன்!" என்று அவர் பதில் சொல்லி விட்டார்.

"அவள் தெய்வி சுமையோடை போனா நீர் ஏன் துடிப்பான்? அவளின்ரை வயித்துக்கை உம்மடை சுமை தான் கிடக்கிறமாதிரி பெரிய வில்லங்கப்படுறீர்!"

முந்திய கேள்விக்கு எடுத்த எடுப்பிலேயே மறுமொழி சொல்லி விட்ட மூத்ததம்பி நயினாரால் இப்போது மனைவியின் தாக்கமான கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. சற்று வேளைக்குள் "நீர் தேவை யில்லாத கதை கதைக்கிறீர்!" என்று சினப்பட்டு விட்டு எழுந்து வெளியே போய்விட்டார்.

"அது சரி, முந்தி முந்தி அவங்கள் செய்யாத சுமை இறக்கிற காரியத்தை ஊரை மேவாமல் நீர் உம்மடை மூப்பிலை ஏன் செய்ய வெளிக்கிட்டனிர்? தெரியாமல் கேக்கிறன் சொல்லும் பாப்பம்! உம்மடை ஊர் எண்டு நினையாதையும்!"

இப்படிப் பழைய விதானையார் இராமலிங்கத்தார் அச்சறிக்கை செய்யும் தோறணையில் மூத்ததம்பி நயினாரைக் கேட்டுவிட்டார்.

"நீர் விதானையெண்டா உம்மூக்கை வைச்சுக் கொள்ளும் என்னை அச்சறிக்கை பண்ணிறதுக்கு நீர் ஆர், நான் கேக்கிறன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாரின் கேள்விக்கு இப்படி பதில் கேள்வி போட்டு விட்டார் மூத்ததம்பி நயினார்.

விதானையாருக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது.

அவர் நேராகத் திடலுக்கு வந்தார்.

"எடி பொடிச்சியள்! நீங்கள் பயப்படாதையுங் கோடி! உதிலை ரெண்டு கூப்புடு தூரந்தான் இருக்கும் என்ரை தோட்டக் கிணறு. அங்கை வாங்கோடி தண்ணிக்கு!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தண்ணீர்ப் பிரச்சினை ஒரு மாதிரித் தீர்ந்துவிட்டது.

மூத்ததம்பி நயினாரின் பேச்சைக் கேட்காமல் ஊருக்குள் வில்லங்கத்தை உண்டாக்கிய சின்னான்மேல் சீறிச் சினந்தவர்கள் ஒருமாதிரியாகச் சாந்தி அடைந் தனர்.

இந்தப் பிரச்சினை முடிய நான்கு நாட்கள் ஆகி விட்டன.

இதன் பின்புதான் சொடுகன் மகன் சின்னானை உடையார் பண்ணையை நோக்கி அழைத்து வந்தான்.

உடையார் பண்ணையைக் கிட்டக்கிட்ட சின்னானின் நடுக்கம் அதிகரித்து வந்தது.

உடையாரின் வைப்பாடிச்சிக் கமக்காரியின் சுபாவம் அவனுக்குத் தெரியும்.

மாடுகளைத் தரவைக்குள் விட்டு விட்டுப் போனது......

கமக்காரிச்சியிடம் அநுமதி பெறாமல் போனது......

நான்கைந்து நாட்கள் கழித்துத் திரும்புவது......

எல்லாமே அவனை நடுங்க வைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

சொடுகனும் சின்னானும் உடையார் பண்ணை வளவுப் படலைக்குச் சென்றபோது உள்ளே சற்றுப் 'பைம்பலாக' இருந்தது. இந்தப் பைம்பலுக்கான காரணத்தை சின்னானாலோ, சொடுகனாலோ அநுமானித்துக்கொள்ள முடியவில்லை. பைம்பலான இந்த வேளையில் உள்ளே போகும் துணிச்சலும் இருவருக்கும் இல்லை. பைம்பலான இந்த வேளை வருவோர் போவோரின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் புழக்கமான மரப்படலையோரம் நில்லாமல் பக்கத்து வண்டித் தட்டு ஓரமாக இருவரும் நீண்ட நேரம் நின்றனர்.

வெயில் ஏறிக்கொண்டிருந்தது.

உள்ளே ஆண்களின் 'சிலமனை' விடப் பெண்களின் சிலமனே அதிகமாக இருந்தது. உள்ளே அவர்கள் பேசிக்கொள்ளும் ஓசைகளும், சிரிப்போசைகளும் கேட்டன. அந்தப் பேச்சுக்களிலும், சிரிப்புக்களிலுமிருந்து ஏதோ உள்ளே நல்ல காரியம் நடப்பதாகவே சொடுகன் தீர்மானித்துக் கொண்டான். வந்தும் போயும் கொண்டிருந்த பெண்களில் நயினாத்திமார்கள் யாரையும் சொடுகன் காணவில்லை. ஏறக்குறைய எல்லோரும் உடையார் நயினாரின் வைப்பாடிச்சிக் கமக்காரியின் சொந்தக்காரர்களாகத் தான் இருந்ததை அவதானிப்பதில் சொடுகனுக்கு அவ்வளவு கஷ்டம் இருக்கவில்லை. ஏறக்குறைய எல்லோருமே வெற்றுடம்புக் குறுக்குக் கட்டுக் காரிகளாக இருந்த ஒன்றே சொடுகனின் அநுமானத்திற்குப் போதுமானதாகும். ஒருத்தி, அல்லது இருவர் தான் வெற்றுடம்புத் தாவணியுடன் சென்று திரும்பினர்.

உள்ளே சென்று திரும்பும் ஒவ்வொருத்தியும் கையில் ஒவ்வொரு வெற்றிலைச் சுருளைக் கொண்டு சென்றதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்தும், வேறு பல பேச்சுகளிலிருந்தும் உள்ளே யாரோ சாமர்த்தியப்பட்டு விட்டார்கள் என்பது சொடுகனின் அபிப்பிராயம். ஆனால் பக்குவப் பட்டவள், கமக்காரிச்சி யின் தங்கைகளில் ஒருத்தியோ, அல்லது கமக்காரிச்சியின் முந்தியவரின் மகளோ, அல்லது உடையார் நயினாருக் கெனப் பிறந்த மகளோ யாரென்பதுதான் அவனால் அநுமானிக்க முடியாத ஒன்றாக இருந்தது.

''என்ன மச்சாள் உவன் உன்ரை குடிமைப் பொடியன் சின்னானெல்லே தேப்பன் சொடுகனோடை வந்து வண்டில் தட்டியிக்கை காத்துக் கொண்டிருக்கிறான்.''

என்ற ஒருத்தியின் குரல் உள்ளிருந்த கேட்டபோது சின்னானுக்கும், சொடுகனுக்கும் அது திருப்தியாக இருந்தது. ''தாங்கள் வந்திருப்பது கமக்காரிச்சிக்குத் தெரிந்து விட்டது'' என்ற திருப்திதான் அது.

''குப்பைத் தண்ணி வார்வை முடியட்டுக்கு அவன்ரை அலுவலைப் பிறகு பாக்கிறன்!''

கமக்காரிச்சியின் மறுமொழியும் தொடர்ந்து கேட்டது.

இப்பொழுது சொடுகனுக்குப் பரமதிருப்தி!

உடையார் நயினாரின் ஒற்றைத் திருக்கல் வண்டி வரும் சத்தம் இலேசாகக் கேட்டது.

கிரவல் ஒழுங்கையில் நேருக்கு நேராகச் சற்றுத் தூரத்தில் அந்தத் திருக்கல் வண்டியை ஒருவன் இழுத்து வந்தான்.

அந்த வண்டியை வியர்க்கக் களைக்க இழுத்து வந்தவன் சொடுகனின் சொந்தக்காரனான கரணவாய் மூத்தன்தான்.

வண்டி வருவதற்கு முன்பே சொடுகனும் சின்னானும் எழுந்து பன்னை அலம்பல்களால் கட்டப்பட்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வண்டில் தட்டியை அவிழ்த்து அரக்கிச் சாத்திவிட்டு வேலியோடு ஒதுங்கிப்போய் நின்றனர்.

முத்தன் வண்டியை இழுத்துக் கொண்டு உள்ளேயே போய்விட்டான்.

உடையார் நயினாரின் கடைக்கண் பார்வை ஒரு தடவை சின்னான் மேலும், சொடுகன் மேலும் விழுந்து தான் இருக்கவேண்டும்.

உள்ளே ஆரவாரமாக இருந்தது.

உடையார் நயினாரின் வரவுக்காகத்தான் இதுவரை எல்லோரும் காத்திருந்திருக்க வேண்டும்.

''கட்டாடிச்சி, கட்டாடிச்சி, வாடி!'' இந்த ஓசை உள்ளே இருந்து எழுந்தபோது சாமர்த்தியக்காரிக்குக் குப்பைத் தண்ணி வார்ப்பதற்கான ஆயத்தமாகி விட்டது என்பது சொடுகனுக்கு விளங்கிவிட்டது.

வண்டிக்கார முத்தன் வெளியே வந்து இவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

''என்ன பொடியா, புத்தி அறிஞ்சது ஆராம் பொடியா?'' இப்படி ஒரு கேள்வியைச் சொடுகன் முத்த னிடம் கேட்டான்.

''இது இத்தறிதிமட்டுந் தெரியெல்லையே?'' என்று பதில் கேள்வி கேட்டுக்கொண்டே முத்தன் வண்டில் தட்டி யோடு குந்துகாலில் இருந்து கொண்டான்.

''இப்பான் பொடியா வந்த நாங்கள். இவன் அக்காள் காறி செத்ததெண்டோடனை கமக்காரிச்சியெட்டையுங் கேக்காமல் வந்திட்டான். அதுதான் கூட்டியந்தனான் உள்ளுக்குள்ளை ஆரவாரமாகக் கிடக்கு அதுதான் இதிலை இருக்கிறம்!'' என்று சொடுகன் முத்தனுக்குப் பதில் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமக்காரிச்சியின் தங்கைக்காரி ஒருத்தி பதினெட்டுப் பத்தொன்பது வயதுவரை தீட்டுத் துடக்கு இல்லாமல் இருந்தாள்.

அவளை இருளிப் பெட்டை என்றுதான் ஊரில் அழைத்தனர்.

அந்த இருளிப்பெட்டைக்கு சின்னான் வீட்டை விட்டுப் போன அன்று மாலையே தீட்டுத் துடக்கு கண்டு விட்டது. ஆனால் அவள் அந்தத் தீட்டுத் துடக்கை அக்காளுக்குக் காட்டாமல் மறைத்துவிட்டாள். சின்னான் தரவைக்குள் நின்று அக்காளின் சாவீட்டுக்குப் போய் விட்டதான அந்தச் செய்தி அறிந்தபோதும் "அவன் இனி இந்த வீட்டுக்கு வேண்டாம்" என்று அக்காள்காரி உடையார் அத்தானிடம் பேசிய போதும் அவள் உடம் பெல்லாம் என்னவோ செய்தது. அதற்குப்பின் அவள் புத்தி அறிந்தேவிட்டாள்.

"இருளிப் பொட்டைதான் புத்தி அறிஞ்சதாம்" என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு மூத்தன் சொன்ன போது இது சின்னானுக்கும் கேட்டது.

இருளிப் பெட்டை கடந்த சில நாட்களாக தன்மீது பரிவு கொண்டிருந்ததைச் சின்னான் நினைத்துப் பார்த் தான்.

ஒருநாள் இருட்டி விட்ட வேளையில் மாட்டு மடுவத் துள் அவன் நின்றிருந்த நேரம் இருட்டோடு வந்து கையைப் பிடித்து கைக்குள் ஒரு எள்ளு உருண்டையை வைத்து விட்டுப் போனது......

இன்னொருநாள் மாட்டு மேய்ச்சலுக்குப் புறப்பட்ட போது வழமையாக இலையில் சுருட்டிக் கொடுக்கும் பட்டினிப் பண்டத்துடன், அங்காலும் இங்காலும் பார்த்துவிட்டு, முன்சேலைக்குள்ளிருந்து இரண்டு வாழைப்பழங்களை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு நாள் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு வந்து கட்டைகளில் கட்டிக் கொண்டிருந்தபோது ஒரு சிரட்டை நிறைய நன்றாக இனிப்புக் கலந்த பாலைக் கொண்டு வந்து கொடுத்து ''அக்கா வீட்டிலை இல்லை, வ'ரச் சுணங்கும்!'' என்று சொல்லி விட்டுப் போனது...

இவை எல்லாவற்றையும் சின்னான் வெறுமனேதான் நினைத்துப் பார்த்தான். இதற்குமேல் இவைகளுக்கு ஏதாவது அர்த்தங்கள் கற்பிக்க அவனால் முடியவில்லை.

சற்று வேளைக்குள் இவர்களைச் சுற்றி ஆண்கள், பெண்கள், குழந்தைகள், என்ற விதத்தில் பதினைந்து பேர்களுக்கு மேல் கூடி விட்டனர். அவர்களில் பலர், முத்தனுக்கும், சொடுகனுக்கும் சொந்தக்காரர்களாகவும் இருந்தனர், மிகுதிப் பேர்கள் அந்தப் பகுதிப்பக்கத்தவர்கள்.

வழமைப்படி நயினார்மார் வீட்டுக்குச் சோற்றுக்காகச் செல்பவர்கள், உடையார் நயினாரின் கட்டளைப் படி சில காலங்களாகத்தான் வைப்பாடிச்சிக் கமக்காரி வீட்டுக்கு வருகின்றனர்.

உள்ளே குப்பைத் தண்ணீர் வார்வை முடிந்தது.

உறவினர்களுக்கான சபை சந்தி முடிந்தது.

''அங்கை வெளியிலை நிக்கிற குடி மக்களைக் கவனிச்சியளே!''

இப்படி உள்ளே இருந்து கமக்காரிச்சியின் குரல் கேட்டது.

சற்று வேளைக்குப்பின் மூவர் குடிமக்களுக்குச் சபை நடத்துவதற்காக வண்டில் தட்டியோரம் வந்து சேர்ந்தனர்.

கிடுகுகள் இரண்டு நிரையில் போடப்பட்டன.

ஒரு வரிசையில் ஆண்கள்.

மறுவரிசையில் பெண்களும் பொடி பெட்டைகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன், சொடுகன், சின்னான் ஆகியோர்களும் சபைக்கு உட்படுத்தப்பட்டு விட்டனர்.

புழுங்கல் அரிசிச் சோறு வாசனையாக இருந்தது.

கறிகளின் தாளிப்பு வாசனையும் சேர்ந்து கொண்டு புத்தியறிந்தவளின் பரிசுத்தத் தனத்தை வெளிப்படுத்தியது.

கடைசியில் கைமண்டையில் தண்ணீர் வார்க்கப்பட்டதுடன் சாப்பாட்டுக் காரியம் மங்களகரமாக முடிந்தது.

அதற்கு அப்பால் குஞ்சுக் கடகங்களுடன் வந்திருந்தவர்களின் கடகங்களுக்குள் சோறும் கறியும்!

இந்த விஷயத்தில் கமக்காரிச்சிக்குத் தாராள மனது தான்!

பொழுது சரிந்து விட்டது.

ஏறக்குறைய எல்லோருமே கலைந்து விட்டனர்.

உடையார் நயினாரை ஏற்றிக் கொண்டு முத்தனும் வண்டியை இழுத்துச் சென்றுவிட்டான்.

சொடுகனும், சின்னானும் இன்னும் வண்டில் தட்டிக்கு வெளியே நின்றனர்.

உடையார் நயினார் போகும்போதும் ஒருதடவை இருவரையும் கண்களால் துழாவிச் சென்றார். அவ்வளவு தான்.

"சொடுகன், நீ ஏனெடா நிக்கிறாய்? அவனை விட்டிட்டு நீ போடா! ஆறுதலாக அவனோடை கதை இருக்கு!"

இப்படிக் கமக்காரிச்சி வந்து சொன்னாள்.

கமக்காரிச்சியின் அனுமதி கிடைத்து விட்டது.

சின்னானை விட்டுவிட்டு சொடுகன் வந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

# 6

"எணை அப்பு எணோய்! என்ரை அப்பு!" என்ற குரல் கேட்டுத் திடுக்குற்று எழுந்து கொட்டில் படலைக் கட்டை அவிழ்த்துக் கொண்டு சொடுகன் வெளியே வந்தான்.

பின் நிலவு காலிக்கும் நேரம் வெளியே சற்று வெளுப்பாக இருந்தது.

சின்னானின் அழுகைச் சத்தந்தான் அவனுக்குப் பெரிதாகக் கேட்டது.

"என்ன மோனை? என்ன மோனை அது? ஏன் மோனை இந்த ஏமம்சாமத்திலை வந்தனி?" என்றுகேட்டுக் கொண்டே நுளம்புக்காக மருதம் வத்தல் போட்டுப் புகைக்க வைத்திருந்த சட்டியை ஊதித் தென்னோலைப் பிடி ஒன்றை மூட்டி உயர்த்திக் கொண்டே சொடுகன் மகன் சின்னானைப் பார்த்தான்.

சின்னான் அழுது கொண்டே இருந்தான்.

'எணை அப்பு...... அவ கமக்காரிச்சி மாட்டுத் தொட்டில் காலோடை கட்டி வைச்சு, தட்டேப்பையாலை முதுகிலை குறிவைச்சுப் போட்டாவெணை...... எணை அப்பு இஞ்சை பாரணை........." என்று விக்கித் தக்கிக் கொண்டே சின்னான் வெளிச்சத்தை நோக்கி முதுகுப் புறத்தைத் திருப்பினான்.

சொடுகனுக்கு நெஞ்சு விறைத்தது.

முதுகுப்புறம் தட்டகப்பை முன்பக்கமளவு அகலத்திற்கும், அதற்குக் கீழாக வால்போல சிறிது தூரத்திற்கும் முதுகுத்தோல் பொங்கிப் பொருமி இருந்தது.

சின்னான் அழுது கொண்டே இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொடுகன் ஓலையைச் சப்பி விழுங்கிக்கொண்டு உயர்த்திப்பிடித்தவெளிச்சத்தில்கண்ணீர்சிந்திக்கொண்டே இருந்தான்.

யாரோ புதிடவர்கள் வரும் அரவம் கேட்டது.

அடுத்த வளவுச் செல்லியும் அவள் மகள் சின்னியும் வந்து நின்றனர்.

செல்லி சின்னானை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அவனை ஆசுவாசப்படுத்தினாள். அவளின் அந்த அணைப்பிலும் ஆசுவாசத்திலும் ஒரு தாயின் பரிவைச் சின்னான் உணர்ந்து விட்டிருக்கவேண்டும்!

அவன் குரலை உயர உயரச் செய்து விம்மினான்.

"ஆரண்ணை இந்த இரணிய வேலை செய்தது?"

சற்று வேளைக்குப் பின் செல்லி கேட்டாள்.

"உடையார் நயினாற்றை வைப்பாடிச்சிக் கமக்காரியாம் பெட்டை!"

சொடுகனின் குரலில் ஆத்திர உணர்வு ஏதும் இருந்ததாக இல்லை.

"அடிமை குடிமையளை வைச்சு ஆண்ட ஆமான நயினாத்தி இப்பிடிச் செய்திருக்காள்! உவள் புருஷன் இருக்கேக்கை வடிவான மாப்பிளையெண்டு மணியகாறன்ரைமோன் உடையார் நயினாரைப் பிடிச்ச இடையிட்டு வந்த கமக்காரிச்சி இப்பிடித்தான் செய்வாள்!"

செல்லி கோபமாகவே பேசினாள்.

சின்னான் இன்னும் அழுதுகொண்டுதான் இருந்தான்.

சின்னியின் விம்மல் குரலும் கேட்டது.

"நீ ஏன் பொடிச்சி அழறாய்? அழாதை!"

இப்படி சொடுகன் சின்னியைச் சமாதானப் படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எடி பிள்ளை, வீட்டை போய் தாவாரத்திலை உடைஞ்ச குண்டானுக்கை கிடக்கிற மழைத் தண்ணி யிலை எப்பன் கிள்ளிக் கொண்டு வா மோனை!''

செல்வியின் பேச்சு முடியும்வரையில் சின்னி காத்திருக் கவில்லை. அவள் மழைத் தண்ணீர் எடுத்துவர ஓடிச் சென்று விட்டாள்; ஓடியவள் சற்று வேளைக்குள் முட்டி ஒன்றுக்குள் மழைத் தண்ணீருடன் வந்து சேர்ந்து விட்டாள்.

செல்வி தண்ணீரைக் கிள்ளி எடுத்துக் கொப்புளம் இருந்த இடத்தில் ஒழுக விட்டுவிட்டு முன்தானைச் சேலையால் மெதுவாக மெதுவாக ஒத்தடம் கொடுத் தாள்.

சின்னானுக்கு இப்போது அழுகை சற்றுக் குறைந்து குறைந்து சற்று இடைவெளி விட்ட விம்மலாக மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தது.

''என்ன மோனை நடந்தது?'' செல்வியின் இந்தக் கேள்விக்குச் சின்னான் நடந்து போன கதையைச் சொல்லத் தொடங்கினான்.

கதை வல்லைத் தரவைக்குள்ளிருந்து தொடங்கி, தகப்பனும் தானும் கமக்காரிச்சி வீடுவரையும் போய் சாமர்த்திய வீட்டுச் சாப்பாடு வரை சென்று தகப்பன் விட்டு விட்டு வந்தது வரை கழிந்து, இரவு கமக்காரிச்சி மாட்டுத் தொட்டில் காலில் கை கொடுக்கும்படி சொன் னதும், தான் கைகொடுத்ததும், கமக்காரிச்சி கையைக் கட்டியதும் தட்டகப்பைக் காம்பைக் காய்ச்சி முதுகில் குறி சுட்டதும், தான் அந்த இடத்திலேயே அழுதபடி நின்றதும், நடுச் சாமம் போல இருளி நாச்சியார் வந்து கட்டிய கயிற்றை அறுத்து விட்டதும் வரை தொடர்ந்து கடைசியில் தான் ஓடி வந்து விட்டது வரை வந்து முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லியின் பற்கள் நறநறத்துக் கொள்ளும் ஓசை கேட்டது.

இப்போது சின்னியின் விம்மல்குரல் தான் மேலோங்கி நின்றது.

''எடி விசர்ப் பொட்டை நீ ஏனெடி அழுகிறாய்? கோத்தை மழைத்தண்ணி போட்டிருக்கிறாள் அவனுக்கு ஒண்டுஞ் செய்யாது நீ அழாதை மோனை!''

சொடுகன் மறுபடியும் சின்னியை ஆசுவாசப்படுத்தினான்.

தென்னோலைப் பிடி எரிந்து ஓய்ந்து கொண்டிருந்தது;

அடிவானம் தேய்நிலவின் ஒளி கண்டு நன்றாக வெளுத்து வந்தது.

''விடியட்டுக்கு மோனை, அதுக்கிடையில் பொக்களத்தை உடைச்சுக்கிடைச்சுப் போடாதை! கொப்பரோடை படு!'' என்று கூறிவிட்டு செல்லி, மகள் சின்னியைம் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

''எணை ஆத்தை! அவ இருளி நாச்சியார் நல்லவ போலை கிடக்கு, இல்லாட்டி அவிட்டு விட்டிருக்கா என்னெணை?''

தாயானவளை சின்னி இடைவழியில் வைத்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டாள். இந்தக் கேள்விக்கு ஏதாவது பதில் சொல்ல வேணடும் என்று செல்லிக்குப் படவில்லை.

''தமக்கைக்காரிக்குத் தெரியாமை இருளி நாச்சியார் சாமத்திலை அவுத்து விட்டிருக்காட்டி விடிய......''

சற்று வேளைக்குப் பின்பு சின்னி மறுபடியும் பேசத் தொடங்கி முடிக்கவில்லை. ''எடி பேசாமல் வாடி!'' என்று அவளை மேலே பேசவிடாமல் தடுத்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தை ஏன் இப்படிச் செய்தாள் என்பதைச் சின்னி யால் யோசிக்க முடியவில்லை.

பொழுது விடிந்தபோது செல்லி சொடுகன் குடிசைக்கு வந்தாள்.

சொடுகன் அங்கில்லை.

இரவு படுக்கையில் சின்னானின் கொப்புளம் தகர்ந்து அவனுக்குப் பெருவருத்தத்தை ஏற்படுத்தி விட்டதால் விஷக்கடி வைத்தியம் செய்து வந்த சரவணையிடம் ஏதாவது பச்சிலை மருந்து வாங்கிவந்து பூசிவிடுவதற்காக அவன் காளி கோயிலடிக்குப் போயிருந்தான்.

''செல்லி குடிலுக்குத் தூரத்தே வரும்போது சின்னா னின் முனகல் குரல் — அழுகைக்குரல் கேட்டது.

''என்னெடா மோனை செய்யுது?'' என்று கேட்டுக் கொண்டே செல்லி வந்தாள்

சின்னான் பதில் சொல்லாமலே முனகினான்.

''கொப்பர் எங்கை?'' என்று செல்லியே மீண்டும் கேட்டாள்.

''கொப்பளம் உடைஞ்சு போச்செணை, ராவு ராவா ஒரு கண் மூடேல்லை, விடியத்தோடை சரவணைக் குஞ்சி யெட்டை மருந்து வாங்கியரவேணுமெண்டு கதைச்சவர்; போட்டார் போலை கிடக்கு!''

சின்னான் அனுங்கி முனகிக் கொண்டே பதில் சொன்னான்.

செல்லி அவனை நிமிர்த்தி இருத்தி விட்டு கொப்புளம் தகர்ந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி மெதுவாக மெதுவாகத் தடவித் தடவி வேதனையின் உக்கிரத்தைச் சாந்தப்படுத்த முயன்று கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சற்று ஆறுதலாக இருந்ததை அவனின் அனுக்கத் தணிவு காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த இருளிப் பெட்டையும் இல்லாட்டா அந்தத் தேவடியாள் உன்னை விடியவும் அடிச்சு முறிச்சிருப் பாள்!''

செல்வி எதையோ நினைத்துக் கொண்டுதான் இதைக் கேட்டாள் என்பது சின்னானுக்குச் சிறிதும் தெரிய வில்லை.

''இருளி நாச்சியார் என்னிலை வலு வாரப் பாடெணை!''

இதை மட்டுந்தான் செல்விக்குக் கூறினான்.

இதற்குமேல் அவனை எதுவும் கேட்கும் அவசியம் செல்விக்கு ஏற்படவில்லை. ''வாரப்பாடு'' என்ற அந்தச் சொல்லுக்குள்ளேயே அவள் சகல அடக்கத்தையும் கண்டு விட்டாள்.

தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் சின்னான் அக்காள் காரியின் இழவு வீட்டுக்கு வந்துவிட்ட ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் கமக்காரிச்சி இப்படிச் செய்தி ருக்க மாட்டாள்! என்று இரவோடிரவாக மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருந்த செல்விக்கு இப்போது எல்லாம் வெளிச்சமாகி இருக்க வேண்டும்.

''உவளவை ஒரு இரணியச் சாதியடா மோனை! நீயும் குழந்தைப் புத்தியிலை ஏதோ பிழை விட்டிட்டாய் போலை கிடக்கு!''

செல்வி இதற்குமேல் பேசாமல் அப்படியே நிறுத்திக் கொண்டாள்.

''என்னை ஆளாக்கிய அக்காள் செத்துப் போய்க்கிடக் கேக்கை நான் மாடுகளைத் தரவேக்கை விட்டிட்டு வந்தது பிழையோ கேக்கிறன்? மாட்டையுஞ் சாய்ச்சுக் கொண்டு போய் விட்டிட்டு அவவட்டைக்கேட்டா அவ விடுவாவோ கேக்கிறன்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னான் அப்பாவித்தனமாகச் செல்வியையே பதில் கேள்விகள் கேட்டான்.

''அதில்லையடா பொடி! நான் சொல்லுறது உனக்கு விளங்கேல்லை.''

செல்வியின் இந்தத் திசைதிருப்பல்; சின்னானுக்கு விளங்கவேயில்லை.

வெளியே சொடுகன் வரும் ஓசை கேட்டது.

அவன் சரவணைப் பரியாரியின் பச்சிலை மருந்துத் திரணையைக் கொண்டு வந்தான்.

செல்வி அந்தப் பச்சிலைக் குழம்பை இலையோடு பெற்று சிறு அளவு விரலால் கிள்ளி தகர்ந்து கிடந்த அவனின் புண்மேல் தடவினாள்.

சின்னான் அது எரியும் என்றுதான் எதிர்பார்த்தான். அது மிகவும் குளிர்மையாக இருந்தது.

பொழுது சற்று மேலே வரும் வரையில் செல்லி அங்கு இருந்தாள்.

சொடுகன், இரவு தண்ணீர் ஊற்றி வைத்திருந்த தினை அரிசிச் சோற்றைக் கரைத்து, வெங்காயமும், பச்சை மிளகாயும் நறுக்கிப் போட்டுக் கடைந்து மகன் சின்னானுக்கும் செல்லிக்குமாக ஒவ்வொரு சிரட்டையைக் கொடுத்து விட்டுத் தானும் ஒரு சிரட்டையை எடுத்துக் கொண்டான்.

''இனிப் பொடியனை என்னண்ணை செய்யப் போறாய்?''

செல்லி சிரட்டைப் பழங்கஞ்சியைக் குடித்துக் கொண்டே ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''என்னத்தைச் செய்யிறது, முதுகுப்பண் ஆறினாப் பிறகு ரெண்டு நாள் செல்லக் கூட்டிக் கொண்டுபோய் அங்கைதான் விட்டிட்டு வரப்பாக்கிறன்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித மன அழுத்தலுமின்றிச் சொடுகன் பதில் சொல்லி விட்டான்.

''என்னண்ணை விசர் வேலை பாக்கிறன் என்னு றாய்?''

செல்வி இப்படித்தான் கேட்டாள்.

''கூட்டிக் கொண்டுபோய் விடாட்டாப் பேந்து உடையார் நயினார் விடுவாரே பொட்டை? பேந்தும் பேந்தும் வில்லங்கமெல்லோ வரும்!''

சொடுகன் குரலைத் தாழ்த்திக் கொண்டே கூறினான்.

''நான் சொல்லுறன்! இனி அங்கை விடுகிறது நல்லா யில்லை. பேந்து உன்ரை பெடியன் தோட்டக் கிணத்துக் கைதான் கிடப்பான் கண்டியோ! சொல்லிப் போட்டன், உது நடவாட்டிப் பார்!''

செல்வி இப்படிச் சொல்லி கஞ்சிச் சிரட்டையை செத்தைக் கரையோடு வீசிவிட்டு எழுந்து நடந்து விட்டாள்.

# 7

சின்னானுக்குக் கொப்பள உடைவுப் புண் ஆற பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது.

சொடுகன் விதானையார் நயனாரின் வீட்டுத் தோட்டம் துரவு, தொட்டாட்டு வேலைகள் பார்த்து வந்ததால் மகன் சின்னானின் புண் குணப்படும்வரை அவனைக் கட்டிக்காத்து வைத்திருக்க அவனுக்கு முடிய வில்லை.

அதிகாலையோடு எழுந்து பழங்கஞ்சியைக் கரைத்து மகனுக்கும் வைத்துத் தானும் குடித்து விட்டுக் கிளம்பி விடுவான்; மத்தியானம் வரையில் நயினாத்தி வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் வயிற்றை நிரப்பிக்கொண்டு மகனுக்கும் குஞ்சுப் பெட்டியிலும் சிரட்டையிலுமாக ஏதும் தீவனம் கொண்டு வருவான், பின்பு வெயில் தணிவதற்கு முன்னம் போவானாயின் இரவு எட்டு மணிக்குமேல் தான் வருவான். அதற்குப் பின்புதான் அந்தக் கொட்டிலுக்குள் உலை ஏறும். வரும்போது கொண்டுவரும் கோயில் சந்தைக்குள் கிடைக்கும் பனைஏறி மீனையோ, கெழுத்தி மீனையோ, விரால் மீனையோ, குளத்து மீன்களாகிய இவைகள் கிடையாத பட்சத்தில் ஏதாவது கடல் மீன்களில் குஞ்சு குருமானுமாக வாங்கி வருவதையோ ஒரு மிளகாய்க் கறி வைத்து அன்றையப் பொழுதைப் போக்கி விடுவான்.

சின்னானுக்கு மொட்டு மொட்டென்று அந்தக் குடிசைக்குள் தன்னந்தனியாக இருப்பதில் அலுப்புத்தான்,

இடையே ஒன்றிரண்டு தடவை செல்வி வந்து போவாள்.

இந்தப் பத்து நாட்களுக்குள் வீட்டில் ஆத்தை இல்லாத நேரம் பார்த்து சின்னி மூன்று தடவைகளுக்கு மேல் வந்து போனாள். இரண்டு மூன்று தடவைகள் சின்னான் பேச்சுத்துணைக்கு ஆள்தேடி, செல்வி வீட்டுக்குப் போனதும் உண்டு. ஒரு நாள் அவன் அங்கு போன போது செல்வியும் வீட்டில் இல்லை. சின்னி மட்டும் பனங்கட்டிக் குட்டான்களை இழைத்துக் கொண்டிருந்தாள்.

''ஆத்தை சொல்லுறா நீ இனி அங்கை போனாச் சவமாத்தான் வருவாயெண்டு! அதுதான் என்ன செய்யப் போறாய்?''

இந்தக் கேள்வியைச் சின்னி கேட்டாள்.

சின்னான் பதில் சொல்லவில்லை.

''ஆத்தை நேத்தைக்கு குஞ்சியாத்தையோடை கதைச்சுக் கொண்டிருக்கேக்கை, நான் நித்திரை போலை கேட்டுக் கொண்டு கிடந்தனான். உனக்கும் இருளி நாச்சியாருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடசல் இருந்திருக்குமாப் போலை நினைக்கிறன் எண்டு சொன்னா!''

சின்னியின் இந்தப் பேச்சு சின்னானை உலுப்பி விட்டது, ''தொடசல்'' என்ற இந்தச் சொல்லின் தாக்கத்தை அவன் இப்போதுதான் உணர்கிறான்.

''உண்ணாணை நான் சொல்லுறன் அப்பிடி ஒண்டுமில்லையெண்டு! அவ என்னிலை பச்சமெண்டு எனக்குத் தெரியும். எனக்குப் பட்டினிப்பண்டம் தின்னத்தாறவ; ஒருநாள் பொழுது படேக்கை என்ரை கையைப் பிடிச்சு எள்ளுறுண்டையை வைச்சவ! பேந்தும் சொல்லுறன் உண்ணாணை நான் அப்பிடி ஒண்டும் நினைக்கேல்லை!''

இப்படிக் கூறிக் கொண்டே சின்னான் சின்னியின் தலை மேல் தொட்டுச் சத்தியம் செய்தான்.

சின்னி இதை எதிர்பார்க்கவில்லை.

அவள் தலையை நிமிர்த்திச் சின்னானை நோக்கினாள்.

சின்னானின் கண்கள் கலங்கிப்போய் இருந்தன.

சின்னிக்கு அழுகை வந்து விட்டது.

அதற்குப்பின் சின்னான் அங்கு நிற்கவில்லை; அவன் வந்து விட்டான்.

சின்னான் திரும்பவும் உடையார் பண்ணைக்குப் போகச் சம்மதிக்கிறானோ இல்லையோ என்பதைப் பற்றியெல்லாம் சொடுகன் கவலைப்படவில்லை. அவன் உடையார் நயினாரிடம் போனான்.

உடையாருடன் எப்படியும் பேசி மகனை மறுபடியும் அங்கே விட்டுவிட வேண்டும் என்பதுதான் அவன் எண்ணம்.

பொழுது பலபல வென்று விடியும் போது சொடுகன் உடையார் வீட்டு சங்கடப் படலைத் தலை வாயிலுக்குப் பக்கமாக நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையோடு குளத்தடிப் பற்றைக் காட்டுக்குத் தான் உடையார் வெளிக்குப் போவார் என்பது அவனுக் குத்தெரியும்.

உடையார் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு வெளியே வரும் ஓசை கேட்கவே சொடுகன் வேலியோரம் ஒதுங்கி கைகளைக் கட்டிக்கொண்டு வினயமாக நின்றான்.

''சொடுகன் என்னடா முழுவியளத்துக்கு வந்து நிக்கிறாய்?''

என்று கேட்டுக் கொண்டே உடையார் வந்தார்.

சொடுகனுக்கு உடனே பேச வரவில்லை.

''சொடுகன், உன்ரை மோனுஞ் சாதி பாக்கத் துடங்கியிட்டானாமெடா! அவள் கோவியக்கமக்காரிச்சி எண்டதாலை தானையெடா உன்ரை மோன் இப்பிடி நடந்தவன். ஆமான நயினாத்தி வீட்டிலைவேலை செய்தா தரவையுக்கை மாடுகளையும் விட்டிட்டுப் போவானை யெடா! அவளெண்டபடியா முதுகிலை குறியைச் சுட்டுப் போட்டுக் கலைச்சு விட்டிருக்கிறாள். வேற நயினாத்தி யெண்டாக் கட்டி வைச்சு செய்யாத வேலை செய்திருப் பாளவை! அவள் பாவி அவனைக் கலைச்சு விட்டிட்டன் வேண்டாமெண்டு சொல்லிப் போட்டாள். நீ அவனைப் பெரிய நயினாத்தியள் வீடுகளிலை கொண்டு போய் விடடா! போடா!''

உடையார் நயினார் பேசிக்கொண்டே குளத்தடியை நோக்கிப் போய் விட்டார்.

சொடுகனுக்கு இப்போது சற்றுத் திருப்தியாக இருந்தது உடையார் நயினாரின் சம்மதமின்றி சின்னானை வேறெங்காவது வேலைக்கு விடுவதில் அவன் பயந்த பயம் இப்போது நீங்கிவிட்டது. நயினாரே உத்தரவு போட்டு விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது ஒரே ஒரு கேள்வி மட்டும் சொடுகனுக்கு முன்னால் நெடுத்து நின்றது.

தன்னை தொட்டில் காலுடன் கட்டிவைத்து தட்டகப் பையால் குறிசுட்ட பின்பு நடுச்சாமத்தில் இருளி நாச்சியார் தான் தன்னை அவிழ்த்து விட்டதாகவும், தான் ஓடி வந்து விட்டதாகவும் சின்னான் சொன்னது பற்றிய இந்தக் கேள்விதான் அது.

தனக்கு இப்படி ஒரு பொய்யைச் சொல்லி விட்ட சின்னானில் அவனுக்குக் கோபங் கோபமாக வந்தது.

அவன் வீட்டுக்கு வந்தபோது முற்றத்தில் எரிந்து கொண்டிருந்த ஓலைக் குவியலுக்கு முன்னால் சின்னான் கைகளைப் பின்னியபடி குந்தி இருந்து கூதல் காய்ந்து கொண்டிருந்தான்.

''டேய்! ஏன்ரா எனக்குப் பொய் சொன்னனி?'' என்று கூறிக் கொண்டே அவனைக் கிட்டிய சொடுகன் அவனை இழுத்து அவன் முதுகில் நான்கைந்து குத்துக் கொடுத்தான்.

ஒரு குத்து அவனின் எரிபுண்ணில் பட்டிருக்க வேண்டும்! ''ஐயோ ஆத்தை; என்ரை ஆத்தை!'' என்று அவன் பலமாகக் கத்தினான்.

இந்தக் குரல் செல்லியின் குடிசைவரை கேட்டது.

செல்லி ஓடிவந்தாள்.

செல்விக்குப் பின்னால் சின்னியும் வந்தாள்.

சொடுகன் சின்னானை அடித்துக் கொண்டிருந்தான். ''வேணுமெண்டு பொய்யோடா சொன்னனி!'' என்று கத்திகொண்டே அடித்தான்.

பாய்ந்து வந்த செல்லி சொடுகனைத் தூரத் தள்ளி னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னி விடுபட்ட சின்னானைக் குறுக்காக மறித்துக் கொண்டு நின்றாள்.

''எடி விடடி என்னை, உவனைக் கொல்லோணுமெடி எனக்குப் பொய் சொல்லிப் போட்டானெடி, கமக்காரிச்சி தன்னைக் கட்டிவைச்சு தட்டேப்பையாலை சுட்டவ எண்டு சொல்லிப்போட்டானெடி, அந்த இருளிப் பொட்டைதான் சாமத்திலை அவிழ்த்து விட்டதெண்டும் சொன்னவனடி, விடடி என்னை!''

சொடுகன் செல்லியை புறங்கையால் தள்ளித் தள்ளி விட்டுக் கொண்டே சின்னானை அடிக்க முற்பட்டான்.

செல்லி எதுவும் பேசாமலே அவனைத் தடுக்கும் முயற்சியில்தான் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு அடிதன்னும் அவனுக்குப் பட்டுவிடாதபடி சின்னி சின்னானுக்குப் பக்கமாக அவனை மறைத்துக் கொண்டு நின்றாள்.

சின்னான் விம்மியபடியே தலைக்குக் கை கொடுத்தபடி சின்னியின் மறைவில் இருந்தான்.

''ஓ, அவ கட்டிவச்சுத்தான் குறி சுட்டவ, இருளிப் பொட்டைதான் சாமத்திலை என்னை அவிட்டு விட்டவ!'' சின்னான் முனகியபடியே கூறினான்.

''இஞ்சை பேந்தும் பாரெடி இவன்ரை பிரளியை, எனக்கு உடையார் நயினார் இப்ப சொன்னவரெடி! குறி சுட்டுப்போட்டு கலைச்சு விட்டவ எண்டு! அவர் ஏனெடி எனக்குப் பொய் பேசப்போறார்?''

சற்றுக் கோபந் தணிந்த குரலில் சொடுகன் பேசினான்.

''என்னண்ணை நீ பேய்க்கதை கதைக்கிறாய்? அவள் முந்தாநாள் புத்தியறிஞ்ச பெட்டைதான் ஒருத்தருக்கும் தெரியாமை அவிட்டு விட்டதெண்டு வெளியிலை சொல்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினமோ கேக்கிறன். தன்ரை தங்கச்சியின்ரை சீத்துவக் கேட்டை உடையார் நயினாரெட்டை அவ சொல்லு வாவோ! கொய்யகத்துக்கை புரியமாரை வைச்சுக் கட்டிற வளவை சொல்லிப் போட்டாளவை எண்டு உடையார் நயினார் உன்னெட்டைச் சொல்ல நீ அவன் பொடியனை அடிக்கிறதே கேக்கிறன்? அதுகும் ஒரு பொய்யடி மெய்யடி?''

செல்வி மெதுவாக— சொடுகனுக்கு விளங்கக் கூடிய தாக விஷயத்தைச் சொல்லிவிட்டாள்.

இதற்குப்பின் சொடுகன் ஒன்றும் பேசவில்லை.

இப்போது அவன் மனதை வேறொரு பயம் பிடித்துக் கொண்டது.

சின்னான் இருளிப் பெட்டையுடன் வைக்கக் கூடாத தொடர்பு வைத்துக் கொண்டதாகவும், அதனால்தான் கமக்காரிச்சி கட்டிவைத்துக் குறி சுட்டதாகவும், மனம் பொறுக்க மாட்டாமல் இருளிப் பெட்டை அவனை அவிழ்த்து விட்டிருப்பதாகவும் அவன் முடிவுக்கு வந்து விட்டான்.

''இது வெளியே தெரிந்தால் என்ன ஆகுமோ?'' என்பதுதான் இப்போது அவன் பயமெல்லாம்

சொடுகனின் பயக் கோலத்தைச் செல்வி கண்டு மனம் புழுங்கினாள்.

''இந்த அறுந்தவனாலை குடி இருக்க வழியில்லை யெடி! அண்டைக்கு மூத்ததம்பி நயினாற்றை சொல்லைக் கேட்டானே? அதாலை வந்தவினை இப்ப தண்ணிக்கு ஊரிழந்து விதானை நயினாற்றை கிணத்தடிக்குப் போற வில்லங்கம்! உப்ப இந்த நாசமறுத்தவன் செய்த வேலை யாலை எக்கணம் உடையார் நயினாற்றை ஆக்கள் வீடு களையும் கொளுத்திச் சுடப்போறாங்கள்! உவன் திண்ட சட்டியிக்கை பேண்டு போட்டானடி! அவையின்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பைத் திண்டுபோட்டு ஐயோ இவன் அறுந்தவன் இப்பிடிச் செய்திட்டானே!''

சொடுகன் தலையில் அடித்துக் கொண்டு குரல் வைத்தான்.

''சும்மா ஏனண்ணை ஊரைக் கூட்டிறாய்? அது ஒண்டும் நடவாது நீ பேசாமல் இரு! பொடியன் அப்பிடி ஒண்டும் பிழை விடேல்லை; எனக்குத் தெரியும், இஞ்சை வாண்ணை நான் எல்லாம் ஆறுதலாச் சொல்லுறன்'' என்று சொல்லிக் கொண்டே செல்லி தன் குடிசையை நோக்கி நடக்க, சொடுகனும் அவள் பின்னே நடக்க, சின்னி மட்டும் ஏனோ சின்னானுக்குப் பக்கமாகவே நின்றாள்.

சற்று வேளைக்குப் பின் சொடுகன் மட்டுந் தனியே வந்தான்.

அவன் முகத்தில் இப்போது முந்திய பயமோ, கோபச் சாயலோ எதுவும் இல்லை.

இந்த இடைவேளைக்குள் சின்னி சின்னானுடன் ஒரு வார்த்தை தன்னும் பேசவில்லை; நின்ற இடத்திலேயே நின்றாள்.

''பொட்டை உன்னைக் கோத்தை வரட்டுக்காம் போ'' என்று சொடுகன் சொல்லவே சின்னி பெருமூச் சொன்றை விட்டுவிட்டுப் போய்விட்டாள்.

## 8

''சொடுகன், என்னடா கதை ஒண்டு கேள்விப் பட்டன், உன்ரை உடையார் நயினாற்றை மூண்டாம் பொஞ்சாதி, அதுதான்ரா அவ கோவியக் கமக்காரிச்சி உன்ரை மோன்ரை முதுகிலை குறிசுட்டுப் போட்டுக் கலைச்சுவிட்டிட்டாவாம் மெய்தானையெடா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி விதானையார் நயினாரின் தங்கைக்காரியான சொடுகனின் நயினாத்தி சொடுகனிடம் ஒரு கேள்வியைக் கேட்டாள்.

கடந்த நான்கைந்து நாள்வரை இது சம்பந்தமாக ஏதாவது கதை ஊருக்குள் புகைகிறதா என்பதை அறியப் பீதியுடன் காதுகளைக் கூர்மையாக வைத்துக் கொண்டே உலாவிய சொடுகனுக்கு இது சம்பந்தமாக முதல் முதலாகக் கேட்டகுரல் இதுதான்.

''ஓமாக்கும்...'' என்று சொடுகன் பதில் சொல்லுமுன்,

''நான் அவனை நீ அந்த நாச்சியாரெட்டைக் கொண்டு போய் விடேக்கே சொன்னனான், உவன் பரம்பரை நயினாத்தியில்லை, அடிமை குடிமையளை வைச்சு ஆளத் தெரியாதவளெட்டை விடுகிறாய் எக்கணம் வில்லங்கப்படுவாயெண்டு! ஆரெண்டாலும் ஆமான நயினாத்தி இப்பிடிக் குறி சுட்டு அனுப்புவாளோ கேக்கிறன். அவன் என்ன சின்னப் பொடியனே? விருத்தெரிஞ்சவன். அவனுக்கு உந்த வேலை செய்யலாமே?''

நயினாத்தியைச் சொடுகன் இடைமறித்துப் பேசினான்.

''என்ரை பிள்ளையெண்டாலும் ஞாயத்தைப் பாக்க வேணுமாக்கும்!''

சொடுகன் சின்னான்மேல் உள்ள குற்றப் பத்திரிகையை வாசிக்க முயன்றான்.

''என்னடா அது ஞாயம்? அவன் என்ன அவவின்ரை குமர் குஞ்சுகளோடை ஏதும் சேட்டை கீட்டை விட்டவனே குறிசுட? அக்காள்காறி செத்துப்போனாள் எண்டு கேள்விப்பட்டோண்ணை மாடுகளைத் தரவைக்கை சொல்லாமல் கொள்ளாமல் விட்டிட்டு வந்திட்டான் எண்டால் அது பெரிய பிழையே? எப்பிடியிருந்தாலும் ஒரு குடலுக்கை இருந்து வந்தவனுக்கு அக்காளின்ரை சவத்தைப் பாக்க வேண்டுமெண்ட ஆசை இருக்காதே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாத்தி இந்தப் பேச்சை முடித்தபோது முற்றத்துப் பக்கம் நாய் குரைக்கவே அவள் போய்விட்டாள்.

சொடுகனுக்கு இப்போது மனதுக்குள் திருப்தியாக இருந்தது.

சின்னானையும் இருளிப்பொட்டையையும் பற்றிக் கதை வராமல் இருந்ததில் எழுந்த திருப்திதான் இது.

வளவின் பின்புறத்துத் தோட்ட வேலை முடிந்து அவன் மாட்டுக் கொட்டகையடிக்கு வந்தபோது அவனுக்குத் தட்டுவத்துடன் சோற்றைக் கொடுத்துவிட்டு, அவன் கொண்டு போவதற்கான சின்னானின் சாப்பாட்டையும் குஞ்சுப்பெட்டியோடு வைத்தாள்.

''இப்ப மோனை இனி என்னடா சொடுகன் செய்யப் போறாய்?''

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அம்மாளின் இந்தக் கேள்வி அவனுக்கு வசதியாக அமைந்து விட்டது.

''அதுதான் நயினாத்தியைக் கேட்டுப் போட்டு ஏதெண்டாலுஞ் செய்வமெண்டு பாக்கிறன்'' என்று அவன் பதில் சொன்னான்.

''சொடுகன், இஞ்சை நிண்ட வேலன்ரை பொட்டை புத்தியறிஞ்சிட்டாள்! அவளைக் கொண்டுபோய் ஆருக்கும் சோறு குடுப்பிச்சு விடச் சொல்லி வேலனுக்குச் சொல்லிப் போக்காட்டிப் போட்டன். அவன் இண்டைக்கு வாறன் எண்டு சொன்னவன். அதுதான் இஞ்சையும் மாட்டடி வளவு வாய்க்கால் வேலைக்கும் ஆள் தேவை எண்டு ஐயா வெட்டைக் கதைச்சனான். அவரும் உன்ரை மோனை வைக்கச் சொல்லிச் சொல்லிப் போட்டார்! நீ நாளைக்கு அவனைக் கூட்டியந்து விடு! அவ புதுக் கமக்காரிச்சி நினைச்சா தான் குறிசுட்டனுப்பினவனை இனி நயினாத்திமார் வைச்சிருக்காயினம் எண்டு! பாப்பம் அவவின்ரை கெப்போரை? உடையாரைப் பிடிச்சோண்ணை அவவுக்கும் மனதுக்கை பெரிய எண்ணம்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாளின் இந்தப் பேச்சுடன் சொடுகனின் பிரச்சினைகளில் பல முடிந்து விட்டன.

தட்டுவத்தைக் கழுவி, வழமையான இடத்தில் சொருகி விட்டு, குஞ்சுப் பெட்டியுடன் சொடுகன் வீட்டுக்குக் கிளம்பிவிட்டான்.

அவன் வீட்டுக்கு வந்தபோது சின்னான் தன்னை மறந்த தூக்கத்தில் இருந்தான்.

சின்னானுக்கு உணவு கொடுத்து முடிந்து மறுநாள் நயினாத்தி வீட்டுக்குப் போகும் தகவலைச் சொல்லிவிட்டு சொடுகன் மறுபடியும் நயினாத்தி வீட்டுக்கு வந்தபோது, வேலனும் அவன் மனைவி கற்பியும் மகளை அழைத்துப் போவதற்காக வந்து நின்றனர்.

"சொடுகன், வேலனுக்கு நாலுகட்டை மரவள்ளிக் கிழங்கு இழுத்துக் குடுத்துவிடு. எடி கற்பி, நாளைக்கு வேலனை வரக்காட்டி விடு ரெண்டுபறை தினை குடுத்து விடுறன். குமரியைக் கனகாலத்துக்கு வீட்டிலை வைச்சிருக்காதை! மறு சாமத்தியம் வந்தோண்ணை அவளை ஆருக்கும் சோறு குடுப்பிச்சுவிடு! பேந்து வீட்டிலை வைச்சுக் கொண்டு வில்லங்கப்படாதை கண்டியோ? ஏனெடி உங்களுக்குள்ளை வசதியாக ஒருத்தருமில்லையேடி. ஏன் அவள் இத்தினியின்ரை மோன் எல்லிப் போலையன் பொண்டில் செத்தாப்போலை கால்கட்டுக் கீல்க்கட்டு ஒண்டுமில்லாமல் திரியிறான், ஐயாவைக் கொண்டு அவனுக்கும் சொல்லி விடுறன் சோத்தைக் குடுப்பிச்சுவிடு!"

நயினாத்தி இதைச் சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

சொடுகன் கிழங்கு பிடுங்கத் தோட்டத்தை நோக்கிப் போய்விட்டான்; திரும்ப அவன் மரவள்ளிக் குழைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிக்கட்டப்பட்ட கிழங்குப் பாரத்தைச் சுமந்து வரும் போது வேலனும் கற்பியும், மார்புவரை உயரக் கட்டிய குறுக்குக் கட்டுடன் வேலன்—கற்பி தம்பதிகளின் மகளும் பிரயாணத்திற்குத் தயாராக நின்றனர்.

''கற்பி! இவளுக்குச் சோறு குடுப்பிக்கிற மூட்டத் திலை வேலனை அனுப்பி விடடி பூசனிக்காயை கீயை, வேறைகாய் பிஞ்சைக் கிஞ்சைக் குடுத்து விடுறன்! அவள் என்னோடை ஐஞ்சாறு வரியம் நிண்டவள் அவளுக்கு குறு நாட்டுச் சீலையும் ஒண்டு வாங்கித் தரத்தான் வேணும், எல்லாத்துக்கும் வேலன் வரட்டுக்கன்! எடி சின்னக் கற்பி போட்டுவாடி! அவன் தாரமிழந்தவனைக் கட்டப் போறாய், பேந்து குழப்படி கிழப்படி செய்து என்ரை பேரைக் கெடுத்துப் போடாதை நான் சொல்லிப் போட்டன் கண்டியோ!''

நயினாத்தி பேச்சை முடித்து விட்டு முற்றத்தைத் தாண்டி உள்ளே போய் விட்டாள்.

நயினாத்தி வீட்டுச் சண்டியன் நாய்க்கடுவன் சின்னக் கற்பிக்குப் பின்னால் சங்கடப்படலை தாண்டி, கிரவல் றோட்டுக்கழியும் வரை வந்து திரும்பியது. ஏறக்குறைய ஐந்தாண்டு காலம் அந்தச் சின்னப் பெட்டையுடன் ஒன்றாய் வாழ்ந்த நன்றி அந்த ஜீவனுக்கு இருந்தது.

சொடுகன் மறுபடியும் தோட்டத்துக்குள் போய் விட்டான்.

தோட்டத்துள் நின்று அவன் திரும்பப் பொழுது கருகி விட்டது.

''சொடுகன், உங்கை உதிலை உமலுக்கை கொஞ்சங் குரக்கன் மா வைச்சிருக்கிறன் எடுத்துக் கொண்டு போ, புட்டைக் கிட்டை அவிச்சு அவன் மோனுக்குங் குடு! கதை யோடை கதையாய் நாளைக்கு அவனைக் கொண்டந்து விட மறக்காதை! நிண்டுகொள் ஒரு பணம் காசும் தாறன் உதிலை போகையுக்கை கோயில் சந்தையுக்கை குளத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயிரைமீன் கிடக்கும் வேண்டிக் கொண்டு போனியெண்டா புட்டுக்கு நல்லாயிருக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே நயினாத்தி வெளியே வந்து நீட்டிய அவனின் கரத்தின்மேல் ஏறக்குறைய ஒரு முழத் தூரம் தனது கையை உயர்த்திப் பிடித்து அரைச்சதக் குற்றிகளை அவன் கையில் போட்டாள்.

போடும்போது சொடுகன் கணக்கெடுத்து விட்டான்.

சரியாக பன்னிரண்டு அரைச்சதக் குற்றிகள்!

எல்லாமாகச் சரியாக ஒரு பணம்.

சொடுகன் கோவில் சந்தைக்கு வந்து சேர்ந்த நேரம் சந்தை கலையும் நேரம். ஆயினும் ஒரு கறிக்காரியைச் சுற்றிக் கூட்டம் நிறைய நின்றது.

சொடுகன் அங்குமிங்கும் பார்த்தான். தானும் தன்னுடைய இனத்தவர்களும் வாங்கும் குளமீன் விற்கும் பகுதிக்குள் ஒருவரும் இல்லை. மீன்கள் வேளையோடு தீர்ந்திருக்க வேண்டும்.

சொடுகன் சற்று எட்ட நின்று அந்தக் கூட்டத்தை நோட்டமிட்டான்.

அப்போதுதான் அந்த மீன்காரி ஒரு பெரும் சுறா மீனை வெட்டிப் பாகம் வைக்கிறாள். அவள் வெட்டிப் பாகம் வைக்கும்வரை தான் எல்லோரும் காத்திருக்கின்றனர்.

அவரவர்களுக்கு வேண்டிய பங்குகளை வாங்கிக் கொண்டு கூட்டம் சிறிது கலைந்தது.

சொடுகனுக்கு மிகவும் பழக்கமான ஆசாரி விசுவன் கூட்டத்திலிருந்து சுறாத் துண்டுடன் வந்தான்.

''சுறாத் துண்டுடன் வருகுதாக்கும்? ஏனாக்கும் நெய்கிய் கிடக்கேயாக்கும்?''

சொடுகன் குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமடா சொடுகு. கிடக்கு, சண்முகம் வாத்தியார் ஒரு பணத்துக்கு வாங்கிறதுக்கெண்டு பாக்கிறார். கனக்க வாங்கிடக்கெண்டு யோசிச்சுக் கொண்டு நிக்கிறார்!'' என்றான் விசுவன்.

''கோவிக்கப்படாதாக்கும், நான் என்னெண்டாக்கும் அதிலை வந்து விலை கேக்கிறது? ஒருக்கா பாதிப்பங்கை தப்பிக்கெண்டு வாங்கித்தர!'' என்று சொல்லிக்கொண்டே சொடுகன் அரைப் பணத்தையும் கறிவாங்க வைத்திருந்த பன்னாடைத் துண்டையும் விசுவனிடம் கொடுத்து விட்டான்.

விசுவன் சற்று வேளைக்குள் சுறா நெய்யுடன் வந்து விட்டதனால் சொடுகனின் அபிலாசை நிறைவேறி விட்டது.

''சொடுகன், அரைப் பணத்துக்கு உனக்கு கொள்ளை மலிவு, பிடி, ஆரும் கமக்காரர் காணக்குமுநதிக் கொண்டோடு!'' என்று கூறிவிட்டு விசுவன் போய் விட்டான்.

சுறா நெய்போட்டு அவிக்கப்படும் குரக்கன் பிட்டின் மகிமை சொடுகனுக்கு நன்கு தெரியும். மனைவி உயிருடன் இருந்தபோது கிழமைக்கு ஒரு தடவையேனும் இந்தச் சுறா நெய்ப் பிட்டினை அவன் தின்பது வழக்கம். மனைவி செத்துப் போனபின் மாதத்தில் ஒரு தடவையேனும் இதைப் பக்குவப்படுத்தித் தின்னாவிட்டால் அவனுக்கு மனது சரிப்பட்டுவருவதில்லை. அதிலும் ஏதாவது இலைக்கறி போட்டு......

இப்போது இலைக்கறிக்கு எங்கே போவது?

பொழுது இருட்டி விட்டது.

மூத்ததம்பிக் கமக்காரனின் வடலி வளவின் தெற்கு மூலையோடு சிறு வடலியில் படர்ந்திருந்த முசுட்டைக் கொடி அவன் நினைவுக்கு வந்தது.

வீட்டுக்குச் சமீபமாக வரும் குருக்கள் வீட்டடியி லுள்ள ஒற்றையடிப் பாதையில் சற்றுத்தூரம் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை வாலன் புல்லுப்பரப்புக் கூடாக நாலு கவடுகள் வைத்து விட்டால் வருவது மூத்ததம்பியரின் வடலி வளவு. அப்புறம் என்ன முசுட்டையைப் பிடுங்கியமாதிரிதான்.

ஒரு கையில் பன்னாடையில் சுற்றிய சுறா நெய், மறு கையில் குரக்கன் மா உமல்!

வடலி வளவின் ஒருபக்கம் வயல் வெளியாக இருந்த தால் சற்று வெளிப்பாகவும் இருந்தது.

உமலையும் பன்னாடைச் சுருளையும் பக்கத்தே வைத்து விட்டுச் சொடுகன், முசுட்டைக்கொடி படர்ந்தி ருந்த வடலியின் அடிபக்கம் காலை வைத்து அதன் மேல்கங்கில் மறுகாலை வைத்தபோது முதல் வைத்த காலில் ஏதோ நறுக்கென்று சுள்ளிட்டது. ஆயினும் அவன் முசுட்டைக் கொடியை வளைத்துச் சுருட்டிக் கொண்டு கீழ் இறங்கி விட்டான்.

போதும் போதும் என்ற அளவுக்கு மிகவும் கொழுத்த கொடி! இலைகள் ஒவ்வொன்றின் பருப்பம் ஒரு பூவரசம் இலை அளவில்! அவை கண்களுக்கு நன்றாகத் தெரிந்தன.

கொடிச் சுருளுடனும், உமல், பன்னாடைச் சுருளு டனும் சொடுகன் வீட்டுக்கு வந்து விட்டான்.

சின்னான் முற்றத்தில் கங்குமட்டைகளைப் போட்டுக் கொழுத்தி அந்த வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்தான்.

''இந்தா மோனை இதுகளைப் பிடி, சுறா நெய்யும் வாங்கியந்தனான், மூத்ததம்பியற்றை வடலியிலை முசிட் டையும் பிடுங்கிக் கொண்டந்தனான், நயினாத்தி குரக்கன்மாவுந் தந்தவ, இண்டைக்கு குரக்கன் பிட்ட விப்பம்!'' என்று கூறிக்கொண்டே சொடுகன் வந்தான்.

சின்னான் எழுந்து அவைகளைப் பெற்றுக் கொண்டான்.

''முசுட்டை புடுங்கேக்கை கால்லை கருக்குக் கீறிப் போட்டுது போலை கிடக்கு!'' என்று கூறிக்கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொடுகன் வெளிச்சம் படக்கூடியதாகக் காலை நீட்டிப் பார்த்தான். காலில் அப்படி ஒரு பெரும் அடையாளமும் தெரியவில்லை. காலின் மேல் படத்தில் மட்டும் ஓரிடத்தில் இரத்தக் கசிவு தெரிந்தது.

சொடுகன் அந்த இரத்தக் கசிவை விரலால் தடவிக் கொண்டே ''காடை முள்ளுக் குத்திப்போட்டுது போலை கிடக்கு மோனை எப்பன் கடுக்குது!'' என்று சொல்லிக் கொண்டே நிலத்தில் இருந்தான்.

இருந்தவன் இருந்தவன் தான்!

அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

அவனால் பேச முடியவில்லை.மொத்தத்தில் அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அப்படியே நிலத்தில் சரிந்து போனான்.

''எணை அப்பு; எணை அப்பு!'' என்று சின்னான் குரல் வைத்துப் பார்த்தான்.

சொடுகனின் கண்கள் திறந்தபடியே கிடந்தன.

அந்தக் கண்களை ஏதோ திரையிடுவது போன்ற ஒரு தோற்றம் சின்னானுக்குத் தெரிந்தது.

''ஐயோ, என்ரை அப்பு எணை அப்பு என்னணை செய்யுது?''

சின்னானின் இந்தப் பெருங்குரல் கேட்டு செல்வியும் சின்னியும் ஆத்துப்பறந்து வந்தனர்.

''ஐயோ என்ரை அப்பு சுறா நெய்யும் வாங்கிக் கொண்டு புட்டவிக்க முசுட்டை இலையும் வடலிக்கை புடுங்கிக்கொண்டு வந்தவர், இப்ப பேசிறார் இல்லை!'' என்று சின்னான் செல்விக்கு அழுதபடியே சொன்னான்.

செல்வி சொடுகனின் காலைப்பிடித்து வெளிச்சத்தில் பார்த்தாள். இரத்தக் கசிவு கண்டிருந்த இடத்தைத் தடவி விட்டு உற்றுப் பார்த்தாள். அந்த இரத்தக்கசிவு நான்கு இடங்களில் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

முந்தானைச் சேலையைக் கிழித்துக் கால் குளச்சுடன் இறுக்கிக் கட்டினாள். "எடி பிள்ளை கூட இரெடி பிள்ளை வாறன். சரவணை அத்தானைக் கூட்டிக்கொண்டு" என்று சொல்லிவிட்டுச் செல்லி காளி கோவிலடியை நோக்கி ஓடினாள்.

சின்னான் அழுது கொண்டிருந்தான்.

சின்னி அவனுக்குப் பக்கமாக இருந்து அவனை ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தாள்.

செல்லி விஷகடிச் சரவணை வீட்டுக்குப் போனபோது சரவணை முகத்தை வெள்ளைத் துணியால் கட்டிக் கொண்டு தனது குலதெய்வம் காளிக்குப் பூசை செய்து கொண்டிருந்தான்.

செல்லி அவனின் பூசை முடியும்வரை மன அங்கலாய்ப்போடு சரவணைக்காகக் காத்து நின்றாள்.

பூசை முடியச் சிறிது வேளை ஆகிவிட்டது.

"அத்தான் சொடுகண்ணைக்கு விஷம் தீண்டிப் போட்டுது; ஆளுக்குப் பேச்சு மூச்சில்லை, முத்தத்திலை விழுந்துபோய்க் கிடக்குது!"

செல்லி அவசர அவசரமாகச் சொல்லி முடித்தாள்.

சரவணை தலைநிமிர்ந்து செல்லியை மேலுங்கீழு மாகப் பார்த்தான். தனக்கும் அவளுக்கும் இருந்த தூரத்தையும் திசையையும் கண்களால் அளந்தான்.

"எவடத்திலை செல்லி காயங் கிடக்கு?" என்ற அவனின் கேள்விக்கு, "இடக்காலில, பெருவிரலுக்கு மேல் படத்திலை" என்று செல்லி படக்கென்று பதில் சொன்னாள்.

"ரெண்டு பல்லோ நாலு பல்லோ?" என்று அவன் மறுபடியும் ஒரு கேள்வியைக் கேட்டான். இதற்கும் "நாலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலைலதான் ரெத்தம் வருகுது" என்று செல்லி பதில் சொல்லி விட்டாள்.

திருநீற்றுப் பையையும், வேறொரு பையையும் தூக்கிக் கொண்டு விஷகடிச் சரவணை செல்லிக்குப் பின்னால் புறப் பட்டு விட்டான்.

''அத்தான்! அந்தாளுக்கு ஏதும் செய்துகிய்து போடுமே அத்தான்?'' இடை வழியில் செல்லி இப்படி ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''தூதன் குறியும் அவளவு நல்லாயில்லைச் செல்லி. பல்லும் நாலு பட்டிருக்கெண்ணிறாய்! அதுகும் இடது கால் மேல் பாத்திலை! சரிவரும் எண்டு நான் நினைக் கேல்லை! அதுகும் செக்கலுக்கை!''

எந்தவித ஒழிப்பு மறைப்புமின்றிச் சரவணை சொல்லி முடித்துவிட்டான்.

செல்லிக்கு அங்கேயே கோவென்று அழுது விடலாம் போலத் தோன்றியது.

குதிரை வாலன் புல்லின் ஒற்றையடிப் பாதையைத் தாண்டி, —மூத்ததம்பி நயினார் வளவின் முசுட்டை படர்ந்த வடலியடியைத் தாண்டி — வயல்வரம்பைத் தாண்டிக் குறுக்குப் பாதையால் இருவரும் வந்து சேர முன்னமே சின்னானால் மூட்டி எரிக்கப்பட்ட கங்குமட்டை வெளிச்சம் நூரும் தறுவாய்க்கு வந்துவிட்டது.

முற்றத்தில் சொடுகனுக்குப் பக்கமாகச் சின்னானும் சின்னியும் இருந்தார்கள்.

## 9

**விஷ கடி விவகாரத்தில் எத்தனைபோ அதிசயங்களை நிகழ்த்தியவன் சரவணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமஞ்சாமத்தில், ஐந்து பத்து மைல் தொலைவில் இருந்துங்கூட வண்டில்களில் எத்தனையோ நோயாளிகள் வந்திருக்கிறார்கள். சரவணையிடம் வந்து சேரும்போது உயிர்த்துடிப்பு மட்டும் இருந்துவிட்டால் பெருமளவுக்கு அந்த நோயாளி பிழைத்து விடுவதுதான் வழமையானது. இடையிடையே ஒன்றோ இரண்டோ தான் தவறுவதுண்டு. இந்த மேம்பாட்டினால் சரவணையை எந்தப் பெரிய மனிதனும் ''சரவணை'' என்றுதான் அழைப்பார்கள். பொதுவில் 'அன்' போட்டு அழைக்கும் சம்பிரதாயம் சரவணையிடம் மட்டும் பொய்த்து விட்டது.

இந்தப் பெரிய விண்ணன் சரவணையால் அடிப்படலைக்குள் விஷம் தீண்டிய சொடுகனை மீட்க முடியவில்லை.

பொய் அடக்கத்திலிருந்த பல உயிர்களை இரண்டு நாட்கள் வைத்திருந்து கூட அவன் மீட்டிருக்கிறான். அப்படி மீட்கக் கூடிய உயிர்களை அவன் எப்படியோ இனங்கண்டு விடுவான். விஷம் தீண்டப்பட்ட உடலுக்குப் பார்வை பார்க்கவும் பச்சிலை வகைகளைப் பூசவும் தொடங்கிய நேரத்திலிருந்து தண்ணீரோ வெந்நீரோ அருந்தாமல் விரதமிருந்துதான் அவன் வைத்தியம் பார்ப்பது வழக்கம். சரிப்பட்டு வராதெனக் கண்டு விட்டால் அந்த உடலை வெளியே அனுப்பிவிட்டுத்தான் அவன் விரதத்தை முடித்துக் கொள்வான். சில உடல்களில் அசைவு காண இரண்டு நாட்கள் ஆகிவிட்டால் கூட அந்த இரண்டு நாட்களும் சரவணை உபவாசந்தான். அப்படி அவன் இரண்டு நாட்களுக்கு மேல் உபவாசமிருந்தால் நிச்சயமாக அந்த உயிரை மீட்டுவிட்டுத்தான் தன் உபவாசத்தை முடிப்பான். அப்படிப்பட்ட சரவணையன் சொடுகனைப் பார்க்கத் தொடங்கி இரவு ஒண்டு பாதிக்கு முன்னதாகவே, செல்லியிடமிருந்து முட்டிக்குள் தண்ணீர் வாங்கிக் குடித்துத் தனது விரதத்தை முடித்துக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். அவன் வாய் நனைத்த மறுகணமே செல்லி முதல் குரலை வைத்து விட்டாள்.

அந்தத் திடலிலிருந்த பத்துக் குடும்பங்களும் திரண்டு விட்டன.

சொடுகனின் சவ அடக்கம் முடிந்து, கஞ்சி தண்ணீர் முடிந்து, அவைகளோடு ஒட்டிய சகல காரியங்களும் முடியும்வரை செல்லிதான் சாவீட்டுக்குப் பொறுப்பாய் நின்றாள். செலவு சித்தாயம் எல்லாம் அவள்தான்.

சொடுகனின் நாச்சியார் வீட்டின் அரிசிப்பச்சை, தேங்காய் மாங்காய் ஆகியவைகள் போக, பச்சைப்பாக்கு, வெற்றிலை, புகையிலை, சுண்ணாம்பு, உட்பட ஏனைய வைகள் செல்லிக்குப் பெரும் பாரமாக இருக்கவில்லை. ஆனால் வந்து போய்க்கொண்டிருந்த பெண்டுகளுக்கு மாரடித்து ஒப்புச் சொன்னதில்தான் அவள் களைத்துப் போனாள்.

எட்டுப் பத்து நாட்கள் கழித்து ஒருநாள் சொடுகனின் நயினாத்தியான விதானையாரின் தங்கையானவள் செல்லியைக் கூட்டி வரும்படி கோவியச் கந்தியை அனுப்பி யிருந்தாள்.

"எடி செல்லி, நீதான் சொடுகன்ரை காரியமெல்லாத் தையும் ஆம்பிளைக்காம்பிளையா, பொம்பிளைக்குப் பொம்பிளையா நிண்டு நடத்தினனி எண்டு அறிஞ்சன், அவன் அண்டைக்கு என்னெட்டை குரக்கன் மாவும் வாங்கிக் கொண்டு போகேக்கை சொன்னவன், மோன் சின்னானை அடுத்த நாள் இஞ்சை கொண்டுவந்து விடுகிற தெண்டு! அதுதான் உன்னெட்டைச் சொல்லுவம் எண்டிட்டுக் கூப்பிடுவிச்சனான். அவனுக்கும் இனி ஆறுறத்துக்கு இடமில்லை. நாளைக்குப் புதன்கிழமை நல்ல நாள், அவனை வரக் காட்டிவிடு!"

கோவியக் கந்தியுடன் அவசர அவசரமாகப் போன செல்லியிடம் நயினாத்தி இதைத்தான் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆர் உதிலை வந்து நிக்கிறவள் செல்லி போலை கிடக்கு? எடி செல்லி, நீ கெட்டிக்காறி தானெடி! இவள் தங்கச்சி, குடிமோன் எண்டு தட்டு முட்டுச் சாமான்களெண்டு தேவையானதுகளைக் குடுத்தாலும் அதுகளை நிண்டு கிண்டு ஒப்பேத்துறதுக்கும் கெட்டித்தன மெல்லோடி பொட்டை வேணும்! எல்லாத்தையும் ஒக்கலிச்சி நடத்திப் போட்டாய்! அவனும் சின்னான் தனிச்சுப் போனான்! தங்கச்சி சொன்னவள் சொடுகன் சாகிற அண்டைக்கு அவனைக் கொண்டந்து விடுகிற னெண்டு சொன்னவனெண்டு!"

அப்போதுதான் வந்த விதானையாரும் தனது அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டார்.

செல்லிக்கு வாய் திறக்க முடியவில்லை.

இதற்கு மேல் செல்லியுடன் அவர்களில் யாரும் பேசவில்லை.

சற்றுவேளை நின்றுவிட்டு அவள் வந்துவிட்டாள்.

"ஆத்தை ஏனெணை நயினாத்தி வரச்சொன்னவ?"

செல்லி வந்தது வருவதற்கிடையில் மகள் சின்னி கேட்டாள்.

"சொடுகன்னணை பாம்பு கடிக்கிற அண்டைக்கு குரக்கன்மா வாங்கியரேக்கை சொல்லிப்போட்டு வந்த தாம். மோனை அடுத்த நாளைக்குத் தன்னோடை கொண்டந்து விடுகிறனெண்டு, அதைச் சொல்லத்தான் கூப்பிட்டவ! பின்னை சொடுகண்ணை இருக்கேக்கை உழைச்சுக் குடுத்ததுகளை தரவே கூப்பிட்டவை?"

செல்லி அலுத்துக் கொண்டே பதில் சொன்னாள்.

இதற்குமேல் சின்னி ஆத்தையை ஒன்றும் கேட்க வில்லை.

பொழுது கருகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு நாட்களும் செல்லி வீட்டுக்கு வந்து வயிற்றை நிரப்பிக் கொண்டு அப்பனின் குடிசைக் குள்ளேயே சின்னான் கண்ணுறங்கி வந்தான்.

இப்படி வேறு வீட்டில் சென்று வயிற்றை நிரப்பிக் கொள்வதில் சின்னானுக்குத் திருப்தியில்லைத்தான். ஆனால் செல்லி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் அவன் அதற்கு இணங்கி இருந்தான்

இந்த இரண்டு நாட்களும் காலையில் வந்து தேங்காய் பாலில் கரைத்த பழங் கஞ்சியும், மத்தியானத்தோடு வந்து அவித்த மரவள்ளிக் கிழங்கும், பச்சை மிளகாய்ச் சம்பலும், இரவானதும் அடுப்பில் உலை ஏறி இறங்கும் நேரம் பார்த்து வந்து பனிச்சாமிச் சோறும் கருவாட்டுக் குழம்பும் தின்றுவிட்டுப் போனான். மறுநாள் பச்சை அரிசிச் சோறும் விரால்மீன் குழம்பும் சேர்த்து வயிற்றை நிரப்பிவிட்டுப் போனான். இன்று பகல் வழமைபோல காலையும் மத்தியானமும் வந்து விட்டுத்தான் போனான். இரவுச் சாப்பாட்டுக்கு இன்னும் நேரம் இருந்தது.

செல்லி, நாச்சியார் வீட்டால் வரும்போது கோயில் சந்தைக்குள் ஒரு பால் ஆமையை வாங்கி வந்தாள். இனித்தான் அதைப் பாகம் பண்ணவேண்டும். சின்னி ஏற்கெனவே வரகரிசிச் சோற்றை வடிய விட்டிருந்தாள்.

அரிவு வெட்டுக் காலம் தொடங்க வயல் வெள்ளக் காடுகளில் நின்று தன் ஆரவாரமாகக் கண்டது கடியது களைத் தின்று விட்டு, வயல் காடுகளில் இடைக்கிடையே உள்ள துரவுகளில் சென்றடைந்து, துரவுகளில் உள்ள மாங்கன், அயிரை, தவளை ஆகியவைகளை தின்று கொண்டிருக்கும் காலமாகையால் இந்தக் காலத்தில் பாலாமை என்றால் தளதளத்த நெய்ப்பிடிப்புள்ளதாகத் தான் இருக்கும். அதிலும் நெஞ்சுப்புறம் ஒடுங்கி, நீண்டு, உயரமாக இருந்தால் அதன் கொழுப்புக்குச் சொல்ல வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லிக்கு இந்தக் கொழுப்பின் சூத்திரந் தெரியும். அதனால் அவள் நெஞ்சுப்பக்கம் ஒடுங்கி, நீண்ட உயர்ந்த ஆமையையே வாங்கி வந்தாள்.

பொதுபொதென்று கொதிக்க வைத்த அண்டாத் தண்ணீரில் உயிரான அந்த ஆமையைப் போட்டுக் கொதிப்பாட்டி எடுத்துவிட்டால், பின்பு கத்தியின் உதவியின்றியே அதன் நெஞ்சுப் புறத்துப் பால் ஓட்டைக் கைவிரல்களால் சுளை எடுப்பது போல எடுத்து, அதற்குக் கீழ் உள்ள கொழுப்புப்படலைக் கரைத்து விடாமல் பக்குவமாகக் கிளப்பி எடுத்துவிட்டுத்தான் அதன் இறைச்சிப் பகுதிக்குள் கையை வைத்து அதை வெளியே கொண்டுவர முடியும். இத்தனையும் செய்துவிடுவது செல்லிக்குப் பெரிய வேலை அல்ல. ஆனால் அதன்பின் கொழுப்பை வதங்க வைத்து நிறையப் பொரிமாத்தூள் இட்டு தேங்காய் முதல் பால் இட்டு சற்றுக் கடுகடுத்த உப்புப் பதத்தில் தேசிக்காய்ப் புளியையும் விட்டெடுப்பதில் கண்ணாய் இருப்பதில்தான் கறியின் ருசி எல்லாம் தங்கி இருக்கிறது. மகளை உதவிக்கு வைத்துக் கொண்டு இத்தனை காரியத்தையும் செய்து முடிக்கையில் வயல் வெளிப் பரப்பில் மாலை வெள்ளி படுவான் கரைக்குப் போய்விட்டது.

''அவன் பொடியனை இன்னுங் காணேல்லை மோனை, படுத்தாப்போலை நித்திரையாய்க் கித்திரையாய்ப் போச்சுப் போலை!'' என்று செல்லி மகளைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''ஓமாக்குமாத்தை!''

என்று ஒரே சொல்லில் தனது எண்ணத்தை சின்னி வெளிப்படுத்திவிட்டாள்

''நான் போய்ப் பாத்திட்டு வாறன்!''

என்று சொல்லிக்கொண்டே செல்லி சொடுகனின் குடிசைக்குப் போனபோது படலை வெளிக்கட்டுக் கட்டி இருந்தது; சின்னானைக் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வெள்ளியின் வெளுப்பு நன்றாக இருந்தது.

செல்லி அங்குமிங்குமாகப் பார்த்தாள்; பின்பு அவனுக்காகச் சற்றுவேளை காத்திருந்தாள்.

சின்னான் வரவில்லை.

இந்த நேரத்தில் அவன் எங்கு போயிருப்பான் என்பதை அவளால் அநுமானித்துக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் பலவிதமான சிந்தனைகளுக்குப் பின்னால் எல்லாம் அவள் ஓடினாள். இப்போதும் முடிவேதும் வரவில்லை.

ஆத்தை திரும்பி வீட்டுக்கு வந்தபோது அவனும் பின்னால் வருவதாகவே சின்னி நினைத்தாள். சற்று நேரம் ஆகியும் அவன் வரவில்லை. செல்லியும் வாய் திறக்கவில்லை.

''அவன் ஏன இன்னும் வரவில்லை?'' என்ற ஒரு கேள்வியை ஆத்தையிடம் கேட்க அவளுக்குக் கூச்சமாக இருந்தது. மேலும் அவள் பொறுத்திருந்தாள்.

நீண்ட நேரம் ஆயிற்று.

இதற்குமேலும் சின்னிக்குப் பொறுமை இருக்கவில்லை.

திரி விளக்கின் எண்ணெயும் தீர்ந்து கொண்டிருந்தது. திரி சுடர்விடத் தொடங்கியது.

''சூடாறினா கறியுக்கை ஆமை நெய்யும் உறைஞ்சு போயிடும்''

இப்படி அவள் மெதுவாகச் சொன்னாள்.

''மோனை, அவனை அங்கை காணேல்லை. பொம்பிளைப் பேய் அவனைப் பிடிச்சாட்டுது போலை கிடக்கு. நீ திண்டிட்டுப் படு, நான் எப்பன் பொறுத்துத் தின்னிறன்.''

செல்லி இப்போது பேசிவிட்டாள். அத்தோடு 'பொம்பிளைப் பேய் அவனைப் பிடிச்சாட்டுது போலை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒரு பொல்லாத விஷயத்தையும் சேர்த்துச் சொல்லி விட்டாள்.

''ஆத்தை ஆரையெணை சொன்னனி''

இப்படி சின்னி ஒரு கேள்வியைப் போட்டதுக்கு, ''வேறை ஆரை? உவனைத்தான், சொடுகண்ணையின்ரை மோனை! அவ கோவியக் கமக்காற நாச்சியாற்றை இருளிப் பொட்டையின்ரை நினைப்பு வந்திட்டுதுபோலை கிடக்கு. அதுதான் அவன் போட்டான் நீ திண்டிட்டுப் படெடி!'' என்று சுட்டதுபோலப் பதில் சொல்லி விட்டாள் செல்லி.

ஆத்தைக்குக் கோபம் வந்து விட்டால் அதற்குமேல் மூச்சுக்கூட விடக்கூடாதென்பது சின்னிக்குத் தெரியும்.

குழையக் காய்ச்சிய வரகுச் சோற்றையும், ஆமைக் கறியையும் உலை மூடிக்குள் போட்டுப் பிரட்டித் தின்று விட்டுச் சின்னி பாயில் சுருண்டு கொண்டாள்.

அவள் உடல் சுருண்டதே தவிர அவளின் எண்ணம் சுருண்டு கொள்ள மறுத்தது.

சின்னானுக்கு இருளிப் பெட்டையின் நினைப்பு வந்து அவன் இருளிப் பெட்டையிடம் போய்விட்டான் என்ற ஆத்தையின் முடிவை எடுத்த எடுப்பில் உதறிவிட அவளுக்கு முடியவில்லை. ஆயினும் சின்னான் தன்னிடம் பொய் சொல்லவில்லை என்ற உறுதியான எண்ணமும் மனதுக்குள் இருந்தது. இருந்தும் தற்செயலாகச் சின்னான் அப்படி அவளைத் தேடிப் போயிருந்தால், ஆத்தை முன்பு சொன்னது போலை சின்னானைத் தோட்டக் கிணற்றுக் குள்தான் பார்க்கவேண்டி வந்தாலும் வந்துவிடக் கூடும் எனத்தான் அவள் ஏங்கினாள்.

குடிசைக்கு வெளியே காலடி ஓசை கேட்டது.

சின்னான் வந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொப்பரும் செத்துப் பத்து நாள் ஆகையில்லை, அதுக்கிடையிலை ஊர் மேச்சலுக்கே போனனீ?''

இப்படிச் சற்றுக் கண்டிப்பான குரலில் செல்லி அவனுடன் பேசினாள்.

ஆத்தையின் பேச்சு சின்னிக்கு 'சுள்' என்று குத்தியது.

செல்லியின் இந்தப் பேச்சுக்குச் சின்னான் பதில் கூறாததிலிருந்து சின்னிக்கு இப்போது பெரும் ஏக்கம்

''என்னெண்டாலுஞ் செய்! நீ கடுக்கண்டிட்டாய்! எனக்கும் மனங்கேக்குதில்லை அதுதான் சொன்னனான். சோத்தைத் தின்!'' என்று சொல்லிக்கொண்டே செல்லி வரகுச்சோற்றையும் ஆமைக் கறியையும் சட்டி ஒன்றுக்குள் போட்டுக் கொடுத்தாள். சின்னான் தலை குனிந்தபடி தின்று கொண்டிருந்தான்.

''பொழுதுபடேக்கை கொப்பற்றை நயினாத்தி ஆள் விட்டவ, கொப்பர் சாகிற அண்டைக்கு உன்னைக் கூட்டியந்து தன்ரை வீட்டிலைவிடுகிறன் எண்டு சொன்னவராம்; நாளைக்குக் காலமை வரக்காட்டச் சொன்னவ, அங்கை நிண்டியெண்டாத்தான் நீ கட்டுமட்டாய் நிப்பாய்!''

செல்லி மறுபடியும் பேசினாள்.

''உடையார் நயினாற்றை வண்டில் இழுக்கிற முத்தண்ணை மத்தியானம்போலை அப்பு செத்துப் போச் செண்டு சேதி அறிஞ்சு வந்தவர், மந்திகையிலை புதுசா ஆசுப்பத்திரி கட்டியிருக்கினமாம் அதிலை கழுவுற துடைக்கிற வேலைக்குச் சேத்து விடுகிறன் அதுக்கு ஆரையோ காணவேணுமெண்டு வரச் சொன்னவர் அதுதான் போட்டுவாறன்; அவரைக் கண்டனாங்கள்; நாளைக்கு வேலைக்கு வரச்சொன்னவர்.''

சின்னானின் பதில் செல்லியை ஏங்கவைத்துவிட்டது.

சின்னிக்கு இது குளிர்மையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

சின்னான் வயிற்றை நிரப்பிக் கொண்டு தன் குடிசைக்குப் போய் விட்டான். இனி அவன் மெய்யுறக்கம் செய்யவேண்டும்.

இரவல் வீட்டில் கண்களை மூடிக்கொண்டு சாப்பிடுகிறோமே என்ற அவனின் மன உசுப்பலுக்கு இன்று முத்தன் மூலமாக ஒரு விடிவு கிடைத்துவிட்டது என்பதை வைத்துக் கொண்டு இன்று மெய்யுறக்கம் வரும் என்பது உண்மைதான். ஆயினும் அப்பனின் நயினாத்தி, செல்லியிடம் சொல்லி அனுப்பிய கட்டளை மனதின் ஒரு மூலைக்குள் இருந்து பூனைச் சீற்றம் சீறுவது போலவும் இருந்தது.

முத்தனுக்கூடாகப் பொருந்திக் கொண்ட அந்த வைத்திய விடுதியின் வேலை தோட்டி வேலைதான்; மனதுக்குச் சற்றுக் கூச்சமான வேலைதான். ஆயினும் நாளடைவில் பழக்கத்துக்கு வந்துவிடக் கூடாத ஒன்றல்ல என்பதும் அவன் முடிவாயிருந்தது. அல்லாமலும் சுளைபோல மாதாமாதம் அறுபது பணம் சம்பளம்! அறுபது பணம் என்றால் கொஞ்சநஞ்சமா? அறுபதை ஆறினால் பெருக்கிப் பார்த்தால் முந்நூற்று அறுபது சதங்கள்; மூச்சைப் பிடித்துக் கொண்டு தின்று தீர்த்தாலும் நாள் ஒன்றுக்கான செலவாக பத்துச் சதங்கூட முடியாது. இதனபடி பார்த்தாலும்கூட மாதத்தில் அறுபது சதங்கள் சம்பாத்தியமாகும். அத்தோடு ''வாறபோற ஆக்களின்ரை வெட்டுக் கொத்தும் வரும்'' என்று முத்தன் சொல்லியுமிருக்கிறான்.

சின்னானுக்கு நிம்மதியாக நித்திரை வந்தது.

சின்னிக்குத் தூக்கம் வரவில்லை.

''ஆத்தை!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மோனை?"

"அதை எங்கையெணை வேலைக்குப் போகச் சொல்லிச் சொல்லப் போறாய்?"

"நயினாத்தி வீட்டைதான், வேறை எங்கை?"

"ஏனெணை அது ஆசுப்பத்திரிக்குப் போகட்டுக்கனெணை!"

"எடி அது பீ மூத்திரம் எடுக்கவும் வேணுமெடி!"

"உவையிட்டை தட்டேப்பையாலை சூடு வேண்டிறதிலும் பாக்க அதைச் செய்யலாமெணை!"

"எடி அவ கோவியக் கமக்காறிச்சி செய்து போட்டா எண்டு ஆமான நயினாத்தியவையுஞ் செய்வினமே? சாய் அப்பிடிச் செய்யாயினம்! பரம்பரையாய் அடிமை குடிமை வைச்சு ஆண்டவை அதைச் செய்யாயினம்!"

"ஆர் கண்டது உதுகளை?"

"எண்டாலும் என்ன மோனை செய்யிறது? மூத்த தம்பி நயினார் தண்ணி தரமாட்டன் என்னேக்கை விதானையார் நயினார் தண்ணி தாறன் எண்டு தந்தவரல்லே. சரி அதை விட்டிடுவம் அவையின்ரை விருப்பமில்லாமை வேறை இடத்தை வேலைக்குப் போனா எக்கணம் என்ன வாகும் எண்டு தெரியுமே? திடலுக்கை இருக்கிற பத்துக் குடியளையும் குடியிருக்க விடுவினமே? சிறுபிள்ளை வேளாண்மை விளைஞ்சும் வீடு வந்து சேராது மோனை!"

ஆத்தைக்கும் மோளுக்கும் நடந்த இந்த சம்பாஷணைக்குப்பின் பேச்சுத் தொடரவில்லை.

சின்னியால் பேச்சைத் தொடரவும் முடியவில்லை.

தென்மேற்கே உப்புவெளிக்கப்பால் உள்ள தாளங் காட்டுக்குள் நரிகளின் ஊளைச்சத்தங்கள் குமைந் தெழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று வேளைக்குள் செல்லியின் குறட்டைச் சத்தந் தான் குடிசைக்குள் கேட்டுக்கொண்டிருந்தது.

''ஆத்தை!''

சின்னியின் இந்த அழைப்பை அவளின் செவிப்புலனால் கிரகிக்க முடியவில்லை. செல்லி தூங்கித்தான் போய் விட்டாள். பகலெல்லாம் மாடாய் உழைத்த அலுப்பு!

ஊதைக் காற்று நிலவடலி ஓலைகளை அசைத்து—அலைத்துக் கொண்டதனால் எழுந்த ஓசை பேய் இரைச்சலாக இருந்தது. அந்தப் பேய் இரைச்சலுக்கூடாக கீற்றுக் கோடுபோல உப்புத்தரை வக்காப் பறவைகளின் ஒலிகள் கேட்டுக் கொண்டும் இருந்தன.

சின்னியும் தூங்கிப்போய் இருக்கவேண்டும். அவளுக்கு தூக்கத்தில் புலம்புவது வழக்கமானது. அவள் புலம்பும் போது செல்லி விழிப்பாயிருந்தால் அவளை உலுப்பி அசைத்து, அல்லது இலேசாக அவளுக்கு அடித்து அவளின் புலம்பலைத் தடுத்து விடுவாள். ஆனால் இன்றோ செல்லி முதலிலேயே தூங்கி விட்டாள்.

......''ஐயோ...... என்ரை ஐயோ...... ஆத்தை...... ஆத்தை இரத்தமெணை...... சீறிப்பாயுதெணை... என்ரை சின்னான்ரை தலை ...... எணை ஆத்தை, என்ரை ஐயோ, ஐயோ; ஆத்தை ஆத்தை......'' இந்தப் பிதற்றலின் இறுதியில் சின்னியின் வீறிட்ட குரல் கேட்டது.

செல்லி திடுக்குற்று எழுந்து சின்னியை ஆட்டி அசைத்து உலுப்பினாள்...

''ஐயோ ஆத்தை...... என்னை விடணை! என்ரை சின்னான்...... என்ரை சின்னான்...... எணை விடணை! என்னை விடணை!......

சின்னியின் தொடர்ச்சியான இந்தப் பிதற்றலைக் கேட்டதும் செல்லி அவளின் தோள்மூட்டைத் தடவி நான்கைந்து தடவைகள் தசை மதாளிப்பான அந்த தோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டில் அடித்து அடித்து அவளைக் கண் விழிக்க வைத்து விட்டாள். ஆனாலும் சின்னி விம்மி விம்மி அழுது கொண்டே இருந்தாள். எழுந்துவிட்ட செல்லி பக்கத்தே இருந்த அடுப்பை ஊதி தென்னோலைக் கீற்றுக்களைப் பற்ற வைத்து அதன் ஒளியை மகளின் முகத்திற்குச் சமீப மாகப் பிடித்துக் கொண்டே "என்னடி அது ஏனெடி அழுறாய்?'' ஏனெடி கெட்டகிட்ட கனவேயெடி கண்டனி.'' என்று கேட்டாள்.

''ஓமெணை ஆத்தை, அந்தாளின்ரை தலையை வெட்டி விழுத்திப் போட்டாங்களெணை, ரெத்தம் சீறிப் பாஞ்சதெணை...... அந்தாள் ஆசுப்பத்திரிக்குப் போற வழியிலை! இப்பிடிக் கனவிலை கண்டனானெணை!...'' சின்னி ஆத்தைக்குப் பதில் சொன்னாள்.

''எடி விசரி கனாக்கண்டு இப்படிக் கத்திறதேயெடி பேசாமல் படெடி!'' இப்படிக் கூறி ஓலைக்கீற்று வெளிச் சத்தைத் தாழ்த்திக் கொட்டில் புழுதிக்குள் புதைத்து அணைத்துவிட்டு செல்லி மறுபடியும் கழுத்து முடிச்சுச் சேலையால் சுற்றி மூடிக்கொண்டு படுத்துவிட்டாள்.

''ஆத்தை!''

''என்னெடி மோனை?''

''எனக்குப் பயமாக்கிடக்கெணை!''

''கொப்பர் செத்த நாளையிலையிருந்து பயப்பிடாத வளுக்கு இப்ப வீண்ணானமான பயம் வநதிட்டுது!''

''அதுக்கில்லை ஆத்தை கனாவிலை வந்தமாதிரி வெட்டிக்கிட்டிப் போடுவினம் எண்டு......''

''எடி விசரி பேசாமல் நித்திரையைக் கொள்ளடி! கூடாத கனாக்கண்டா நல்லதுகள் நடக்குமெண்டு சொல் லுறவையெடி! நல்ல கனாக் கண்டாத்தான் கூடாதவை நடக்குமெண்ணுறவை! போன வரிசம் அத்துளு அம்மன் கோயில் பூவரசங்காட்டுக்கை கொம்மான்ரை சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கின அண்டு ராத்திரி கொம்மான் மேலெல்லாம் சந்தனமும் பூசிக்கொண்டு, ஐஞ்சாறு பூசனிக்காயளையும் கமக்கட்டுக்கை வைச்சுக் கொண்டு செடில் காவடியாய் வரக் கனாக் கண்டனான். ராவு கனாக்காணிறன், விடியக் கொம்மான் சாகிறான். இந்தக் கனா விலை பிழை ஒண்டும் வராது நீ படுமோனை?''

# 11

வைத்திய விடுதி வேலை சின்னானுக்குப் புதியதாக இருந்தாலும் அவன் மிகவும் சுறுசுறுப்பாகவே வேலையைச் செய்து கொண்டான். ஏற்கெனவே அங்கு வேலைக்கிருந்த மாதன் என்பவன் சின்னானுக்குமேல் ஆதிக்கம் செலுத்தினான். உரிமையோடு அவனை இந்த நான்கு நாட்களாக அதட்டி அதட்டி வேலை வாங்கிக்கொண்டாலும் சின்னானுக்கு மேல் பரிவுடனும் நடக்க அவன் தவறவில்லை. அத்துடன் அங்குள்ள நடைமுறைகளைப் பற்றி அப்போதைக்கப்போது சின்னானுக்கு இந்தக் குறுகிய நாட்களுக்குள் விளங்கவும் வைத்து விட்டான்.

மாதன் தன் இளம் மனைவி மாதியோடு வைத்திய விடுதியின் பின்புற வடலியின் ஒதுக்குப்புறக் குடிசையில் தான் குடி இருந்தான். அதனால் இந்த நான்கு நாட்களும் சின்னானைத் தனது குடிசையிலேயே தங்க வைத்தும் இரவுச் சாப்பாட்டைக் கொடுத்தும் உதவினான். இது சின்னானுக்குச் சற்று மன ஆறுதலாக இருந்தது.

''ஏன்ரா மாதன் மூப்பன், ஆர் உன்ரை சொந்தக்காறனையும் கொண்டு வந்து சேத்துப் போட்டாய் போலை கிடக்கு?'' இப்படி ஆஸ்பத்திரியின் ஓடாவி சுப்பர் கேட்ட கேள்விக்குக்கு ஒரு மாதிரித் தலையை அசைத்து ஆட்டிக் கொண்டே மௌனத்தால் மாதன் சமாளித்துக் கொண்டான். சின்னான் தன்னோடு வேலை செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உணவையே புசித்து, தனது வீட்டிலேயே படுத்தெழும்புவதற்காக அவனைத் தனது சாதியினன் என்று ஒப்புக் கொள்வது மாதனுக்குக் கஷ்டமாக இந்தது.

''பாத்தியே சின்னவி, ஓடாவி நயினார் உன்னையும் என்ரை சாதியாக்கப் பாக்கிறதை!'' ஓடாவியார் போனதும் தனது மனத்தொல்லையை மாதன் இந்த வார்த்தை மூலம் வெளியே வைத்தான்.

சின்னானுக்கு ஒன்றும் பேச வரவில்லை. மாதனை அவன் தனது தொழிலின் குருவாகக் கொண்டு விட்டதனால் வாய்விட்டு அவனுடன் பேச அவன் கூசினான். அதிலும் மாதன், சின்னான் என்ற தனது பெயருக்கு ஒரு கௌரவம் தந்து 'சின்னவி' என்று அழைத்ததும் கூட அவனை அதிகமாகக் கூசவைத்தது.

மேலும் நான்கு நாட்கள் போய்விட்டன.

''எட பொடியன், உன்ரை பேரென்னடா, சின்னானெல்லெ? நீ திடல் சொடுகன்ரை மோனெல்லையேடா? நீ உடையார் நயினாற்றை வைப்பாடிச்சி வீட்டிலையெல்லையேடா நிண்டனி? நீ என்னென்டா இஞ்சை வந்த நீ? சரி வந்திட்டாய்! மாதன் ஆரெண்டு தெரியுமேயடா? அங்கைதான் திண்டு குடிக்கிறாய் எண்டு கேள்வியாக் கிடக்கு! மடையா அவனாற்ற நீ ஆற்றா? உன்ரை ஆக்கள் உன்னைச் சபை சந்தியிலை வைப்பாங்களையெடா?''

இப்படி ஓடாவி சுப்பர் சின்னானைக் கேள்விகளாகக் கேட்டார்.

ஓடாவி சுப்பரின் இத்தனை கேள்விகளுக்கும் சின்னானால் பதில் கூற முடியவில்லை. அவன் கையில் பிடித்த தடி விளக்குமாற்றுடன் அப்படியே அசையாமல் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னெடா நான் கேக்கிறன் ஒண்டுக்கும் வாய் திறக்கிறாயில்லை. நீ எங்கடை ஊரு நளவன்—எங்கடை பெரிய நயினாரவையின்ரை குடிமோன் எண்டத்துக்காகச் சொல்லுறன். ஆசுபத்திரிக்கு வேலைக்கு வந்திட்டாய் கவனம் கண்டியோ? மாதன் தாங்கள் செய்யிற எழிய வேலையளை உன்னைக் கொண்டு செய்விக்கப் பாப்பான் கண்டியோ! எட நான் கேக்கிறன் நீ அவனின்ரை வீட்டிலை வாய் நனைக்கலாமா சொல்லடா பாப்பம்! சொல்லிப் போட்டன் நான் பெரிய நயினராவை உன்ரை முதுகுத் தோலை உரிப்பினம் பார்! மடையா உன்ரை சாதியை விக்கப்பாக்கிறாய் என்ன?"

ஓடாவியார் பேசி முடிந்ததும் பதில் சொல்லச் சின்னான் அவதிப்படவில்லை. அவன் எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். இப்போது தடி விளக்குமாறு அவனின் நெஞ்சோடு சார்ந்து நின்றது.

"எட சின்னான்; உன்ரை கொப்பன் சொடுகன் தன்ரை ஆக்கள் வீடுகளை கூட வாய் நனைக்காமலுக்குச் சீவிச்சவன்ரா! ஏன்ரா கனக்க வேண்டாம் அவன்ரை தங்கச்சி —அதுதான்ரா உன்ரை மாமி பள் சின்னப்பொடியனோடை தொடுப்பாயிருந்திட்டாள் எண்டதுக்காக சாகும்வரையிலை தங்கைக்காரியின்ரை முத்தத்திலையும் மிரிக்காமல்த்தான்ரா சீவிச்சவன். தெடுத்தனைக் கயிலாயர் வீட்டிலை அம்பட்டனுக்குத் தண்ணி குடுத்த சிரட்டையிக்கை தண்ணி குடுத்திட்டினமெண்டு சிரட்டையையும் எறிஞ்சுபோட்டு வர,தெடுத்தனையார் எல்லாரும் சொடுகனைக் கெஞ்சித்தானையெடா பார்த்தவை. கொப்பன் கிறுங்கினானே? அதுக்குப் பிறகு தெடுத்தனையாற்றை நன்மை தீமைச் சபைசந்திக்குக் கொப்பன் போகாமல் தான்ரா நாங்கியாச் சீவிச்சுச் செத்தவன். அந்த ரோசக்காறனுக்கு நீ பிறந்திருந்தா இப்பிடிச் செய்திருக்கமாட்டாய்..."

ஓடாவியார் பேச்சை முடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓடாவி நயினார் எப்பன் யோசிச்சுக் கதைக்க வேணுமாக்கும்!''

சின்னான் குறுக்கிட்டுச் சொன்னான். அவன் குரல் கடுமையாக இருந்தது.

''என்ன உமக்குக் கோள்வம் வருகுது! எங்கை உம்மடை கோள்வத்தை என்னெட்டைக் காட்டிறீர்? சின்னான் நீ சொடுகனுக்குத் தான் பிறந்திருப்பாய் எண்டால பறைய வீடு நக்கிறதை நிப்பாட்டடா பாப்பம்!''

ஓடாவியார் ஒரு இடுக்கெட்டுப் பூட்டுப் போட்டு விட்டார்.

சற்றுத் தொலைவில் டாக்குத்தர், விடுதி விறாந்தை யால் நடந்து வருவது தெரிந்தது.

ஓடாவி சுப்பர் ஒரு பக்கத்தால் நடந்துபோக சின்னான் தனது தடிவிளக்குமாற்று வேலையைத் தொடங்கிவிட்டான்.

பொழுது உச்சியைத் தாண்டிவிட்டது.

வழக்கத்துக்கு மாறாக சின்னானுக்கு உடம்பு வியர்ந்து வழிந்துகொண்டது.

''என்ன சின்னவி நான் வரட்டுக்கன் எண்டு காத்துக் கொண்டு நிற்கிறாய்போல கிடக்கு. வா வா தீன் திண்டிட்டு வருவம் அவள் பாவி காத்துக்கொண்டி ருப்பாள்!'' என்று கேட்டுக்கொண்டே மாதன் வந்தான்.

''இண்டைக் கெனக்குப் பசிக்கேல்லை!''

இப்படி சின்னான் மொட்டையாகப் பதில் சொல்லி விட்டான்.

''என்ன கல்லைத் திண்டாலும் செமிக்கிற வயதிலை காலமை குடிச்ச பழஞ்சோத்துக் கஞ்சியும் பினாட்டும் இன்னும் செமிபாட்டுக்கு போகேல்லை எண்ணிறாய்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதனின் இந்தப் பேச்சுக்கும் சின்னான்'' ஓ மெண்ணிறன்; பசிக்கேல்லை எண்ணிறன்'' என்றுதான் பதில் சொன்னான்.

இதற்குமேல் மாதன் அவனை வற்புறுத்தவில்லை. குடிசையைத் தேடி அவன் போய்விட்டான்.

''எங்கையப்பா கரக் குட்டானைக் காணேல்லை?''

இப்படி மாதனின் மனைவி கேட்டாள். இந்தக் கேள்விக்கு ''அவனுக்குப் பசிக்கேலையாம்'' என்று மட்டும் தான் பதில் சொன்னான்.

''என்ன பசிக்கேல்லையாமா? உதை நான் நம்பன்! விண்ணி வீட்டிலை விளம்பல் சேர்க்கப்படாதெண்டு கரக்குட்டானுக்கு ஆரோ மொழிஞ்சு போட்டினம் போலை எண்டுதான் நினைக்கிறன்!''

மாதன் மனைவி தனது சாதியாரின் குழூக்குறிப் பாஷையில் ''நளப் பொடியனை பறைய வீட்டிலை சோறு தின்னப்படாதென்று யாரோ கண்டிப்பாக தடுத்து விட்டார்கள்'' என்பதனைச் சொல்லி விட்டாள்.

மாதனுக்கு இப்போதுதான் ''அப்படியுமிருக்கலாம்'' என்ற ஐயம் வந்தது. ஓடாவியார் சுப்பர் சின்னானிடம் பேசிக்கொண்டிருந்ததைச் சற்றுத் தூரத்தில் நின்று பார்த்த நினைப்பும் வந்தது. ஆனாலும் மனைவிக்கு முன்னால் அதை ஒப்புக்கொண்டு சின்னானில் மனைவி வைத்திருந்த நல்ல எண்ணத்தை உடனடியாகப் பலவீனப் படுத்த அவன் விரும்பவில்லை, ஆயினும் அதை முற்று முழுதாக மறைக்கவும் அவன் மனதுக்கு விருப்பம் இருக்கவில்லை.

''ஓமப்பா, ஓடாவி வால்சுள்ளன் அவனோடை கன நேரம் கதைச்சுக்கொண்டு நிண்டவர்! சொல்லேலாது! எண்டாலும் கரக்குட்டான் வால்சுள்ளன்ரை மொழிச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்கு எடுபடும் எண்டு நான் நினைக்கேல்லை!'' என்று அவன் இலேசாகக் கூறினான்.

மாதி இதற்குமேல் ஒன்றும்பேசவில்லை. மாதனுக்கு அவள் பனிச்சாமிக் கஞ்சி நிரப்பிய சட்டியையும் பலா விலைத் தொன்னையையும், அகப்பையையும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனாள்.

பனிச்சாமிக் கஞ்சி உப்புப் புளி, உறைப்பு எல்லாம் கனகச்சிதமாக இருந்தது. அளவான சூடென்றால் மாத னுக்கு அது மிகவும் பிடித்தமானது. மாதனுக்குப் புளிக் கஞ்சியில் உப்புச் சற்றுக் கடுகடுக்க வேண்டும். இது மாதிக்குத் தெரியுமாதலால் உப்புச் சிரட்டையை எடுத்து வந்து பக்கத்தே வைத்து விட்டுச் சென்றாள்.

# 12

''இண்டைக் கொருக்கா வீட்டை போட்டு வரப் போறன்'' என்று மாதனிடமும், மாதியிடமும் கூறிக் கொண்டே சின்னான் பொழுதானபோது வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான்.

வீடென்று அவன் சொன்னதெல்லாம் திடலுக்கு நடுவே நில வடலிகளுக்குப் பக்கமாக உள்ள தனது குடி சையைத்தான் என்றால் அவன் நேராக அந்தக் குடிசைக்கே வந்திருப்பான். ஆனால் அவன் வந்ததோ செல்லியினதும் சின்னியினதும் வீட்டுக்குத்தான்.

அப்போதுதான் சின்னி இரவுச் சமையலுக்கான உலையை மூடிவிட்டு அரிசியைக் கிளைந்துகொண்டிருந் தாள். செல்வி கோயில் சந்தைக்குப் போயிருந்தாள். அந்த வேளைதான் ஏதாவது கறித்தண்ணி பணைக்கக் கூடியதான மச்சத்தை வாங்கிக் கொள்ளலாம். அந்தக் கருகல் வேளை யில்தான் குடத்தளைப் பக்கத்திலிருக்கும் தூரவுக்ள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களிலிருந்து இந்தச் சாதியினருக்கான மச்சப் பொருட்களைப் பிடித்து வந்து சேர்ப்பார்கள். முதல் நாள் சந்தைக்குச் செல்லி போயிருந்தபோது நன்றாக முதுகு விரிந்து, கறுத்து மதமதப்பாய் முதுகுப் புள்ளிகள் மறைந்த விரால் மீன்கள் பத்துப் பதினைந்துவரை வந்திருந்தன. நான் நீ என்ற விலை அடிபாட்டுக்குள் செல்லியால் அந்த விளைந்த விரால் மீனில் ஒன்றைத்தானும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. மிகப் பெரிதான விரால் மீனை விலை கொண்ட கோவியச் சின்னக் குட்டியாளிடம் இவள் பாதியைப் பகிர்ந்து தரும்படியும் கேட்டுப் பார்த்தாள். சின்னக்குட்டியாள் மறுத்து விடவே மனச் சோர்வுடனும் கோபத்துடனும் வெறுங்கையுடன் திரும்பி இன்று ரோசத்துடன் வேளையோடேயே சென்றிருக்கிறாள். போக காலத்திற்குப் போககாலம் ஒரே இன மீன் வகைகளின் பிடிபாடுதான் இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். அன்று மதியம் திரும்பியபோது குடத்தனையை நோக்கி கரப்புகளுடனும் பறிகளுடனும் குடத்தனைப் பகுதிக் குளங்களுக்குக் கரப்புக் குத்தச் சென்றவர்களை அவள் கண்டிருக்கிறாள். அதனால் நிச்சயமாக விரால் மீன்கள்தான் ஐந்து பத்து நாட்களுக்கு வரும் என்ற முடிவும் அவளுக்கு இருந்தது.

சோற்றுலையின் நெருப்பு வெக்கையில் சின்னியின் முகத்தால் வெயர்வை வழிந்துகொண்டிருந்தது.

வெளியே ஆள் அரவம் கேட்டதும் ஓலைத் தளிர் நெருப்பை உயர்த்திக்கொண்டு சின்னி வெளியே பார்த்தாள். வந்தது சின்னான்.

சின்னிக்கு உடனேயே ஒன்றும் பேசமுடியவில்லை. பதிலுக்கு அவளுக்கு அழுகைதான் வந்தது. அவள் விம்மினாள்.

சின்னான் திடுக்குற்றுப் போய்விட்டான். சின்னி அழுவதற்கான காரணத்தை அவனால் உடனேயே கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியவில்லை. அவளைச் சற்றுவேளை அழ விட்டு விட்டு, ''ஏன் சின்னி அழறாய்? என்னது? ஆத்தை எங்கை?'' என்ற கேள்விகளை அவன் கேட்டான்.

சின்னிக்கு அழுகை ஓயவில்லை. அவள் அழுது முடியும் வரை சின்னான் நின்றான்.

சோற்றுலை பொங்கி உலைமூடியை உயர்த்தி உயர்த்தி வீழ்த்தி விடும் போல இருந்தது.

சின்னி அழுகையோடு ஒன்றிப் போய்விட்டாள். ஆகை யால் சின்னான் உலையின் பக்கமாக வந்து நெருப்பை நகர்த்தி' உலைமூடியை எடுத்துக் கீழேவைத்தான்.

''ஆரெடி மோனை? என்று கேட்டுக்கொண்டே செல்லி வந்து சேர்ந்தாள்.

சின்னி அழுதுகொண்டிருந்ததையும், சின்னான் உலை மூடியை அகற்றியதையும் கண்டுவிட்ட செல்லியின் மனதைப் பட்டென்று ஏதோ தாக்கிவிட்டது. ஒரு கணநேரம் சின்னானின் பரிசுத்தத்தை அவள் சந்தேகித்து விட்டாள்.

சின்னி எதுவுமே பேசாமல் நின்றாள். சின்னானும் திகைத்துப்போய் விட்டான். செல்லியின் திகைப்பின் அர்த்தத்தை இப்போதுதான் அவன் மனதால் உணர முடிந்தது.

''சின்னி என்னைக் கண்டோண்ணை அழுகுது, உலை கொதிச்சு உலைமூடி விழப்பாத்தது. அதுதான்..............

சின்னானின் இந்தப்பேச்சுக்கு சின்னி ஒன்றும் பேச வில்லை.

''தேப்பனும் செத்துப்போக இவளைக் கோழிக் குஞ்சு மாதிரி சிறகுக்கை வைச்சிருக்கிறன் மோனை!''

இப்படி மட்டுந்தான் செல்லி பேசினாள். பின்பு அவளும் அழுதாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னானின் உண்மையான பேச்சைச் செல்லி நம்பவில்லை என்பதன் வெளிப்பாடுதான் அந்த அழுகை என்பதனை உணரச் சின்னானுக்கு அதிக நேரம் ஆகவில்லை.

பனை ஈர்க்கின் கோர்வையுடன் கையில் இருந்த விரால்மீனைக் கீழே வைத்துவிட்டு செத்தையில் சொருகியிருந்த கத்தியை எடுத்து விரால்மீனின் செதில்களைக் கழற்றத் தொடங்கி விட்டாள் செல்லி.

கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்த சின்னி சட்டிகளையும், பேணி விளக்கையும் எடுத்து வந்து செல்லிக்கு முன்னால் வைக்க செல்லி மீனை நோண்டத் தொடங்கி விட்டாள். இருவரதும் அழுகை நின்று போய்விட்டது. இதுவரை நிலைகுத்தி நின்ற சின்னான் எதுவும் பேசிக் கொள்ளாமல் தனது குடிசைப்பக்கமாகச் சென்றுவிட்டான்.

நீண்டநேரம் செல்லியின் குடிசைக்குள் மனிதக் குரல்கள் கேட்கவில்லை. இடையே குடுவை உரலுக்குள் பொரிமா இடிபடும் ஓசை மட்டும் கேட்டது. அதைத் தொடர்ந்து தேங்காய் ஒன்று உடைக்கப் படும் ஓசையும் எழுந்தது.

உவியல் சோற்றின் வாசனையும் பொரிமாக் கறியின் கொதிவாசனையும் காற்றிலே மிதந்து குடிசைக்கு வெளியே வந்தது.

''ஆத்தை......!''

''என்ன மோனை?''

''அது என்ரை மேல்லை முட்டயில்லையெணை!''

''என்னடி அது?''

''வல்லிவிரத்தானணை அது அப்பிடி ஒண்டும் செய்யவில்லை! பிழையா ஒண்டும் கதைக்கயில்லை!''

''அப்ப ஏனெடி சிணுங்கினனி?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதைக் கண்டோண்ணை எனக்கு அழுகை வந்திட்டுதெணை. நேத்தைக்கு விதானையார் நயினார் பேசினது நினைச்சுப் பயந்து அழுது போட்டனெணை!''

''எடி அறுந்தவளை! உதை வேளையோடை சொல்லாதையனடி!''

''என்னைச் சொல்லவிடாமை நீ பேசிப்போட்டு...''

இந்தச் சம்பாஷணைக்குப்பின் செல்லியோ சின்னியோ பேச்சுகளைத் தொடரவில்லை.

இறக்கப்பட்ட விரால் மீன் பொரிமாக் குளம்பின் மேல் நெய் ஆறிப்படர்ந்து கொண்டிருந்தது.

''மோனை மத்தியானம் குடிச்ச கஞ்சித் தண்ணியோடை கிடக்கிறாய்! நீ உலை மூடியுக்கை சோத்தைப் போட்டுத்தின் மோனை!''

செல்லி மகளுக்குக் கட்டளை போட்டாள்.

சின்னி பேசவில்லை. அப்படியே இருந்தாள்.

''எடி சோறு விறைச்சுப் போகப் போகுதுமோனை போட்டுத்தின்; எழும்பு!''

செல்லி மறுபடியும் சொன்னாள்.

''அது பட்டினி கிடக்கும் ஆத்தை!''

சின்னி மனதுக்குள் இருந்ததை வெளியே கக்கி விட்டாள்.

''பொடியனுக்கு சின்னக் கறிச்சட்டியிக்கை போட்டுத் தா நான் கொண்டுபோய்க் குடுத்திட்டு வாறன் மோனை!'' செல்லியும் தனது அவசரத்தை ஒப்புக் கொள்பவளாக மனதை திறந்து விட்டாள்.

வேண்டொமெணை ஆத்தை! நீ போய்க் கூட்டி வாணை?''

இதைச் சொன்னபோது சின்னி கூசிக் குறுகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லி எழுந்து சின்னானின் குடிசையை நோக்கிச் சென்றாள்.

இவள் குடிசைக்குச் சென்றபோது குடிசை இருளுக்குள் மண்டிக் கிடந்தது.

''தம்பி''

செல்லியின் அழைப்புக்கு ஒரு முனகல் மட்டும் கேட்டது.

''தம்பி, வா மோனை திணைத் தீண்டிட்டு வந்து படு மோனை!''

செல்லியின் இந்தப் பேச்சுக்குப் பதில் ஏதும் வரவில்லை. செல்லிக்கும் இதற்குமேல் பேசவும் முடியவில்லை. சற்றுவேளை ஆயிற்று, சின்னான் குடிசைக்கு வெளியே வந்து செல்லிக்கு முன்னால் நடந்தான்.

காற்று சுழன்றடித்தது.

இருளின் சூன்யத்துதுக்குள் இருவரும் நடந்தனர்.

இடையே ஒன்றிரண்டு தடவைகள் சின்னானின் ஓசை மட்டும் எழுந்து வந்து செல்லியின் செவிகளில் மோதின.

செல்லியின் உடல் எங்கும் புல்லரித்தது.

''சின்னி இப்பான்மோனை சொன்னவள்! நான் அவசரப்பட்டுக் கதைச்சுப் போட்டன் மோனை...!

செல்லியின் குரலோடு அழுகைச் சோகமும் கலந்து இழையோடி வந்தது.

## 13

''எடி செல்லி என்னெடி விரால் குழம்பு வாசனை மூக்கைப் பிடுங்குதெடி! செக்கலுக்கை நீ விராலைத் தூக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரேக்கை தோட்டக் கரையிலை நிண்டு கண்டனானெடி!'' என்ற குரல் குடிசைக்கு வெளியே கேட்டது.

இக்குரல் வந்து முடிவதற்கிடையில் சின்னி பேணி விளக்கைப் படக்கென்று அணைத்து விட்டாள்.

''என்னெடி என்னைக் கண்டோண்ணை விளக்கை நூத்துப் போட்டியள்! நான் என்னெடி பேயோ பிசாசோடி?'' என்று குரலைத் தாழ்த்திக் கூறிக்கொண்டே சின்னப்பிள்ளை ஓடாவிச்சியார் குடிசைக்குள் வந்து விட்டாள். இதற்குமேல் விளக்கை மறுபடியும் ஏற்ற வேண்டியதாயிற்று.

''இல்லையாக்கும் காத்துக்கு அது நூந்துபோச்சு!'' என்று கூறிக்கொண்டே செல்லி அடுப்பை ஊதி விளக்கைப் பற்ற வைத்தாள்.

''எடி வேசை, சின்னானையேடி அணைச்சு வைச்சிருக்கிறாய்? இப்பெல்லோ தெரியுது விளக்கை ஏன் நூந்ததெண்டு! எடி அறுந்தவளை எக்கணம் பெரிய நயினாரவை அறிஞ்சா உன்ரை பம்பையை எல்லையேடி வெட்டிப் போடுவினம்! அறுந்த வேலை செய்யாமை உவனைக் கெதியாப் போக்காட்டிப் போடெடி! உவன் பறைய வீடு திண்டாடிட்டான் எண்டு ஊரெல்லாம் கொதிச்சுக் கொண்டிருக்குது! விதானையாற்ற குணத்தைத் தெரிஞ்சு கொண்டும் ஏனெடி வேசை அணைச்சு வைச்சனீ?''

கேள்விக்கு மேலாகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள் சின்னப்பிள்ளை ஓடாவிச்சி.

தான் வந்ததும், சின்னி அழுததுக்கும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களுக்கும் காரணத்தை அறிய முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த சின்னானுக்கு இப்போது விஷயம் இலேசாகப் புரியத் தொடங்கி விட்டது. அவன் மௌனமாகவே சோற்றுருண்டைகளை விழுங்கிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY 4-7-1995

"நான் என்ன செய்யவாக்கும்! பொடியனுக்குச் சொந்த பந்தம் எண்டு சொல்லிக் கொள்ள ஆர் இருக்கின மாக்கும்! நானும் அணைக்காட்டி அவன் தாய்தேப்பனைத் தின்னி ஆரெட்டையாக்கும் போய் ஆறுறது?"

செல்லி மிகவும் பரிதாபமாகப் பேசினாள்.

"நீ சொல்லுறதும் சரிதானெடி செல்லி! இந்த நாளையிலை நாயம் நீதிக்கு ஆரெடி நிக்கப் போகினம்! சின்னான் பறைய வீட்டிலை சாப்பிட்டா நயினார் நயினாத்தியவையின்ரை மானம் போகிடுமாம்! உங்கை எத்தினை பேர் விலாங்குக்கறி நாரிப்பிடிப்புக்கு நல்ல தெண்டு சொல்லிக் கொண்டு மசிக்கிடாமல் பள்ள நளவ வீடு வழிய தின்னுகினம் எண்டது எனக்கெல்லோ தெரியும்! ஏனெடி கனக்க வேண்டாம்; உவர் தான் கனக சபை நயினார், மூப்பன் மாதன் மாதியைக் கட்டிறதுக்கு முந்தி மாதியின்ரை அள்ளு கொண்டை வடிவிலை மயங்கி மாதி வீட்டிலை அடுகிடை படுகிடை கிடந்து சனிக் கிழமையள் தவறாமல் மாட்டுக்குடல் கறி திண்டு வந்தது எனக்கல்லோடி தெரியும். ஏன் உவர் கோயில் சந்தைக் கட்டைக் கந்தசாமியார் பொழுது கருகினாப்போலை எத்தினை நாள் சந்தையுக்கை, விளைஞ்ச விலாங்கை நாரிப்பிடிப்புக் கெண்டு வாங்கிக் கொண்டுபோய் தக்கச் சப்பாதி செல்லையன்ரை பேத்தியெட்டைக் குடுத்து பிரட்டல் கறி காச்சுவிச்சுத் திண்டதை உலைமுடியாலை மூட ஏலுமோ கேக்கிறன். உதுகள் எல்லாத்தையும் கொய்யகத்துக்கை மறைச்சு வைச்சுப்போட்டு நயினாத்தி மார் சின்னான் பறைய வீடு தின்னிறான் எண்டு முந்தானையை வரிஞ்சு கட்டுகினம்..."

சின்னப்பிள்ளை ஓடாவிச்சி தொடர்ந்து பேசிக் கொண்டே போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பிள்ளை ஓடாவிச்சிக்கு இப்போது வயது ஐம்பத்தைந்து வரையில் இருக்கும். அவள் மணப் பெண்ணாக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை இடுப்பின் பின்புறமாகப் பொங்கிப் பொருமி நிற்கும் கொய்யகச் சொருகல் அப்படியேதான் இருக்கிறது. கட்டுமஸ்தான உடற்கட்டு, நடு உச்சிக்கு அள்ளிச் சொருகிய கொண்டை, திருகணை முறுக்குக் கடுக்கன்கள்.

இத்தனை வயதாகியும் அவளின் கண்களின் குறுகுறுப்பு, அவசர அவசர ஆனால் ஒய்யாரம் குறையாத நடை, குத்தலும் கிண்டலும் நிறைந்த பேச்சு, ஆகியவை களுக்கு முதுமையே வரவில்லை.

இப்போது அவளுக்கு கணவன் என்ற மூக்கணாங் கயிறோ, பிள்ளை குட்டிகள் என்ற கால்கட்டுக் கைக் கட்டோ எதுவுமே இல்லை.

ஒரு காலத்தில் அவளின் பளுப்புநிற எடுப்பான உடற் கட்டுக்கும், கொய்யக வீச்சுக்கும் பின்னால் ஏங்கித் திரிந்த வர்கள் பலர். ஆனாலும் அவளின் அருட்கடாட்சம் அந்தப் பிரதேசத்தின் ஒன்றிரண்டு ஆமான புள்ளிகளுக்குத்தான் கிடைத்ததுண்டு. அவர்களில் உடையாரும் ஒருவர். ''சின்னப்பிள்ளை என்ற அவளது பெயரைச் சொல்ல விரும்பாமலோ அல்லது வேறெதற்காகவோ ''பம்பிடி சிங்கி'' என்ற செல்லப் பெயரை அவளுக்குச் சூட்டியவர் உடையார்தான்.

மட்டக்களப்பிலிருந்து சின்ன வயதில் புலோலி ராசா குடும்பத்திற்கு வேலைக்காரியாக வந்தவளை புலோலி ராசா வீட்டுக் கட்டிட வேலை செய்து வந்த கதிரவேலு ஓடாவிக்குப் புலோலி இராசா சோற்றுக் கலியாணம் செய்து வைத்து விட்டார். கதிரவேலு ஓடாவியின் பூர்வாங்கம் மட்டக்களப்பாக இருந்ததினால் அவளும் ஓடாவிக் குடும்பத்தினள் என்று திருப்திப்பட்டு கதிரவேலு ஓடாவி அவளைச் சோற்றுக்கலியாணம் செய்து கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பின் வெறும் சின்னப்பிள்ளை என்ற பெயருடன் தற்செயலாகக் கிடைத்த ஓடாவிச்சிப் பட்டமும் சேர்ந்து கொண்டதனால் வழங்கிவந்த சின்னப்பிள்ளை ஓடாவிச்சி என்ற பெயரைத் தொடர்ந்து பம்பிடிசிங்கி என்ற பெயரும் சேர்ந்து வந்து விட்டது ஒரு தனிக்கதை. கதிரவேலு ஓடாவி உடையார் வீட்டு கோப்பிச வேலை செய்து கொண்டிருந்த போது தவறி விழுந்து செத்துப் போனான்.

பின்பு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக சின்னப்பிள்ளை ஓடாவிச்சியாக இருந்த பம்பிடிசிங்கி தனிக்கட்டை. அவளுக்கு அவளே ராசாத்தி! யாருக்கும் அடங்கி நடப்பதில்லை. புறாப்பொறுக்கி ஆலடிக்குத் தெற்கேயுள்ள வயல் பரப்பைத் தொட்டாற்போல் இருந்த குடிசைக்குள் இராக்காலத்தில் மட்டும் அவளைக் காணலாம். மற்றப்படி ஊரெல்லாம் சுற்றி வருவது, ஆங்காங்கே கிடைப்பதைக் கொண்டு வயிற்றை நிரப்புவது.

அவளை ஓடாவிச்சி என்று யாரும் ஒதுக்கி வைப்ப தில்லை. ஓடாவிச் சாதியினரை மிகக் குறைந்தபடிக்கு யாருமே தாழ்த்தி வைப்பதில்லை. அந்தச் சாதிக்கு எந்த உயர்சாதி வீடுகளிலும், எந்தவித விதிவிலக்கும் இருப்ப தில்லை.

''அவளைப் பம்பிடிசிங்கி'' என்று அழைக்கும் உரிமைக்கு தாழ்ந்தசாதி என்பவர்கள் விதிவிலக்கு. அவர்கள் அவளை இன்றுவரை ''ஓடாவிச்சி நாச்சியார்'' என்றுதான் அழைத்து வருகின்றனர்.

இருட்டி விட்டால்தான் அவள் இந்த வீடுகளுக்கு வருவாள். வந்து விட்டாள் என்றால், தானே கொட்டி லுக்குள் புகுந்து அடித்துப் பறித்துத் தின்னத் தொடங்கி விடுவாள். இந்த வீடுகளில் கொதிக்கவைக்கும் கறிகளின் வாசனையை மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து விடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளமீன்கறி, விலாங்குக்கறி, ஆமைக்கறி என்றால் அவளுக்குப் பெரும் பிரியம். அதுவும் செல்வி வீட்டுக் கறிகளைத் தேடி இரண்டு நாட்களுக்கொரு தடவை அவள் வரத் தவறுவதில்லை. சிலவேளை செல்வி வீட்டில் விலாங்குக்கறி கிடைத்துவிட்டாலோ தின்பதோடு மட்டு மல்லாமல் மறுநாட்காலை தின்பதற்கென்றும், நாலைந்து விலாங்கு முறிகளை முற்றத்துச் சண்டிமர இலைகளில் சுற்றி எடுத்தும் செல்வாள்.

ஒரு சட்டிக்குள் சோற்றையும் கறியையும் போட்டு பம்பிடிசிங்கிக்கு முன்னால் வைத்தாள் செல்வி. பேச்சை நிறுத்திக் கொண்டு சட்டிக்குள் சோற்றைப் பிரட்டி எடுத்து, வயிற்றுப்பாட்டு நெய்ப்பிடிப்பான மீன் கண்டங் களை உடைத்துப் பிசைந்து உருட்டித் தின்னத் தொடங்கி விட்டாள் பம்பிடிசிங்கி.

''உப்புப் புளி கணக்காயிருக்கே நாச்சியார்?'' என்ற கேள்வியைச் செல்வி கேட்டாள்.

''எப்பன் உப்புச் சுள்ளிடுகுது செல்வி, பொரிமாக் கொஞ்சம் பத்தாது. நீ பொரிமாக் கனக்கத்தான் பாட் டிருப்பாய். கொழுப்புப் பிடிச்ச விரால் போலை அதுதான் காரத்தை எடுத்துப்போட்டுதுபோலை!'' என்று சொல்லிச் சோற்றுருண்டைகளை உள்ளே தள்ளிக் கொண் டிருந்தாள் அவள்.

''எட பொடி! சின்னான் உன்னைத்தானடா! பறைய வீடு தின்னிறத்திலை ஒண்டுமில்லை மோனை. அதை எப்பன் கண்டு காணாமல் செய்யாமை இப்பிடி வெட்ட வெளிச்சமாச் செய்தா நயினார்மார் விடுவினமேயெடா? நானுந்தான் உங்கடை வீடுவழிய திண்டு வாறன். நெடுகத் தின்னிறனே? எப்பெண்டாலும் விலாங்கு விரால்போலை சோட்டைப் பண்டம் காச்சிற அண்டைக்குத்தானை யெடா திண்டுவாறன்! இத்தயவரையிலை என்னை ஒரு நயினாரோ நயினாத்தியோ விரல் நீட்டிக் கேக்கேல்லை! நீ செய்த வேலையாலை செல்விக்கெல்லையடா வில்லங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கிடக்கு! செல்லி உன்னை அணைச்சுப் பிடிச்சா செல்லிக்கு நல்ல தண்ணி வாக்கிறேல்லை எண்டெல்லை யடா மோனை விதானை பெண்டில் சொல்லுறா. அதோடைவிடுவா எண்டே நினைச்சுப் போட்டாய்? வேறை நயினார் மாற்றை கிணறுகளிலையும் தண்ணி குடுக்க விடாமலெல்லே செய்து போடுவாளவை! ஏதோ யோசிச்சுச் செய்யடா பொடி! செல்லி பாவி குமர் பெட்டையையும் வைச்சிருக்கிறாள்! அவளின்ரை தண்ணி யிலை மண்ணைப் போட்டிடாதை கண்டியோ! எடி செல்லி தலைமீன் திண்டிட்டியளையெடி?''

பம்பிடிசிங்கி தலைமீன் கேள்வியுடன் பேச்சை நிறுத்திக் கொண்டபோது ''தலைமீனைப் பொடியனுக்குப் பொட்டுடை போட்டிட்டாள் நாச்சியார்!'' என்று செல்லி பதில் சொன்னாள்.

சின்னான் தலையைத் தாழ்த்திக் கொண்டே உண வருந்தினான்.

சின்னி அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

## 14

விதானையாரின் தோட்டக்கிணறு, திடலிலிருந்து சுமார் ஒரு மைல் வரை இருக்கும். இந்த ஒருமைல் தூரத் தைத் தாண்டிப் போவதென்றால் லேசுப்பட்ட பிரயாண மல்ல. வயல் வரம்புகளில் குறுக்கும் மறுக்கமாக நடந்து, கொத்துக் கட்டிகளைத் தாண்டி, பிரமிக்கொடி படர்ந்த சமதரைகளுக்கும் அப்பாற் சென்று வடலிக் கூடலொன் றைக் கடந்தால் விதானையாரின் கிணற்றடி வந்துவிடும். வழமையாகத் திடலிலுள்ள பெண்கள் ஒன்றுகூடிக் குடங் களைத் தூக்கிக் கொண்டு கிணற்றை நோக்கிப் புறப்படு வதற்கு ஏறக்குறைய நேரம் பத்துக்கும் மேலாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேளை தான் கிணற்றடியில் இவர்களுக்குத் தண்ணீர் வார்க்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்வதற்கு கோவியச் செல்லப்பனை சரியாக அனுப்பி வைப்பார்கள். திடலுப் பெண்டுகள் கிணற்றடியைப் போய்ச் சேரவும் கோவியச் செல்லப்பன் துலாக்கயிறு தொடவும் தண்ணீர் வார்ப்பு என்னும் அந்த புண்ணிய கைங்கரியம் தொடங்கி விடும். இன்று திடலுப் பெண்டுகள் வந்து சேரும் அதே நேரம் விதானையாரின் தங்கச்சியும் கிணற்றடியில் நின்றாள்.

''எடி நளத்தியள் எங்கையடி அவள் செல்வி'' என்று அம்மாள் எல்லோரையும் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''செல்வி அக்காளுக்கு தொடக்குடாதாக்கும் அதுதான் மோளை அனுப்பியிருக்கிறாவாக்கும்'' என்று வந்தவளில் ஒருத்தி கூனிக் குறுகியபடியே சொன்னாள்.

''என்னடி அவளுக்கு தொடக்கூடாதாமோ? வேசை யாருக்கு கண்ட இளந்தாரிப் புரியமாரைப் புடிச்சு துடக்கு நிண்டு போயிருக்கு எண்டெல்லோடி நான் நெனச்சன்'' இப்படி அம்மாள் கூறியதும் எல்லோரும் அப்படியே ஏங்கிப்போய் நின்றனர். சற்று வேளையாயிற்று. ''எட செல்லப்பன் இதிலை ஆரடா செல்வியின்ரை மோள்? இவளோடா? இந்தக் குறுக்குக்கட்டு கொய்யகக்காரி யோடி? இவள் வீட்டில இருந்தா சின்னான் அங்கை போகாமல் என்னடி செய்வான். எடே செல்லப்பன் இவளின்ரை குடத்தை விட்டிட்டு மற்றவளவையின்ரை குடத்துக்குள்ள வாரடா'' என்று உரக்கக் கட்டளையிட்டாள். சின்னி அசையாது நின்றாள். அவள் கண்கள் நெருப்பாய் எரிந்தன. உடம்பு படபடவென்று துடித்தது ''தண்ணி தராட்டி விர்றதுக்கு ஆத்தையையும் என்னையும் பற்றி ஏன் வீண்கதையளை'' என்று அவள் படக்கெனக் கூறினாள். இதனால் வரும் விளைவுகள் எதையும் அவள் எதிர்பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடி சொன்னாய் வேசை நளத்தி'' என்று கத்திக் கொண்டே சின்னிமேல் அம்மாள் பாய்ந்தாள்.

அம்மாளின் கைப்பிடிக்குள் சின்னியின் அள்ளு கொண்டை வசமாகச் சிக்கிக்கொண்டது. கொண்டையைப் பிடித்து இழுத்து தன் பலத்தையெல்லாம் வரவழைத்து அம்மாள் சின்னியை மூன்று முறை சுற்றினாள். ''டே செல்லப்பன், கத்தியையெடடா... வெட்டடா இவளின்ரை பம்பையை'' என்று கத்தியதுதான் தாமதம் துலாக்கொடியைப் பிடித்திருந்த கையை விட்டுவிட்டு பக்கத்தே இருந்த கத்தியை எடுத்து தயங்கித் தயங்கி சின்னியின் பக்கம் வந்து, சின்னியின் மயிரை அம்மாளின் பிடியோடு கொய்து விட்டான் செல்லப்பன்.

சொற்ப வேளைக்குள் இது நடந்து விட்டது. சின்னி கதறிக்கொண்டே நின்றாள். அவள் மேல்க் குறுக்குக்கட்டு குலைந்து கலைந்து மேலுடம்பு நிர்வாணயாக நின்றது. சுற்றி நின்ற பெண்களுக்கெல்லாம் அவளுக்குப் பக்கமாகப் போகும் துணிச்சல் கூட வரவில்லை.

குறுக்குக்கட்டுச் சேலையை மறுபடியும் அள்ளி எடுத்துச் சொருகிக்கொண்டு சின்னி திடலின் திசையை நோக்கி ஓடினாள்.

இயந்திரப் பாவைகளைப் போல, கூட நின்ற பெண்களெல்லாம் வெற்றுக் குடங்களையும் தூக்கிக்கொண்டு சின்னிக்குப் பின்னால் மௌனமாக நடந்து சென்றனர் மிகவிரைவாகவே அவர்கள் எல்லோரும் செல்லியின் குடிசைக்கு வந்துவிட்டனர். சின்னி செல்லியின் மடிக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறிக்கொண்டிருந்தாள். செல்லிக்கு அவளை ஆசுவாசப்படுத்த முடியவில்லை. பற்களை நறநறவெனக் கடித்துக்கொண்டு விதானையாரின் கிணற்றடிப்பக்கம் பார்வையைப் புதையவைத்து மனதுக்குள் ஏதேதோ கதறிக்கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடலில் பெண்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும் செல்லியையோ சின்னியையோ நடந்தவைக்கான காரணங்களைக் கேட்க அவர்களுக்குத் துணிவு வரவில்லை.

வெயில் ஏறிக்கொண்டே வந்தது. காற்றோட்டம் இல்லாத அந்தச் சூழ்நிலையில் அந்த வெயில் எல்லோரையும் வெதுப்பி வேகவைத்தது. செல்லியையும் சின்னியையும் சுற்றிக்கொண்டே காவிவந்த குடங்களை ஆங்காங்கே வைத்துவிட்டு எல்லோரும் மண்ணில் உட்கார்ந்து கொண்டனர். நீண்ட நேரம் கழிந்தது.

சின்னியின் அழுகை ஓய்ந்து வந்தது. அந்த இடைவேளைக்குள் கிழம் கட்டை, குஞ்சு குழந்தை எல்லோருமே அங்கு கூடிவிட்டார்கள்.

''என்னடி பொட்டை செல்லி, ஏனடி விதானையாரின் கமக்காறிச்சி இவள் பொடிச்சியின் குடும்பியை வெட்டினவள். எங்களுக்கொண்டும் விளங்கேல்லை. சொல்லு மோனை!'' என்று வயதான கிழவன் பேச்சைத் தொடங்கினான்.

''சொடுகண்ணன்ரை மோன் சின்னான் ஆசுபத்திரிக்கு வேலைக்கெல்லே போட்டான். அவன் அங்கை பறைய வீட்டிலை திண்டிட்டானாம். அவன் பொடியன் ராத்திரி இங்க வந்து திண்டிட்டுப் போனவன். அதுதான் பறைய வீட்டில திண்டவனை அணைச்சுப்போட்டனெண்டு உதைச் செய்தவ'' இப்படிச் செல்லி நிதானமாகவே பதில் சொன்னாள்.

பகல்வேளை கழிந்துகொண்டிருந்தது. செல்லி வீட்டு முற்றத்தை விட்டு யாருமே போகவில்லை. ஒரு கிழவி எதையோ நினைத்துக் கொண்டு செல்லியின் குடிசைக்குள் சென்று அண்டாப் பானையை எடுத்து வந்து மூன்று கற்களை வைத்து முற்றத்தில் உலையேற்றினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலைப்பானை எரிந்து கொண்டிருந்தது. தனது வீட்டுப் பக்கம் சென்ற அந்தக் கிழவி சற்று வேளைக்குப் பின் எட்டுப் பத்துப் பனங்கட்டிக் குட்டான்களுடன் கையில் ஒரு தேயிலைப் பக்கற்றுடனும் வந்து சேர்ந்தாள். அப்போதுதான் ஈயக்கடதாசியால் உறைபோடப் பட்டிருந்த அந்தத் தேயிலை யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்திருந்தது. கோராத் தேயிலை என்றால் பிரசித்தமான ஒன்று. கடந்த வாரம் பட்டணத்திற்குப் போயிருந்த அவள் பேரன் அதை வாங்கி வந்திருந்தான்.

முதல் நாள் இருப்பு வைத்திருந்த நல்ல தண்ணீர் தேநீர் உலைக்குப் போதாமல் இருக்கவே இன்னொருத்தி தன் வீட்டுக்குச் சென்று ஒரு முட்டி தண்ணீரை எடுத்து வந்தாள். தேநீர் உலை கொதித்து இறக்கப்பட்டு பனங்கட்டி எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு, எல்லோரும் தேநீர் அருந்தியாகி விட்டது.

சின்னி தேநீர் குடிக்க மறுத்தாள்.

''இனி உயிரோடை இருக்கிறதை விடச் செத்தாலென்ன'' என்று அவள் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாள். முடிவில் எல்லோரும் அவளை வற்புறுத்தித் தேநீர் அருந்த வைத்து விட்டனர்.

மாலை வந்துகொண்டிருந்தது. பரியாரி சரவணை வந்து சேர்ந்தான். 'சரவணை அத்தான்' என்று அடக்கமாகக் குரல் வைத்துக் கொண்டே செல்லி அவனை வரவேற்றாள். எல்லோரும் தங்கள் மனச்சுமைகளை சரவணைமேல் சுமத்தும் பாவனையில் எதை எதையோ வெல்லாமோ சரவணையனுக்குச் சொல்லத் தொடங்கினர்.

ஏதாவது மனதுக்கு வில்லங்கங்கள் வந்து சேர்ந்து விட்டால் தன் நெற்றியின் பிறைவெட்டைத் தடவி விட்டு அடிக்கடி குடுமியை அவிழ்த்து முடிவது பரியாரியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். இன்று பரியாரி அதையே செய்து கொண்டிருந்தான்.

"இண்டைக்கு ஒரு வீட்டிலையும் உலை மூட்டேல்ல தம்பி; தண்ணிக்கு இனி என்ன செய்வம்; இந்தப் பொடிச்சியின் குடிம்பியை வெட்டினவளிட்டைப் போய்த் தண்ணிப் பிச்சை கேட்கலாமே சொல்லுபாப்பம்! அல்லது மூத்தாம்பிக் கமக்காரரிடம் போய்க் கேட்கலாமே சொல்லு பாப்பம்!" இப்படி ஒரு கிழவன் பரியாரியைக் கேட்டான். சரவணையன் பதில் பேசவில்லை. அவன் அடிக்கடி குடுமியை அவிழ்த்து முடிந்து கொண்டே இருந்தான்.

அந்தத் திடலில் உள்ள அத்தனை சீவன்களுக்கும் அன்று சமையல் செய்யத் தண்ணீர் இல்லை. முட்டிகளிலும் சட்டிகளிலும் மிச்சம் மீதியாக இருந்த தண்ணீரை வைத்துக் கொண்டு இராப்பொழுதைக் கழித்து விட்டனர்.

செல்லி வீட்டில் அடுப்புப் புகையவில்லை. அங்கு அடுப்பைப் புகைய யாரும் விடவும் இல்லை. அந்த இரண்டு பெண் ஜீவன்களுக்கும் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டே மற்றவர்கள் உணவளித்தனர். உணவுப் பாட்டை முடித்துக் கொண்டு பாயில் புரண்ட இருவருக்கும் கண்களை மூட முடியவில்லை. எதுவும் வாய் திறந்து பேசவும் முடியவில்லை. செல்லியின் பெருமூச்சுக்கள் மட்டும் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தன. தெற்கே உப்புத் தரவையில் கொக்குகள் புள்ளுகள் ஆகிய வகைகளின் ஓசைகள் மட்டும் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்டுக் கொண்டு இருந்தன.

வெளியே, யாரோ முற்றமருகில் வந்த அரவம் கேட்டது.

"ஆரது" என்று கேட்டுக்கொண்டே செல்லி எழுந்து திரிவிளக்கை ஏற்றினாள். "அது நான்" என்ற ஓசை மட்டும் பதிலுக்கு எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சின்னானின் குரல். அந்தக் குரல் கேட்டதும் சின்னி எழுந்து உட்கார்ந்து கொண்டே விம்மியழத் தொடங்கினாள். அவளின் மொட்டந்தலையைப் பார்த்துக் கொண்டே சின்னான் விம்மினான்.

செல்லி, ''ஏன் தம்பி நேரங்கெட்ட நேரத்திலை வந்தனி'' என்று மெதுவாகக் கேட்டாள். அப்போதுதான் சின்னானுக்கு பக்கமாக நின்ற மறு உருவத்தை அவள் கண்டாள்.

அந்த உருவம் வேறு யாருமல்ல அது மாதன். ''இஞ்சார் உள்ளுக்கு வாரும் மோனை'' என்று அவர்கள் இருவரையும் வரவேற்றாள். மாதன் முதலில் உள்ளே வந்தான். அவனைத் தொடர்ந்து சின்னான் வந்தான். இருவரும் உட்கார்ந்து கொண்டனர்.

சின்னியின் சிணுங்கல் ஓசை மெதுமெதுவாய் ஓய்ந்தது. திரிவிளக்குச் சுடர்விட்டு எரிந்தது. தட்டியோரம் இருந்த எண்ணெயை எடுத்து செல்லி விளக்குக்குள் விட்டாள்.

''என்னக்கை சமச்சனீங்கள், தீன் திண்டிட்டீங்களே'' என்று கேட்டுக்கொண்டே மாதன் கையிலிருந்த கடதாசிப் பொட்டலமொன்றைத் திறந்தான். அதற்குள் நாலைந்து வடை வாய்ப்பன்களும் வாழைப்பழங்களும் இருந்தன.

''பொழுது படேக்கை ஆசுப்பத்திரிக்கு வந்த ஓடாவிச் சுப்பர் சொல்லக்கேட்டு அறிஞ்சனாங்கள். பதைபதைச்சு ஓடியாறம். அந்த இரணிச்சி உப்பிடிச் செய்வாளெண்டு நாங்கள் கொஞ்சமெண்டாலும் நினைக்கேல்லை'' என்று ஒரு பெருமூச்சுடன் மாதன் பேச்சை நிறுத்திக்கொண்டான். சின்னான் எதுவும் பேசாமலே இருந்தான். சின்னி, தொங்கல் சீலையால் உடம்பை மறைத்துக் கொண்டு தட்டிப் பக்கத்துக் கப்போடு சாய்ந்து கொண்டாள்.

இதற்குமேல் பேச்சை தொடர்ந்து நீட்டுவது எப்படியென்று எவருக்கும் புரியாததாய் இருந்திருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று வேளைக்குப்பின் சின்னான் எழுந்திருந்தான். 'நாங்கள் ஒருக்கா சரவணை அப்பாட்டப் போட்டு வர்றம்!' என்று கூறிக்கொண்டே சின்னான் வெளியேவர மாதன் அவனுக்குப் பின்னால் வந்தான். சரவணைப் பரியாரியாரின் வீடு அதிக தூரத்தில் இல்லை. காளி கோவில் சிறிய கொட்டிலுக்கு முன்னால், மரக்கட்டையில் குத்தி வைக்கப்பட்டிருந்த சூலத்திற்குச் சமீபமாக வைக்கப்பட்டிருந்த சாம்பிராணி புகைந்து கொண் டிருந்தது.

சற்று வேளை அவ்வாறு நின்றுவிட்டு ''பரியாரி யப்பா, பரியாரியப்பா'' என்று சின்னான் குரல் வைத் தான். கைவிளக்கை உயர்த்திப் பிடித்துக் கொண்டே கொட்டிலுக்குள் இருந்து சரவணைப் பரியாரியார் வெளியே வந்தார். ''ஆரது சின்னான்ரை குரல்போல கிடக்கு. ஆரடாமோனை மற்றது'' என்று அவர் கேட் டார். இதற்குப் பதில் வருவதற்கிடையில் மாதனை இனம் கண்டு கொண்ட பரியாரியார் ''எட மாதனே வாருங்கோ, வாருங்கோ, வாருங்கோ உள்ளுக்கை'' என்று கூறிக்கொண்டே கொட்டிலுக்குள் சென்றார்.

மாதனைச் சின்ன வயதில் இருந்தே பரியாரியாருக்கு நன்கு தெரியம். மந்திகை வைத்திய விடுதி கட்டப்படுவ தற்கு முன்னதாக அது சின்னஞ்சிறிய ஓலை வீடாக இருந்த போது மாதன் தன் பெற்றாரோடு அங்கே தான் இருந் திருக்கிறான். மாதன் கண்ணுக்குப் பொடியனாக இருந்த மையால், போய் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாதனிடம் இரண்டு வார்த்தையாயினும் பேசப் பரியாரி யார் தவறுவதில்லை மாதன் மாதிபைக் கட்டிக்கொண்டு அங்கு தனிக்குடித்தனம் செய்யும் இந்த நாள்வரை வழமை அப்படித்தான். மாதனுடைய பேச்சு, மாதனின் விநய மான போக்கு, மாதனின் உடை நடை பாவனை இவை யெல்லாவற்றிலும் மேலாக அவனுடைய எழும்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமும் கூர்மையான பார்வையும் பரியாரி சரவணையை சுருட்டி மடக்கும் ஆயுதங்களாக இருந்தன.

பரியாரியார் உள்ளே சென்றதும் மாதனும் சின்னானும் உள்ளே வந்து அவருக்குச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்து கொண்டனர். "என்ன பொடியள் பேசிறியள் இல்லை. மாதன் பெடியன்ரை வீட்டில சின்னான் திண்டது வெள்ளாடிச்சிக்குப் பிடிக்கேல்லை. சின்னான் பெடியன் செல்லிப் பெட்டை வீட்டிலை திண்டது அதை விடப் பிடிக்கேல்லை, அதான் அவள் நாச்சியார் அவள் குமர்ப்பெட்டையின்ரை குடும்பியை வெட்டிப்போட்டாள். வெட்டின குடும்பி எக்கணம் முளைக்காமலேவிடப் போகுது. திடலுக்கை இருக்கிறவைக்குத் தண்ணி இல்லாமல் போச்சு; அதுதான் இப்ப வில்லங்கம். நானும் தலையைப் போட்டு உடைச்சுப் போட்டு யோசிக்கிறன். ஆனால் என்ன செய்யிறதெண்டு ஒன்றும் விளங்கேல்லை" என்று சரவணையர் அலுத்துக் கொண்டார்.

"ஏன் பரியாரியார் மூத்தாம்பி வீட்டுக் கிணத்தில இவையள் போய்த் தண்ணியள்ளினா என்ன வரும்? வாறது வரட்டும் ஒருக்கா அள்ளிப்பாத்தா என்ன" என்று மாதன் திடீரெனக் கேட்டான். பரியாரி பேசவில்லை சின்னானும் பேசவில்லை.

"ஒரு அஞ்சாறு நாளைக்கு இரவில போய்த் தண்ணியள்ளுவம். மூத்ததம்பி என்ன காவலே வைச்சிருக்கப் போறான். பிறகு நிலைமையைப் பாத்துச் செய்வம்" என்று ஒரு வழி முறையையும் மாதன் சொன்னான், இந்த வழிமுறை பரியாரிக்கும் சரியாகப் பட்டிருக்க வேண்டும். "இருட்டுக்கை பெண்டுகள் கிழம்கட்டைகள் பொடியள் என்னண்டு போறதெண்டுதான் யோசிக்கிறன். அஞ்சாறு வயல்பாத்தியெல்ல மோனை கடக்க வேணும்."

"நீங்களொண்டுக்கும் யோசியாதேங்கோ நாங்கள் ரெண்டுபேர் இருக்கிறம். திடலுக்கை இருக்கிற பொடியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் நாலைஞ்சு பேரைச் சேத்தமெண்டால் நிலவு காலிக்கிறதுக்கிடையில தண்ணி அள்ளிச் சேத்துப் போடுவம். பலபலவெண்டு விடியிறதுக் கிடையில நாங்களும் ஆசுப்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்திடுவம். நாலைஞ்சு நாளைக்கு நாங்கள் அங்கை இருந்து வாறம்!'' என்று மாதன் கூறவே அதற்கு மேல் பேச்சு நீளவில்லை, அவர்கள் இருவருடனும் கூடிக்கொண்டு பரியாரி சரவணை வெளியே போனார். இரவு நீண்ட நேரம் வரை திடலின் குடிசைகளுக்குள் சிறுசிறு அளவு ஆரவாரங்கள்தான் கேட்டன. அவை நிச்சயமாகத் திடலுக்கு அப்பால் கேட்டிருக்க முடியாது.

# 15

மூத்ததம்பி நயினார், குடும்பத்தோடு வீட்டில் இல்லை.

சின்னானின் அக்காள்காரி பிள்ளை வயிற்றோடு செத்துப்போன இந்த இடைக்காலத்தில்—அவள் சுமை யோடு புதைக்கப்பட்ட மறு நாளிலேயே அவருக்குப் பிடித்த நோய் இன்னும் குணமாகவில்லை.

முதலில் வெறும் நெஞ்சிடியாகவும், அத்தோடு சேர்ந்த காய்ச்சலாகவும் தோன்றிய அந்த நோய் மெது மெதுவாக அதிகரித்து அதிகரித்து, கபால இடியாகி, செமியாக் குண மாகி இப்போது வயிற்று ஊதல் வரை வந்து நிற்கிறது. அன்னப்பிள்ளை நாச்சியார் இப்படிக் கணவனுக்கு ஆகும் என்று எதிர்பார்க்கவில்லை. முதலில் வாய்வுச் சேட்டை என்று எண்ணினாள். பின்பு கபால இடி என்றும், வெறும் காய்ச்சல் என்றும் கருதினாள். அதனால் கை மருந்துக ளோடு சமாளித்து விடலாம் என்று முடிவாகி இருந்தாள், ஆனால் அது தீர்ந்தபாடில்லை. சாண்டா சந்தைச் சிற்றம்பலம் பரியாரிதான் அவர்களின் குடும்ப வைத்தியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நயினாரின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "நாலு நாளை மருந்தோடை பறத்திப் போடிறன்" என்று எடுப்பாகக் கூறியும் ஒன்றும் நடக்கவில்லை. பின்பு நயினார் சற்று வெளிறி வந்தார்.

"உப்பிடி வெளிறல் வருத்தத்துக்கு அல்வாய் பள் ஆறுமுகம் பரியாரிதான் கெட்டிக்காறன்" என்று பலர் சொன்னதற்கிணங்க ஆறுமுகம் பரியாரியை வீட்டுக்கு அழைப்பித்து அவனைத் திருகுவலைப் பிடியில் இருத்து வித்து நயினாரின் கையை மெல்லிய துணியால் மூடி நாடி பார்ப்பித்தனர். ஆறுமுகம் பரியாரி, "சாராயக் குடியினாலை ஈரல் கொஞ்சம் பழுதாப் போச்சு. பையப் பையத்தான் சரிவரும். ரெண்டு மண்டலம் மருந்தெண்டாலும் தின்டாத்தான் ஈரல் சரிவரும்" என்று மருந்து கொடுத்துச் சென்றான். அவன் சொன்ன இரண்டு மண்டலம் என்ற கணக்கில் ஒரு மண்டலமாகிய நாற்பது நாட்கள் போய் விட்டன. நோயில் குணம் எதுவும் தெரியவில்லை.

"அளவெட்டியில் செவிட்டுப் பரியாரியார் உதுகளுக்கு வலு விண்ணனாம்" என்ற கதை அடிபட்டது. அன்னப்பிள்ளை நாச்சியார் ஆறுமுகத்தானை விட்டு விட்டு அளவெட்டியானிடம் கொண்டு சென்றாள்.

செவிட்டுப் பரியாரியார் வைத்தியம் மட்டுமல்ல மாந்திரீகத்திலும் வல்லவர். இரண்டு விதங்களிலும் அவர் தனது வீட்டோடேயே ஒருமாத காலம்வரை தங்க வைத்து வைத்தியம் செய்தார். எதுவும் சரிப்பட்டு வரவில்லை.

யாழ்ப்பாணம் பறங்கித்தெருக் கந்தன் பரியாரியைப் பற்றிய புகழ் அப்போதுதான் ஊரில் பரவி வந்தது. "கந்தன் நளவன் எண்டாலும் வலு கெட்டிக்காறனாம் பிள்ளை" என்று அன்னப்பிள்ளை நாச்சியாரின் காதில் சொந்தக்காரர் ஒருவர் கூறவே அன்னப்பிள்ளை நாச்சியார் கந்தனிடம் பயணம் வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அவர்கள் வந்தபோது கந்தன் வீட்டில் நிறையச் சனம். எந்தப் பெரிய மனிதராக இருந்தாலும் கந்தன் ஒழுங்கு முறைப்படிதான் எல்லோரையும் கவனிப்பான் ஒரு நோயாளியைப் பார்த்துப்பேசி, மருந்து கொடுத்து, பத்திய வகைகளை அவர்களுக்குப் படித்துச் சொல்லி அனுப்ப ஒருமணி நேரத்துக்குமேல் ஆகிவிடும். அதிகாலையோடு அம்மாளின் வண்டி அங்கே போய்விட்டாலும், அவர்களின் முறை வர நடுப்பகலுக்கு மேல் ஆகிவிட்டது,

நயினாரைக் கந்தன் பார்க்கத் தொடங்கிய போது, அம்மாள் கணவனின் கையைப் போர்த்தி விடுவதற்காக வைத்திருந்த மெல்லிய துணித் துண்டினை எடுத்தாள்.

''அது வேண்டாம்பிள்ளை நான் சாதி பார்க்கிறயில்லை'' என்று கந்தன் குத்தலாகக் கூறித் தனது குடுமியை ஒரு தடவை தட்டி முடிந்து துணி ஒன்றினால் கையைத் துடைத்து விட்டு நயினாருக்கு நாடி பார்க்கத் தொடங்கி, விரைவாகவே முடித்துக்கொண்டு சில மருந்துகளைக் கொடுத்து அனுமானங்களையும் சொல்லி, ''இந்த மருந்தைக் கொண்டு போய் பத்து நாளைக்குக் குடுத்துப் பாருங்கோ ஏதெண்டாலும் சுகந்தெரிஞ்சா வாருங்கோ'' என்று கூறி வழி அனுப்பி வைத்தான்.

கந்தன் வைத்த பத்து நாள் கெடுவும் முடிந்தது ஒரு மாற்றமும் நடக்கவில்லை.

''மானிப்பாய் ஆசுபத்திரியிலை ஜாக்கோ எண்ட கெட்டிக்கார டாக்குத்தர் ஒருத்தர் இந்தியாவிலை இருந்து வந்திருக்கிறராம் காட்டிப் பாப்பம்'' என்று பலர் ஆலோசனை சொல்லினர். அதன்படி நயினார் மானிப்பாய் ஆசுப்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார். விடுதியில் இருக்க வைத்து ஜாக்கோ டாக்குத்தரும் இருபது நாட்களுக்கு மேல் பார்த்துவிட்டார். முதல் முதலில் அங்குதான் ஊசியால் குத்தப்படும் வைத்திய முறையைக் கண்ட அம்மாளுக்கு ''இதுக்கு மாறாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற எதுக்கு மாறும்?'' என்ற கேள்வி எழுந்து தெம்பை ஊட்டியது. இருந்தாலும்......

ஒருநாள் இரவு நயினார் வாய் பிதற்றும் ஓசை கேட்டு அம்மாள் விழித்துவிட்டாள்.

''எடி......... எடி சொடுகன்ரை பெட்டை......

''எடி சொடுகன்ரை மோள், எடி என்னைக் கூப்பிட்டிடாதையெடி...... சுமை இறக்கிறக்துக்கு என்னைக் கூப்பிட்டிடாதையெடி, எடி...... எடி உன்னைக் குப்பிட்டன்...... நான் மாட்டனெடி, என்னைக் கூப்பிட்டிடாதையெடி......ஐயோ, நான் மாட்டனெடி...என்னைக் கூப்பிடாதையெடி... எடி சொடுகன்ரை பெட்டை...''

அம்மாள் திடுக்குற்றுப் போய் விட்டாள். நயினார் பிதற்றியதன் உள் அர்த்தம் முதலில் அவளுக்கு முற்று முழுதாகப் புரியவில்லை.

இதற்குப் பின் நயினார் அயர்ந்து விட்டார்.

அம்மாளுக்குத் தூக்கம் வரவில்லை.

பழைய நினைவுகள் அவள் நினைவுக்குள் அழித்துச் சுழித்து வந்தன.

அதிகாலையோடு எழுந்து வெளிக்குப் போய் வந்து தோட்டக் கிணற்றில் சொடுகனின் மகளுக்கு தண்ணீர் வார்த்து விட்டது......

சொடுகனை வற்புறுத்தித் தாரமிழந்த கறுத்தானுக்கு அந்த சின்னக் குமரியைக் கட்டிவைத்தது......

அவளையும் கறுத்தானையும் வடலிக் காணிக்குள் குடியிருத்தியது......

பின்தோட்டக் குடிலுக்குள் வைத்துக் கறுத்தானை வெறியாக்கி வளர்த்திவிட்டு வெளியே போய் வருவது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாவம் அவள் சின்னப்பெட்டை அவளுக்கு ஆசை கீசை இருக்காதை உன்ரை கையாலையே அவளுக்கு இது களைக் குடப்பா'' என்று கூறி இரண்டு தீபாவளிக்கு உடு புடவை கொடுக்க வைத்தது.........

கறுத்தான் வாய் திறந்து எதையாவது கேட்டுவிட்ட போதெல்லாம் எதுவித மறுப்புமின்றிக் கொடுத்து வந்தது...

சொடுகன் மகள் பிள்ளை வயிற்றோடு செத்துவிட்ட போது ஊரில் உள்ள வழக்கத்தை மீறி அவளின் சுமையை இறக்குவதற்குப் படாத பாடு பட்டது......

அவள் சுமையோடு போய்ச் சேர்ந்த மறுநாளைக்கு மறுநாளே வருத்தம் தொடங்கியது......

அன்னப்பிள்ளை நாச்சியார் மனதில் சுழன்றுவந்த இந்த நினைவுகளையெல்லாம் முறைப்படி நிரைப்படுத்திப் பார்த்தபோது......

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

''சொடுகி மகள் சுமை இறக்கக் கணவனை அழைக்கிறாள்'' என்ற முடிவு அவள் நெஞ்சில் நிலைத்தது.

கணவனின் மரண வீட்டு ஓலங்கள் அவள் காதுகளுக்குள் இரைந்து, அவர் பாடையில் தூக்கப்பட்டுக் கட்டையில் கிடக்கும் காட்சி கண்களுக்கும் தெரிந்தன.

அவளின் விம்மல் ஓசை வெளியே வந்தது; அவளுக்கு உதவியாகப் படுத்திருந்த செல்லாச்சிச் குஞ்சி காதுவரை கேட்டது.

செல்லாச்சி மாமி திடுக்குற்று எழுந்தாள். மருமகளுக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடந்திருக்க வேண்டும் என்பதுதான் அவளின் பயம் எல்லாம்.

''என்னெடி பிள்ளை?'' என்று அங்கலாய்த்துக் கொண்டே எழுந்து மருமகளைப் பார்த்தாள், மருமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக மூச்சுவிட்டுக்கொண்டிருந்தது அலடின் லாம்பு வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. "எடி பிள்ளை என்னடி அது?" என்று அவள் அன்னப்பிள்ளை நாச்சியாரைச் சற்று அதட்டிக் கேட்டாள்.

அன்னப்பிள்ளை நாச்சியார் விம்மிக்கொண்டு, முகத்தை முழங்காலுக்குள் புதைய வைத்துக் கொண்டாள்.

செல்லாச்சிக் குஞ்சி அவளைத் தொட்டுத் தடவித் தேற்றினாள்.

"எடி ஏன்ரி அழறாய்? பொடியனுக்கு ஒண்டுஞ் செய்யாதெடி, டாக்குத்தர் ஊசி மருந்தாலை மாத்திப்போடு வாரெடி!" என்று இதமாகக் கூறினாள்.

"குஞ்சி, டாக்குத்தர் மாத்தமாட்டாரெணை, உது அவராலை ஏலாதெணை......" என்றாள் அவள்.

"எடி விசரி ஏனெடி அப்பிடிச் சொல்லுறாய்?" என்றாள் குஞ்சி.

"எணை, அவள் சொடுகன்ரை மோள் அந்தாளை சுமை இறக்கக் கூப்பிடுறாளெணை, அவள் விடாளெணை..."

அன்னப்பிள்ளை நாச்சியார் இதைக்கூறி முடித்த போது செல்லாச்சிக்குஞ்சி திடுக்குற்றுப்போய்விட்டாள். "என்னடி நாசமறுந்த கதை?" என்று அவள் அங்கலாய்த்தாள்.

இதற்குப்பின் விடியும் வரை அன்னப்பிள்ளை நாச்சியாரும் செல்லாச்சிக் குஞ்சியும் குசுகுசென்று எதை எதையோ பேசிக்கொண்டிருந்தனர்.

ஆசுபத்திரி வளவில் உள்ள யேசு கோவிலில் மணி அடித்தது. தொடர்ந்தாற்போல மருதடிப் பிள்ளையார் கோவில் மணியும் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையோடு நோயாளிகளைப் பார்க்க வரும் டாக்டர், நேஸ் பெண்கள் சகிதம் வந்தார்.

"ஐயா இண்டைக்கு எங்களை துண்டை வெட்டிக் கணக்கைச் சொல்லுங்கோ நாங்கள் கொண்டு போகப் போறம்" என்றாள் செல்லாச்சிக் குஞ்சி.

"ஏனெணை" என்று கேட்டார் டாக்டர்.

"உது வேறை வருத்தம் ஐயா, நாங்கள் மாந்திரிய காறனெட்டைக் காட்டப்போறம்." இதற்குமேல் டாக்டர் எதுவும் பேசவில்லை.

சற்று வேளைக்குப்பின், சாமான்கள் வாங்கிட ஒத்தைக்கண் நல்லதம்பியன் கடைக்குப் போவதாகச் சொலலிவிட்டுப் போய் செல்லாச்சிக் குஞ்சி, சற்று முக மலர்ச்சியோடு திரும்பி வந்தாள்.

"எடி பிள்ளை, உதிலை பக்கத்திலை நவாலியிக்கை துரும்பச் சின்னப்பிள்ளையன் எண்ட மாந்திரியப் பரியாரி இருக்கிறானாம். உப்பிடிச் சுமையோடை போனவை யின்ரை புரியன்மாரைச் சுகப்படுத்தியிருக்கிறானாம் எண்டு கடைக்காறன் சொன்னவன். தான் கூட்டிக் கொண்டு வாறன் எண்டும் சொன்னவன்" என்று வாய் நிறையக் கூறினாள்.

இதற்குப்பின் எலும்பும் வயிறும், பல்லுமாக இருந்த மூத்ததம்பி நயினார் கடைக்கார நல்லதம்பி பிடித்து வந்த குதிரை வண்டியில் ஏற்றப்பட்டார்.

வண்டி கிரவல் றோட்டுக்களால் வளைந்து வளைந்து மாந்திரியகாறத் துரும்பச் சின்னப்பிள்ளையனின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சின்னப்பிள்ளையனின் குடிசை பல குச்சொழுங்கை முடுக்குகளுக்கப்பால் ஒரு கொய்யாக்காட்டுக்குள் இருந்தது.

இவர்கள் அங்கு சென்றபோது சின்னப்பிள்ளையன் வீட்டில் இல்லை. அவனின் தாயார் சின்னம்மாக் கிழவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இருந்தாள். அத்துடன் நிறைந்த திருநீற்றுப் பூச்சுக் களுடன் அரைவயதைத் தாண்டிய ஒருவனும் இருந்தான். இந்தத் திருநீற்றுப் பூச்சுக்காரனைப் பார்த்தபோது மூத்த தம்பி நயினார் போன்ற ஒரு நோயாளியாகவே செல்லாச்சிக் குஞ்சிக்கு எண்ணத் தோன்றியது. குடிசை யின் ஒதுக்குப்புறமாக சற்று நடுவளவுக்குள் ஒரு ஓலைப் பந்தலும் அதற்குப் பக்கமாக ஒரு சூலமும் குத்தப்பட்டிருந் தது புதிதாக வரும் நோயாளிகளை ஒருவார காலமோ அல்லது சின்னப்பிள்ளையன் விரும்பும் நாட்களுக்கோ அந்தப் பந்தலுக்குள் தங்க விடுவதுதான் வழக்கம். இந்த வழக்கத்தின்படி நயினார் குடும்பம் பந்தலுக்குள் விடப்பட்டது.

வைத்தியத்திற்காக வந்து சேரும் நோயாளிகள் குடும் பத்தினரை அந்தந்தச் சாதியருக்கென்ற விதத்தில் தனித் தனி சமையல் செய்து சாப்பிட்டுக்கொள்ள ஒவ்வொரு சாதிக்குமான சட்டி பானை ஏதனங்களைக் கொடுத்து சாமான் சண்டிகளை வாங்கிக் கொள்வதற்கு இடங் காட்டிக்கொள்வதில் சின்னப்பிள்ளையன் மிகக் கவனம். ஆனால் தண்ணீர் மட்டும் ''தனது கிணற்றிலேயே எடுக்கவேண்டும்'' என்ற ஒரு நிபந்தனை மட்டும் வைத்திருந்தான்.

சின்னப்பிள்ளையன் அன்று முழுதாகவும், இரவு வரவில்லை. எங்கோ அடுத்த ஊருக்கு மாந்திரீகக் கழிப்புக் காகச் சென்றிருந்தான். மறுநாட் காலை அவன் வந்து சேர்வதற்கிடையில் அவர்களின் சமையல் சாப்பாட்டுக் கான சகல வசதிகளையும் அந்தப் பூசிப் புணர்த்தியவனே செய்து கொடுத்து விட்டான். அந்த ஒருநாள் உறவில் செல்லாச்சிக் குஞ்சியுடன் நெருக்கமாகப் பேசிப் புதினங் களைத் தெரிந்து கொள்ள அவன் தவறவில்லை.

இரவு கழிந்தது.

மாந்திரீகன் சின்னப்பிள்ளையன் மறுநாட்காலை தான் வந்து சேர்ந்தான். வந்தவுடன் பின்புறக் கிடுகுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலுக்குள் இருந்த நயினார் குடும்பத்தினை ஒருதடவை கண்களால் அளந்தான். அவன் பார்வை ஆளுமைக்கு முன்னால் நயினார் குடும்பத்தினால் வாய் திறக்கவோ, எதிர்ப்பார்வை செய்யவோ முடியவில்லை.

நீண்டு நெடுத்த அவனின் தோற்றம்,

மாம்பழ நிறம்,

முன்குஞ்ச வெட்டு,

பின்குடுமி,

நீண்டு வளர்ந்த புருவமயிர் வளர்த்தி,

கழுத்துச் சால்வை,

கால் முட்டிய சாய வேட்டி,

கழுத்து மிளகு மாலை,

சுருக்கு விழுந்த திரேகம்,

இவை எல்லாமே அவர்களை எழுந்து நிற்க வைத்து விட்டன.

சின்னப்பிள்ளையும் ஒன்றும் பேசவில்லை. திரும்பி விட்டான்.

சற்று வேளைக்குள் அந்தப் பூசல் புணர்த்தல்காரன் வந்தான்.

''பரியாரி உங்களோடை பேசமாட்டார், இண்டைக்குப் பொழுது பட்டாப்போலை கும்பம் வைச்சு அஞ்சனம் பாத்து வருத்தத்தைக் கண்டு பிடிச்சுப் போட்டுத்தான் பேசுவார்'' என்று கூறி விட்டுச் சென்றான். செல்லும் போது ''ஆசுப்பத்திரியடி கடைக்கார நல்லதம்பியர் தான் கூட்டியந்து விட்டிட்டுப் போனார் எண்டு சொல்லி விடுகிறன்'' என்றும் கூறிவிட்டுச் சென்றான்.

பகல் பொழுது கழிந்தது.

பகல் எல்லாம் சின்னப்பிள்ளையன் மரணத் தூக்கத்தில் கிடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை ஆயிற்று.

"கந்தர், உதாலை போய் ஆரும் ஒரு இளந்தாரிப் பொடியாய்ப் பிடிச்சுக் கொண்டு வா, ராவைக்கு மை பாப்பிக்க!" என்று கூறவே பூசல் புணத்தல் கந்தன் போய் விட்டான். பின்பு அவன் திரும்பி வரும்போது மணி பத்துக்கு மேலாகி விட்டது. இதற்கிடையில் பூசல் புணத்தல் காரக் கந்தன் அஞ்சன மை பார்ப்பதற்கான அடுக்குகளைச் செய்து வைத்திருந்தான்.

பந்தலுக்கு நடுவே கும்பம்.

கும்பத்துக்குச் சற்று முன்னதாக நட்டுவைக்கப்பட்டிருந்த ஒரு இளம் வாழைக்குட்டி,

புதுச் சட்டிக்குள் தழல், பக்கமாக பச்சைக் கற்பூரக் குவியல்.

ஐந்து திரிகள் கொண்ட பதிந்த குத்து விளக்கு.

நாக்கு மூக்குத்தள்ளிய வெற்றிலை, வாழைச்சீப்பு, ஒரு தேசிக்காய் இன்னும் பல.

"கந்து எல்லாஞ் சரியோ?"

என்று கேட்டுக் கொண்டே வந்த சின்னப்பிள்ளையன் நேராகக் கிணற்றடிக்குச் சென்று இரண்டு பட்டை தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொண்டே ஈரம் சொட்டச் சொட்ட கும்பத்தடிக்கு வந்தான்.

கந்து கொட்டிலுக்குள் படுத்திருந்த ஒரு இளைஞனை எழுப்பி வந்து முன்னே விட்டான். வந்தவன் சோம்பலை முறித்துக் கொண்டே கும்பத்திற்கு வலக் கரையில் சப்பாணி கட்டிக்கொண்டு உட்கார்ந்து விட்டான்.

"இந்தா கந்தர், பொடியன் எங்கத்தைப் பொடியன் எங்க பிடிச்சனி?"

என்று சின்னப்பிள்ளையன் கேட்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொடியன் ஒண்டு பிடிக்க நான் பட்ட பாடு. மை பாக்கவெண்ண ஒருதரும் பயந்து மாட்டன் எண்டிட்டாங்கள். மூத்தநயினாரு கோயிலடி என்னை ஊத்திற பகுதிப் பொடியன் இவன். தன்னை வள்ளிசாக் கவனிச்சாத்தான் வருவன் எண்டவன், முந்தியும் ஒருக்கா சரவணைச் சின்னத்தம்பியின்ரை மையும் பார்த்தவனாம்!'' என்று மிகவும் அலுத்துக்கொண்டே கந்து கூறினான்.

நயினார் கும்பத்துக்கு நேருக்கு நேர் இருத்தப்பட்டார்.

அம்மாள் பக்கத்தே இருந்தாள்.

செல்லாச்சிக்குஞ்சி அவருக்குப் பின்னால் இருந்தாள்.

பரியாரி மடிக்குள் இருந்து மஞ்சள் கயிறொன்றை எடுத்து கும்பத்தில் வைத்து மந்திரித்து, எரியும் கர்ப்பூரத்தை உள்ளங்கையில் ஏந்தி அந்தக் கயிற்றுக்கு ஆராதனை காட்டி, டபக்கென்று வாய்க்குள் போட்டு விழுங்கிக் கொண்டான். பின்பு தியானத்தில் இருந்தான். அந்த அக்கினியை இலகுவாகத் தின்றுவிட்டதைக் கண்டு அன்னப்பிள்ளை அம்மாளும் செல்லாச்சிக் குஞ்சியும் ஏன் நயினாருங்கூட திகைத்துப் போய்விட்டனர்.

பரியாரி தெற்பைப்புல்லை எடுத்து நயினாரின் இடது கர மோதிர விரலில் தெற்பை முடிந்து, அந்த முடிச்சோடு மஞ்சள் நூலின் தலைப்பையும் சேர்த்துப் பிணைத்து மஞ்சள் நூலினால் வாழையைச் சுற்றிப்பின்புகும் பத்தைச் சுற்றி, அதன் மறுதலைப்பை அஞ்சனம் பார்க்க வந்தவனின் வேட்டித் தலைப்பில் முடிச்சிட்டு நூலின் முடிவைத் தனது நெஞ்சின் மிளகுமாலையோடு இணைத்து விட்டான்.

சற்று வேளை கண்களை மூடித் தியானத்தில் இருந்து விட்டுக் கும்பத்தில் இருந்த உறுப்பான வெற்றிலை ஒன்றினை எடுத்துப் பக்கத்தே சிமிளில் இருந்த மைபில்

மூன்று துளிகளை விட்டு, அதைச் சற்று அசைத்துப் பரவலாக்கிவிட்டு அஞ்சனம் பார்ப்பவனுக்கு முன்னால் நீட்டிப் பிடித்து, ''தம்பி அடிக்கடி இமை வெட்டாமல் இதை உத்துப்பாரும்'' என்று கூறவே மை பார்வை தொடங்கி விட்டது.

பூசல் புணத்தல்காரன் சட்டித் தழலுக்குள் சாம்பிராணியை சிறு சிறு அளவு தூவிக்கொண்டே இருந்தான்.

சாம்பிராணி வாசனை இதமாக இருந்தது.

ஏறக்குறைய அரைமணி நேரமாயிற்று!

இன்னும் அஞ்சனத்தில் எதுவும் தெரியவில்லை.

பரியாரி மறுகையால் பச்சைக் கர்ப்பூரத்தை எடுத்து நெருப்பு மூட்டி அடிக்கொருதடவை விழுங்கிக்கொண்டே இருந்தான்.

''பரியாரியார், பரியாரியார், ஏதோ ஒரு வடலிக்கரை தெரியுமாப்போலை கிடக்கு......ஓ... ஒரு பொம்பிளை வாற மாதிரிக் கிடக்கு......''

பையனின் இந்தப் பேச்சினால் எல்லோரும் உற்சாகமடைந்தனர்.

''கவனம் பெடியன் கொஞ்சவேளை பல்லைக் கடிச்சுக் கொண்டு கண்வெட்டாமல் பார்... கவனமாகப் பார்...''

பரியாரி அவனை நிதானப்படுத்த முயன்றான்.

சற்று வேளை ஆயிற்று.

''பரியாரியார், அது ஒரு நெட்டைச் சிவப்புப்பெட்டை போலை கிடக்கு. குறுநாட்டுச் சீலை உடுத்தி இருக்கு, அவளுக்கு வயிறு பெரிசாக்கிடக்கு... இப்ப... இப்ப தன்ரை கையாலை வயித்தை தாங்கிப் பிடிச்சுக்கொண்டு அழுகுது பரியாரியார், அங்காலையும் இஞ்சாலையும் பாக்குது பரியாரியார்... ஏதோ சொல்லுது பரியாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,....... குரலைக் காணேல்லை பரியாரியார்... தன்ரை குறுநாட்டுக் குறுக்குக் கட்டை அவிட்டு விட்டுக் கட்டுது பரியாரியார்...... இப்ப தலை குலைஞ்சபடி அழுது கொண்டு நிக்குது பரியாரியார்...... எட ஆரோ ஒரு ஆள் அவளுக்குக் கிட்ட வாறதும்...... பிறகு திருப்பி ஓடுறதும் தெரியுது பரியாரியார்......''

அந்தப் பையன் அதற்குமேல் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

சற்று வேளை ஆயிற்று.

''இப்ப ஒண்டையும் காணயில்லைப் பரியாரியார்...''

''இனி அவள் தெரியாள்!''

என்று பரியாரி மொட்டையாகவே பதில் கூறிவிட்டான். அஞ்சனம் முடிந்தது.

நிலவு காலித்து வந்தது.

கோழிச் சேவல்கள் அங்குமிங்கும் கூவின.

பொழுது விடிந்தாய்விட்டது என்பது அவைகளின் நினைப்பு.

''உங்களுக்குத்தான் சொல்லுறன். அங்காலை நயினாருக்காக கலமயோடை ஒருத்தி காத்திருக்கிறாள். அஞ்சனத்திலை அதுதான் சொல்லுது! நயினார், நடந்தது நடந்து போச்சு இஞ்சை வேறை ஆரும் பிறத்தியார் இல்லை. உங்கடை அவவும், மாமியும் தானை இருக்கினம் உள்ளதைச் சொல்லுங்க...''

பரியாரி பேச்சை நிறுத்தி விட்டான்.

''ஓம் பரியாரியார், அஞ்சனத்திலை சொன்னது மெய் தான்!''

நயினாருக்காக அன்னப்பிள்ளை நயினாத்தியே பதில் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியாரி, நயினாத்தி சொல்லுறது சரிதானே என்று கேட்கும் பாவனையில் நயினாரைப் பார்த்தான்.

நயினார் மிகவும் சிரமத்தோடு அதை ஆமோதித்துத் தலையை மேலும் கீழுமாக அசைத்தார்.

''பயப்படாதையுங்கோ. அந்தப் பொடிச்சியின்ரை சுலையை இறக்கிறதுக்கு நான் வேறை ஆளை அனுப்பிறன். வாற வெள்ளிக்கிழமை கழிப்புக் கழிக்க வேணும். அது வரையிலை நயினார் கும்பத்திலை இருக்க வேணும், நெடுக இருக்கிறதெங்கிறது கஷ்டந்தான். இருந்தாலும் இருக்கத்தான் வேணும்'' என்று கூறிக்கொண்டே பரியாரி எழுந்திருந்தான்.

பரியாரி படுக்கைக்குப் போய்விட்டான். பூசல் புணத்தல் கந்தவும், அஞ்சனப் பார்வைப் பையனும் போய் விட்டனர்.

கும்பத்துக்கு முன்னால் நயினார் இருந்த இரை கலையவில்லை. நயினாத்தியும், செல்லாச்சிக் குஞ்சியும் கூடவே இருந்தனர்.

வெள்ளிக்கிழமையும் வந்தது.

இரவு கழிப்பு வேலைகளும் முடிந்து விட்டன.

பிப்பிரிச் சுடலைக்குள் உள்ள அரசமரத்தில் ஆணி அடிக்கப்பட்டதுடன் கழிப்புப் பூர்த்தியாகிவிட்டது.

இரண்டு நாட்கள் பார்த்திருந்து போகும்படி பரியாரி வடை கொடுத்தான்.

திங்கள் காலை நயினாரைப் பார்க்க நயினாத்தியின் உறவினன் ஒருவன் வந்தான்.

அவன் ஒரு செய்தியையும் சுமந்துவந்தான்.

அவன் சுமந்துவந்த செய்தி நயினாருக்கும், நாச்சிக்கும், செல்லாச்சிக் குஞ்சிக்கும் இனிப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுமையோடு போய்விட்டவளின் கணவனான கறுத்தான் தோட்டக் கிணற்றில் துலாமிதித்த போது தலைத் துலா சறுக்கிக் கிணற்றில் வீழ்ந்து செத்துப் போனான்'' என்பது.

நயினார் குடும்பம் ஊருக்குப் புறப்பட்டு விட்டது.

ஒத்தைக்கண் நல்லதம்பியருக்கு பூசிப் புணத்தல் கந்து செய்தி அனுப்ப அவன் இரண்டு நாட்களுக்கு முன் விலைக்கு வாங்கி இருந்த ஹென்றிபோட் காரைச் செலுத்திக் கொண்டு வந்து சேர்ந்தான்.

இராசா ராணியாக நயினாரும் நயினாத்தியும் பின் சீற்றில் இருக்க, செல்லாச்சிக் குஞ்சி உதவிக்கு இருக்க ஹென்றி போட் கார் ஊரை நோக்கிப் புறப்பட்டு விட்டது.

காரைச் சூழ நின்ற ஜனக்கூட்டம் வழிவிலத்தி நின்றது.

''பரியாரியார் போட்டுவாறம்'' என்று கூறிக் கொண்டே தனது கையில் இருந்த தங்கக் காப்பொன்றைக் கழற்றிப் பரியாரிக்குப் பரிசாகக் கொடுத்தாள் அன்னப் பிள்ளை நாச்சியார்.

சொடுகன் மகளின் சுமையை இறக்கக் கறுத்தானை அனுப்பி வைத்த அந்தக் காரியத்திற்கு அந்தத் தங்கக் காப்புப் போதுமோ போதாதோ என்பதில் அவளுக்குச் சற்று மனக்குழப்பம்.

மூத்ததம்பி நயினார் சீற்றில் இருந்தபடியே மனைவியின் காதுக்குள் எதையோ கூற, அவள் மறுகரத்தில் இருந்த காப்பையும் கழற்றிப் பரியாரியாரிடம் கொடுத்தாள்.

பூச்சுப் புணத்தல் கந்துவுக்கும், பரியாரியின் தாய் சின்னம்மாக் கிழவிக்கும் கைகள் நிறையச் சில்லறைகள் கிடைத்தன.

பேரிரைச்சலுடன் ஹென்றி போட் புறப்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

பரியாரி சின்னப்பிள்ளையன் வீட்டில் இருந்து சுமார் பத்து மணிவரையில் நயினார் குடும்பத்துடன் புறப்பட்ட கார் நான்கு ஐந்து இடங்கள் தரித்துத் தரித்து இயந்திரச் சூடாற்றிக் கொண்டு கொதிதண்ணீர் மாற்றி மாற்றி மூத்ததம்பி நயினார் வீட்டுக்கு முன்னால் வந்து சேர மணி இரண்டுக்கு மேலாகி விட்டது.

கார்க்காரக் குருட்டு நல்லதம்பியன் காரில் மிகக் கவனம். ஐந்து ஆறு மைல்களுக்கு ஒருதடவை அதை நிறுத்தி ஆற விட்டுத்தான் அவன் அதைச் செலுத்தி வருவான். உயிர் உள்ள ஒன்றுக்கு வரும் களைப்பு அதற்கும் வரும் என்பதில் அவனுக்குப் பெரும் நம்பிக்கை என்பதைவிட, அந்த இரும்பு மிருகத்தைப் பக்குவமாகப் பாவிப்பதில் அவனுக்கு இருந்த பற்று அப்படி.

கார் ஊருக்குள் வந்ததுதான் தாமதம் ஊரே கூடி விட்டது. இதற்குமுன் நான்கோ ஐந்தோ தடவைகள் தான் அந்த ஊருக்குள் கார் என்ற அந்த இரும்பு மிருகம் வந்து போனதுண்டு. அவைகளை விட இந்தக் கார்மிருகம் வித்தியாசமானதாக இருந்தது. நீளம் அகலத்தாலும் மேல் கூடாரத்தாலும், பக்கத்து வெளிச்சக் கூட்டாலும் கணிசமான அளவு மாற்றம் உடையது. அதன் இரைச்சலும் கோண் சத்தமும் மிகவும் அடக்கமானவை. கார் வந்ததுதான் தாமதம் அவசர அவசரமாக இறங்கிய நல்ல தம்பியன் அதன் முன்பக்க மூடித் தகரத்தைத் திறந்து விடவே உள்ளே மெசினில் இருந்து நீராவி குபீரென எழுந்து பரவியதுடன், அவனால் நீக்கி விடப்பட்ட தண்ணீர்த்தாங்கிக்கூடாகக் கொதிநீர் பொங்கியும் வழிந்தது.

மூத்ததம்பி நயினாரைத் தாங்கிப் பிடித்தபடி அன்னப் பிள்ளை நாச்சியார் இறங்க, மறுபுறமாகச் செல்லாச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சி உதவி புரிய மெதுவாக நடந்து நடந்து ஐயா விறாந்தைக்கு வந்து விட்டார்.

முற்றமெல்லாம் பலாச்சருகு நிறைந்திருந்தது.

''உவள் கோவிச்சி ஐஞ்சாறு நாளா முத்தம் கூட்டை யில்லைப் போலை கிடக்கு'' என்று செல்லாச்சிக் குஞ்சி குறைப்பட்டுக் கொண்டாள்.

ஆட்டுக் குடிலுக்குள் இருந்து இரண்டொரு ஆடுகள் குரல் வைத்தன.

வீட்டின் செல்ல நாய் பொன்னியைக் காணவில்லை. அது எங்காவது உணவு நோக்கிப் போயிருக்க வேண்டும்.

வீட்டின் முன்பக்கம், பின்பக்கம் ஆகியவைகளால் நான்கைந்து உறவினப் பெண்கள் வந்து சேர்ந்தனர்.

அன்னப்பிள்ளை நாச்சியார் முகம் மலர எல்லோ ரையும் வரவேற்றாள்.

நயினார் பிரம்புச் சாய்மனையில் பக்குவமாகக் கிடத்தப் பட்டார்.

அவருக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

''பரியாரியார் செவ்விளநிதான் குடிக்கக் குடுக்கச் சொன்னவன்'' என்றாள் செல்லாச்சிக் குஞ்சி.

''ஆரும் நளவங்கள் நிப்பாங்கள் கூப்பிடுங்கோ!'' என்றாள் அன்னப்பிள்ளை நாச்சியார்.

''கறுத்தானெல்லை பிள்ளை துலாவால விழுந்து செத்துப் போட்டான். இண்டைக்குச் சிலவாம் அவங்கள் எல்லாம் செத்தவீட்டை எல்லோ நிப்பாங்கள்! இப்பார் வரப் போறாங்கள்?'' என்றாள் ஒருத்தி.

''ஓமோம் கேள்விப்பட்டனாங்கள், அவன்ரை பெண்டில் சுமை இறக்கக் கூப்பிட்டிட்டாள்! பாவம் அவனும் வயது சென்ட நேரத்திலை போய்ச் சேந்திட்

டான்!'' என்று வஞ்சகம் எதுவும் இல்லாத தோறணையில் நாச்சியார் பேசினாள்.

''கேட்டியேடா தம்பி வேறை ஒருகதையை! நீயும் போய் இப்ப மூண்டு மாதத்துக்கு மேலை ஆயிட்டுது. திடலில் நளத்தியளுக்குத் தண்ணி குடுக்கிறேல்லை எண்டு விதானைப் பொடியன் மறிச்சுப்போட்டானாம். இப்ப நீயும் போனாப் போலை, ராவுராவா உன்ரை தோட்டக் கிணத்திலைதானாம் அள்ளிறாளவை எண்டு கதையாக் கிடக்கு! நீயும் கறுத்தான் பெண்டிலின்ரை சுமையை இறக்கிறதிலை முன்னுக்கு நிண்டநீ எண்ட கோவத்திலை எங்கடை ஆம்பிளையளும் அதைக் கவனிக்காமல் விட்டிட்டாங்கள். வல்லிவிரத்தானையெண்டு நீயும் சுகப்பிலமா வந்திட்டாய். உதுக்கு ஏதெண்டாலும் செய்யாட்டா ஊர் உலகம் மதிக்குமே?''

இப்படி ஒரு கேள்வியுடன் ஒரு கிழவி நிறுத்திக் கொண்டாள்.

''ஓ அப்பிடியோ சங்கதி?'' என்று ஒரு கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு மூத்ததம்பிக் கமக்காரன் ஆயாசத்தால் இளைத்தார்.

''எடி பிள்ளை இஞ்சை கொக்கத்தடியைத் தாடி நான் இளநி புடுங்கிறன்'' என்று கேட்ட ஒருத்திக்கு வேறொருத்தி கோடிப்பக்கம் சுற்றிக் கொக்கைத் தடியை எடுத்து வந்து கொடுத்தாள். அதை வாங்கியவள் முற்றத்துச் செவ்விள நீர் மரத்துடன் மல்லாடுவதைப் பார்த்த கார்க்கார நல்ல தம்பியன் ஒத்தாசை புரிந்து இளநீர் இரண்டு பறித்துக் கொடுத்தான்.

ஒரே தரத்தில் இரு இளநீரையும் குடித்து முடித்த நயினாருக்கு அது பெருங் களைப்பாய் விட்டது. அவர் சற்று அசந்து போய்விட்டார்.

அன்னப்பிள்ளை நாச்சியாரும், செல்லாச்சிக் குஞ்சியும் வீட்டை ஒழுங்குக்குக் கொண்டு வரும் சிரமதானத்தில் இறங்கிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்க்கார நல்லதம்பியன் தான் காத்து நிற்பதை நினைவுபடுத்தினான்.

''ஏன் தம்பி, நீர் செய்த உதவியை நாங்கள் மறவம், கனதூரம் வந்திட்டீர், காரும் களைச்சுப்போயிருக்கும் இரவைக்கு நிண்டிட்டு விடியப்போமன்!'' என்றாள் செல்லாச்சிக்குஞ்சி.

நல்லதம்பியனுக்கும் நின்று போகத்தான் விருப்பம். என்றாலும் அதை உடனடியாக ஏற்றுக்கொள்ள அவனுக்கு மனது வரவில்லை. அவனுக்குக் கண்களுக்குள் குற்றிய ஒருவரிடமிருந்து இந்த வேண்டுகோள் வர வேண்டும் என்பதுதான் அவன் விருப்பம். அந்த அவர் வாய்திறக்க மாட்டாதபோது......

அன்னப்பிள்ளை நாச்சியார் கோப்பி போட்டுக் கொண்டு வந்து நல்லதம்பியனுக்குக் கொடுத்தாள்.

நயினார் இளநீர் குடித்த களைப்பில் நல்ல மயக்கம்.

செல்லாச்சிக் குஞ்சி பின்பக்கம் போய்விட்டாள்.

''இண்டைக்குப் பாட்டுக்கு நிண்டிட்டு வெள்ளனப் போமன்'' இப்படி அவள் மெதுவாக— மிக மெதுவாக நல்லதம்பியனுக்குக் கேட்கும்படியாக மட்டும் சொல்லி விட்டாள்.

நல்லதம்பியனுக்கு இதுபோதும்.

கோவியச் சின்னாள் வந்தாள்.

''என்னெடி சின்னாள் இப்பானையடி வாறாய்? வீடு துப்பரவாக்கி முத்தங்கூட்டி எத்தனை நாளெடி? உங்கை பார் மாடுகளின்ரை கோலத்தை?'' என்று வந்தவள்மேல் சீறிப் பாய்ந்தாள் நாச்சியார்.

நல்லதம்பியனுக்கு முகம் சுண்டியது.

நல்லதம்பியன் மாணிப்பாய் கோவியன் என்பது அம்மாளுக்குத் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் உடை நடை பாவனையை வைத்துத் தீர்மானிக்கும் சக்தியும் அவளுக்கில்லை.

அம்மாளின் இந்தப் பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அவனுக்கு அதைப் பெரிதுபடுத்த விருப்பமில்லை. ஆனாலும் எதையோ நினைத்து அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

கடையைப் பூட்டிவிட்டு செல்லாச்சிக் குஞ்சிக்கும் அன்னப்பிள்ளை நாச்சியாருக்கும் உதவியாக ஆஸ்பத்திரி விறாந்தையில் தான் கழித்த நாட்கள்......

பரியாரி சின்னப்பிள்ளையன் வீட்டிற்கு அடிக்கடி போய் நயினாரையும் நாச்சியாரையும் குசலம் விசாரித்து வந்த நாட்கள்......

சின்னப்பிள்ளையன் பந்தலுக்குப் பின்னால் கொய்யாக்காட்டுக்குள் காத்திருந்த இரவுகள்... ஏமாற்றங்கள்...

''உப்பிடி விசர்த்தனமா யோசியாதையும்!'' என்று அம்மாள் ஒருநாள் நேராகச் சொன்ன சொற்கள்...

இன்று கார் ஓடிவரும்போது காரின் கோண் ரப்பரைத் தழுவி அமுக்கி ஓசை எழுப்பியபோது பின்னே பார்ப்பதற்கான கண்ணாடிக்குள் அம்மாள் தனது சொண்டைக் கடித்துக் கொண்டு செய்த பாவனையின் காட்சி......

நல்லதம்பியன் இரவு தங்கிப் போவதாகவே முடிவு செய்துவிட்டான்.

சமையல் வேலை தொடங்கிவிட்டது.

இன்றோ நாளையோ முட்டை போடத் தயார் நிலையில் இருந்த கன்னிப் பேட்டுக்கோழி ஒன்றைப் பிடித்து உரிக்கும்படி அம்மாள் சின்னாச்சிக்குக் கட்டளை இட்டாள்.

நல்லதம்பியனுக்குக் குடிப்பழக்கம் இருப்பது அம்மாளுக்குத் தெரியும். சின்னாளிடம் இரண்டு போத்தல்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து தென்னங்கள்ளுச் சின்னட்டியனிடம் கள்ளு எடுத்துவரச் செய்தாள்.

நயினாரின் நோய் பார்க்க வந்தவர்கள் கலைந்து விட்டனர்.

மாலைப் பொழுதும் வந்தது.

நல்லதம்பியன் சமையல் முடியும்வரை கள்ளுப் போத்தலோடு சேர்ந்து கொண்டான்.

இடையே கண்விழித்த ஐயாவுக்குப் புதிதாகக் கறக்கப் பட்ட பால் கற்கண்டிட்டுக் காய்ச்சிக் கொடுக்கப்பட்டது.

''என்னப்பா கோழிக்கறி மணக்குதுபோலை கிடக்கு; எப்பன் உப்புப்புளியை காரசாரமாப் போடும்; அப்ப தான் என்ரை வாய்க்கு இதமாக இருக்கும்!''

இப்படி ஐயா குரல் கொடுத்தார்.

''ஓமோம் பொட்டை வடிவாக் காச்சும்!'' என்று செல்லாச்சிக் குஞ்சி மறுகுரல் கொடுத்தாள்.

அன்னப்பிள்ளை நாச்சியாருக்குச் சிரிப்பு வந்தது.

அடுக்களைக்குள்ளிருந்து கோழிக்கறியின் மணம் குணம் காற்றில் மிதந்து வந்தது. அதைத் தொடர்ந்து கத்தரிக்காய் பெதக்கலின் பால் வாசனையும் வந்து முடிந்தது.

மணி எட்டுக்கு மேலாயிற்று.

நல்லதம்பியன் விறாந்தையில் தென்னங் கள்ளைச் சிறிது சிறிதாகக் குடிப்பதும், பேணியோடு கொண்டு வந்த ஆனைமார்க்கு— எலிபன் சிகரெட்டை ஊதிக் கொண்டும் இருந்தான்.

அன்னப்பிள்ளை நாச்சியார் வேற்று உடுப்புக்களை ஏந்திக் கொண்டு கைலாம்போடு கிணற்றடிப் பக்கம் போவது தெரிந்தது; சற்று வேளைக்குள் கிணற்றடியில் யாரோ குளிக்கும் ஓசையும் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவியச் சின்னாள் துலாக்கொடி பிடித்துத் தண்ணீர் அள்ளிக் கொடுக்க அம்மாள் குளிக்கிறாள்.

''ஏமஞ்சாமத்திலை, அதுகும் இந்தக் குளிருக்கை குளிச்சா ஏதெண்டாலும் செய்யுமாக்கும்'' என்ற சின்னாளின் கேள்வி ஒன்றுக்கு ''அது எனக்குத் தெரியுமெடி நீ அள்ளி வாரெடி!'' என்று சற்று அழுத்தமாகப் பதில் சொன்னாள் அம்மாள். அதன்பின் குளியல் ஓசை தான் கேட்டது.

நல்லதம்பியனுக்கு இதெல்லாம் ரொம்பப் பிடித்த மாக இருந்தது.

கிணற்றடிப்பக்கம் கிடுகினால் மூடி அடைக்கப்பட்டிருந்ததால் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அதிலும் பார்வை ஒற்றைக் கண்ணில்தான்.

அம்மாள் குளிப்பை முடித்துக் கொண்டு வந்து விட்டாள்.

வெளிக் கேற்றடியிலிருந்து குரல் ஒன்று கேட்டது.

''மூத்ததம்பியர்; மூத்ததம்பியர்''

இந்த அழைப்புக்குரிய குரல் அறிமுகமான குரல். மூத்ததம்பி நயினாருக்கு இக்குரலுக்குரியவர் யார் என்று விளங்கிவிட்டது.

அவர் விதானையார்.

இது மூத்ததம்பி நயினாரால் எதிர்பார்க்கப்படாத ஒன்று!

மூத்ததம்பி நயினார் அன்னப்பிள்ளை நாச்சியாரைக் கட்டிக்கொண்ட நாளையிலிருந்து அவர் வீட்டுச் சபை சந்தியைப் ; பகிஸ்கரித்த குழுவினருக்குத் தலைமை தாங்கிய விதானையார், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பு மூத்த தம்பி நயினாரின் வீடு தேடிவருவது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நம்புவது மூத்ததம்பி நயினாருக்குக் கஷ்டமாக இருநதது.

''ஆரது வாரும்!'' என்று மட்டும் அவர் பதில் கூறவே விதானை விறாந்தைப் படி ஏறிவிட்டார்.

''கிடவுங்கிடவும், சுகயீனப்பட்ட உடம்பைத் தொந்தரவு செய்யாதையும்'' என்று கூறிக்கொண்டே விதானையார் நயினார் படுத்திருந்த பிரம்பு ஈச்சாருக்குப் பக்கமாக வந்து, பக்கமாக இருந்த பலகை ஈச்சாரில் சரிந்து கொண்டார்.

விதானையார் பூசிப் புணத்தி மங்களகரமாக இருந்தார்.

சாயம் தோய்ந்த எழுத்து வேட்டியாலும், நார்ப் பட்டுச் சால்வையாலும் உடம்பை மறைத்திருந்தார். நார்ப்பட்டுச் சால்வைப் போர்வைக்கூடாக அட்சரக் கூட்டுச் சங்கிலி தெளிவாகத் தெரிந்தது.

மூத்ததம்பி நயினாருக்கு உடனே ஒன்றும் பேசவரவில்லை.

''எப்பிடியும் விதானையார் சுகம்?'' என்று மட்டும் சம்பிரதாயப்படி விதானையாரை ஒரு கேள்வி கேட்டு வைத்தார்.

''கடவுளை யெண்டு என்ரை சுகத்துக்கு ஒண்டுமில்லை. நான் ஒண்டிக்கட்டை, நோய் நொடி வந்தாலும் தெரியாமல போகிடும். நான் இப்ப வந்தது உம்மடை சுகத்தைப் பார்த்துக் கொண்டு போகத்தான். உம்மையும் நல்லா உலைச்சுப் போட்டுது. நான் அண்டைக்கும் உம்மடை பேரிலை நாகர்கோயிலானைக் கொண்டு காண்டம் வாசிச்சுப் பாத்தனான். ஏழரைச் சனி கடைக் கூறு, இந்த மாசியோடை கழியுதெண்டு சொன்னவன். நவாலிச் சின்னப்பிள்ளை யன்ரை வீட்டை ஒருக்கா வந்து பாக்கவெண்டு நினைச்சனான், நேரம் ஏது? இஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY 4-7-1995

காணித் தொல்லையள், எல்லைச் சண்டையள், புருஷன் பெண்டில் சண்டையள் எண்டு நெடுக வேலை. இப்ப அதுதான் வந்திட்டீர் எண்டு கேள்விப்பட்டு வந்தனான். நவாலிச் சின்னப்பிள்ளையன் வலுவிண்ணன். கழிப்புக் கழிச்சுப்போட்டானாம் இனிப் பயமில்லை'' இப்படிக் கதையை அடுக்கிக் கொண்டு போன விதானையார் அப்போதுதான் கார்க்சாற நல்லதம்பியனைப் பார்த்து விட்டு, ஆர் இந்தப் பொடியன் தெரிஞ்ச பொடியன் போலை கிடக்கு! ம்...... எட மாணிப்பாய் ஆசுப்பத்திரி யிலை கடை ஒண்டு வைச்சு குதிரை வண்டிலும் வச்சிருக் கிறனியெல்லை. பொறு பொறு பேரையும் சொல்லுறன்; நல்லதம்பியன் என்ன? இஞ்சேரும் மூத்ததம்பியர் இந்தப் பொடியன் கோவியப் பொடியன் எண்டாலும் தேப்பன் வழி கேளம்பி பகுதிதான். எங்கடை குடிமோன் சாதி எண்டாலும் வலுயோக்கியன். அவன்ரை உடைநடை பாவனையைப்பாத்துக் குடிமோன் எண்டு ஆருஞ் சொல்லு வினமோ?பத்து வரிசத்துக்கு முந்தி என்ரை குஞ்சியப்புவை அங்கை வருத்தமா வைச்சிருக்கேக்கை எல்லாத் தொண்டு துரவும் செய்தவன்...''

விதானையார் பேசி முடிக்கவில்லை. ''பொடியன் இப்ப கார் வைச்சிருக்கிறான். அதிலைதான் வந்த நாங்கள்'' என்று பக்கத்துக் கிடுகுக் கொட்டகைக்குள் இருந்த காரின் பக்கம் பார்வையைச் செலுத்தி இனங் காட்டினார் மூத்ததம்பி நயினார்.

நல்லதம்பியன் தலைகவிழ்ந்தபடி இருந்தான்.

அவன் உடம்பு குறுகிவிட்டது.

''கோவியபகுதி குடிமோன்'' ''கோவியப் பொடியன்'' ''கேளம்பி பகுதிக் கலப்பு'' என்ற இந்த விதானையாரின் வார்த்தைச் சுடர்கள் அவனைக் குத்திக் கிழித்துவிட்டன.

அடுக்களைக்குள் இருந்த அம்மாளுக்கும் இந்த வார்த் தைகள் நாராசமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் கறிக்குள் புதைக்கப்பட்ட அகப்பையுடனும், வட்டிலில் குவிக்கப்பட்டுக் கையில் ஏந்தப்பட்ட கோலத்துடனும் அவள் அப்படி அசையாமல் இருந்தாள்.

அப்போதுதான் கிணற்றடிப் பக்கமிருந்து உள்ளே வந்த செல்லாச்சிக் குஞ்சி, "என்ன பிள்ளை வட்டிலோடை சோத்தைத் தூக்கிக் கையிலை வைச்சுக் கொண்டு சிலை மாதிரி இருக்கிறாய்? கறியை ஊத்து நான் கார்க்காறப் பொடியனை அடுக்களை விறாந்தைக்கு வரச் சொல்லி செம்பு தண்ணி குடுக்கிறன்" என்றாள்.

அன்னப்பிள்ளை நாச்சியார் அசையவில்லை; பதில் சொல்லவில்லை.

"என்னெடி பிள்ளை நான் சொல்லுறன் நீ பேசிறாயில்லை!" என்றாள் செல்லாச்சிக் குஞ்சி மறுபடியும்.

"எணை குஞ்சி, அவன் கோவியப் பொடியனாமெணை! கேளம்பி கலப்பாமெணை, விதானையார் சொல்லுறாரெணை, அவருக்கு முன்னாலை எங்கடை வட்டில்லை தீன் குடுத்தா..."

அன்னப்பிள்ளை நாச்சியாருக்கு இதற்குமேல் பேச முடியவில்லை. மெதுவாகவே பேசிவிட்டு நிறுத்திக் கொண்டாள்.

சற்றுவேளை மூச்சுமில்லைப் பேச்சுமில்லை.

விதானையாரும் நயினாரும் நீண்டநேரமாக எதை எதை எல்லாமோ பேசிக்கொண்டிருந்தனர். இடையே முன்பு மூத்ததம்பி நயினார் திடலில் நளத்தியளுக்குத் தண்ணீர் கொடுக்க மறுக்க, அவருக்கு மாறாகத் தனது கிணற்றில் தண்ணீர் கொடுத்ததற்காக மன்னிப்புக்கோரும் தோறணையிலும் பேசிவிட்டு, இப்போது இந்த மூன்று மாத காலம் வரை இருட்டோடு களவாக திடலில் நளவர் நயினார் கிணற்றில் தண்ணீர் அள்ளி வருவதாகக் கேள்விப்படுவதாகவும் கூறிவைக்க விதானையார் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இனி பாப்பம் நான் வந்திட்டன் இனித் தண்ணி அள்ளிப்போடிறதைப் பாப்பம்!'' என்று மூத்ததம்பி நயினாரும் சபதமேற்கும் விதத்தில் பேசினார்.

விதானையார் விடைபெற்றுக் கொண்டுபோக, யாழ்ப்பாண ஸ்ரேசனுக்கு பன்னிரண்டு மணிக்குச் சரியாக வந்து சேரும் குட்ஸ் றெயின் வண்டி ஆனை இறவுப் பாலத்தில் ஏறி இறங்கும் ஓசை தெளிவாகக் கேட்டது. ஏறக்குறைய மணி பத்துக்கு மேல் என்று குறிப்பிட்டு விடலாம்.

விதானையார் போய்விட்டபின்பு செல்லாச்சிக் குஞ்சி நல்லதம்பியனை அடுக்களை விறாந்தைக்கு வரும்படி அழைத்து, சற்றுப் பருத்த பேணி ஒன்றில் தண்ணீரும் வைத்து, புதிதான பச்சை ஓலைத் தட்டுவம் ஒன்றில் சோற்றையும் வைத்தாள்.

நல்லதம்பியனுக்கு நல்ல பசி.

பகலெல்லாம் குடித்த கள்ளுத் தண்ணீர் வயிற்றைப் பிறாண்டியது. ஆனாலும் உடல் நடுக்கமெடுக்க அவன் உணவருந்தத் தொடங்கி விட்டான்.

மூத்ததம்பி நயினாருக்கு வட்டிலுடன் சோற்றைக் கொண்டுவந்து அதைக் குழைத்துக் குழைத்து அவர் கையில் வைத்துக் கொண்டிருந்தாள் அன்னப்பிள்ளை நாச்சியார்.

எல்லோரினதும் சாப்பாட்டுப்பாடு ஒருவிதமாக முடிந்து விட்டது.

நயினாருக்கு உள்வீட்டுக்குள் கட்டில் போட்டுப் படுக்கை போடப்பட்டது.

அன்னப்பிள்ளை நாச்சியாரும் உள்ளே.

செல்லாச்சிக் குஞ்சி முன் விறாந்தையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பியன் தான் கிடுகுக் கொட்டகைக்குள் கார்ச் சீற்றில் படுக்கப் போவதாகக் கூறி விட்டான். சொன்ன படி கார்ப் பின் சீற்றில் முடங்கி விட்டான்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

தட்டுவச் சோறு பேணித் தண்ணீர் இவை அவனைத் தூங்கவிடவில்லை.

அவன் நெஞ்சுக்குள் வர்மம் புகுந்து சுழற்றியது.

'அவன் தான் விதானை சொன்னான் எண்டதுக்காக, இவள் எனக்குத்தட்டுவத்தில்லை சோறு தந்திருக்கிறாளே?' என்று மனதுக்குள் சொல்லிச் சொல்லிக் கறுவினான்.

இதற்குப் பின் அவளிடமிருந்து தனக்கு ஒரு சுகம் கிடைக்குமென்ற நம்பிக்கையை அவன் விட்டுவிட்டான்.

தூக்கம் தானாக வந்துவிட்டது.

குளிர் நடுங்க வைத்தது, ஆனாலும் தூங்கிவிட்டான்.

இரவு வெகுநேரத்திற்குப்பின் குளிருக்குமேல் மேலதிகக் குளிர் ஒன்று அவன் முதுகில் படிவதுபோல இருந்தது.

அது இரு குளிர்க் கரங்கள்.

சிலமணி நேரங்களுக்கு முன் அன்னப்பிள்ளை நாச்சியார் கிணற்றுத் தண்ணீரால் குளிப்பாடியது அவன் நினைவுக்கு வந்தது.

குளிருக்கு மேலதிகமான இந்தக் கரங்களின் குளிர் அவனைத் திடுக்குற வைக்கவில்லை.

இரவு விரைவில் கழிந்துவிடும்போல இருந்தது.

# 17

நன்றாக விடிந்து வெகுநேரத்துக்குப் பின்பும் நல்லதம்பியன் காரின் பின்சீற்றில் அயர்நது தூங்கிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நேத்து முழுக்கக் கார் ஓடிவந்த களைப்பாக்கும் அவன் அலுப்புத் தீரக் கிடக்கிறான்'' என்று கூறிக் கொண்டே செல்லாச்சிக் குஞ்சி காலை உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள்.

மூத்ததம்பி நயினார் கண் விழித்துப் பார்த்தபோது அன்னப்பிள்ளை நாச்சியார் நல்லுறக்கத்தில் கிடந்தாள்.

''இஞ்சேரும்; இஞ்சேரும்; உம்மைத்தானை!'' என்று குரல் வைத்துப் பார்த்தார். அம்மாள் எழுந்திருந்த பாடாக இல்லை.

''அவள் பாவியும் பாவம், இந்த மூண்டுமாத காலமும் அலைக்கழிஞ்ச களை பாவம்!'' என்று அவர் மனதுக்குள் சொல்லிக் கொண்டே மனைவியை அலட்டாமல் மீண்டும் தூங்க விட்டுவிட்டார்.

வெளியே ஜன நடமாட்டம் கேட்டதன் மேல்—ஏறக் குறைய எட்டு மணிக்குமேல்தான் அம்மாள் எழுந்து படுக் கையில் இருந்தாள். மீண்டும் தூங்க வேண்டும் போல இருந்தது.

''இஞ்சேரும் இன்னும் நித்திரை முறியாட்டாப் படுமன்; மாமி காலமைச் சாப்பாட்டு வேலையைச் செய்வாதானை!'' என்று மிகவும் இதமாக நயினார் சொன்னார்.

அம்மாள் சோம்பல் முறித்துக் கொண்டு வெட்கப் பட்டாள்.

''ராத்திரி முழுக்க நித்திரை வரேல்லைப் போலை அதுதான் விடியப்புறத்தோடை கண்ணை மூடியிருக் கிறீர்!''

நயினாரின் இந்தப் பேச்சு அம்மாளை ஒருகணம் குலுக்கி விட்டது.

''இனி எனக்கு அடிச்சுப்போட்டாலும் சாவு வராது நீர் ஏன் இன்னும் பயந்து நடுங்கிறீர்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாரின் இந்தப் பேச்சு அம்மாளின் குலுக்கலைப் பிடித்து நிறுத்தி விட்டது.

உடையைச் சரிப்படுத்திக் கொண்டு அம்மாள் எழுந் திருந்தாள்.

அம்மாளின் கோலத்தைக் கண்டு ஐயாவுக்கு மனம் கிறுங்கியது.

இரவெல்லாம் வராத நினைப்பு இப்போது வரு கிறது.

மூன்று மாதங்களுக்கு மேல் கிடையாத அந்த சுகத்தை நினைக்க இப்போது உடலில் தெம்பு வந்துவிட்டது. இது பரியாரி சின்னப்பிள்ளையனின் மூலம் கிடைத்த—சொடுகி மகளின் சுமையை இறக்க கணவன் கறுத்தானை அனுப்பி வைத்ததன் பெறுபேறுதான் என்பதை நினைத்துப் பார்க்க அவருக்கு நினைவு வரவில்லை.

படுக்கைக் கட்டிலில் இருந்தபடி அவர் அம்மாளின் கையைப் பிடித்தார்.

"உதென்ன விசர்வேலை, நல்லா விடிஞ்சும் போச்சு. வெளியிலையும் ஆக்கள், சரியாச் சுகம் வாறதுக்கிடை யிலை..." என்று மெதுவாகச் சொல்லிக் கையை விடு வித்துக் கொண்டே அம்மாள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்துவிட்டாள்.

"கார்க்காறப் பொடியனைப் போக விட்டிடாதையும் இண்டைக்கும் வேலை கிடக்கெண்டு, அவனெட்டை அலுவல் இருக்குதெண்டு நிக்கச் சொல்லிச் சொல்லும்" என்றார் நயினார்.

அம்மாளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அம்மாள் வெளியே வந்தாள்.

நல்லதம்பியன் அப்போதுதான் வேலி வேப்பங்குச்சி யைப் பிடுங்கிப் பல் துலக்கிக் கொண்டு நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாச்சிக் குஞ்சி அவனுக்கு உணவு தயாரித்து விட்டாள்

புட்டும், சம்பலும், முதல் நாள் கோழிக் கறியும்!

''குஞ்சி, உவனைப் போகாமல் மறிக்கட்டாம்; அலுவல்கிடக்காம்; அவர் சொன்னவர்!'' என்று செல்லாச்சிக் குஞ்சிக்குக் கூறிவிட்டே அம்மாள் கூனிக்குறுகிக் கொண்டு,புதுமணப் பெண்ணைப் போலச் சுருண்டு அவன் கண்களுக்குப் படும் வண்ணம் கொல்லைப்பக்கம் போய் விட்டாள்.

நயினார் போர்த்து மூடிக்கொண்டு வீட்டு அறைக்கு வெளியே விறாந்தையின் ஈச்சாரில் சாய்ந்து கொண்டார்.

நல்லதம்பியன் செல்லாச்சிக் குஞ்சி கொடுத்த தண்ணீர்ப் பேணியில் முகம் அலம்பிக் கொண்டிருந்தான்.

''எட மோனை இப்பிடி வாடா ஒரு கதை!'' என்ற நயினாரின் குரல் நல்லதம்பியனை ஒருமாதிரி ஆக்கியது.

கடந்த இத்தனை நாள் பழக்கத்தில் ''எட மோனை'' என்று அவர் அழைத்ததில்லை.

நல்லதம்பியன் தனது தோளின் சவுக்கத்தால் முகத்தை துடைத்துக் கொண்டே வந்தான்.

''எட பொடி, இண்டைக்கு என்ரை ஊர் வலிக்கண்டிப் பக்கம் ரெண்டொருக்காப் போய் ஐஞ்சாறுபேரை உன்ரை காரிலை ஏத்திக்கொண்டு வரவேணும். உன்னோடை நான் ஆளை அனுப்புறன். மத்தியானத்துக்குப் பிறகு போனாப் போதும். இரவைக்குத்தான் ஆக்கள் தேவை. என்ரை தோட்டக் கிணத்திலை திடலில் நளவர் இரவிலை தண்ணி அள்ளிறாங்களாம், அவங்களுக்கு இண்டைக்கு நல்ல சாப்பாடு குடுக்கவேணுங் கண்டியோ, நீயும் உதவிக்கு நிண்டிட்டு நாளைக்குப் போவன்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாரின் இந்த உத்தரவை நல்லதம்பியனால் மறுக்க முடியவில்லை மனதுக்கு அப்படி வரவுமில்லை.

அந்தவேளை விதானையார் வந்து சேர்ந்தார்.

"என்னகாணும், எப்பிடி ராத்திரி நித்திரை வந்துதே? இனி உம்மை ஒண்டும் அசைக்காது காணும். நவாலிச் சின்னப்பிள்ளையன் என்ன குறைஞ்ச ஆளே?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

பல வருடங்களுக்குப்பின் வந்த புதிய உறவு! அது விரைவில் விரிவடைவதற்கான அறிகுறிதான் அவர் வரவும் அந்தப் பேச்சும்!

நயினார் சற்று கால் ஊன்றி எழுந்து அவரை வரவேற்றார்.

விதானையார் கட்டிலின் ஒரு பக்கத்திலேயே இருந்து விட்டார்.

நல்லதம்பியன் குறுக்கை நில்லாமல் கார் நின்ற கொட்டில்வரை சென்றான்.

விதானையாரும் நயினாரும் காதோடு காது வைத்தாற்போலப் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சு முடியச் சுணங்கி விட்டது

காலைக்கடனை முடித்து, கிணற்றடியில் முகம் அலம்பியதனால் வெளிவந்த குளிரை முன்தானைச் சேலையால் உடம்பின் உள்ளே அதிக தூரம் போகவிடாமல் மூடி மறைத்துக் கொண்டே அன்னப்பிள்ளை நாச்சியார் அடுக்களைக்குள் வந்து விட்டாள்.

கதையோடு கதையாக ஒண்டிக்கட்டை விதானையாரின் கண்கள் அன்னப்பிள்ளை நாச்சியாரை மேய்ந்தன.

"நீர் சொன்ன மாதிரி காரைக் கொண்டு போனா ஆக்கள் புழுகத்திலை ஏறியந்திடுவாங்கள். நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசினை. நான் பன்ரெண்டு ஒருமணி வரையிலை ஆளொண்டை அனுப்பி விடுகிறன், உம்மடை கோவி யனையும் கூட அனுப்பிவிடும். நெருக்கி ஏறினா எட்டுப் பேர் எண்டாலும் ஏறலாம். ஏன் கனக்க ஆக்களை?'' என்று கூறிவிட்டு விதானையார் சென்றுவிட்டார்.

தட்டுவம் நிறைந்த புட்டுடனும், மேலே குவிக்கப் பட்ட கோழிக் கறியுடனும், கையில் பேணித் தண்ணீ ருடனும் செல்லாச்சிக் குஞ்சி அடுக்களை விறாந்தையில் நல்ல தம்பியனுக்காகக் காத்திருந்தாள். ''எட பொடி வாடா மோனை!'' என்றும் குரல் வைத்தாள்.

நல்லதம்பியன் விறாந்தையில் குந்தித் தட்டுவப் புட்டைக் குழைத்துத் தின்னத் தொடங்கி விட்டான்.

அடுக்களைக்கு வெளியே வந்த நயினாத்தி அம்மாள், நயினாரை தோள்மூட்டைத் தாங்கிப் பிடித்து விறாந் தைக்கு வெளியே இறக்கி, காலைக் கடன்களுக்காக கிணற்றடிப் பக்கமாக இட்டுச் சென்றாள்.

நீண்ட நாட்களுக்குப் பின்பு நயினார் கிணற்றடிப் பக்கம் போகிறார்.

நல்லதம்பியன் தட்டுவப் புட்டின் ஆழத்தில் கை புதைத்துக் குழைத்தபோது ஏதோ வழுவழுப்பாக கைக்குப் பட்டது.

அவித்து உடைத்து வைக்கப்பட்ட முட்டை.

ஒன்றல்ல இரண்டு.

செல்லாச்சிக் குஞ்சி அடுக்களைக்கு உள்ளேதான் இருந்தாள்.

''சீ, பொடியனுக்கு ஒரு முட்டை அவிச்சுக் குடுக்க எண்டு நினைச்சனான் மறந்து போனன் வயது போட்டுது; மறதி வந்திட்டுது!'' என்று செல்லாச்சிக் குஞ்சி சொல்லிக் கொண்டது நல்லதம்பியனுக்குக் கேட்டது. அவனின் உள்மனது சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானச் சாப்பாட்டுக்காக செல்லாச்சிக் குஞ்சி அவசர அவசரமாக அடுக்குகள் செய்து கொண்டிருந்தாள். நல்லதம்பியனை அன்றும் வீட்டு விருந்தாளியாக மருமகன் மறித்தது அவளுக்குத் தெரியும். அதுவும் பன்னிரெண்டு மணியளவில் விதானையார் அனுப்பும் ஆளையும், மருமகன் அனுப்புவதாகச் சொன்னவனையும் காரில் ஏற்றிக்கொண்டு அவன் போகவேண்டும். கோயில் சந்தை கூடுவது—அதுவும் கறிக்கடை கூடுவது மதியத்திற்கு மேல் தான். என்ன செய்வது? இன்றும் கோழி ஒன்றுதான் பிடித்தாக வேண்டும். அன்னப்பிள்ளை நாச்சியாரும் அதைத்தான் வற்புறுத்தினாள்.

அன்னப்பிள்ளை நாச்சியார் கிணற்றடி அடுப்பில் பித்தளை அண்டாவை வைத்து வெந்நீர் தயாரித்துக் கொண்டிருந்தாள். மூத்ததம்பி நயினாருக்கு நீண்ட நாட்களுக்குப் பின் இன்று வெந்நீர்க் குளிப்பாட்ட வேண்டும். ''நாளைக்கு நல்ல நாள். வெந்நீர்க் குளிப்பாட்டும்படி பரியாரி சின்னப்பிள்ளையன் சொல்லியும் அனுப்பியிருக்கிறான்.''

நல்லதம்பியன் தனது காரைக் கழுவும் பாவனையில் அடிக்கடி கிணற்றடிக்கு ஏதனத்துடன் போக, அம்மான் துலாக்கொடி பிடித்துத் தண்ணீர் இறைக்க......

கார் கழுவப்படுவதற்குப் பதில் முற்றாகச் சூடுபறிய முழுக்காட்டப்பட்டுக் கொணடிருந்தது.

மூத்ததம்பி நயினார் காலைச் சாப்பாட்டை ஓரளவாக முடித்துக் கொண்டு மத்தியான வெந்நீர்க் குளிப்புக்காக விறாந்தைச் சாய்மனையில் காத்திருந்தார்.

நல்லதம்பியன் காரில் இவ்வளவு அக்கறை செலுத்துவதைக் கண்டு ''சாய்! என்ன மாதிரிக் காரை வைச்சிருக்கிறான், பிள்ளை மாதிரி! இப்பிடி ஒரு நறுக்கான கோவியனை நான் காணேல்லை; கேளம்பியனெண்டால் கிட்டத்தட்ட வெள்ளாளர் மாதிரித்தான், எண்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அந்தக் கலப்பெல்லே!'' என்று மனதுக்கு வெளியேயும் கூறிக் கொண்டார்.

மதியத்திற்கு முன் அம்மாள் நயினாருக்குக் குளிப்பாட்டி முடித்து விட்டாள்.

செல்லாச்சிக் குஞ்சி நல்லதம்பியனுக்கு கோழிக்கறி வறுவலுடனும் பொரியலுடனும் உணவு கொடுத்து முடித்து விட்டாள்.

அம்மாளும் ஐயாவுக்கு உணவு குழைத்துக் கொடுத்து விட்டுக் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குப் போய் விட்டாள்.

ஒரு மணி வரையில் விதானையார் அனுப்பிய ஆள் வந்து சேர்ந்தான். நயினாரின் கோவியனும் வந்துசேர நல்லதம்பியனின் கார் வலிக்கண்டியை நோக்கிப் புறப்பட்டு விட்டது.

கார் இரைச்சலுக்கு ஒருதடவை ஊர்கூடிக் கலைந்தது.

நயினாருக்கு கார் போனதன் பின்புதான் திண்டகளையின் மெய்யுறக்கம் வந்தது.

அம்மாளுக்கு இன்னும் குளிப்பு முடியவில்லை. அம்மாளோடு கோவிச்சியும் நின்று ஊத்தை உருட்டி ஒத்தாசை செய்தாள்.

''என்ன நாச்சியார் நாலைஞ்சிடத்திலை ரெத்தம் கண்டிப் போய்க் கிடக்கு?''

இப்படி கோவிச்சி கேட்ட கேள்விக்கு அம்மாள் பதில் சொல்லத் தயங்கினாள்.

''நயினாருக்கு வருத்தமும் வருத்தந்தான் எண்டாலும் உதுகள்ளை விடார்...!''

அவளே மறுபடியும் பேசினாள்.

''எடி விசரி விசர்க்கதை கதைக்காதையெடி!'' அம்மாள் அவளை இலேசாகக் கடிந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன பிள்ளை ஆளுக்காள் கடிபடுகிறியள்?''

இப்படி அடுக்களைக்குள்ளிருந்து செல்லாச்சிக் குஞ்சியின் குரல் எழுந்தது.

''ஒண்ணுமில்லைக் குஞ்சி இவள் கோவிச்சிக்கு வாய் மூத்திட்டுது!'' என்று அன்னப்பிள்ளை நாச்சியார் பதில் சொன்னாள்.

''அவள் நெடுக உப்பிடித்தான் பிள்ளை. சோறு தேறப் போகுது கெதியாய் குளிச்சுப்போட்டு வா! உனக்கொரு முட்டை அவியப்போடெட்டே?''

செல்லாச்சிக் குஞ்சியின் இந்தக் கேள்விக்கு ''ஏனணை வேண்டாம் விடணை!'' என்றாள் நயினாத்தி!

''அவவின்ரை கதையை விட்டிட்டு அரை அவியலாப் போட்டுக் குடுக்க நயினாத்தி! இண்டைக்குக் குடுக்காம பேந்தெப்ப குடுக்கப்போறியளாக்கும்!'' என்று கோவிச்சி கூறயபோது நயினாத்தி தன்னை அறியாமலே அவளின் வலக்கையில் ஒரு கடி கடித்து விட்டாள்.

''உதென்ன நாச்சியாருக்கு ஒரு புதுப்பழக்கம்?'' என்று ஒரு பகிடியை உதிர்த்து விட்டாள் அவள்.

குளிப்பு முடிந்தது.

# 18

**பொ**ழுது படுவான் கரைக்குள் புதைந்தும் நீண்ட நேரம் ஆகிவிட்டது.

மூத்ததம்பி நயினாருக்கு இருக்கை கொள்ளவில்லை. முற்றம் வரை வந்து வெளியே மண் வீதியைப் பார்ப்பதும் பின்பு சற்று வேளை சாய்மனையில் சரிவதும், மீண்டும் முற்றம்வரை வருவதுமாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல பனியெல்லையப்பா பெய்யுது! போனவங்கள் வராமல் விடப்போறாங்களே?" என்று அன்னப்பிள்ளை நாச்சியார் அநுதாபத்துடன் பேசினாள்.

"வருவாங்கள்! எண்டாலும் நிலவும் படப்போகுது; வழியிலை கிளியிலை கார் பழுதாப்போய் இருக்குமெண்டு தான் பயமாக் கிடக்கு!"

மூத்ததம்பியர் சமாளித்துக் கொண்டு பதில் சொன்னார்.

"சீ! கார் பழுதாப்போகாது. நல்லதம்பியன் பழுதாப் போக விடான்! எண்டாலும் வலிக்கண்டி மணலுக்கை புதைஞ்சு கிதைஞ்சு போனாலும் போகிடுமெண்டுதான் யோசனையாக்கிடக்கு!"

அன்னப்பிள்ளை நாச்சியார் சொல்லி வாய் மூடுமுன் மணல் பாதையில் தூரத்தில் கார் இரைந்தது கேட்டது.

"கார்ச் சத்தங் கேக்குது வந்திட்டாங்கள்!" என்று மூத்ததம்பி நயினார் மன ஓச்சல் பெற்றுக் கொண்டு மணல் ஒழுங்கை முகரிவரை சென்று காரை வரவேற்றார்.

வெளிச்சக் குழம்பைக் கக்கிவிட்டுக் கார் நின்றது.

காரில் இருந்து எட்டுப்பேர் வரை இறங்கினர். நல்ல தம்பியனையும் கூட்டிச் சென்ற இருவரையும்விட புதிதாக வந்தவர்களின் எண்ணிக்கை ஐந்து மட்டுந்தான்.

"என்னடாப்பா ஐஞ்சுபேர் மட்டிலை வாறியள்! மற்றவையை ஏத்த கார் திரும்பிப்போக வேணுமோ?" என்றார் மூத்ததம்பி நயினார்.

"நயினாற்றை அத்தான்காறன்றை ரெட்டை மாட்டு வண்டில்லை எட்டுப்பேர் வேளையோடை வெளிக்கிட்டு வந்திட்டாங்கள். வரேக்கை நாங்கள் சந்திக்கேல்லை! தரவைப் பக்கங்களாலை வாறாங்கள் போலை கிடக்கு!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒருவன் சொன்ன பதில் நயினாரின் மனதைக் குளிரவைத்தது.

வந்தவர்களுக்கு கார்க் கொட்டிலுக்குள் வைத்து உபசார வரவேற்பு நடந்தது.

சற்று வேளை ஆயிற்று.

வண்டியும் வந்து சேர்ந்து விட்டது.

மொத்தத்தில் வந்தவர்களின் எண்ணிக்கை பதின்மூன்றாயிற்று. நல்லதம்பியனையும், விதானையார் அனுப்பியவனையும், தனது சொந்தக் கோவியனையும் சேர்த்தால் பதினாறு என்று நயினார் கணக்கெடுத்துக் கொண்டார்.

நான்கைந்து சீல் சாராயப் போத்தல்களையும் நான்கைந்து சிரட்டைகளையும் நயினார் கொடுத்து விட்டு அவர்களில் ஒருவனைக் கொண்டு பிரம்பு ஈச்சாரை அவர்களுக்குப் பக்கமாக எடுத்துச் சாய்ந்து கொண்டார்.

அரிக்கன் லாம்பு பிரகாசமாக எரிந்தது.

''இதிலை மூண்டுபேர் உங்கடை நயினார்ப் பொடியளாக்கும்!'' என்றான் ஒருவன்.

''எட நானும் நினைச்சன் எல்லாரும் கோவியப் பொடியள் எண்டு! ஆற்றாப்பா அது எங்கடை பொடியள்?''

நயினாரின் இந்தக் கேள்விக்கு ஒருவன் அவர்கள் மூவரையும் அடையாளங் காட்டினான்.

''நானும் ஊரை விட்டு வந்து பத்து வரிசத்துக்கு மேலை ஆச்சு! தம்பியவை நீங்கள் ஆற்றை மக்கள்?'' என்று நயினார் கேட்ட அடுத்த கேள்விக்கு அவர்களும் அறிமுகம் செய்யப்பட்டனர். அந்த அறிமுகங்களின்படி பார்த்தால் அவர்கள் நயினாருக்கு நெருங்கிய உறவினராக இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மூவருக்குமென செல்லாச்சிக் குஞ்சி மூன்று பித்தளைப் பேணிகளைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

''இன்னுமொரு வியளமாக்கும்!''

''என்னெடா அது?''

''பிறகு சொல்லாட்டிலுங் கோவிப்பியள்! இந்தப் பொடியனும், அவனும் குசவபகுதியாக்கும்!''

''எட அதுகும் அப்பிடியே?''

இந்தக் குரல் வெளியே கேட்ட சிறிது வேளைக்குள் செல்லாச்சிக் குஞ்சி சின்னஞ்சிறிய இரண்டு பேணிகளைக் கொண்டு வந்து விட்டாள்.

வேளையோடு தயாரிக்கப்பட்டிருந்த முட்டை வறட்டலும், கருவாட்டுச் சம்பலும் வந்தன. அத்துடன் காய் மிளகாய், உரித்த வெங்காயம், உப்புக்கல்லு ஆகியவையும் வந்து சேர்ந்தன.

ஒரு மணி நேரத்திற்கு மேல் விருந்து நீடித்து விட்டது.

மணி பன்னிரெண்டுக்கு மேல் ஆகிவிட்டது.

பின்பு குசுகுசு பேச்சுக்கள்!

இனி எல்லோரும் தோட்டக் கிணற்றை நோக்கிப் புறப்பட வேண்டும்.

எல்லோரும் எழுந்து விட்டனர்.

நல்லதம்பியனையும் அருட்டினார்.

அவன் எழுந்திருக்கவில்லை.

''அவன் கனக்கக் குடிச்சிட்டான் போலை கிடக்கு! இந்த வெறியோடை வந்து அவன் ஆனவாவிலை ஒண்டும் செய்யான்!

இப்படி மூத்ததம்பி நயினார் சொல்லவே எல்லோரும் தோட்டக் கிணற்றை நோக்கிப் புறப்பட்டு விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர் கரங்களிலும் தடிகள் பொல்லுகள்!

ஓரிருவர் கையில் கத்திகள்.

''கவனமெடா பொடியள்! சொன்னதுமாதிரிச் செய்து போட்டு வந்திடுங்கோ!''

நயினார் இப்படித்தான் எச்சரித்து அனுப்பி வைத்தார்.

அன்னப்பிள்ளை நாச்சியார் எதிலும் அதிக அக்கறை செலுத்தாதவளாகி கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய்விட்டாள். செல்லாச்சிக்குஞ்சி அடுக்களை விறாந்தையில்! நல்லதம்பியன் கார் கொட்டிலுக்குள்; மரணவெறியில்!

நேரம் போய்க் கொண்டிருந்தது.

மூத்ததம்பி நயினாருக்கு இருக்கை கொள்ளவில்லை. அரிக்கன் லாம்பை எடுத்துச் சிறிது தணித்து ஒளியை மட்டுப்படுத்திக் கொண்டு பின்பக்க வளவால் மெதுவாக நடந்து தோட்டக்கரை எல்லைக்கு வந்து அங்கு நின்ற முதுபூவரச மரமொன்றின் கீழ் சார்மனையில் சாய்ந்து கொண்டார். சற்றுத் தொலைவிலுள்ள தோட்டக்கரைக் கிணற்றண்டை என்ன நடக்கிறது என்பது கண்களுக்குத் தெரியாவிட்டாலும், அதைக் கண்ணால் காண்பது போன்று பாவனை செய்துகொள்ள வேண்டுமென்ற பேராசை!

''நான் தோட்டக்கரை பூவரசமரத்தெடியிலை இருப்பன்; தண்ணி அள்ளிறவங்கள் வந்து உங்கடை அலுவலும் முடிச்சாப்போலை ஒருக்காக் கூக்காட்ட வேணும்'' என்பது வேளையோடை அவர் இட்ட கட்டளை!

வெகுநேரமாகியும் கூக்காட்டல் கேக்கவில்லை.

சிங்கப்பூர்க் கம்பிளியால் தலையிலிருந்து உடல் முற்றாக மூடப்பட்டிருந்தாலும் உடம்பு நடுக்கமெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் உடம்பு, முதுமை எல்லாம் அவரை நடுங்க வைத்தன.

அவர் கூறியதுபோல அந்தக் கூக்காட்டல் கேட்டதின்மேல்தான் கணவனானவர் வருவார் என்பது அன்னப்பிள்ளை நாச்சியாருக்குத் தெரியும்.

அந்த ஓசை வீடுவரை நிச்சயமாகக் கேட்கும்!

செல்லாச்சிக் குஞ்சிக்கு வழமையில் குறட்டை விடும் பழக்கம்! அவளின் குறட்டை கேட்டது.

நல்லதம்பியனும் வெறியில் கிடக்கவில்லை. வேண்டுமென்றுதான் அவன் அப்படிக் கிடக்கிறான் என்பதை அம்மாள் வேளையோடேயே புரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு உப்பு வெளிக்கு அப்பால் உள்ள தாளங்காட்டிலிருந்து நரிகள் ஊளையிடும் சத்தங்கள் மட்டும் தெளிவாகக் கேட்டன. அத்துடன் இடையிடையே அவைகள் ஒன்றை ஒன்று பிராண்டிக் கொண்டு செல்லம் கொஞ்சும் நளின ஓசைகளும் எழுந்தன.

இராக்காலங்களில் நேரங்கெட்ட நேரங்களில்தான் நரிகள் ஆண்பெண் உறவுகளை வைத்துக் கொள்கின்றன என்பது பொதுவாகக் கிராமங்களில் பரவிவந்த நம்பிக்கை. அத்துடன் ஒன்றுக்கு நான்கு என்ற விதத்தில் நாய்கள் முரண்பட்டுக் கொள்வது போல அல்லாமல் ஒன்றுக்கு ஒன்றுமட்டுந்தான் என்பதும் கதை!

செல்லாச்சிக் குஞ்சி ஏதோ அரவங் கேட்டுச் சற்று அசதி கலைந்தாள்.

தோட்டக் கிணற்றடிக்குப் போனவர்கள் வந்துவிட்டது போன்ற எண்ணந்தான் தூக்கம் கலைந்த அவள் மனதில் தோன்றியது. ஆனால் அதற்குமேல் எந்தவித அருட்சியும் இல்லாமல் போகவே அந்த எண்ணம் மனதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து போய்விட்டது. ஆயினும் தனது தூக்கக் கலைவுக்கான காரணத்தை அறிய அவள் அதிக தூரம் முயற்சிக்கவில்லை. அடுக்களைக்குள் நாய் பூனை புகுந்ததனாலும் இப்படித் தூக்கக் கலைவுக்குக் காரணம் இருக்கலாம்! ஆனால் அப்படி ஒருபோதும் ஏதும் அடுக்களைக்குள் சென்றதில்லை! அதனால் அதுவும் நினைவில் நிற்கவில்லை.

வெறி மயக்கத்தில் நல்லதம்பியன் ஏதாவது பீற்றுகிறானோ என்றும் யோசித்தாள்; காதைச் சற்று நிதானப்படுத்தியும் வைத்தாள். அப்படி ஒன்றும் கேட்கவில்லை. ஆயினும் ஒருதடவை நல்லதம்பியனைப் பார்க்க மனது தூண்டியது.

எழுந்தாள்,

நல்லதம்பியன் கிடந்த கார் மடுவத்துக்குள் சென்றாள்.

அங்கு நல்லதம்பியன் இல்லை. சற்றுவேளை காத்து நின்றாள்.

''நல்லதம்பியனும் எழுந்து தோற்ற கிணற்றடிக்குப் போய்விட்டானோ?'' என்ற எண்ணந்தான் அவளுக்கு வந்தது.

இதற்குமேல் அவள் படுக்கைக்குப் போய்விட்டாள்.

திடல் பக்கமிருந்து கூக்குரல்கள் எழுந்தன.

''அவங்களை வீடுதேடிப்போய் அடிக்கிறாங்களாக்கும்!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே எழுந்து திடல் பக்கமாக தரவை வெளிக்கூடாகக் கண்களை ஊரவிட்டாள்.

எங்கும் தீச்சுவாலை!

குடிசைகள்பற்றி எரிந்து ஒளித்துகள்களை மேலே மேலே தள்ளிக்கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாசமறுவாங்கள் அவங்கடை கொட்டிலுகளையும் கொளுத்துறாங்கள்!'' இப்படி அவள் மனது கூறியது.

சிங்கப்பூர் போர்வையுடன் நயினார் முதுபூவரச மரத் தடியிலிருந்து அவசரமாக இருட்டோடு இருட்டாக வந்து கொண்டிருந்தார்.

நயினார் காட்டிய குறிப்புக்கு மேலாகத் திடலின் குரல் குமைந்தெழுந்தது.

செல்லாச்சிக் குஞ்சியும், நயினாரும் ஒரே நேரத்தில் வந்து சேரவில்லை. செல்லாச்சிக் குஞ்சியே முதலில் வந்து சேர்ந்தாள். வந்தவளின் பார்வையில் நல்லதம்பியன் பட்டான். அதுவும் கிடுகுக் கொட்டகைக்குள் சுருண்ட நிலையில்.

செல்லாச்சிக் குஞ்சிக்கு நெஞ்சு ஒரு கணம் துணுக் குற்றது.

நயினார் அதற்கிடையில் வந்து சேர்ந்து விட்டார். அவர் சாய்மனையில் சாய்ந்து கொண்டார்.

சற்று வேளைக்குள் போன கூட்டமே வந்து சேர்ந்து விட்டது.

''இஞ்சைபார் உவன் நல்லதம்பியன் இன்னும் எழும் பேல்லை. நல்ல சண்டியனைத்தான் நயினார் தேடிப் பிடிச்சார்!''

இப்படி ஒரு குரல்.

''எண்டாலும் அவன் மானிப்பாய்க் கலப்புச் சண்டியனெடாப்பா ஆகவும் பகிடி விடாதை!''

இப்படி வேறோர் குரல்.

''ஒரு வீடும் மிச்சமில்லை நயினார், கிணத்தடியிலை அவங்களைக் கலைக்கேக்கை ஆரோ ஒருத்தன் சீனடி சிலம்படி காட்டி நாலைஞ்சுபேருக்கு அடிச்சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டான். பேந்து வைச்சுப் பாக்கிறதே? திடலுக்கை பாஞ்சு எல்லாத்தையும் மூடிச்சுப்போட்டம்!"

நயினாருக்குத் தெரியக்கூடியதாக எதிர்த்துக் கை உயர்த்தக் கூடியதாகத் திடலுக்குள் யாரும் இல்லை.

''என்னெடாது? ஆற்றா அந்தச் சிலம்படிகாறன்! திடலு நளவங்களுக்கை அப்பிடி ஒருத்தன் இருக் கிறானோ? அடையாளந் தெரியேல்லையோ? டேய் மாரியான், இவங்கள் வெளியூரவங்கள் உனக்குங் கூடத் தெரியாமல் போய்ச்சோடா?

நயினார் கோவிய மாரியனை அதட்டிக் கொண்டே கேட்டார்.

''பேய் இருட்டாக் கிடந்துதாக்கும், அதுக்கையும் அவன் மின்னல் மின்னலாப் பாய்ஞ்சு பாஞ்சு அடிச்சத்திலை அடையாளம் பிடிக்கேலாமல் போச்சாக்கும்!''

மாரியன் மசுகிக்கொண்டே பதில் சொன்னான்.

அரிக்கன் லாம்பை உயர்த்திப் பிடித்துக் கொண்டே நயினார் எல்லோரையும் கவனித்தார்.

ஒருவனின் கடவாய் உடைந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது; இன்னொருவனின் கைமூட்டுப் பெயர்ந்து அவன் மறுகையால் அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு அனுங்கினான். இன்னொருவனின் முகம் உப்பி இரத்தக் கசிவு தெரிந்தது.

நயினாருக்குப் பொறுக்க முடியவில்லை.

அப்போதுதான் நல்லதம்பியன் தூக்கம் கலைந்த வனைப் போல முறுகி நெளிந்து கொண்டே கண் விழித்தான்.

''நல்லதம்பியன் வீரன். திடலாங்களுக்கை இப்படி ஒருத்தன் இருப்பான் எண்டு தெரிஞ்சு நசுக்கிடாமல் நிண்டிட்டான்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைச் சொன்னவன் விதானையார் அனுப்பி வைத்த பேர்வழி.

''சும்மா கனக்கப் பகிடி விடாதையுங்கோ! சாராயத்தை எப்பன் உண்டனக் குடிச்சாப்போலை கிடந்திட்டன். இப்பான் அது முறிஞ்சுது! என்ன உங்காலுப் பக்கம் வெளிச்சம் மூளாசுது? அவங்கடை வீடுகளை எரிச்சுப்போட்டியல் போலை கிடக்கு.''

வீட்டுக்குள் இருந்து குறட்டைச் சத்தம் கேட்டது.

வழமையில் அன்னப்பிள்ளை நாச்சியார் இப்படிக் குறட்டை விடுவதில்லை.

செல்லாச்சிக் குஞ்சிக்கு இந்தக் குறட்டை எல்லாவற்றையுமே விளங்கவைத்து விட்டது.

அவள் நல்லதம்பியனின் முகத்தையே கூர்ந்து கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சரிசரி விஷயம் வெளியிலை தெரியிறதுக்கிடையிலை அவரவரை போய்ச் சேந்திடுங்கோ! இப்ப வெளிக்கிட்டியள் எண்டா விடியிறதுக்கிடையிலை வலிக்கண்டிக்குப் போகிடலாம். எட மோனை நல்லதம்பி நீயும் விடியறதுக் கிடையிலை வெளிக்கிட்டுப் போகிடு! போகேக்கை கூலியை அம்மாவெட்டைக் கேள்! அவ மனக்குறை இல்லாமத் தருவா!''

நயினாரின் இந்தப் பேச்சுக்குப்பின் எல்லோரும் புறப்பட்டு விட்டனர்.

''இஞ்சேரும் நித்திரை கொண்டது போதும், இஞ்சை இவன் நல்லதம்பியன் போகப்போறான் எழும்பிக் குடுக் கிறதைக் குடுத்து விடும்!''

இப்படிக்கு மனைவிக்கும் குரல் கொடுத்தார் மூத்த தம்பி நயினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

கிழக்கில் வெழுப்பு நன்றாகக் காண்பதற்கிடையில் மணியகாரன் வீட்டுத் தலைவாயிலின் சங்கடப்படலைக்குள் கலகலப்புக் கண்டு விட்டது.

நான்கு நாட்களுக்கு முன் மணியகாரன் நயினாருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்ட முன்னேற்பாட்டின்படி புத்தூரில் வேட்டைக்காரப் பள்ளர் அவர்களின் வேட்டை நாய்களுடன் குழுமிக் கொண்டனர்.

நாய் ஒன்றை ஒன்று உறுமி முறாய்த்து அடக்கமாகக் குரல்வைத்துக் கொண்டும் வேட்டைக்காரர்களாகிய பத்துப் பேர்வரை அடக்கமாகப் பேசிக்கொண்டும் மணியகாரன் சங்கடப்படலையைத் திறக்கும்வரை காத்திருந்தனர்.

உள்ளே மணியகாரனின் வீமன் அருச்சுனன் ஆகிய இரண்டு நாய்களும் வெளியே நடந்த ஏனைய நாய்களின் ஆரவாரம் கேட்டுக் குறிப்பறிந்து ஆசையுடன் தனுவைத்துக் கொண்டிருந்தன.

அந்த வீமனுக்கும் அருச்சுனனுக்கும் இது பழகிப் போன ஒன்று. ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையேனும் புததூரரார் நாய்ப் பட்டாளங்களுடன் வருவதும் அவைகளுடன் சேர்ந்து இவைகள் தலைமை தாங்கிக் காடுலாவி வேட்டை பார்ப்பதும் பழகிப்போனவைகளாகும்.

புத்தூரில் உள்ள பத்துப் பதினைந்து குடும்பங்களுக்கு இந்த வேட்டை ஒரு தொழில் போல, கிழமையில் இரு தடவைகளேனும் ஆள்கூடி, நாய்களைக் கூட்டி அடுத்த கிராமங்களுக்கு அவர்கள் வேட்டை ஆடச் செல்வார்கள். இவர்கள் வேட்டைகளில் அனேகயாக உடும்பு, முயல், மரநாவி, புனுகு பூனை இவைகள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்படுவதுண்டு. உடும்புகள் அகப்பட்டு விட்டாலோ அவைகளை வளைத்து அவைகளின் வால்களினாலேயே உடும்புக் கட்டுக்கட்டி திருகணை வளையம் போல ஆக்கி அவைகளைத் தடி இட்டு ஊருக்காக கொண்டுவந்து விடுவார்கள். அவைகள் எத்தனை நாளைக்கேனும் உயிரு இருக்க வல்லவை. அதனால் அவைகளை எந்த நேரத்திலும் எந்தச் சந்தையிலும் விற்பனை ஆக்கி விடலாம்.

புனுகுபூனை அகப்பட்டு விட்டாலோ முடிந்த அளவு அவைகள் செத்துப்போகாமல் பாதுகாத்துக் கொண்டு வந்து வைத்தியர்கள் புனுகு எடுப்பதற்காக நல்ல விலைக்கு விற்று விடுவார்கள்.

முயல்கள் அகப்பட்டு விட்டாலோ தாமதம் செய்யாமல் குடலைக் கீறி எடுத்துவிட்டு நான்கு ஐந்துவரை சேர்ந்தவுடன் அருகே உள்ள சந்தைக்கு யாராவது ஒருவன் மூலம் அனுப்பிப் பணமாக்கி விடுவார்கள். முயல் இறைச்சிக்குச் சந்தைகளில் நல்ல கிராக்கி.

மரநாவி அகப்பட்டு விட்டாலோ இவர்கள்பாடு பெருங் கொண்டாட்டம்தான். ஆமான மரநாவியில் ஏறக்குறைய பத்து றாத்தல் இறைச்சிக்குமேல் தேறும். காட்டுக்குள்ளேயே வைத்து அதை வாட்டி எடுத்து அதன் உரோமங்களை வழித்து நன்றாகச் சுள்ளிவிறகில் வேக வைத்து மதிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து விடுவார்கள். காட்டில் பழவகை உள்ள காலத்திலென்றால் அதுவும் இலுப்பைப் பழக் காலத்திலென்றால் அந்த இறைச்சியின் ருசியே தனி ரகம், எந்தவித மாமிசமும் தின்னாத அந்த மரநாவியைப் புனிதத்திற்குப் புனிதமாகத் தான் மதிப்பார்கள்.

காடுகளைவிட உள்ளூரில் இருக்கும் மரநாவிகள் சுற்றி வர உள்ள கோழிகளை மட்டுந்தான் மச்சமாகப் புசிக்குமே தவிரக் கண்டது கடியதுகளை உண்ணாது. மொத்தத்தில் பார்த்தால் இந்த வேட்டைத் தொழில் இவர்களுக்குச் சீவியாம்சம் தருவது என்றே கூறிவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேட்டைக் கூட்டத்தில் இவர்களுக்கு ஒரு தலைவன் உண்டு. அவன்தான் சகலத்தையும் தீர்மானிப்பான். இன்று இந்தக் கிராமம், நாளை இந்தக் கிராமம், மறுநாள் இந்தக் கிராமம் என்பதைத் தீர்மானிப்பவன் அவன்தான். அத்துடன் அல்லாமல் அவனுக்குப் பலவிதங்களினாலான அனுபவ அறிவும் சேரவேண்டும்.

நாய்களை உசாவி, அவைகளுக்கு வேட்டைப் பொருள்களின் சுவடு கிட்டும் வகையில் நடத்திச் செல்வது, ஒரு நாய் சுவடு பிடிக்கத் தொடங்கினால் அது சுவடு பிடிக்கும் பொருள் எது என அநுமானிப்பது, சில சந்தர்ப்பங்களில் சுவடு பிடிக்கப்படும் அந்தப் பொருள் விஷப்பாம்பாகக் கூட இருக்கும்; இதனால் இந்தக் குறிப்பை உணர்ந்து அந்தச் சுவட்டைத் தடுத்து நாய்களை வேறு பக்கம் திருப்பி விடுதல், சுவடுபிடித்து நாய்கள் செல்லும் போது சுவடடிக்கப்படும் அந்தப் பொருள் மிகச் சமீபத்தில அல்லது சற்றுத் தூரத்திலா என்பதனை அநுமானித்து, அதற்கேற்ற விதத்தில் நாய்களைக் குறிப்பிடப்பட்ட இடத்தைச் சுற்றி வளைத்துக் கொள்ளச் சைகை காட்டி, சுண்டிவிட்டு உரப்பிவிடுதல், காட்டில் உலாவி வரும்போது எங்காவது புற்றுத் திடல்கள் இருந்தால் அங்கிருந்து சுவடடிப்படும் பொருள் அந்தப் புற்று இருக்கைக்குத்தான் வரும் என்பதை அநுமானித்துக் கொண்டு அந்தப் புதர் மேடையருகே இன்ரொருவரையும் ஓரிரு நாய்களையும் நிறுத்தி வைத்தல், எங்கிருந்தாவது ஒரு முயல் எழுப்பப்பட்டு விட்டால் அது ஓடிவரும் தரங்கள் தெரிந்து அதைக் கூடியது ஒன்றரை அடிவரை நீளாத கைத் தடியால் தவறாமல் எறிந்து வீழ்த்தும் வல்லமை இப்படிப் பல திறமை சேர்ந்த ஒருவனைத்தான் தலைவனாகக் கொள்வார்கள்

அகப்படும் வேட்டைப் பொருள்களில் சராசரியாக தலைக்கொரு நாய்க்காகப் பிரித்து ஒரு பங்கு, அந்தச் சராசரி பங்கு வீதமளவு தலைவனுக்கு ஒரு பங்கு, அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல பொதுப்பங்கு ஒன்று. அது அவர்களால் எல்லாம் ஒப்புக்கொள்ளப்படும் ஒரு பெரிய மனிதருக்கான பங்கு. இவைகள் போக, எப்படித்தான் பங்கு போட்டுக் கொண் டாலும் தங்கள் தங்கள் பங்குகளைத் தங்கள் தங்கள் தேவைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடும்புகளை உரித்து எடுக்கும்போது ஒரு அடி நீளத்திற்குமேல் அதன் தோல் தேறுமெனில் அதைத் தலைவனுக்கே கொடுத்துவிட வேண்டும் என்பது எந்தவிதத்திலும் மீறப்படாத விதி யாகும். இந்த விதியினால் மாந்திரிகத்திற்காக உடுக்குக் கட்டுபவர்கள், காத்தான் கூத்துக்காக உடுக்குக் கட்டுபவர் கள், பயிர்களுக்கு மழையிலாக் காலத்தில் கொடும்பாவி கட்டி அழுது சுடலைவரை கொண்டு சென்று அதைத் தகனம் செய்பவர்கள் என்ற நானாவிதங்களினாலான அண்ணாவிகள் அந்தத் தலைவனைச் சந்திக்கவும் போதிய விலைகொடுத்து அந்த உடும்புத் தோல்களைக் கொள் முதல் செய்தும் கொண்டே இருப்பர். இது தலைவனுக்குப் பிரத்தியேகமான வருமானம். சில வேளைகளில் தலைத் தெரிவான உடும்பை எடுத்து அதன் உடும்புக் கட்டை அவிழ்த்து அதன் கழுத்தைத் தனது வயிரம் பாய்ந்த கரங் களால் உடும்புக் குத்துக் குத்தி முறித்து தன் கையாலேயே அதன் நெஞ்சில் உள்ள மருத்தீட்டு எலும்பைப் பிய்த் தெடுத்து, சுத்தி படாமலே அதைப் பக்குவமாக உரித் தெடுத்து கொதிக்கும் வெயில் மணலில் அதை நாற்புறமும் இழுத்துக் கட்டை அடித்து, அதன் மேல் சாம்பலும் உப்பும் சேர்த்துத் தடவி, அளவான வெப்பம் காட்டி எடுத்து விட்டானானால் உடுக்குகளில் அது கிளப்பும் நாதத்திற்கு அதுதான் நிகர். இந்த அதிசயப் பண்முறை யைக் கூடத் தலைவனானவன்தான் படித்து வைத்துக் கொண்டிருப்பான். சில சந்தர்ப்பங்களில் உடுக்குக் கொட் டில் அரைப்பச்சைப் பருவத்திலேயே அந்தத் தோலை ஒட்டி, அதன் வலங்காரத்தில் குதிரை மயிரும், இடங் காரத்தில் சுறாமீன் நரம்பும் இணைத்து அவன் உடுக்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விடுவானானால் அதற்கு மதிப்பும் விலையும் வேறு. இப்படி எல்லாம் பதப்படுத்திச் செய்ய அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை. சதா வேட்டையாகவே தான் பெரும்பான்மைக் காலம் கழிந்துவிடும். ஏதாவது மாரி மழை அடைத்துப் பெய்தால் வேட்டைக்குப் போவது கஷ்டமானதாக இருக்கும் நாட்களில் தான் அந்தத் தலை வனுக்கு இந்த வேலை செய்ய நேரமிருக்கும்.

இத்தனை மகத்துவமும் மிக்க இந்தப் புத்தூர் வேட் டைத் தலைவன் பதவியை வகித்தவன் கணவதியான்தான்.

வயது ஏறக்குறைய நாற்பதுக்கு முன்பின்னாக இருக் கும்.

சகலதுக்கும் ஈடு கொடுக்கக் கூடிய திரேகம்.

வேட்டைகளின்போது வேட்டைப் பொருளைக் காடுகளில் தன்னந்தனியாகவே கலைத்துப் பிடித்துப் பல சாதனைகள் நிறைவேற்றியவன்.

இன்று அவன் தனது பரிவாரங்களோடு வடமராட்சிப் பகுதிக்கு வேட்டைக்கு வந்திருக்கிறான்.

மற்றைய இடங்களை விட வடமராட்சிப் பகுதியில் வேட்டையாடுவது சற்று வித்தியாசமானது.

வேட்டைக்கு வருவதற்கு நான்கு ஐந்து நாட்களுக்கு முன்பே சிற்றம்பலம் முதலியாரான சித்த மணியகாரனுக் குச் செய்தி அனுப்பிவிட வேண்டும்.

சித்த மணியகாரன் நயினார் தனது வீமனையும் அருச்சுனனையும் வேட்டைக்காகத் தயாராக்கி வைத்தி ருப்பார்.

மணியகாரன் நயினாரைப்போல ஊரில் பலர் இப்படி வேட்டை நாய்கள் வைத்திருக்கிறார்கள். ஏன் விதானை யார் நயினாரிடம் கூட வேட்டை நாய்கள் நிற்கின்றன. ஆனால் அவரை இந்த விஷயத்தில் கணவதியானோ மற்ற வர்களோ கனம் பண்ணுவதில்லை. சித்தமணியம் நயினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் சம்மதமின்றி வடமராட்சி மண்ணில் எந்த விண்ணனும் கால்வைத்து வேட்டை ஆட முடியாது. அதிலும் மணியகாரனின் வீமனும், அருச்சுனனுந்தான் முன்வரிசையில் ஏனைய வேட்டை நாய்களுக்கு காடுகாட்டிச் செல்ல வேண்டும்.

புலோலி, தும்பளை, குடத்தனை குடாரப்பு, வலிக்கண்டி, செம்பியன்பற்று ஆகிய மணற்பாங்கான பூமியில் வேட்டைப் பொருட்களை மணலில் அடிநடத்திச் சென்று வேட்டையாடுவதில் கணவதியானுக்குப் பெரும் மகிழ்ச்சி. ஒருதடவை வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குத் தெற்கால் வலிக்கண்டி மணலில் அவன் வேட்டையாடிச் சென்ற போது மணியகாரனின் வீமன் ஏதோ ஒரு பொருளைச் சுவடித்துச் செல்வதைக் கண்டுவிட்ட கணவதியான் வீமன் சுவடித்துச் செல்வது அடாத ஒரு பொருள் என்று எண்ணி அதைத் தடுத்துத் திசை திருப்புவதற்கிடையில் வீமன் ஒரு ஈச்சம்பற்றைக்குள் புகுந்து விட்டது

கணவதியான் கணவேளை திடுக்குற்றுப் போய்விட்டான். வீமன் பற்றைக்குள் இருந்து பென்னம்பெரிய கருநாகம் ஒன்றை நடுவயிற்றுக்கு மேல் பக்கமாகப் பிடித்து வெளியே இழுத்து வந்தது.

கருநாகம் படம் விரித்தும் சீறியும், வீமனை எட்டி எட்டிக் கொத்தவும் பிரயத்தனம் செய்துகொண்டிருந்ததும், அந்த கருநாகக் கொத்தலுக்கு அகப்படாமல் வீமன் தனது வீரசாகசத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. இது கண்களுக்குக் குளிர்ச்சியான ஒன்றாக இருந்தாலும் கணவதியானால் இந்தக் காட்சியை வெகுநேரம் பார்த்து ரசிக்க முடியவில்லை.

கணவதியான் மின்னல் வேகத்தில் வீமனுக்கு முன்னால் பாய்ந்தான்.

படமெடுத்துச் சீறிக்கொண்டிருந்த கருநாகத்தின் படத்தைப் படக்கெனப் பிடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீமன் ஒரு பக்கத்தே இழுத்தது.

கணவதியான் மறுபக்கத்தே இழுத்துப் பிடித்துக் கொண்டு கையிலிருந்த வெட்டுக் கத்தியினால் கருநாகத்தின் படத்தைத் துண்டித்து தொலைவில் வீசிவிட்டான்.

வீமனின் உயிர் மயிர் இழையில் தப்பியது.

கணவதியானின் துணிச்சலை எல்லோரும் பாராட்டினர்.

அந்தக் காட்சி இன்றும் கணவதியானின் கண்களுக்குள் நிற்கிறது.

அந்த வீமனின் உயிர் அவன் தந்த பிச்சை. இந்த நன்றி மணியகாரனாலும் மறக்கப்படாதது.

அதற்காக மணியகாரன் கணவதியான்மேல் அபார மதிப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்.

நன்றாக விடிந்து விட்டது.

மணியகாரனின் சங்கடப்படலை திறக்கப்பட்டது.

திறக்கப்பட்ட சங்கடப்படலைக் கூடாக மணியகாரன் நயினார் வீட்டுப் பெருந் திண்ணையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

மணியகாரனை முந்திக்கொண்டு வீமனும் அருச்சுனனும் கணவதியானைக் குறிவைத்து அம்புபோல ஊடுருவி வந்து கொண்டிருந்தன. வந்த அவை இரண்டும் மற்ற வேட்டை நாய்களைப் பொருட்படுத்தாமல் கணவதியானின் நெஞ்சுவரை உயரத்திற்குத் தாவிப் பாய்ந்து முன்னங் கால்களால் அவன் உடலை ஆலிங்கனம் செய்து நீண்டு வந்த பெரு நாக்குகளால் அவன் உடலை நக்கி நனைத்துக் கொண்டிருந்தன.

மணியகாரன் வந்துவிட்டார்.

"வீமா, அருச்சுனா கணவதியானுக்குக் கும்பிடு போடுங்கடா!" என்று குரல் வைக்கவே அவை இரண்டும் அவனது பாதத்தில் புரண்டு நெளிந்து அவன் பாதங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னங்கால்களால் வருடி வருடிவிட்டு நாக்கு நீரால் அந்தப் பாதங்களை அபிஷேகம் செய்தன.

கணவதியான் நிலத்தில் சக்கப்பணிய இருந்து அவை இரண்டையும் மிருதுவாகத் தடவிக் கொடுத்தான் அவன் அப்படித்தான் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்த மிருது வருடல் கிடைக்கும் வரை அவன் பாதங்களை அபிஷேகம்செய்யும் பணியை நிறுத்திவிடப் போவதில்லை.

''என்னெடா பொடியள் காலமை இன்னும் தண்ணி வென்னி குடிக்கேல்லையே?'' என்று மணியகாரன் ஒப்புக்குக் கேட்டுவிட்டு நிமிருவதற்கிடையில் வீட்டுக் கோவிச்சி, பழம் கஞ்சி கரைக்கப்பட்ட மோர்ப் பானையும் பனாட்டுத் தட்டும் சிரட்டைகளுமாக வந்து சேர்ந்து விட்டாள்.

''முதல்லை பழங்கஞ்சியையும் பனாட்டையும் தின்டிட்டு அடுக்குப் பண்ணுங்க. தோசை வரக்காட்டச் சொல்லி நேரத்துக்கே ஆள் அனுப்பினனான், வந்திடும். வந்தோண்ணை திண்டிட்டு வெளிக்கிடலாம்.

மணியத்தார் பேசிமுடித்துவிட்டு உள்ளே போவதற்குள் எல்லோரும் மோர்க் கஞ்சியும் பனாட்டும் உண்ணத் தொடங்கி விட்டனர்.

மோர்க்கஞ்சி பனாட்டு உண்டு முடிப்பதற்கு முன்னமேயே ஒரு குஞ்சுக் கடகத்தில் தோசையுடனும் ஒரு குண்டான் நிறைந்த ஓடு சம்பலுடனும் ஒருவன் வந்து சேர்ந்தான்.

தோசைகள் நாய்களுக்கும் வேட்டையர்களுக்குமாகச் சரியாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தப் பங்கு, விகிதத்தில் வீமனுக்கோ அருச்சுனனுக்கோ தனியான விகிதத்தில் எதுவும் இருக்கவில்லை. வேட்டைக்குப் புறப்படுமுன் வேட்டை நாய்களுக்குக் கொடுக்கப்படும் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதத்தில் ஏதாவது வேறுபாடு இருக்கக் கூடாது என்பது வேட்டை விதிகளில் ஒன்று.

தொலைவில் சூரனும், அவனுக்குப் பின்னால் வேறு இருவரும் வருவது தெரிந்தது.

சூரன் வருவானாக இருந்தால் அவன் கழுத்தில் தொங்கவிட்டு இருபகுதிக்கும் நடுவாக இறுகி முடியப் பட்ட நலமுண்டுத் துண்டு முடிச்சிலும், நெற்றியில் நிரந் தரமாக உள்ள பள்ளத்துக்கு நடுவே போடப்பட்டிருக்கும் பருத்த சந்தனப் பொட்டும், மேவி மழுங்கச் சீவி இழுக்கப் பட்டு பின்பக்கமாகப் பிடரியோடு இலாவகமாக ஒட்டியி ருக்கும் குடுமியும் தடித்த உடலுடன்கூடிய ஆசானுபாகு வான உருவமும் அவனை தொலைவில் வரும்போதே அடையாளம் காட்டிவிடும்.

வேட்டைக்குப் புறப்படுவதென்று நயினார் அறிவித்து விட்டால் முன்னர் என்றால் அவன் கையில் சன்னத் துவக் கும் மருந்துப் பெட்டியும் கட்டாயம் இருக்கும். இப் போது அவன் துவக்கைக் கையால்தொடுவது கூட இல்லை.

மணியகாரனுக்கு மணிப்புறா இறைச்சி என்றால் பேரவா! அந்த ஒரு ஆசைக்காக மட்டுமே முன்னர் வேட் டைக்குப் போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சூரனை துவக்குச் சூட்டுக்காக அனுப்பி வைப்பார். மணிப்புறா வுக்காக மட்டுந்தான் சூரனை மணியகாரன் வேட்டைக் குக் கூட அனுப்புவது வழக்கமாயினும் இதில் உள் ரகசியம் ஒன்றையும் உள்ளடக்கித்தான் வைத்திருந்தார். தனக் கான சகல அதிகாரங்களும் சூரனுக்குக் கையளிப்பதான ஒரு முறைக்காகவும், சூரனின் இந்த மணிப்புறா வேட்டை உரிமை சில சந்தர்ப்பங்களில் கூளக்கடா, நாரை, பெரு வெள்ளைக் கொக்கு ஆகியவைகளையும் வேட்டையாட வைத்துவிடும்.

இடையிடையே கிடைக்கும் மணிப்புறாக்களை உட னுக்குடன் மற்றவர்களைக் கொண்டு வெளிச் செட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமல் உரித்தெடுத்து, பக்குவமாக அதன் குடல் அகற்றி, பனங்குருத்துக் கோர்வையில் கோத்து விட்டானானால் வேட்டையால் வர எத்தனை மணி நேரமானாலும் அது அப்படியே விறைத்துப்போய் இருக்கும். இந்தக் கோர்வையைப் பக்குவமாக எடுத்துவரச் செய்து நயினாரிடம் ஒப்படைக்கும் வரை சூரனுக்கு மன அமைதி இருப்பதில்லை. வேட்டையிலிருந்து திரும்ப எந்த நேரமானாலும் சூரன் அதுவரை உணவாகக் கொள்வது தனக்காக மட்டும் மேல்தோல் வெடித்து, பெருவிரிவு காணும்வரை வறுத்தெடுக்கப்பட்டு அதற்கான ஒரு உறையில் இட்டுச் செல்லும் கொண்டல் கடலை மட்டுந்தான்.

''என்ன சூரர் சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்திட்டியள், பழைய ஆசை வந்திட்டுதோ? துவக்கை விட்டிட்டு வந்திட்டியளே?'' என்று ஒரு கேள்வியை கணவதியான் சூரனிடம் கேட்டான்.

சூரன் உடனே பதில் சொல்லவில்லை.

அவனுக்குப் பின்னால் பரியாரி சரவணையனும், ஆஸ்பத்திரி சின்னானும் பரிதாபமாக நின்றனர்.

மணியகாரன் அப்போதுதான் சூரனைக் கண்டுவிட்டு உள்ளே இருந்து விரைவாக வந்தார்.

''என்ன சூரன், நேரகாலத்தோடை, ஆர் இவங்கள்? எட சின்னானும், சரவணையுமே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

''இல்லை, ஐயா வெட்டை ஒரு முக்கியமான விஷயத்தைப் பேச வந்தனான்!''

சூரன் பதில் சொல்லிவிட்டான்.

''வா; வா; இப்பிடிவா பேசுவம்; திண்ணைக்கு வா பேசுவம்!'' என்று கூறிக்கொண்டே மணியகாரன் முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க சூரன் அவருக்குப் பின்னால் நடந்து இருவரும் திண்ணைக்கு வந்து விட்டனர்.

திண்ணையில் நடைசால் பள்ளத்திற்கு இடப்புறமாக பதிக்கப்பட்ட சலவைக் கல்லில் எதிரும் புதிருமாக மணியகாரனும் சூரனும் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினர்.

மணியகாரன் வீட்டில் சூரன் என்ற அந்தப் பள்ளனுக்கு மட்டுந்தான் அந்த மரியாதை!

இந்த மரியாதை இன்று நேற்று வந்ததல்ல.

சூரனின் கிராமத்தில் ஒருசிறுவர் பாடசாலை கட்டி அந்தப் பாடசாலைக்கு சூரனை உபாத்தியாயராக்கிய நாளில் இருந்து அவர் கொடுத்துவந்த மரியாதை இது.

இருவரும் மனம்விட்டு நீண்டநேரமாகப் பேசினர்.

## 20

மணியகாரனின் ஒற்றைத் திருக்கல்வண்டி சதங்கை நாதத்துடன் புறப்பட்டுவிட்டது.

வண்டிக்குப் பின்னால் சூரனும் சின்னானும் செல்ல அவர்களைத் தொடர்ந்து சரவணை செல்ல இவர்களைத் தொடர்ந்து கணவதியானும், அவனின் பரிவாரங்களும் முறைப்படி வீமன், அருச்சுனன் தலைமையில் செல்ல, போவோர் வருவோர்கள் எல்லாம் நின்று நின்று இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''மணியகாரனும் வண்டியில் வேட்டைக்கு வெளிக்கிட்டிட்டார்'' என்று எதுவுமே தெரியாதவர்களாகப் பேசினர். இதோடு பலதும் பத்தும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியகாரனின் வண்டியும், பரிவாரங்களும் திடலுக்கு வந்து சேர்ந்துவிட்டன.

மணியகாரன் வண்டிலிலிருந்து இறங்கி ஒரு தடவை அந்தத் திடலைச் சுற்றிப் பார்வையை வீசினார்.

அங்குமிங்குமாகக் கிடுகுச் சாம்பல்கள் முறையும் கறையுமாகப் பறந்துகொண்டிருந்தன.

வடலிகள், சிறுதென்னைகள் யாவும் பொசுங்கி வரண்டு போய்க்கிடந்தன.

வண்டியின் சதங்கை ஓசை எல்லோரையும் அழைத்து வண்டி அருகே கூடவைத்து விட்டது.

குஞ்சுகள், குழந்தைகள், கிழங்கள், கட்டைகள் பாதிக்குப்பாதி நிர்வாணக் கோலங்களுடன்.

கண்களில் வழிந்தோடிய நீர்த்திவலைகளை மறைத்துக் கொள்ள சூரன் தன் நெஞ்சுக் கட்டு நலமுண்டினால் முகத்தைத் துடைத்துவிட்டுக்கொண்டதை மணியகாரன் கண்டுவிட்டு, ''சூரன் அழாதையடாப்பா நான் எல்லாம் பார்க்கிறன்'' என்று தேறுதலுக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வண்டியைவிட்டுக் கீழிறங்கி, திடலைச் சுற்றி ஒரு தடவை நடந்துவிட்டு வந்தார்.

கணவதியானின் உடல் முறுக்கெடுத்துக் கொண்டிருந்தது. பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டு அவன் மணியகாரனின் உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டும்.

வேட்டை நாய்கள் திகைத்துப்போய்ச் சாம்பல் மயமான அந்தத் திடலைச் சுற்றி வலம் வந்தன.

எங்காவது ஏதாவது வேட்டை அகப்படுமா என்ற கேள்வி எதுவும் அவைகள் முகங்களில் இல்லை. தங்கள் எஜமானர்களின் முகங்களைப் பார்ப்பதும் ஏங்குவதுமாக அவைகள் நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவதியான் இம்முறை தனது கணக்கில் இரண்டு நாய்களைக் கொண்டு வந்திருந்தான். ஒன்று பழைய வயிரவன் மற்றது மிகவும் இளையதான இன்னொன்று. அதற்கு வயிற்றிலும், நெற்றியிலும் கறுப்பு மறைகள் இருந்ததால் அதை அவன் 'மறையா' என்றுதான் பெயர் வைத்து அழைப்பான்.

சமீப காலத்திலிருந்து அந்த மறையனுக்கு ஒரு புதிய பழக்கத்தை பழக்கியிருந்தான். யாராவது தன் எஜமானால் வேண்டப்படாத ஒருவன் ஏதாவது தடயத்தை விட்டுச் சென்றால் அதை மோப்பம் பிடித்துச் சரியாக அந்த மோப்பத்திற்குப் பின்னால் சென்று அடையாளம் காட்டி விடும்.

ஒரு இடத்தில் மறையன் நின்று எதையோ சுற்றிச் சுற்றி வந்து மோப்பம் பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்டுவிட்டான் கணவதியான்.

கணவதியான் மணியகாரனின் உத்தரவைப் பெற வேண்டும்.

''நயினார் மறையன் சுவடுபிடிக்கத் துவங்கிவிட்டான். வீடுகளைக் கொழுத்தினவங்கள் போன இடத்தைப் பிடிச்சுக்காட்டப் போறன், என்ன சொல்லுறியளாக்கும்?'' என்று கணவதியான் மணியகாரனிடம் மெதுவாகக் கேட்டான்.

''வேளையைத் துவங்கு கணவதியான், இந்த இரணிய வேலை செய்தவங்களைச் சும்மா விடப்படாது! ஆரெண்டாலுஞ்சரி!'' என்று மணியகாரன் விடை கொடுத்து விட்டார்.

கணவதியான் உடுப்பை மடித்துச் சண்டிக் கட்டுக் கட்டிக் கொண்டு இடதுகையில் கொடுவாள் கத்தியுடனும் மறையன் மோப்பம் பிடித்து நின்ற இடத்தைச் சுற்றி வந்தான். அந்த இடத்தில் ஒரு துணித்துண்டு கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வீடு எரித்த ஒருவனிடமிருந்து தவறியதாக இருந்திருக்க வேண்டும்.

கணவதியான் மறையனுக்குச் சைகை செய்து உலுப்பி, கைகளைச் சுண்டிக் கொடுத்து உத்தரவிட்டு விட்டான்.

மறையன் நான்கைந்து தடவை திடலைச் சுற்றி வந்து விட்டுத் தோட்டப்புறம் இறங்கித் தோட்டக் கிணற்றடி வரை காற்றாகப் பறந்தது. நின்றதும் தோட்டக் கிணற்று முது பூவரச மரப் பற்றைக்கப்பால் மோப்பமிட்டு மோப்பமிட்டு அனுங்கியது.

கணவதியானும் பரிவாரங்களும், நாய்களும் கிணற்றடியை மொய்த்து விட்டனர்.

பற்றை மறைவில் இரண்டு சாராயப் புட்டிகளும் நான்கைந்து மாமிசம் மணக்கும் சிரட்டைகளும் கிடந்தன.

''இதுக்குமேலை போகாதையுங்கோ மணியகாரனைக் கேட்டுச் செய்வம்'' என்று கூறிவிட்டுச் சென்ற சூரன் மணியகாரனுடன் திரும்பினான்.

மறையனை மேலே தொடரவிடாமல் கணவதியான் அதன் கழுத்தில வடத்தைப்போட்டு மாட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான்; ஆனாலும் மறையன் வேட்டையைத் தேடித் திணறித் துள்ளிக்கொண்டிருந்தது.

''கணவதியான் அதை விடு அது தன்ரை வேலையைச் செய்யட்டுக்கு!'' என்று மணியகாரன் கட்டளை போடவே சணவதியான் வடக்கயிற்றை நீக்கிவிட மறையன் புயல்வேகத்தில் மூத்ததம்பி நயினாரின் வளவைத் தாண்டி உள்ளே குதித்துவிட, மற்ற நாய்களும் உளளே பாய்ந்து விட்டன.

விரைந்து வந்த மணியகாரன் ''கணவதியான் மறையனை வடத்திலை போடு மிச்சம் நான் கதைக்கிறன்', என்று கூறிக்கொண்டே முற்றத்துக்கு வந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாச்சிக் குஞ்சி திடுக்குற்று நின்றாள்.

அன்னப்பிள்ளை நாச்சியார் உடல் அலுப்பு இன்னும் தீராததினால் சோம்பல் முறித்துக்கொண்டு முற்றத்திற்கு வந்தாள்.

''மூத்ததம்பியர் எங்கை?''

இப்படி மணியகாரன் மிடுக்காகக் கேட்டார்.

''அவர் இன்னும் நித்திரையாலை எழும்பேல்லை!'' என்று மிடுக்காகவே அன்னப்பிள்ளை நாச்சியார் பதில் சொன்னாள்.

''ஆளை எழுப்பிவிடு!''

''அவர் எழும்ப நேரங்கிடக்கு!''

''மணியகாரன் வந்திருக்கிறன் எண்டு எழும்பச் சொல்லு!''

அன்னப்பிள்ளை நாச்சியார் அறைக்குள்ளே போக, கம்பிளிப் போர்வையால் உடம்பை மூடிக்கொண்டு மூத்த தம்பி நயினார் வெளியே வந்தார்.

''ஐயோ இதென்ன வேட்டை நாயளும் ஆக்களுமா? சொல்லி அனுப்பியிருந்தா வந்திருப்பன். இருங்கோ; இருங்கோ'' என்று அங்கலாய்த்தார் மூத்ததம்பி நயினார்.

''நான் இருக்கவரையில்லை மூத்ததம்பியர்! திடல் என்ரை காணி, அதுக்கை குடியிருந்தவங்கள் என்ரை குடிமக்கள். வலிக்கண்டி மணலுக்கை மாடுமேச்சுக் கொண்டிருந்த நீர் இஞ்சை மாப்பிள்ளையாய் வரேக்கை விதானை ஆக்களை வைச்சு உம்மடை சபை சந்திக்கு வராமல் தடுக்கேக்கை என்ரை ஆக்களெட்டைச் சொல்லி உம்மடை சபையை ஒப்பேத்தி வச்சவன் நான். என்ரை காணியிக்கை இருந்தவங்கடை வீடுகளுக்கு நெருப்பு வைச்சு எரிக்கேக்கை நீர் பழையதை மறந்துபோநீர். உமக்கு இப்ப கண்கடை தெரியேல்லை. கணவதியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையன்ரை வடத்தை அவிழ்த்துவிடு எங்கை போகுது பாப்பம்?'' எண்டு கடும்தொனியில் கட்டளை இட்டார் மணியகாரன்.

கணவதியான் வடத்தை நீக்கினான்.

மறையன் வளவுக் கோடிப்பக்கம், கார் நின்ற கொட்டில் எல்லாம் உலாவி ஓடிவிட்டு மணல்பாதையில் பாய்ந்து வலிக்கண்டிக்குப் போகும் திசையில் ஓடித் தாவியது.

''கணவதியான் மறையனை வடத்திலைபோடு இனித் தேவையில்லை, எல்லாம் இனி நான் கவனிக்கிறன்!'' என்றார் மணியகாரன்.

''என்ன கனக்கப் பிடிங்கி அடுக்கிறமாதிரிப் பேசுறீர்? மணல் காட்டுக்கை மேய்ச்சவன், அப்பிடிக் கிடந்தவன் இப்பிடிக்கிடந்தவன் எண்டு எழுந்தமானத்திலை பேசுறீர், உம்மைப்போலையும் உம்மடை மோனைப்போலையும் கோவிச்சியளோடையும், பள்ளியளோடையும், நளத்திய ளோடையும் நாங்கள் ஒண்டும் முறை மாறிப் படுத்தெழும்பேல்லை, பேசிறதை எப்பன் கவனிச்சுப், பேசும். நாங்கள் வீட்டிலை இல்லாமல் இருக்கேக்கை திடலில் நளத்தியள் எங்கடை கிணத்திலை தண்ணி அள்ளேக்கை மூச்சுக்கூட விடமுடியாத நீர் இப்ப யோக்கி யத்திலை திடலிலை வீடுகள் எரிஞ்சுபோச்செண்டு கேக்க வந்திட்டீர்!''

அன்னப்பிள்ளை நாச்சியார் விரல் நீட்டிப் படபட வென்று பேசித் தீர்த்துவிட்டாள்.

நிலைமை மோசமாவதைப் புரிந்துகொண்ட சூரன் மணியகாரனுக்குச் சமீபமாக வந்தான்.

''இஞ்சைபார் பெரிய நயினாருக்கு வால்பிடிக்க வந்த வதிரிப் பள்ளனை? பள்ளியளின்ரை சுதியிலைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவனுக்குச் சட்டம்பி வேலையும் கொடுத்து திண்ணையிலையும் வைச்சுக் கதைக்கிறார் நயினார். அங்கை கோவிய வீட்டிலை வைப்பும் பிள்ளையளும், திடலுக்கையும் குமரியள் இருக்கிறாளவை!''

சூரன் வாயடைத்துப்போய் நின்றான்.

மணியகாரனால் எதுவும் பேசமுடியவில்லை.

கணவதியான் பற்களை நறநறத்துக் கொண்டிருந்தான்.

வீமனும் அருச்சுனனும் கோடிப்புறமாகப் படுத்திருந்த மூத்ததம்பி நயினாரின் நாயை உருட்டி உருட்டிக் கடித்துக் கொண்டிருக்க குதறப்பட்ட அந்தப் பரிதாபத்துக்குரிய சீவன் வான முகடுவரை உரக்க அவலக்குரல் எழுப்பி, எழுப்பி, பின்பு குரலைத் தாழ்த்தித் தாழ்த்தி, முக்கி முனகி, இறுதியில் சேட மூச்சைக் கூட விட்டுவிட்டது.

வீமனும் அருச்சுனனும் அதன் கதையையே முடித்து விட்டுத்தான் முற்றத்திற்குத் திரும்பின.

மாட்டு மடுவத்துக்குள் மாடுகள் இடறி இடறிப் புரண்டடித்துக் கொண்டிருந்தன.

இத்தனை வரைக்கும் மணியகாரன் வாய்மூடி மௌனியாகவே முற்றத்தில் நிலைகுத்தி நின்றார்.

அவர் எதுவும் பேசாமலே வந்த வழியில் திரும்பி நடக்க, அவருக்குப் பின்னால் சூரனும் சரவணையும் சின்னானும் வர அதை அடுத்துக் கணவதியான் வடத்தில் பிடிக்கப்பட்ட மறையனுடன் வர சகல பரிவாரங்களும் மூத்ததம்பி நயினார் எல்லையைக் கடந்து தோட்ட வெளியில் நடந்து கிணற்றடியையும் கடந்து திடலுக்கு வந்து விட்டன.

திடலில் நடுவே பெண்கள் குழந்தை குட்டிகள் ஏங்கியபடி குழுமி இருந்தனர். அவர்களுக்கு நடுவே பம்பிடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கி இருந்து எல்லோரையும் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"என்ன பம்பிடி சிங்கி நீயும் கேள்விப்பட்டு நளவருக்கு உதவிசெய்ய வந்திட்டாய் என்ன? எக்கணம் ஆமான வெள்ளாளர் அறிஞ்சா உன்னை முத்தத்திலையும் கால் மிதிக்க விடாயினம்!" என்று மணியகாரன் கேலியாகக் கேட்டார்.

"அப்பிடியும் ஒரு நயினார் நயினாத்தி இந்த ஊருச்கை இருக்கினமோ கேக்கிறன் நயினார். இந்தப் பம்பிடிசிங் கிக்கு அப்பிடிச் சொல்லிப்போட்டு அவை சீலையளை உரிஞ்சு போட்டுத்தான் திரியவேணும்; ஊரிலை உள்ள நயினாத்தியள் எல்லாம் தங்கடை கொய்யகங்களுக் குள்ளை எத்தினை எத்தினை கள்ளப் புருஷன்மாரை வைச்சிருக்கினம் எண்ட கணக்கெல்லாம் இந்தப் பம்பிடி சிங்கியெட்டைக் கிடக்காக்கும். நயினார்மார் எத்தினை வைப்பாடிச்சியளை வைச்சிருக்கினம் எண்ட கணக்கு களை வீசம் பிசகாமல், சொல்லுவனாக்கும். இந்தப் பம்பிடி சிங்கியை அப்பிடிச் சொல்லிப் போடேலுமோ என்று கேக்கிறன் நயினார். ஏன் கனக்கத் துலைக்குப் போவான், நேத்து அன்னப்பிள்ளை நாச்சியாரின்ரை செல்லாச்சிக் குஞ்சியைக் கண்டனாக்கும். மலிஞ்சாச் சந்தைக்கு வருநதானை, கார்க்காரக் குருட்டு நல்ல தம்பி யனோடை சின்னப்பிள்ளைப் பரியாரியன் வீட்டிலை நடந்த அதெல்லாம் இரண்டொரு மாதம் போனாத் தெரியாமல் விடப்போகுதே?"

பம்பிடிசிங்கி படபடவென்று சொல்லி நிறுத்திக் கொண்டாள்.

நயினார் சூரனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியாமல் கிடந்த சரவணையின் காளிகோயில் மணியகாரனின் கண்ணில் பட்டது. அந்தப் பக்கத்திலிருந்து அனுகல் ஓசை ஒன்றும் எழுந்து வந்தது.

''நல்லகாலம் சரவணையின்ரை காளிகோயில் தப்பியிட்டுது, ஆரோ அனுங்கியும் கேக்குது!'' என்று கூறிக்கொண்டே மணியகாரன் காளிகோயிலுக்குள்ளே புகுந்தார்.

அங்கே ஒரு இளவயதானவன் கிடந்து முனகிக்கொண்டிருந்தான்.

அவன் உடம்பெல்லாம் சரவணையால் தடவப்பட்ட எண்ணெயாலும் அவனால் கட்டப்பட்ட பச்சிலையாலும் நிறைந்து கிடந்தது.

''சரவணை ஆர் இந்தப் பொடியன்?''

மணியகாரனின் இந்தக் கேள்விக்கு சின்னானே பதில் சொன்னான்.

''இது என்னோடை ஆசுப்பத்திரியிலை வேலை பாக்கிறதாக்கும். மாதன் எண்டு பேராக்கும். இது இல்லாட்டா ராவு வந்தவங்கள் திடலுச் சனங்களை நெருப்பிலை தூக்கிப் போட்டிருப்பாங்களாக்கும். கையிலை கிடைச்ச கம்பொண்டை வைச்சு மின்னல் மாதிரிப் பாஞ்சு பாஞ்சு அத்தனை பேரையும் அடிச்சுத் துரத்திட்டுதுங்க, இது கையாலை அடிபட்டவங்க ஒருதன் ரெண்டுபேற்றை எலும்பெண்டாலும் நொறுங்கி இருக்காமை இராதெண்டுதான் நினைக்கிறன்!''

சின்னானின் இந்தப் பதிலைக் கேட்டுவிட்டு அவனை உற்றுப் பார்த்த மணியகாரர் ''எட இந்தப் பொடியனை எனக்குத் தெரியும். மந்திகைச் சந்தியிலை புதிசாக் கட்டிற ஆசுப்பத்திரியிலை கூட்டிற கழுவிற பொடியன். சரி சரி உடம்பை ஆட்டாம அசையாமை ரெண்டு நாளைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரமா வைச்சிரு மோனை!'' என்று கூறிவிட்டு மணிய காரன் வெளியே வந்துவிட்டார். வந்தவர் நேராகத் தனது வண்டிக்காரனைக் கூப்பிட்டு விதானை வீட்டை போய் நான் திடலுக்கை நிக்கிறனெண்டு அவனை ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லி அனுப்பிவிட்டு ''பொடியள் பொடி பொட்டையள் பட்டினி கிடக்குங்கள், நாச்சியா ரிட்டைப் போய் ஏதும் கஞ்சி தண்ணி வாங்கிவாருங்கோ'' என்றார்.

மணியகாரனின் இந்தக் கட்டளைக்குப் பின்பு சின்னானும் வேறு இருவரும் மணியகாரன் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

''கணவதியான் ரெண்டு நாளைக்கு இந்தத் திடலுக்கைதான் வேட்டை ஆடவேணும். எரிஞ்ச கொட்டில் எல்லாத்தையும் கட்டி மேஞ்சு இதுகளைக் குடி இருத்தவேணும். முதலிலை எல்லாத்தையும் துப்புறவு செய்யுங்கோ பாப்பம்!''

மணியகாரனின் இந்தக் கட்டளையை முதலில் மேற் கொள்ளத் தொடங்கியவன் சூரன்தான். அவனைத் தொடர்ந்து எல்லோருமே கொடுக்குகளைக் கட்டிக் கொண்டு தொடங்கி விட்டனர்.

சற்றுத் தொலைவில் திடலின் வடகோடியில் வண்டி ஒன்று வரும் சாயல் தெரிந்தது.

அந்த வண்டியை ஒருவன் இழுத்து வந்தான்.

விதானையார்தான் வருகிறார் என்பதை மணிய காரன் புரிந்து கொண்டார்.

வண்டி திடலுக்கு நடுவே வந்துவிட்டது.

வண்டிக்குப் பின்னால் மணியகாரனின் வண்டி யோட்டி வந்துகொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடத்தில் பிணைக்கப்பட்டிருந்த மறையன் அனுங்கிச் சிணுங்கித் திமிறி வடத்தை அறுத்து விடும்போல இருந்தது.

கணவதியான் மணியகாரனின் காதருகே எதையோ கூறினான்.

''ஆமோ அப்பிடியோ, வடத்தை நீக்கிவிடு பாப்பம்!'' என்றார் மணியகாரன்.

கணவதியான் வடத்தை நீக்கிவிட்டான்.

வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல வண்டித் திசைக்குப் பாய்ந்து சென்ற மறையன், அந்த வண்டிக்காரனின் வேட்டியைப் பிடித்துக் குதறி இழுத்துச் சுழற்றியது.

விதானையார் ஏங்கிவிட்டார்.

அவர் தன்னைச் சமாளிப்பதற்கிடையில் வண்டி மணலில் குடைசாய்ந்து விட்டது.

நல்லகாலம் விதானையாருக்குப் பளுவான காயம் எதுவும் இல்லை.

''விதானையார் எப்படிச் சுகம்?'' என்று நின்ற இடத்தில் நின்று கொண்டே மணியகாரன் கேட்க, விதானையாருக்கு ஒன்றுமே பேச முடியவில்லை. உடம்பில் பிரண்ட புழுதியைத் துடைப்பதிலேயே அவர் நேரத்தைப் போக்கினார். அவர் கையிலிருந்த கடதாசிக் கட்டுகள் சிதறின.

''கணவதியான் மறையனை வடத்திலை போடு!'' என்ற மணியகாரனின் ஆக்ஞையை கணவதியான் ஏற்றுக் கொண்டாலும் மறையனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது அவனின் உடையைச் சின்னாபின்னப் படுத்திக் கொண்டிருந்தது.

மிகச் சிரமப்பட்டு கணவதியான் அதை வடத்தில் பிணைத்து இழுத்துச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விதானை ராத்திரி உம்மடை சார்பிலை எத்தினை பேரை வீடு கொளுத்த அனுப்பினனீ?''

மணியகாரனின் இந்தக் கேள்விக்கு விதானையார் விக்கித்தக்கிக் கொண்டே, ''நான் நேற்று வீட்டிலை இல்லை, பட்டணம் போட்டுக் காலைமைதான் வந்தனான்!'' என்று பதில் சொன்னார்.

''விதானை ஒழுங்காய்ப் பதில் சொல்லாது! கணவதியான்!'' என்று அழைக்கவே கணவதியான் விரைந்து வந்தான். வண்டிக்காரனைக் கண்சிமிட்டிக் காட்டி, அவனை இழுத்துச் செல்லுமாறு மணியகாரன் இட்ட கட்டளைப்படி கணவதியான் அவனை தறதறவென்று காளிகோவில் தட்டி மறைவுக்கு இட்டுச் சென்றான்.

காளிகோவில் தட்டி மறைவுக்குள் சிறிது வேளை ஒரே அல்லோல கல்லோலம்!

விதானையார் நடுங்கிக் கொண்டிருந்தார்.

சற்று வேளைக்குப் பின் இருவர் கைத்தாங்கலில் வண்டிக்காரனை இழுத்து வந்து மணியகாரனுக்கு முன் போட்டனர்.

''டேய் உள்ளதைச் சொல்லு எத்தினைபேர் வீடு கொளுத்த வந்த நீங்கள்?''

''பத்துப்பேர் மட்டிலை''

''ஆரடா அந்தப் பத்துப்பேரும்?''

''விதானையாற்றை ஆள் நான் ஒண்டு, மூத்ததம்பிக் கமக்காரன்ரை ஆள் ஒண்டு, மிச்சப்பேர் வலிக்கண்டியிலை இருந்து காரிலை ஏறி வந்தவை!''

''காரோடா? ஆற்றை காரடா?''

மூத்ததம்பிக் கமக்காறனை ஆசுப்பத்திரியிலையிருந்து கொண்டு வந்த கார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன்ரை பேரென்னடா?"

"ஒரு கண் சிறிசானவன் நல்லதம்பியன் எண்டு பேர்!"

"கணவதியான் மறையன் சுவடிச்ச அந்தத் துண்டை இவனுக்குக் காட்டு. இது ஆற்றை துண்டடா?"

"என்ரை துண்டுதான். தலையிலை கட்டியிருந்தனான் கலவரத்திலை விழுந்து போச்சு!"

"வலிக்கண்டியாரைக் கூட்டியர நீயும் காரிலை போனனியெல்லே?"

"ஓமாக்கும், விதானையார் தான் போக்காட்டினவர்."

"கார்க்காறன் இஞ்சை வீடு கொளுத்த வந்தவனோடடா உள்ளதைச் சொல்லு!"

"இல்லையாக்கும்!"

"ஏன்ரா அவன் வரேல்ல!"

"தனக்கு வெறி கூடிப்போச்செண்டு சொல்லிப் போட்டுக் காருக்கை படுத்திட்டான்."

"மூத்ததம்பியர் எங்கை நிண்டவர். உங்களோடை வரயில்லையோ?"

"அவர் எங்களைத் தோட்டக்கரையிலை இறக்கி விட்டுப் போட்டு பூவரச மரத்துக்குக் கீழை நாங்கள் அலுவலுகளை முடிச்சுப் போட்டுப் போகும் வரையிலை காத்து நிண்டார்."

மணியகாரனின் விசாரணை இத்துடன் முடிந்து விட்டது.

மணியகாரன் தனது வண்டியைப் பூட்டச் சொல்லித் தான் ஏறிக்குந்திக் கொண்டு, "சூரன் நீர் நிண்டு கொட்டில் போடிற வேலையளைக் கவனியும். திரும்பி வாற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டில்லை மரந்தடியளும் தட்டுமுட்டுச் சாமான்களும் அனுப்பி விடுகிறன், அத்தோடை ஆரதக் கறியோடை உமக்கு மத்தியானச் சாப்பாடும் அனுப்பிவிடுகிறன், கண வதியான், மற்றவங்களை நிப்பாட்டிப் போட்டு நீயும் வீமனும் அருச்சுனனும் இவங்கள் ரெண்டு பேருக்கும் காவலாகப் பின்னாலை வாருங்கோ! விதானையார், எழுதிற கணக்கெடுக்கிற எல்லாத்தையும் ஒண்டு விடாமல் பொறுக்கிக் கொண்டு வாரும்'' என்று கூறிவிட்டு வண்டியை நகர்த்தச் சொன்னார்.

சதங்கை ஓசையைப் பரப்பியபடி வண்டி புறப்பட்டு விட்டது.

முன்னே மணியகாரனைச் சுமந்துகொண்டு வண்டி.

அதன் பின்னே புழுதி பரப்பிய மேனியுடன் விதானை யார்.

அதற்கும் பின்னால் முகத்தில் இரத்தம் வடிந்தபடி விதானையாரின் வண்டிக்காரன்.

கடைசியில் வீமனும் அருச்சுனனும்!

இந்த அணிவகுப்பு மிகக் கோலாகலமாக இருந்தது.

இதுவரை ஒரு விதானையார் இப்படிப்பட்ட அணி வகுப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டதில்லை.

கோயில் சந்தை கழிந்தபோது சந்தையில் திரண்டி ருந்த ஜனக்கூட்டமும் சேர்ந்து ஊர்வலத்திற்குச் சற்றுப் பின்னால் வந்து கலைந்து சென்றது.

இதுகாலவரை சித்தமணியகாரன் உத்தியோக பூர்வ மாக பகிரங்கமாக இப்படி யாரையும் பிடித்துச் சென்ற தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF ... VAVUNIYA 4-7-1995 LIBRARY

# 21

மூத்ததம்பி நயினாருக்கு உள்ளூரப் பெருநடுக்கம் தொடங்கி விட்டது. மணியகாரனை மனைவி இப்படியெல்லாம் பேசிவிட்டது, அவர் நெஞ்சக் குலையை நசிக்கத் தொடங்கி விட்டது. மணியகாரனுக்கு ஊரில் இருந்த செல்வாக்கு எத்தகையது என்பது அவருக்குத் தெரியும். அவருடன் மோதிக் கொள்வது மலையுடன் மோதிக் கொள்வதற்கு ஒப்பானது என்பதும் அவருக்குத் தெரியும்.

''என்னெடி விசரி விசர்க்கதை கதைச்சுப்போட்டிருக்கிறாய்? நான் ஒருவன் இதிலை இருக்கிறனெண்டு உனக்குக் கண்ணுக்குத் தெரியேல்லையோ? அறுந்தவளே!'' என்று அவர் மனைவியைக் கடிந்துகொண்டார்.

''நீரும் ஒரு ஆம்பிளை எண்டு! அவன் வாயிலை வந்த மாதிரி எல்லாங் கதைக்கேக்கை வராத ரோசம் இப்ப உமக்கு வருகுது! அவன் சொன்னதுபோலை நீ வலிக் கண்டிமணல்லை மாடுவளத்த சந்ததிதானை, உமக்கேன் ரோஷம் வரப்போகுது' எனக்கு உரோசம் வந்ததாலை உமக்குக் கழுத்து நீட்டின குற்றத்துக்காக வரத்தானை வேணும். நான் என்ன வலிக்கண்டியாளோ? கேக்கிறன்! கரவெட்டியாள். சொல்லப்பட்ட பரம்பரையிலை வந்தவள், அண்ணாசாமி பரம்பரை எண்டால் இண்டைக்கும் அழுத பிள்ளையும் வாய் மூடும்! நான் அவனைப் பேசுவன். இன்னும் நான் கிழிபக் கிழியக் கேட்டிருக்க வேணும். அவன் என்ன காதுக்கையே பூந்திடுவான்'' என்று தன் பாட்டிலேயே பேசிக் கொண்டு அம்மாள் கொல்லைப் பக்கம் போய்விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் வாய் திறவாது கேட்டுக் கொண்டு நின்ற செல்லாச்சிக் குஞ்சிக்கு தன் கணக்கில் வாய் திறந்து ஒரு வார்த்தை பேச வரவில்லை. அவள் அடுக்களைப் பக்கம் போய் விட்டாள்.

சற்று வேளைக்குப் பின் கிணற்றடிக்குச் சென்று வந்த அன்னப்பிள்ளை நாச்சியார் இலட்சுமிகரமாக வந்து சேர்ந்தாள்.

தலை முழுக்குப் போட்டு ஈரம் வற்றாது அள்ளிச் சொருகப்பட்ட கொண்டை,

அநாயாசமாகப் போடப்பட்டு இழுத்து முடியப்பட்ட இரவிக்கை,

திட்டுத் திட்டாக அங்குமிங்குமாகச் சிவந்து கிடந்த கன்னக் கறுப்பு,

பாதி இடை தெரிய அநாயசமாகச் சுற்றப்பட்ட சேலை.

புதிதான ஒரு சவர்க்காரக் கந்தம், ஆகியாதியாம் இலட்சணங்கள் அடங்க அவள் வந்து சேர்ந்தாள்.

மூத்ததம்பி நயினாரின் மன ஏக்கத்திற்கும் கொந்தளிப்புக்கும் இவளின் இந்த அலங்காரம் சிறிதும் ஏற்றதாக இல்லை. அவர் மனத்துக்கு எரிச்சலைத்தான் இது தருவித்தது.

காலைச் சாப்பாட்டுக் காரியங்கள் முடிந்து செல்லாச்சிக்குஞ்சி மதிய உணவுக்குத் தயாராகச் செயல் படத் தொடங்கினாள்.

இன்று ஐயாவுக்குக் கோழிக்குஞ்சு விறாத்தும், சுறா மீன்வறுவலும் கொடுக்கும் திட்டம் முதல் நாளே இருந்தது. இதன்படி கோவிச்சியிடம் பணம் கொடுத்துச் சுறா மீனுக்கு அனுப்பிவிட்டு அவள் கோழிக்குஞ்சு விறாத்துக்கான காரியத்தில் ஈடுபட்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலையில் புழுங்கல் அரிசி வெந்து நுரைத்து வாசனை வீசியது.

அடுத்த வீட்டு வேலிக்கரையில் நின்று யாரோ அழைக்க அன்னப்பிள்ளை நாச்சியார் அவர்களுடன் வம்பளக்கப் போய்விட்டாள்.

முற்றத்தில் செருமல் சத்தம் கேட்டது.

இப்படிச் செருமல் சத்தத்துடன் வந்து சேரும் ஒரே ஒரு ஜீவன் பம்பிடிசிங்கிதான்.

''என்ன பம்பிடிசிங்கி ஊரிலை என்னபுதினம்?'' என்ற ஒரு கேள்வியை மூத்ததம்பிக் கமக்காரன் கேட்டார்.

''புதினம் என்னவாக்கும்! திடலில் நளத்தியளின்ரை வீடுகளை விதானையார் ஆள்வச்சுக் கொழுத்துவிச்சுப் போட்டார் எண்டு மணியகாரன் வந்து விதானையாரை யும் வண்டில் இழுக்கிறவனையும் புடிச்சிக்கொண்டு போறாராம். அதோடை மணியகாரன் நயினார் தன்ரை கணக்கிலை எரிஞ்ச வீடுகளைக் கட்டிக் குடுக்க அடுக்குப் பண்ணுறாராம். இண்டைக்கு மணியகாரன் நயினாற்றை கணக்கிலைதான் எல்லாருக்கும் அவியல் நடக்குதாம்.''

பம்பிடிசிங்கியின் பேச்சுக்கு நயினார் பதில் ஏதும் பேசவில்லை.

''என்னவாமெடி? என்னவாமெடி? இப்பிடிவாடி'' என்று அடுக்களைக்குள் இருந்தே செல்லாச்சிக் குஞ்சி அவளை அழைக்கவே அவள் அடுக்களைக்குள் போய் விட்டாள்.

பின்பு அடுக்களைக்குள் இருந்து பலமான ஓசை ஏதும் வெளியே வரவில்லை. அடக்கமாகவே இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

அன்னப்பிள்ளை நாச்சியார் சற்று நேரத்துக்குப் பின் வந்து சேர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் முகத்தையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டாள் பம்பிடிசிங்கி.

அவள் முகத்தில் எதையோ ஒன்றினை அவள் தேடுகிறாள்.

"என்னெடி பம்பிடிசிங்கி உன்ரை பார்வை எனக்குப் பிடிக்கேல்லை அவிச்ச மீனைப் பூனை பார்த்தது போலை!" என்றாள் நாச்சியார்.

"இல்லை நாச்சியார், நித்திரைக்கிடையில் சொண்டிலை பூச்சியோ பூரானோ கடிச்சுப்போட்டுப்போலை கிடக்கு சொண்டு வீங்கிக் கிடக்கு அதுதான்பாத்தனான்!"

பம்பிடிசிங்கி பதில் சொல்லிவிட்டாள்.

"என்ன கடிச்சதெண்டு தெரியேல்லை இப்பான் நானும் கவனிச்சன்!" என்று மொட்டையாகப் பதில் சொல்லிவிட்டு உலைமுகத்தோடு வேலைகளோடு ஈடுபட்டாள் நாச்சியார்.

பம்பிடிசிங்கி, செல்லாச்சிக் குஞ்சியை பார்த்துக் கண் சிமிட்டினாள்.

இது செல்லாச்சிக் குஞ்சிக்கும் விளங்கியிருக்க வேண்டும்!

வெளியே நல்ல வெயில் கொட்டத் தொடங்கி வெகு நேரம் ஆகிவிட்டது.

முற்றம் அனலாய்க் கொதித்தது.

கோடிப்புறத்தே பிணமாகக் கிடந்த நாய்க்கடுவனைக் கிடங்கு வெட்டிப் புதைத்துக் கொண்டிருந்தாள் வீட்டுக் கோவிச்சி.

அதன் விதைகள் பிடிங்கி இழுக்கப்பட்டிருந்த கோலத்தைக் காண அவள் மனது கூசியது.

வெளியே யாரோ வரும் ஆரவாரம் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததம்பி நயினார் எட்டிப் பார்த்தார்.

வந்தவர்கள் இருவர்.

மணியகாரன் கந்தோரின் சேவகர்கள்.

''ஐயா உங்களைக் கூட்டிக்கொண்டு வரட்டாம். இப்பவாறது கஷ்டமெண்டால் கந்தோர் பூட்டிற நேரத்துக்கு முந்தி வந்திட்டுப் போகட்டாம்!''

ஒருவன் வந்த விஷயத்தைக் கூறிவிட்டான்.

மூத்ததம்பி நயினார் சற்று வேளை யோசித்தார்.

''உடம்புக்கு எப்பனும் சுகமில்லாமல் கிடக்காம் சாப்பிட்டுப்போட்டு வாறதாம் எண்டு சொல்லிவிடு!''

வந்தவர்கள் பேல்கதை எதுவும் பேசவில்லை. மௌனமாகவே திரும்பி விட்டனர்.

: என்னவாம் அவன் வரட்டாமோ? ஏனாம்? என்ன செய்யப்போறானாம்? ஆக்களைத் தெரியாமல் கொழுவு றான் போனல கிடக்கு. இப்ப என்ரை அம்மான் பொலிசு இஞ்சுப் பெற்றர் எண்டது தெரியாததைபோலை கிடக்கு: இப்ப அவர் வீவிலை வந்து நிக்கிறார். நான் ஒருக்கா அவரெட்டைப் போட்டு வாறன். நான் வாறவரையிலை போகாமல் நில்லுங்கோ வந்திடுறன்'' என்று கூறிக்கொண்டே. அன்னப்பிள்ளை நாச்சியார் உடுப்பை மாற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்,

இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தார் வீடு நான்காவது படலையில்தான் இருக்கிறது.

அன்னப்பிள்ளை நாச்சியார் போனபோது அவரும் வீட்டில் இருந்தார்.

சற்று வேளைதான் பேச்சு நடந்தது.

அன்னப்பிள்ளை நாச்சியார் விரைவில் திரும்பிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொம்மான் என்னவாம்?"

"இதுக்கு உடனை ஒண்டுஞ் செய்யேலாதாம்! தான் கூட்டிக் கொண்டு போறது மாதிரியும் இருக்கப்படாதாம் உங்களைப் போகட்டாம், தற்செயலா வாறது போலை ஓரான் வந்து கதைக்சுச் சரிக்கட்டி விடுகிறாராம்!"

சின்னப்பிள்ளை நாச்சியாரின் இந்தப் பதில் மூத்த தம்பி நயினாருக்குச் சற்று மன நிம்மதியைத் தந்தது.

சாப்பாட்டை விரைவில் முடித்துக் கொண்டார்.

வீட்டுக் கோவிச்சியை அனுப்பி வண்டிக்காரனை வரச் செய்தார்.

புதிதாக எடுப்பாக உடை உடுத்தினார்.

ராஜா பாதிரிப் புறப்பட்டு விட்டார்.

மூத்ததப்பி நயினாரும் அறுமுகத்தாரும் வந்து சேர பாலை ஆகிவிட்டது.

மூத்ததப்பி நாயனாரின் முகம் கறுத்துக் களை இழந்து வரண்டு கிடந்தது.

"என்னவாம் அம்மான்?" என்று பரபரக்கக் கேட்டுக் கொண்டே அன்னப்பிள்ளை நாச்சியார் இருவரையும் அணுகினாள்.

செல்லாச்சிக் குஞ்சி அப்போதுதான் அரிக்கன் லாம்புச் சிமிலியைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"நல்லகாலம் நானும் உன்ரை நல்லகாலத்துக்கெண்டு கண்டியிலை இருந்து லீவிலை வந்திட்டன். இல்லாட்டி மனிசன் இண்டைக்கு அடைபட்டுக் கிடக்க வேண்டியது தான். ஆளுக்குச் சுகமில்லை எண்டதைச் சாட்டுக்குச் சொல்லி ஒருமாதிரிப் பிணை எடுத்துக்கொண்டு வந்திட்டன், நளவற்றை வீடுகளைக் கொளுத்தப் போன

வனிலை உன்ரை வண்டில் இழுக்கிறவனும் சேர்ந்தா னெண்டு அவனையும் பிடிச்சு வைச்சுக் கொண்டாங்கள். விதானையாரும் உள்ளுக்குத்தான். மிச்சம் இன்னும் பத்துப் பேரையும் பிடிக்குந்தனைக்கும் ஆக்கள் உள்ளுக் குத் தானாம். சரி நானும் நாலைஞ்சு நாளாய்ப் போச்சு லீவிலை வந்து! என்னெட்டையெண்டாலும் ஒரு சொல்லுக் கேட்டிருந்தா நான் எல்லாத்துக்கும் வழி வகுத்துத் தந்திருப்பன். மடத்தனமான வேலையைச் செத்து போட்டு......''

ஆறுமுகத்தார் பேசிக்கொண்டே போனார்.

''அது கிடக்கட்டும் அம்மான். இப்ப என்ன மணிய காரன் மயிர் என்ன செய்யப்போறாராம்? அதைச் சொல் லுறத்துக்கு!'' என்று ஆறுமுகத்தாரின் பேச்சைத் திசை திருப்பினாள்.

''திடலாங்களின்ரை வீடுகளைக் கொளுத்திக் கொள்ளையளும் அடிச்சத்துக்கு மண்கொள்ளைக் கேசு போடப்போறன் எங்கிறார். சொல்லேலாது போட்டா லும் போடுவார் போலைதான் கிடக்கு!''

அழுத்துக்கொண்டே ஆறுமுகத்தார் பதில் சொன்னார்.

''ஓ, ஓ, அவர் போட்டிட்டுத்தான் வேற வேலை பாப்பார். இதுக்கெல்லாம் எந்த நளவன் துணிஞ்சு சாட்சி சொல்லப் போறான் பாப்பம்!''

நாச்சியார் கெட்டித்தனம் பேசினார்.

''என்ன சாட்சியோ, புடிபட்டிருக்கிற ஒவ்வொருவனு மெல்லே கோட்டிலை ஒப்புக்கொள்ளப் போறான். பேந்தேன் சாட்சியளை?''

ஆறுமுகத்தாரின் இந்தப் பேச்சுக்குப் பின் வார்த்தை கள் நீடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததம்பி நயினார் உடுப்பு மாற்றாமலே ஆயாசத்துடன் சாய்மனையில் சாய்ந்து விட்டார்.

செல்லாச்சிக் குஞ்சி ஆறுமுகத்தாருக்கும் மூத்ததம்பி நயினாருக்குமாகப் பால் கோப்பி போட்டு வந்து கொடுத்தாள்

''ஆரது செல்லாச்சிக் குஞ்சியே? என்னாலை மட்டுக் கட்டேலாமைப் போச்சு! ஐஞ்சு வரிசத்துக்கு முந்திப் பாத்ததுக்கு இப்பான் பாக்கிறன். ஆளிலை எப்பனும் மாற்றத்தைக் காணேல்லை. என்ரை மனுசி நெடுக நெடுக செல்லாச்சிக் குஞ்சியையும் பம்பிடிசிங்கியையும் கேட்டபடி தான். செல்லாச்சிக் குஞ்சிக்கும் பம்பிடிசிங்கிக்கும் இருந்த ஒட்டைப்போலை ஊருக்கை ஆருக்கும் இருக்கேல்லை எண்டு நெடுகச் சொல்லுறவ. வம்புப் பகிடிக்குச் சொல்லேல்லை, 'பம்பிடிசிங்கிக்குத் தீட்டு நிண்டுதெண்டா, செல்லாச்சிக் குஞ்சிக்கு வயிறு ஊதாமை விடாது' எண்டு பகிடி விடுகிறவ!''

ஆறுமுகத்தாரின் இந்த வார்த்தை முடிவதற்கிடையில் செல்லாச்சிக் குஞ்சி லாம்பைக் கொழுத்தித் திண்ணைக் கம்பியில் தூக்கி விட்டு அடுக்களைச்குள் நுழையவும், ''மணியகாரன் நயினார் என்னவாம் நாச்சியார்?'' என்று கேட்டுக்கொண்டு பம்பிடிசிங்கி முற்றத்திற்கு வரவும் சரியாக இருந்தது.

''இஞ்சைபார் இவளுக்குச் சாவில்லை. இப்பானெடி பம்பிடிசிங்கி உன்ரை கதை கதைச்சனான். வாய் மூடுறதுக் கிடையிலை வந்திட்டாய், இஞ்சைபார் இவள் குமரிமாதிரி இளமை பேருறதை!''

இப்படி ஆறுமுகத்தார் வாய்நிறையக் கூறினார்.

''இதென்ன நாசமறுந்த கதை நயினார்? உந்தச் சிங்கள ஊரெல்லாம் என்னைப்போலை எத்தினியைக் கண்டிருப்பியள்! இன்னும் ஆசை தீரேல்லையே '' என்று கிண்டலாக ஒரு கேள்வியைக் கேட்டாள் பம்பிடிசிங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகத்தார் உத்தியோகத்திற்காகக் காத்திருந்த இடைக்காலத்தில் பம்பிடிசிங்கியிடம் மையல் கொண்டு அவளைச் சுற்றித் திரிந்ததுண்டு. கிட்டத்தட்ட இருவருக்கும் ஒரே வயதுதான் இருக்கும்.

பம்பிடிசிங்கியின் கொய்யக வீச்சுக்குள் அகப்பட்டுக் கொள்ள அவர் தலையால் நடந்து பார்த்திருக்கிறார். அவளின் குடும்பம் ஒடாவி வம்சமாக இருந்ததினால் அவளை வலுவில் மடக்கி விடலாம் என்பதும், இளவயதில் கணவனை இழந்திருந்த அவளைத் தொட்டாலே துவண்டு போவாள் என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்ததால் வயதில் ஒரு எட்டோ பத்தோ வித்தியாசப்பட்டாலும் மருமகள் முறையான அன்னப்பிள்ளை நாச்சியாரையே வெட்கத்தை விட்டு பம்பிடி சிங்கிக்குத் தூதாகவும் விட்டுப் பார்த்தார் ஆறுமுகத்தார்.

பப்பிடிசிங்கி அன்னப்பிள்ளை நாச்சியாரின் தூதைத் தூக்கித் தூர வீசி விட்டாள். இதை அவள் வெறுமனே செய்து விடவில்லை. ''மழைக்கால் இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாதெண்டு கொம்மானிட்டைப் பம்பிடிசிங்கி சொன்னவள் எண்டு சொல்லுபிள்ளை'' என்று சொல்லியும் அனுப்பி விட்டாள்.

சற்று வேளைக்குள் பம்பிடிசிங்கி இதை நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்து மீண்டாள்.

''எடி நான் சும்மா கதைக்குச் சொன்னா நீ ஏனெடி துள்ளிக் குதிக்கிறாய்? நாவுறுபடாமல் இருக்கவேணும் நீ இப்பிடிக் கட்டுக்குலையாமல் இருக்கிறதுக்கு.''

இப்படி ஆறுமுகத்தார் சற்று இதமாகவே பேசத் தொடங்கி விட்டார்.

''பம்பிடிசிங்கிக்கு வயதென்ன இன்னும் ஐம்பத்தெட்டுக்கூடத் துவங்கேல்லை. உண்மையாகதான் சொல்லுறன். இப்பவும் என்னாலை பிள்ளைப்பெற ஏலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பேருக்கு ஒரு ஆளில்லாமல் போச்சு! அவன் பரதேசி இருந்திருந்தால் பேருக்கு வைச்சுக்கொண்டு பெத்துக் காட்டுவன்!''

ஆவேசம் வந்தவளைப்போலப் பம்பிடிசிங்கி இப்படிப் பேசிவிட்டாள்.

ஏன் தான் அவள் இப்படிப் பேசினாளோ?

''எடி இனிக் கதையை நிப்பாட்டடி! அவளுக்கு வாய் மெத்திப்போச்சு நிப்பாட்டெடி. உவளை இப்படிக் கதைக்கவிட்டது இந்தக் கரவெட்டி மண்ணின்ர குண பெடி, அந்தந்தச் சாதியை அந்தந்த இடத்திலை வைச்சிருந்தா இப்படி வந்திருக்காதெடி! ஓடாவி நாச்சியாருக்குத் தான் நயினாத்தி எண்ட நினைப்பு! நிற்பாட்டெடி கதையை!''

அன்னப்பிள்ளை நாச்சியார் பெருங்குரலில் இரைந் தாள்.

ஆறுமுகத்தார் திடுக்குற்றுவிட்டார்.

மூத்ததம்பி நயினாரையும் இக்குரல் திடுக்குற வைத்து விட்டது.

அடுக்களைக்குள் இருந்த செல்லாச்சிக் குஞ்சிக்கும் பம்பிடி சிங்கிக்கும எந்தத் திடுக்காட்டமும் வரவில்லை.

''அப்ப நான் போட்டுவாறன்! நாளைக்கும் ஒருக்கா நான் மணியகாரனெட்டையும் போட்டு அதாலை பால சிங்கம் அப்புக்காத்தையும் கண்டுபோட்டு வாறன்'' என்று கூறிவிட்டு ஆறுமுகத்தார் எழுந்து சென்று விட்டார்.

''உனக்குக் கதைக்கிற கதை கதைக்காத கதை என்னெண்டு ஒண்டும் தெரியேல்லை! என்னெடி?'' என்று பம்பிடி சிங்கியைப் பார்த்து மூத்ததம்பி நயினார் முறைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம் நயினார் சொல்லுறதுஞ் சரிதான்! இன்னுங் கொஞ்ச நாளையில ஐயாவுக்கும் இது தெரியும், எனக்குந் தெரியும்!'' என்று கூறிக்கொண்டே பம்பிடிசிங்கி எழுந்து கொய்யகத்தைக் குலுக்கிக்கொண்டு நடந்தாள்.

அதே நடை!

அதே தழுக்கு!

□

ஏறக்குறைய பத்து நாட்கள் கழிந்து ஒரு நாள் மைமல் நேரத்தில் நல்லதம்பியனின் கார் மூத்ததம்பி நயினார் வீட்டுக்கு வந்து சேர்ந்தது.

அப்போதும் சாய்மனைக் கட்டிலில் இருந்து தன்னந் தனியாக எழுந்திருக்கத் தெம்பற்றவராக இருந்த நயினார் படுத்த படுக்கையிலேயே ''என்ன நல்லதம்பியன் பொழுது பட்ட நேரத்திலை?'' என்று கேட்டார்.

''ஒண்டும் விஷேஷம் இல்லையாக்கும், உதிலை பருத்தித்துறைக்கு ஒரு ஓட்டம் வந்தனான் பொழுது பட்டுப்போச்சு. திரும்பிப் போயிடலாம் எண்டுதான் வந்தனான். கார் இடையிலை பெற்றோல் அடைச்சுக் குழப்படி பண்ணிப் போட்டுது, போகேலாமைப் போச்சு அதுதான்...''

நல்லதம்பியன் விக்கித்தக்கிப் பதில் சொன்னான்.

''ஓ இனிப் பொழுதும் பட்டுப்போச்சு. வல்லை உப்பு வெளியுக்காலை போகவேணும். கள்ளனும் காடனும் உலாவிற இடம். இப்ப நாலைஞ்சு வெள்ளிக்கிழமையா வல்லை முனியும் குழப்படி பண்ணிதெண்டு கதைக்கி றாங்கள், ராவைப்பாட்டுக்கு நிண்டிட்டு விடியப்புறம் எழும்பிப் போவன்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எந்தவித மன அழுத்தமுமின்றி நயினார் பதில் உரைத்து விட்டார்.

நல்லதம்பியனுக்கு இது போதும்!

"அவள் பாவியும் கிணத்தெடியிலை, உனக்குத் தண்ணி வென்னியும் கலக்கித்தர ஆளில்லை. சிறிய தாய்க்காறியும் அவள்பாவியும் இண்டைக்கு வல்லிவிரத்தானெட்டைப் போகவேணுமெண்டு தோயிறாளவை! உதிலை அடுப்பெடி விறாந்தையிலை இரன் வரட்டுக்கு!"

நயினாரே மீண்டும் பேசினார்.

சற்று வேளைக்குள் அன்னப்பிள்ளை நாச்சியாரும், செல்லாச்சிக் குஞ்சியும் கிணற்றடியிலிருந்து திரும்பினர்.

நல்லதம்பியனைக் கண்டதுதான் அன்னப்பிள்ளை நாச்சியாருக்கு இனந்தெரியாத திகைப்பு வந்து விட்டது.

செல்லாச்சிக் குஞ்சி திகைக்கவில்லை. ஆனால் மனதுக்குள் ஒன்று கறுவியது.

அன்னப்பிள்ளை நாச்சியார் கூனிக் குறுகி ஒதுங்கிக் கொண்டு நடு அறைக்குள் போய்விட்டாள்.

உள்ளே போனவளை நீண்ட நேரமாகியும் வெளியே காணவில்லை.

"இஞ்சேருமப்பா வண்டில்காறனை வேளையோடை வரச்சொல்லிச் சொல்லி வைச்சனீரே?"

நயினாரின் இந்தக் கேள்விக்கு "ஓமோம்!" என்ற அன்னப்பிள்ளை நாச்சியாரின் பதில் மட்டுந்தான் கிடைத்தது.

"வண்டில்லை ஏறிக்கீறி இறங்கிறதை விட்டிட்டு இஞ்சை நல்லதம்பியன்ரை காரும் தற்சேலா, வந்திட்டுது. அதிலை மாமியும் நீரும் போட்டு வாருங்கோவன்! கையோடை வெளிக்கிட்டுப் போனியெண்டா கையோடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தீத்தத்தையும் பாத்துப் பூங்காவனத்தையும் பார்த்துக் கொண்டு வந்திடலாம். பறுவங் கடலுக்கை விழத்தான் சாமியும் தீத்தமாட இறங்கும். அதுக்கிடையிலை உதுக்கிளாலை கற்கோவளத்துக்காலை போனியளெண்டாத் தீத்தத்தையும் கண்டிடலாம் வெளிக்கிடுங்கோ கெதியாய்!''

நயினாரின் இந்தக் கேள்விக்கு உள்ளே இருந்து பதில் ஏதும் வரவில்லை.

''ஏனுமப்பா கேக்குதே?''

நயினாரின் அடுத்த கேள்விக்கு ''ஆரும் கண்டமாதிரி கதைக்கவோ?'' என்ற பதில் மட்டும் வந்தது.

''ஏன், தம்பி கார்தானை நீரும் வெளிக்கிடுமன் போட்டு வருவம்!''

செல்லாச்சிக் குஞ்சியின் இந்தக் குரல் மறுபக்க கூடத்திலிருந்து எழுந்தது.

''வரலாந்தான் இண்டைக்கு மாமி, பேதிக்கடுவல்லே குடிச்சிட்டிருக்கிறன். மதியந் திரும் பினாப்போலைதான் பேதிக்குமெண்டெல்லே பரியாரி சொன்னவன்! பேந்து ஏதெண்டாலும் கோயிலெடியிலை வந்திட்டா வில்லங்கம். நீங்க போட்டு வாங்கோ, நல்லதம்பியனோடை போறதுக்கு என்ன பயம்? பத்துமணி வரையிலை சாமி இருப்புக்கு வந்திடும், வந்திடலாம்!''

இதற்குப்பின் அன்னப்பிள்ளை நாச்சியாரோ, செல்லாச்சிக் குஞ்சியோ யாரும் பேசவில்லை.

இவர்கள் தவிர்ந்தால் நல்லதம்பியன் பேச ஒன்றுமில்லை.

கார் புறப்பட்டபோது பொழுது அடிவானத்தில் மிதந்தது. இன்று நல்ல சித்திராபருவம். பொழுது படுவதும் நிலவு வருவதும் தெரியாமல் நடக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்ததம்பி நயினார் சாய்மனையில் கிடந்தபடியே வழியனுப்பி வைத்தார்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் மூத்ததம்பி நயினாரால் வாங்கிக் கொடுக்கப்பட்ட இரண்டாம் கூறையை அன்னப்பிள்ளை நாச்சியார் உடுத்திருந்தாள். இதை அவள் எப்போதாவது உடுத்தியதை அவர் பின்பு கண்டதில்லை. அதற்கேற்றபடி பொங்கிய கைச்சுருக்க முடைய இறவுக்கைச் சட்டையுடனும், அரையோடு ஒட்டி இறுக்கிய ஒட்டியாணத்துடனும், தாழ முடிக்கப்பட்ட கொண்டையுடனும் அவள் தேவதைபோல இருந்தாள்.

இந்த இரண்டாங் கூறையையும், அதன் ஜோடியாக பொங்கல் கைச் சுருக்குச் சருகைச் சட்டையையும், ஒட்டி யாணத்தையும் அணியும்படி மூத்ததம்பி நயினார் பல தடவை பல சுபகாரியங்களுக்குச் செல்லும் வேளைகளில் அவளைக் கேட்டுப் பார்த்தும் மறுத்து வந்தவள் இன்று தானாகவே அவைகளை அணிந்துகொண்டதில் அவருக்குப் பேராச்சரியம்!

கார்வரை அவள் நடந்துசெல்லும் ஒய்யாரத்தைக் கண்டவருக்கு உடலெல்லாம் புளகாங்கிதம் அடைந்தது.

''நயினார், பெண்பேய் பொல்லாதது! இலேசிலை விடாது, ஆறுமாதம் செல்லுறதுக்கிடையிலை எதெண்டாலும்......''

இப்படி நவாலியிலிருந்து வரும்போது பரியாரி சின்னப் பிள்ளையன் சொல்லிவிட்ட காந்தச் சொல்லை இனி மேலும் கடைப்பிடிக்க முடியுமென்று அவர் மனதுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

மனதுக்குள் அவர் எந்த முடிவுக்கோ வந்துவிட்டார்.

லாம்பின் மங்கல் ஒளியில் அவரின் வெளிறிய முகம் பளிச்சிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் காற்றாகப் பறந்து கற்கோவளம் சவுக்குக் கடந்து கடற்கரைக்குப் போனபோதுதான் சாமி கடற் தீர்த்த திற்காகக் கடலில் இறங்கியது கடற்கரை மண் வெண்மை ஜனக்கூட்டத்தால் நிரம்பி இருந்தது.

நல்லதம்பியனின் கார் அங்கு போய்ச் சேர்ந்தபோது ஜனம் காரைச் சுற்றிச் சுற்றிச் சமுத்திரமாகக் குழுமி விட்டது.

காரைத் தொட்டுத் தடவிப் பார்ப்பவர்,

அதன் சில்லுகளுக்குள் கைவிட்டுத் திருப்பிப் பார்ப் பவர்கள்,

அதன் திருகணை வளையத்தைத் திருப்பிப் பார்ப் பவர்கள்,

அதன் கொழுத்த கோண் கவர் பந்துகளை ஆசை யோடு வருடிப் பார்ப்பவர்கள்,

இப்படிப் பலர் பலபல விதங்களில் காரைப் பரீட் சித்துக் கொண்டனர். இதுவரை காருக்கு உள்ளே இருந் தவர்களை யாரும் இனங்காண முயற்சிக்கவில்லை. அன்னப்பிள்ளை நாச்சியார் இருந்த கோலத்தில் அவளை இனங்காணுவது யாருக்கும் இலேசில் முடியக்கூடிய தாகவும் இருக்கவில்லை.

தற்செயலாக வெளியே பார்வையைச் செலுத்திய செல்லாச்சிக் குஞ்சிக்குத் தெரிந்த முகமாகக் கண்களுக்குப் பட்டது ஒருத்தியைத்தான்.

அவள் பம்பிடிசிங்கி.

''எடி பம்பிடிசிங்கி!''

இப்படி செல்லாச்சிக் குஞ்சியின் குரல்கேட்டு காரடிக்கு வந்து சேர்ந்த பம்பிடிசிங்கி, உள்ளே இருந்த அன்னப்பிள்ளை நாச்சியாரையும், முன்சீற்றில் சாரதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நல்லதம்பியனையும் நோக்கித்தான் கண்களைச் சுழற்றினாள்.

செல்லாச்சிக் குஞ்சி முதலில் இறங்கிவர,

அவளைத் தொடர்ந்து அன்னப்பிள்ளை நாச்சியார் இறங்கிவர,

சாரதி என்ற முறையில் நல்லதம்பியனால் அத்தனை விரைவில் இறங்கிவர முடியவில்லை.

''உதுதான் எங்கடை மூத்ததம்பியற்றை பெஞ்சாதி அதுமாமியார், உந்தக் கார்தான் அவர் இப்ப வேண்டி வைச்சிருக்கிற காராக இருக்கும். அந்த வாக்குக் கண்ணன் தான் றைவராக்கும்!''

இப்படிப் பல பக்கங்களிலிருந்தும் சத்தங்கள் கிளம்பின.

கடல் தீர்த்தத் திருவிழா முடிந்து வல்லிவிரக்கோவில் வீதியையோ சன சமுத்திரம் படை எடுக்க அந்தப் படை எடுப்போடு நல்லதம்பியனின் காரும், புதிதாக பம்பிடி சிங்கியும் ஏறிக் குந்த வல்லிவிரத்தான் வாயிலுக்கு வந்து சேர்ந்துவிட்டது.

பூங்காவனத் திருவிழாத் தொடங்கி விட்டது. பாமா ருக்மணி சமேதரராகக் கண்ணபிரான் நந்தவனம் வந்தார்.

உள்கும்பச் சுற்று,

வெளிக்கும்பச் சுற்று,

வெளிவீதிச் சாமிவலம்,

தீப்பந்த ஆராதனை,

மேளச்சமா எல்லாமே முடிந்துவிட்டன. அன்னப் பிள்ளை நாச்சியாருக்கோ, நல்லதம்பியனுக்கோ எதிர் பார்த்தபடி இன்று திருவிழா சிறப்பாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாச்சிக் குஞ்சியும், பம்பிடிசிங்கியும் சோடி சேர்ந்து கொண்டு சதிசெய்து விட்டார்கள்.

உச்சத்து முழுநிலாப் பால்போலப் பொழிந்தது.

# 22

''என்னெடி சிங்கி, போற காரிலை நீயும் வாவன், வீட்டுக்கு ராவைக்குப் பாட்டுக்குப் படுத்துக் கிடந்திட்டு விடியப்புறமாகப் போகலாம்!''

இப்படி செல்லாச்சிக்குஞ்சி பம்பிடிசிங்கியைக் காருக்குள் வரும்படி அழைத்தது அன்னப்பிள்ளை நாச்சியாருக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. ஆயினும் அதைத் தடுத்து நிறுத்தவும் அவளுக்குச் சக்தி போதவில்லை.

மனதில் ஏதாவது மனக்குறை ஏற்படும்போதுதான் செல்லாச்சிக் குஞ்சி பம்பிடிசிங்கியைச் 'சிங்கி' என்று அழைப்பது வழக்கம். அதேபோலத்தான் மனதுக்கு நிறைவு ஏற்படும்போது செல்லாச்சி நாச்சியாரைக் 'குஞ்சி' என்று அழைப்பதும் பம்பிடிசிங்கிக்கு வழக்கம்.

''ஓங்குஞ்சி இண்டைக்கு நாச்சியாற்றை காரிலும் ஒருக்கா ஏறிப்பாப்பம்!'' என்று சிங்கி ஒப்புக்கொண்டு விட்டாள்.

பின் ஆசனத்தில் அன்னப்பிள்ளை நாச்சியாரும் குஞ்சியும்!

அவர்களுடன் சிங்கி சமமாக உட்கார்ந்துவிட முடியாதாகையால் நல்லதம்பியனுக்குப் பக்கமாக முன் சீற்றில் சிங்கி உட்கார்ந்து கொண்டாள்.

கார் ஊரை நோக்கிப் புறப்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கிக்கு காரின் ஆட்ட அசைவும், அதற்கேற்ற மாதிரி இருக்கை மெத்தையின் தூக்கல் நிமிர்த்தலும் மிகவும் இதமாக இருந்தது.

இதற்குமுன் ஒரே ஒரு தடவைதான் அவள் காரில் பிரயாணம் செய்திருக்கிறாள். அந்த அனுபவத்தை விட இந்தப் பயணம் முற்று முழுதாக மாறுபட்டதாக இருந்தது. ஆயினும் சிங்கியின் கவனமெல்லாம் அந்த மாறு பட்ட அனுபவத்தில் அல்ல, ஒத்தைக்கண் நல்லதம்பியனை நோக்கித்தான் இருந்தது.

அவனின் நீண்ட மூக்கும் ஏறு நெற்றியும், சுருட்டை மயிரும், சற்று முன் தள்ளிய குரல்வளைப் புடைப்பும், பக்க வாட்டில் வளர்ந்த சதையால் பாதிவரை மூடப்பட்ட ஒற்றைக் கண்ணும், அவள் நெஞ்சத்து முடுக்குகளுக்குள்ளே ஆங்காங்கே புகுந்து நிற்க வைப்பதில்தான் இருந்தது.

''பொடியன், உங்கடை பொடியன்தான் சிங்கி, தேப்பன் உங்கடை ஓடாவி. தாய்தான் கோவிச்சி, அதனாலை என்ன, பொடியன் குணம் நடையிலை வெள்ளைக்காரன் தான் சிங்கி, சாதியிலை என்ன கிடக்கு!'' என்று குஞ்சி நல்லதம்பியனைப் புதிதாக அறிமுகம் செய்வதுபோலைச் சிங்கிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

''ஆமோ, நல்லதாப் போச்சு!'' என்று கூறிக்கொண்ட சிங்கி நல்லதம்பியனுடைய கோத்திரத்தை அக்குவேறு ஆணிவேறாக அவன் வாயாலேயே பிச்சுப் பிடுங்கி விட்டாள்.

''எணை குஞ்சியார் இப்ப தெரியுதெணை என்ரை அந்தாளும் மானிப்பாய் அடியெண்டதாலை எனக்கும் கிட்டின சொந்தமெண்டு! கோவிச்சியை முடிச்சதாலை சபைசந்தி இல்லாமல் கிடந்திருக்கு! இனிமேல் உதெல்லாத் தையும் பாக்கேலுமே? மூத்ததம்பி நயினாருக்கும் பிடிச்சுப் போச்சு, எங்கடை நாச்சியாருக்கும் பொடியனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சுப் போச்சு! பாத்தியே குஞ்சியார் சொல்லி வைச் சாப்போலை பொடியனும் வல்லிவிரத்தான்ரை திருவிழா வெண்டு இண்டைக்குக் காரையும் கொண்டுவந்ததை! இதைத்தானெணை விதி என்னிறது! நாச்சியார் நினைச்சவவே இண்டைக்குக் காரிலை வல்லிவிரத்தா னெட்டை வருவமெண்டும், இப்படி நடக்குமெண்டும்?''

நல்லதம்பியன் கார் சொருகுபெட்டியைத் திறந்து தகர டப்பாவோடு கிடந்த சிகரெட்டு ஒன்றை எடுத்துக் குச்சியைக் கிழித்துப் பற்றவைத்துக் கொண்டான்.

அது ஆனைமார்க்குப் போட்ட சிகரட்;

அப்போதுதான் அது யாழ்ப்பாணத்திற்கு வ் ற்டனைக்கு வந்திருக்கிறது.

அதன் கமகமென்ற வாசனை கார் எங்கும் பரவி காரின் சகலத்தையும் புனிதமாக்கியது.

''உது தானெணையெடா தம்பி பேணியிலை அடைச்சு இப்ப வாற வெள்ளைச் சுருட்டெண்டு சொல்லுறவை! ஆனை அடையாளம் போட்டுக்கிடக்காம்! சாமியன் அரசெடிக் கடையிலை நேத்தைக்கு உதை வாங்க அடிச்சு விலகேலாத சனம்''

குஞ்சியின் பேச்சோடு பேச்சாக கார் கட்டைவேலிச் சந்திப்பில் திரும்பி, உப்புறோட்டுக்கு வந்துவிட்டது.

இன்னும் இருப்பது சிறிது தூரந்தான். தில்லையம் பலப்பிள்ளையார் கோவிலடிக்குப் பக்கமாக உள்ள கிரவல மண் றோட்டுக்குத் திருப்பி சற்றுத் தூரம் போய் இடது பக்க மணல் பாதையில் திரும்பிவிட்டால் நேராக மூத்த தம்பி நயினார் வீடுதான்.

திறந்துகிடந்த வண்டித் தட்டுக்கூடாக கார் கிடுகு மண்டபம் வரை வந்து விட்டது.

காரின் வெளிச்சம் சாய்மனையில் கிடந்த நயினாரின் கண்களைக் குத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறாந்தையில் சிமிலி விளக்குக் கம்பியில் தூங்கி எரிந்து கொண்டிருந்தது.

''என்ன வேறை ஒரு ஆளும்கூட இறங்குது? பம்பிடி சிங்கிப்போலை கிடக்கு?'' என்று நயினார் கூறி வாய் மூடுமுன்,

''ஓமோம் தம்பி அவள்தான். கோயிலெடியிலை நிண்டு காரிலை வர ஆசைப்பட்டாள் பின்னை வாடி எண்டு கூட்டியந்திட்டன்!'' என்று குஞ்சி பதில் சொல்லி விட்டாள்.

அன்னப்பிள்ளை நாச்சியார் மடமடென்று இறங்கி நடு வீட்டுக்குள் போய்விட்டாள்.

அவள் முகத்தில் கோயிலுக்குப் போகும்போது இருந்த களை இப்போது இல்லை.

''என்னெணை அவள் பாவியின்ரெ முகம் அவளவு நல்லாக் காணேல்லை, ஏதெண்டாலும் சுகயீனம் கிகயீனமே?''

என்று நயினார் குஞ்சியைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டார்.

''பின்னை வல்லிவிரத்தான்ரை கடல் காத்தும் மணல் விசுறலும் சும்மா விடுமே? நாச்சியாரை எப்பன் வதக்கி எடுத்திட்டுதுபோலை'' என்று பம்பிடிசிங்கிதான் பதில் சொன்னாள்.

நயினார் வீட்டின் லத்தீன் சுவர்க்கடிகாரம் சரியாக ஒரு தடவை அடித்தது.

''மணி ஒண்டாப் போச்சு, கார்ப் பொடியனுக்கும் ஏதும் சாப்பிடக் குடுத்து, சிங்கியை கவனிச்சிட்டு அவள் பாவியையும் தின்னச் செய்யணை'' என்று நயினார் குஞ்சிக்குப் பணித்தார்.

நல்லதம்பியனுக்கு வழமைப்படி உணவு பரிமாறப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பிடிசிங்கி தனக்குப் பசிக்கவில்லை என அடம் பிடித்தாள்.

''பிள்ளை, ஏதும் திண்டிட்டுப் படனணை!'' என்ற குஞ்சியின் கேள்விக்கு, ''எனக்கு வேண்டாம்; பசிக் கேல்லை'' என்று மட்டும் நடுவீட்டுக்குள்ளிருந்து பதில் வந்தது.

நயினாரும் சாய்மனையைவிட்டு உள்ளே போய் விட்டார்.

விறாந்தையின் சிமிலிவிளக்கு சற்றுத் தணிக்கப் பட்டது.

நல்லதம்பியன் வழமைப்படி கார் பின்சீற்றில் படுத்துக் கொண்டான்.

சிங்கியும் குஞ்சியும் அடுக்களை முன் விறாந்தையில் கைவிளக்கைக் கொழுத்தி வைத்துக்கொண்டு தங்களுக்குள் அடக்கமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

குஞ்சி மாடத்துக்குள் சென்று புகையிலை ஒன்றினை முழுவமே எடுத்துவந்து சிங்கிக்குக் கொடுக்க, அடிக்கடி அவைகளைச் சுருட்டுச் சுருட்டித் தானும் புகைத்துக் குஞ்சிக்கும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

கைவிளக்கின் ஒளி கார் கூடாரத்துக்கூடாகவும் ஊடறுத்துச் சென்று கொண்டிருந்தது.

காருக்குள் நல்லதம்பியனின் உழத்தல் தாங்காமல் அதன் மெத்தைகள் கீச்சிட்டுக் கீச்சிட்டுத் தனது ஆற்றா மையை முரசறைந்து கொண்டிருந்தது.

எலிபன் சிகறற் வாசனை தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது.

சுவர் மணிக்கூடு இரண்டு, மூன்று, நான்கு என்று அடித்துக் கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுக்கும் நாலுக்குமிடையில் ஒருதடவை வீட்டின் நடு அறை நீக்கப்படுவது போலவும், அன்னப்பிள்ளை நாச்சியார் வெளியே வருவது போலவும் ஒரு தோற்றம் காணவே பப்பிடி சிங்கி மிகவும் தாராளமாகக் காறி இருமி உமிழ்ந்து சளியை வெளியே துப்பிக்கொண்டாள்.

அதற்குப் பின்னர் மூச்சுமில்லைப் பேச்சுமில்லை.

செல்லாச்சிக் குஞ்சி காரையே சுவனித்துக் கொண்டிருந்தாள்.

அங்கு எவ்வித சலனமும் இல்லை.

சுவர்க் கடிகாரம் ஐந்தடித்தது; ஆறு அடித்தது.

பொழுது கிளம்பத் தொடங்கிவிட்டது.

சிங்கியும் குஞ்சியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் தங்கள் திருப்தியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

வீட்டுக் கோவிச்சி பணிவிடைக்காக வந்து சேர்ந்து விட்டாள்.

சிங்கி முற்றத்திற்கு வந்து தோட்டப்பக்கம் பார்த்தாள்.

நிரைக்கு இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் குடங்களுடன் அணிவகுத்துச் செல்லுங்காட்சி அவள் கண்களுக்கு ரம்மியமாக இருந்தது.

திடலில் பெண்டுகள் அதிகாலையோடு தண்ணீர் எடுக்கப் போகிறார்கள்.

இரண்டு மைல்களுக்கப்பால் உள்ள மணியகாரன் நயினாரின் கிணற்றில் தண்ணீர் எடுத்து வருவதற்காக அவர்கள் செல்கிறார்கள்.

அவர்கள் போவதற்குச் சற்றுப் பிந்திவிட்டால் அவர்களுக்குத் தண்ணீர் வார்ப்பதற்காகக் கிணற்றடியில் காத்திருக்கும் கோவியன் ஆத்திரப்பட்டுக் கொண்டுபோய் விடுவான். பின்பு அவர்கள் மணியகாரன் பார்த்து வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் அனுப்புமட்டும் காத்திருக்க வேண்டும். அப்படிக் காத்திருந்தால் சிலவேளை திடல் திரும்புவதற்கு மதியங் கூட வந்து விடுவதும் உண்டு.

திடலில் பெண்கள் குடங்களைத் தலை உச்சியில் அநாயாசமாக வைத்து கைகள் இரண்டையும் அகலவைத்து வீசி, வயல் வரம்புகளால் நடந்துபோகும் அழகைப் பார்த்துக்கொண்டே பம்பிடிசிங்கி நீண்ட நேரமாக நின்று விட்டாள்.

''என்னெடி நளத்தியள் தண்ணிக்குப் போற அழகைப் பார்த்து ஏங்கிப்போய் நிக்கிறாய்ப் போலை கிடக்கு'' என்று கேட்டுக்கொண்டே செல்லாச்சிக் குஞ்சி அடுக்களைக்குள்ளிருந்து வந்தாள்.

''ஓமெங்கிறன்! அவளவையின்ரை அழகுவடிவுக்கு என்னவாம்!'' என்று தன்னை மறந்தே ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டாள் பம்பிடிசிங்கி!

சற்று வேளை ஒரு பேச்சுமில்லை.

''நாசமாப்போன சீவியம்! ரெண்டு மூண்டு கட்டைக்குப் போய் தண்ணி கொண்டுவந்து சீவிக்கிற உந்தச் சீவியத்தை எவ்வளவு காலத்துக்கொண்டு இவளவை பாவியள் செய்யப்போறாளவை?'' என்று தன்பாட்டிலேயே பம்பிடிசிங்கி பேசிக்கொண்டாள்.

நல்லதம்பியன் இன்னும் எழுந்திருக்கவில்லை. இரவோடிரவாகத் தூக்கமின்மையில் இருந்து கடைசி நேரத்தில் தான் அவன் கண்ணயர்ந்திருக்க வேண்டும். அதுதான் அவன் இப்படி இந்த வேளை ஆழ்ந்து தூங்குகிறான்.

வீட்டுக் கோவிச்சி முற்றம் பெருக்கி விட்டு கோப்பி கலக்க அடுக்களைக்குள் போய்விட்டாள்.

பால்பசு கத்திற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் பால் தேவைக்காகச் சமீபத்தில்தான் மாடும் கன்றுமாகக் கொள்முதல் செய்யப்பட்டது.

வழமையாகப் பால் பிதுக்கும் ஆளை இனங்காண முடியாமல் உரிய நேரத்திற்கு அது குரல் வைக்கிறது.

செல்லாச்சிக் குஞ்சி செம்பைக் கழுவித் தண்ணீரை நிறைத்துக் கொண்டு மாட்டுக் கட்டை மறைவுக்குள் போனாள்.

மூத்ததம்பி நயினார் வீட்டுக்கு வெளியே விறாந்தை சாய்மனைக்கு வந்து விட்டார்.

நல்லதம்பியனும் கார் சீற்றிலிருந்து சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்து விட்டான்.

செல்லாச்சிக் குஞ்சி பால் கலக்கி விட்ட கோப்பியைப் பேணியுடன் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்தாள். பின்பு கற்கண்டு கரைத்த பால் ஏதனத்தை மூத்ததம்பி நயினாருக்குக் கொடுத்து, அவர் வாய் கொப்பளிக்கத் தண்ணீரும் கொடுத்துவிட்டு அடுக்களைக்குள் சென்றாள்.

பம்பிடிசிங்கி அடுக்களைக்குள்ளேயே கோப்பி குடிக்க நுழைந்துவிட்டாள். நுழையும்போது "என்ன செல்லாச்சிக்குஞ்சியார் நாச்சியார் இன்னும் எழும்பேல்லைப் போலை கிடக்கு?" என்று கேட்டுக் கொண்டே சென்றாள்.

"ஓமோம் வல்லிவிரத்தானெட்டையெல்லே போட்டு வந்தவ! அடிகாத்துக்கையும் மணலுக்கையும் தேகம் அலைக்களித்து போயிருக்கும். இப்ப ஒரு எட்டுப் பத்து நாளாத் தலைச்சுத்தும் பிரட்டலும் எண்டு கூடச் சொல்லி கொண்டிருந்தவ அதானாக்கும் எழும்பேலாம கிடக்கிறா?"

இப்படி வீட்டுக் கோவிச்சி சொன்ன பதில் செல்லாச்சிக் குஞ்சிக்குத் தூக்கிவாரிப்போட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பிடிசிங்கி மெதுவாகச் செல்லாச்சிக் குஞ்சியின் இடுப்பில் இடித்துக் கொண்டாள்.

''புள்ளை நாச்சியார், யெமன் கையிலை இருந்து நயினார் மீண்டிருக்கிறார். என்ரை மோன் எண்டபடி யாத் திருப்பி எடுத்துப் போட்டான். இல்லையெண்டா அவள் நளத்தியின்ரை புரிசனைச் சுமை இறக்க அனுப்பி யிருப்பானே? பிறகுஞ் சொல்லுறன் நாச்சியார். ஆம்பிளையள் விடாயினம்! குறைஞ்சது ஐஞ்சாறு மாசத் துக்கிடையிலை நயினாரிலை தொட்டுக்கிட்டு அழைஞ்சீ ரெண்டா பேந்து என்ரை மோனிலை பிழைகிழை சொல் லிப்போடாதையும்! கவனம் நாச்சியார்.''

இப்படி நவாலிச் சின்னப்பிள்ளைப் பரியாரியின் தாய் சின்னம்மாள் அங்கிருந்து நல்லதம்பியனின் காரில் ஏறிப் புறப்படுவதற்கு முன் அன்னப்பிள்ளை நாச்சியாருக்குச் சொன்ன வார்த்தை இப்போது செல்லாச்சிக் குஞ்சியின் நெஞ்சுக்குள் இருந்தது.

''இஞ்சேரும் அப்பா, இவளவு நேரமும் நித்திரையே, தாயும் பிள்ளையுமெண்டாலும் வாயும் வயிறும் வேறை. நல்லதம்பியன் போகப்போறான், வெளிக்கிட்டிட்டான். கோயிலுக்குப் போன கூலியைக் குடுத்தனுப்பிப் போட்டுக் கிடவும்!'' என்று மூத்ததம்பி நயினார் குரல்வைத்தார்.

''அதுக்கென்ன அவசரம் ஐயா இப்ப, பேந்தும் இப்பிடி ஒரு நேரத்திலை சேத்து வாங்கினா முடிஞ்சிது. வாற புதன்கிழமை தும்பளையிலை ஒரு கலியாண ஓட்ட மிருக்கு கட்டாயம் புதன்கிழமை வருவன் தானை வரேக்கை வாறன்!'' என்று சற்றுப் பெருங்குரலில் கூறினான் நல்லதம்பியன்.

அக்குரல் உள் வீட்டுக்குள் இருந்த அம்மாளின் காது வரை வீழ்ந்திருக்க வேண்டும்.

அம்மாள் அப்போதுதான் வெளியே வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தலைமயிர் பக்குவமாகத் திரட்டி முடியப்பட்டு உடையை இழுத்துவிட்டுச் சரிபார்த்துக் கொண்டு வெளியே வந்தாள்.

சற்று முகத்தை மலர வைத்து அவள் முற்றத்தைத் தாண்டிக் கிணற்றடிப்பக்கம் போய்விட்டாள்.

''எண்டாலும் மோனை சரியில்லை, உனக்கும் எண்ணை கிண்ணை அடிக்க வேண்டாமே! அம்மா கிணத்தெடிக்குப் போட்டா வரும் மட்டும் எப்பன் நிண்டு தாறதை வாங்கிக் கொண்டுபோ! மிச்சம் சொச்சம் இருந்தால் புதன்கிழமை எடன்'' என்று கூறிய நயினாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நல்லதம்பியன் புழுதி படர்ந்த காரைத் துடைத்துக் கொண்டு நேரத்தைப் போக்கினான்.

பென்னம்பெரிய வெள்ளைக் கொக்கொன்று நயினார் வளவுக்குக் குறுக்கால் பறந்து தோட்டக்கரைக் கப்பால் உள்ள துரவுக்கரைப்பூவரச மர உச்சிக்கொப்பில் உட்கார்ந்துகொள்ள, அதன் சுமை தாங்கமாட்டாமல் பூவரச மரக் கொப்புச் சவண்டு சவண்டு நிமிர்ந்து சற்றுப் பின் அதையும் சுமந்துகொண்டு நிலைத்து விட்டது.

''அங்கை பாரடா பொடி, வெள்ளைக் கொக்கின்ரை பருமனை, ஐயோ துவக்கையெல்லே முந்தாநாள் ஆறுமுகத்தார் கொண்டுபோட்டார், இல்லாட்டி இப்ப காட்டுவன் வேலையை! நல்லதம்பியனுக்கு இண்டைக்கு கொக்கு விருந்தெல்லே போட்டு அனுப்புவன்'' என்று வாய் ஊறிக் கொண்டார் மூத்ததம்பி நயினார்.

எல்லாரும் பேசாமல் இருந்தனர்.

''குஞ்சி, ஒருக்கா ஆறுமுகத்தாரெட்டைப் போய் துரவெடிப் பூவரசிலை கொக்கொண்டு இருக்காம் துவக்கையும் மருந்துப் பெட்டியையும் கொண்டுவரச் சொல்லிப் போட்டு வாறியே?'' என்று செல்லாச்சிக் குஞ்சியை அவர் கேட்கவே மறுப்பின்றிச் செல்லாச்சிக் குஞ்சி எழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகத்தார் வீட்டுப்பக்கம் சென்றாள். சென்றவள் சற்று வேளைக்குப் பின் ஆறுமுகத்தாரின் மருமகன் முறையானவனுடன் திரும்பினாள்.

அவன் கையில் துவக்கும் மருந்துப் பெட்டியும் இருந்தன.

''இஞ்சை கொண்டாடா தம்பி இதிலை இருந்திரையிலை சுட்டுக் காட்டிறன்'' என்று கூறி மருந்துச் சன்னத்தால் குழலை நிறைத்து, கெற்பை வைத்து கள்ளனை இழுத்து விட்டு இலக்கு அணைத்து விட்டாரே ஒரு வெடி.

அது பண்டாரம்!

கொக்கு மிகச் சாவதானமாக எழுந்து நீண்ட கால்களைப் பின்தள்ளிக் கொண்டே பறந்தது.

''சை!''

இது நயினாரின் நெஞ்சோச்சல்.

வெடிச் சத்தத்தைக் கேட்டு அள்ளிப் பிடித்துக் கொண்டு கிணற்றடியில் நின்ற அன்னப்பிள்ளை நாச்சியார் ஓடிவந்தாள்.

என்னவோ ஏதோ என்ற ஏக்கம் அவள் நெஞ்சைக் குலுக்கி விட்டது.

ஒன்றும் நடந்து விடவில்லை.

நல்லதம்பியன் காரைத் துடைத்துவிட்டு அதைப் பிரயாணத்திற்குத் தயாராக்கிக் கொண்டிருந்தான்.

''இஞ்சாரப்பா! கொக்கொண்டுக்குச் சுட்டன் என்ரை வெடி பண்டாரமாப் போச்சு; போகட்டுக்கு நல்லதம்பியனுக்கு ஏதும் குடுத்துவிடும்'' என்று நயினார் சாவதானமாகச் சொன்னார்.

அம்மாள் வீட்டுக்குள் சென்று பணத்தை எடுத்து வந்து நல்லதம்பியனுக்குக் கொடுத்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய பத்து யார் தூரம்வரை யாரும் இல்லை.

''புதன்கிழமை!'' மிகவும் மெதுவாக நல்லதம்பியன் அம்மாள் கேட்குப்படி மட்டும் கூறியிருக்க வேண்டும்.

கார் புறப்பட்டு விட்டது.

''புதன்கிழமை வருவாய்தானை போட்டுவா! காசு போதுமோ? போதாட்டிப் பேந்து கேட்டு வேண்டன்!'' என்று நயினார் கூறவே தலை அசைத்துவிட்டு நல்லதம்பியன் காரின் இயந்திரத்தைக் கம்பிகொண்டு சுழற்றி ஸ்ராட் செய்து விட்டான்.

அவன் கைபடச் சுழற்றினாலே ஸ்ராட் பண்ணாத எந்தக் காரும் ஓடும்.

இது அவனுக்கு ஒரு கைராசி!

செல்லாச்சிக் குஞ்சியும், பம்பிடிசிங்கியும் வீட்டுக் கோவிச்சியும் கார் பனைப்பாதையைத் தாண்டி மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஐயா சாய்மனையில்!

அம்மாளோ வீட்டுக்குள்!

ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையில் கொக்கு வாடிக் கொண்டுதான் இருந்தது. ''ஐயா சுட்டாயென்ன சுடாட்டா என்ன! அது தானாகப் பறந்திருக்கும்'' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள் பம்பிடிசிங்கி.

# 23

அதிகாலையோடு வயல் வரம்புகளால் நிரைகட்டித் தண்ணீர்க் குடங்களுடன் போய்க்கொண்டிருந்த பெண்களைக் கவனிக்காத அன்னப்பிள்ளை நாச்சியார் அந்தத் திடலுப் பெண்கள் திரும்பவும் வந்து சற்று வேளைக்குள் றுபடியும் தண்ணீர்க் குடங்களை ஏந்தி விதானையாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டக் கிணற்றை நோக்கிப் போனபோதுதான் திடலுக்குள் இன்று ஏதாவது விசேஷமாக இருக்க வேண்டுமென மனதுக்குப் பட்டது.

''திடலில் நளவ வீடுகள்ளை இண்டைக்கு என்னவாமெடி விசேஷம்?'' என்று நாச்சியார் வீட்டுக் கோவிச்சியை கேட்டாள்.

''அது தெரியாதை நாச்சியார், இண்டைக்குச் செல்வியின் மோள் சின்னிக்கும் சொடுகன்ரை மோன் சின்னானுக்கும் சோத்துக் கலியாணமாம், அதோடை புத்தூர்ப் பள்ளரைக் கொண்டு மணியம் நயினார் கட்டுவிச்சுக் குடுத்த வீடுகளிலை இண்டைக்குத்தானாம் வீடு குடிபூரலாம் கலியாணவீட்டுக் கணக்கோடை இண்டைக்குச் செல்வி தானாம் சிலவு சித்தாயமெல்லாம்!'' என்று கோவிச்சி பதில் சொன்னாள்.

இந்த விபரங்களை அவள் முன்னமேயே அறிந்து வைத்திருந்தாள்.

''ஆர் செல்லியின்ரை மோளுக்காமோ? சொடுகன்ரை மோனாமோ மாப்பிள்ளை?''

இப்படி அடுக்களைக்குள் இருந்தபடியே செல்லாச்சிக் குஞ்சி கேட்டாள்.

திடல் இன்று கோலாகலமாக இருந்தது.

புதிதாகப் போடப்பட்ட செல்வியின் குடிலுக்கு முன்னால் புதிதாகப் போடப்பட்ட தட்டுப்பந்தலின் கீழ் கலியாண வைபவம், சபைசந்தி எல்லாம் நடந்தன.

ஆஸ்பத்திரி மாதனும் மாதியுந்தான் தலைச்சன் தலைச்சியாக நின்று காரியங்களை ஒப்பேற்றி வைத்தனர்.

ஊருக்கெல்லாம் செல்வியின் செலவில்தான் சகலதும் நடந்தது.

அரிசிச்சோறு,

பயித்தம் பருப்பு வறட்டல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

கத்தரிக்காய்க் குழம்பு,

கிழங்குச் சழிச்சல்,

வாழைக்காய்ப் பொரியல்,

பயத்தங்காய் வதக்கல்.

பனங்கீரைப் பிரட்டல்,

தக்காளிக் குழம்பு,

வெங்காயச் சாம்பார் ஆகிய சிறப்புக்களுடன் சபை சந்தி ஒப்பேறிவிட்டது.

சின்னியின் கழுத்தில் மஞ்சள் துண்டு முடியப்பட்ட மஞ்சள் கயிறு கொலுவேறி விட்டது.

மாதனும் மாதியும் பம்பரம்போலச் சுழன்று சுழன்று, வருவோர் போவோர்களை உபசரித்தும், சிரட்டையில் குழைக்கப்பட்ட சந்தனத்தை அப்பிப் பூசியும், போத்தில் பன்னீரை விரல் அடைப்பு வைத்துத் தெளித்தும், அடுப்பு நெருப்பைக் கவனித்தும், சபைசந்தி நடத்தியும் தங்கள் செயல் சிறப்பைக் காட்டித் தீர்த்துவிட்டனர்.

மாலை மயக்கம் காண்பதற்கிடையில் பண்டாரியின் முன் ஏற்பாட்டின்படி சமாக் கோஷ்டியினர் மாதனையி லிருந்து வந்து சேர்ந்து விட்டனர்.

அவர்கள் உபசரிக்கப்பட்டபின் சமா தொடங்கி விட்டது.

உடுக்கு, கட்டை மத்தளம், உறுமி, சிறு பீ, பீ, நாதஸ்வரக்குழல், சல்லாரி, தாளம் ஆகியவைகளுடன் சமாத் தொடங்கி விட்டது.

முதல் பாட்டினைப் பண்டாரியே தொடங்கி வைத்தான்.

''காயாத கானகத்தே......''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் கிட்டப்பா ஐயரினால் பாடப்பட்டு தட்டில் பதிக்கப்பட்ட பாடல் அது!

மாதன் அந்தப் பாட்டை அட்சரம் தப்பாமல் கிட்டப்பா போலேயே பாடி முடித்தான்.

மாதன் இப்படிப் பாடுவான் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை.

குரல்கூடக் கிட்டப்பா போலவே இருந்தது.

அதற்கப்புறம் பலர் பாட முன்வந்தனர்.

காத்தான் கூத்து மெட்டில் ஒன்று,

நாட்டு மெட்டில் ஒன்று,

கல்வெட்டில் ஒன்று,

தருவில் ஒன்று,

தாள லய வரிசையில் ஒன்று,

இப்படி வரிசை எல்லாம் முடிந்து, மாதனே மீண்டும் கடைசியாகப் பாடத் தொடங்கினான்.

''சந்திரர் சூரியர் போங்கதி மாறினும் வீழினும் நமக்கென்ன......''

சிந்தாமணி என்ற சினிமாப்படத்தில் தியாகராசப் பாகவதர் அஸ்வத்தம்மாவுடன் இணைந்து பாடிய பாட்டு அது.

யாழ்ப்பாணம் தகர மடுவத்தில் இந்தப் பாட்டுக்காக மட்டுமே அவன் இதை நான்கு தடவைகளுக்கு மேல் பார்த்து அப்படியே மனதில் பதியவைத்துக் கொண்டிருந்தான்.

அஸ்வத்தம்மாவுக்காகவும், பாகவதருக்காகவும் குரலை மாற்றி மாற்றி அவன் அற்புதமாகப் பாடி முடித்து விட்டான்.

பின்பு மங்களமும் பாடி முடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கடைசிப் பாட்டில் சின்னானும் சின்னியும் மனதை மயங்க விட்டுவிட வேண்டும் என்பதுதான் மாதனின் நோக்கம்.

சமா முடிந்து சமாக்காரர்கள் கலையத் தொடங்கிய போது, ''செல்லி எப்பிடியெடி கலியாண வீடு, எனக்கு ஒரு கதை சொல்லாமல் விட்டிட்டாய் என்னெடி?'' என்று கேட்டுக் கொண்டே பமபிடிசிங்கி வந்து சேர்ந்தாள்.

''இல்லை நாச்சியார் ஒருதருக்கும் சொல்லேலை வர, வர'' என்று கூறிக்கொண்டே செல்லி பம்பிடிசிங்கியை வரவேற்றாள்.

''அடி பொம்பிளை, சின்னானை மடக்கித்தானெடி போட்டாய்! அண்டைக்குத் தலைமீனைச் சின்னானுக்குப் போட்டிட்டாய் என்டு கோத்தை சொல்லேக்கை எனக்குத் தெரியுமெடி!'' என்று சின்னியை நோக்கிக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே கொய்யகத்தை அகல விட்டுக் கொண்டே பம்பிடிசிங்கி உட்கார்ந்து கொண்டாள்.

''இந்த நேரத்திலை ஏனாக்கும் வந்தது? எக்கணம் ஊரில் நயினாத்தியள் அறிஞ்சாச் சும்மா விடுவினமோ? அன்பு அன்பாய்க் கிடக்குந்தானை. ரெண்டு நாள் கழிச்சு வந்திருக்கலாமெண்டு நினைக்கிறன்?''

செல்லி தனது மனக்கிடக்கையைப் பட்டென்று வெளியே சொல்லி விட்டாள்.

''நயினாத்தியள் பம்பிடியைச் சுட்டுக் கடிச்சுப்போடு வினமோ கேக்கிறன்? என்ரை எண்ணத்துக்கு நான் எங்கையும் போவன் வருவன் எவளெடி என்னைக் கேக்கிறது? இஞ்சைபார் அவள் விதானை தங்கை அரிஞ்ச குடும்பியும் பெட்டைக்கு விறுவிறெண்டு வளந்திட்டுது! தூ! நாவிறு படப்படாது! உங்கத்தை நாச்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவை புரிசமாரை அனுப்பி தலைமயிரை வளரச் செய்யிற துக்காக பறங்கித்தெருவிலை தாராமுட்டையா வாங்கி களவாய் வைச்சுத்தான் பாக்கினம் எப்பனெண்டாலும் வளந்ததாக நான் காணேல்லை! ஏன் கனக்க வேண்டாம், உவ மூத்த நம்பி நயினாற்றை நயினாத்தி பென்னம்பெரிய கொண்டை வைச்சுக்கொண்டு குமரிக்கெல்லே விளையாடுறா? பட்டணம் ஆசுப்பத்திக்கை எத்தினை செத்த குமரியளின்ரை கறுப்பு மயிருகளை பறையருக்குக் காசு குடுத்து வேண்டிக் கொண்டையிக்கை வைச்சு முடியிறவை எண்டு எனக்கெல்லோ தெரியும். ஒருநாளைக்கு அவ முழுகேக்கை கிணத்தெடியிலை நிண்டு பாத்தாயெல்லோ அவவின்ரை கூந்தல் அழகு தெரியும்! தூ! சின்னி நாவுறு படப்படாது!'' என்று சின்னியின் தலைமுடியை அன்போடும் பாசத்தோடும் தடவிக் கொடுத்தாள் பம்பிடிசிங்கி.

செல்லிக்கு பம்பிடிசிங்கியின் உள்ளத்தின் தூய்மையை நினைத்தபோது கண்களில்நீர் பனுக்கிவிட்டது. எவருக்கும் தெரியாமல் அவள் முந்தானையால் அதைத் துடைத்துக் கொண்டாள்.

''இதார் செல்லி இந்தப் பொடிச்சி?'' என்று மாதியைக் காட்டிக் கேட்டாள் பம்பிடிசிங்கி.

''இது பெடியனோடை ஆசுப்பத்திரியிலை வேலை செய்யிற மாதன்ரை பெஞ்சாதியாக்கும்!'' என்று பதில் சொன்னாள் செல்லி.

''எடி இலட்சுமி மாதிரி இருக்கிற இந்தப் பொடிச்சியெட்டை சின்னான் வேண்டித் திண்டதெண்டுதானை யெடி விதானை தங்கை சின்னியின்ரை குடும்பியை வெட்டினவன்! லெட்சுமிக்கும் இந்தப் பொடிச்சிக்கும் என்னெடி வித்தியாசம் கேக்கிறன்!''

பம்பிடிசிங்கியின் இந்தப் பேச்சினால் மாதி வெட்கத்தால் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதனுக்கு நெஞ்சு பெருமையால் விம்மியது.

பம்பிடிசிங்கிக்கு உபசார உபசரணைகள் செய்ய எல்லோருமே மறந்து விட்டனர்.

அவளாகவே அந்தச் சிரட்டைக்குள் கையைப் புதைத்துப் பிடியளவு சந்தனம் எடுத்து உடம்பெல்லாமே பூசிக் கொண்டாள்.

பெட்டிக்குள் இருந்த வெற்றிலை சிலவற்றைச் சுருட்டிக் கைக்குள் எடுத்துக் கொண்டாள். இதன்பின் போகப் புறப்பட்டு விட்டாள்.

''இந்தா சின்னிப்பெட்டை!'' என்று கூறிக்கொண்டே சின்னியின் கைகளைப் பிடித்து எதையோ கொடுத்தாள்.

''நான் போட்டுவாறன் செல்லி'' என்று விடை பெற்றுக் கொண்டாள்.

பம்பிடிசிங்கி போனவுடன்தான் சின்னி கையைத் திறந்து பார்த்தாள்.

கைக்குள் நடந்தது வெள்ளி மோதிரம் ஒன்று.

''இஞ்சாரெணை ஆத்தை!'' என்று சின்னி செல்லிக்கு அதைக் காட்டினாள்.

அது பம்பிடிசிங்கி காலில் அணிந்துவரும் வெள்ளி மோதிரம் என்பது செல்லிக்கு நன்றாகத் தெரியும்.

# 24

குப்பை கூளம், கண்டது கடியது, கல்லு முள்ளு ஆகிய சகலத்தையும் வாரிச் சுருட்டிக்கொண்டு கால ஆறு ஓடிய ஓட்டத்தில் மின்னல் போன்ற கணப்பொழுதுதான் கழிந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னிக்கு பதினான்கு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பத்துக்குமேல். பூட்டப்பிள்ளைகள் நான்கு.

ஓடிச்சென்ற காலத்தின் எண்ணிக்கையை முப்பது ஆண்டுகள் என்ற கணக்குக்குள் அடக்கிக் கொள்ளலாம்.

முப்பது ஆண்டுகள் வைத்திய விடுதியில் சேவகம் செய்துவிட்டுச் சின்னான் உபகாரச் சம்பளத்துடன் ஓய்வு பெற்றுக்கொண்டு விட்டான்.

அன்னப்பிள்ளை நாச்சியாரின் மகன் முருகுப்பிள்ளை நயினார் தன் தாய்வழியில் திரண்ட சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசாகி தனது சரிந்த கண் பார்வையையும் அசட்டை பண்ணி மகாராஜாபோல நடந்து கொண்டார்.

தனது கடைசி காலம் வரை "முழுவியளப் பலனாலை தான் அவன்ரை கண் இப்பிடிக் கோணலாய் வந்தது" என்ற சுலோகத்தைக் கூறிக்கொண்டே உயிர் விட்டு விட்டார் மூத்ததம்பி நயினார்.

அன்னப்பிள்ளை நாச்சியார் கிழடு தட்டி இன்னும் மகனையும், மருமகளையும் பேரப்பிள்ளைகளையும் அதிகாரம் பண்ணிக்கொண்டே இருந்தாள்.

திடலில் வீடெரிப்பு வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் நான்கு வருடங்கள் நடந்து மூத்ததம்பி நயினாரையும், விதானையாரையும் தவிர ஏனையவர்களுக்கு ஒவ்வொரு வருட மறியல் தண்டனைத் தீர்ப்புடன் என்றோ முடிந்த சரித்திரமானது.

குறிப்பிட்ட அன்றைய தினம் இருந்து பத்து நாட்களுக்கு முன்னதாகவும், பின்னதாகவும் மாளிப்பாய் வைத்திய விடுதியில் சிகிச்சைக்காகத் தங்கியிருந்ததான சாட்சியத்தை அவருக்காக ஆஜரான பாலசிங்கம் அப்புக்காத்தர் சமர்ப்பிக்கவே மூத்ததம்பி நயினார் விடுதலையானார் என்பது கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு நடந்த காலத்தில் விதானையாரை ஒருத்தன் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். இதனால் அவரின் அப்புக்காத்தர் இத்தகவலைச் சமர்ப்பிக்கவே அவர் வழக்கி லிருந்து இடையே விடுபட்டுப் போனார்.

கரவெட்டிப் பிரதேசம் எங்குமுள்ள பகுதிகளில் குறைந்த சாதி மக்களுக்கு தண்ணீர் தானம் செய்துவந்த கோயில் கிணறுகள், பொதுக்கிணறுகள், தங்கள் தங்கள் தண்ணீர்த் தானத்தை நிறுத்திக் கொண்டன.

கோவில் கிணறுகளில், பொதுக்கிணறுகளில் தாழ்த்தப் பட்ட மக்கள் பலாத்காரமாகத் தண்ணீர் எடுக்க வரு வதைத் தடுக்கும்படி மூத்ததம்பி நயினார் இருக்கும்போதே அவர் மகன் முருகுப்பிள்ளை நயினாரால் அரசின் பெரிய துரைக்குக் கொடுக்கப்பட்ட மனுவை ஏற்றுக் கொண்ட பெரியதுரை ''வேண்டுமானால் தண்ணீர் எடுக்க விரும்பு பவர்கள் தங்களுக்கென ஒரு கிணறு தோண்டித் தண்ணீர் எடுக்க உரிமை உண்டே தவிர தேசவழமைச் சட்டத்தை மீறும் உரிமை அவர்களுக்கில்லை'' என்று தீர்ப்புக் கூறி விட்டார்.

சூரனுடைய ஊரில் கட்டப்பட்டு நடந்து கொண் டிருந்த பாடசாலைக்குப் போட்டியாக இயங்கின வேதக் காரப் பாடசாலை தீவைத்து எரிக்கப்பட்டதனால் பெரு வழக்கொன்று நடந்து முடிந்தது.

மனச்சாட்சிக்கு இணங்கி திரைமறைவில் பஞ்சமருக் குத் தண்ணீர்த் தானம் செய்யப்பட்டு வந்த கிணறுகளில் செத்த மாடுகள், அழுக்குப் பொருட்கள், ஆள் மலங்கள் கூடப் போடப்பட்டன. ஆனால் மணியம் நயினார் மட்டும் மனந்தளராமல் தனது தோட்டக் கிணற்றில் அழுக்குப் போடப்பட்டால் அதைத் துப்புரவு செய்ய, வீட்டுக் கிணற்றிலும், பின்பு தோட்டக் கிணறு துப்பரவு செய்தவுடன் தோட்டக் கிணற்றிலும் சம்பளத்துக்கு ஆள் வைத்து தண்ணீர்த் தானம் இன்னும் செய்து தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார். மகன் உடையார் நயினாரும் இரகசியமாக மணியகாரனுக்குத் துணையாக நின்றார்.

வயது இப்போது மணியகாரனுக்கு எண்பத்தைந்துக்கு மேலாகியும் மிடுக்காகவே சகலத்தையும்செய்து வருகிறார்.

ஊரில் நல்ல தண்ணீருக்காக வருபவர்கள் எல்லாம் மணியம் நயினாரிடந்தான் படையெடுத்துவரத் தொடங்கி விட்டனர். சதா ஒருவனுக்குத் தண்ணீர்த்தானம் செய்வது பெரிய வேலை. மணியகாரன் நயினாருக்கு இந்த வேலையில் இன்னும் அலுப்பு வரவேயில்லை.

இன்னும் மணியகாரன் சூரனுக்கு அத்தியந்த நண்பன் தான்.

கிழமைக்கு ஒரு தடவையேனும் அந்த நடைசால் திண்ணையில் குந்தியிருந்து அவர்கள் பேசாத நாட்கள் இருப்பதில்லை.

''என்னையா எத்தினை வரிசத்துக்கெண்டு இப்பிடி அதுகள் தண்ணிக்கு அலையிறது. எங்கையெண்டாலும் நல்லதண்ணி வரக்கூடிய நிலமாப் பாத்து, ஒரு கிணறு வெட்டி வைச்சா என்ன எண்டு யோசிக்கிறன்!''

இப்படிச் சூரன் ஒருநாள் மணியகாரனிடம் கேட்டான்.

''ஓமோம் சூரன் நானும் அப்பிடித்தான் நினைச்சுவாறன். என்ரை திடலுக்கை ஒரு இடமும் நல்லதண்ணி வராது, என்ரை காணிபூமியுக்கை நல்லதண்ணி வர வசதியான இடங்களும் இல்லை. ஏன் சூரன் கோயிலுச் சந்தைக்குத் தெற்காலை, அத்துளு அம்மன் கோயிலுக்கு மேற்காலை ஒரு கல்லுப்பூமி ஒரு துண்டு பராமரிப்பாரற்றுக் கிடக்குது. அந்தக் கல்லுப் பூமியிலை நல்ல தண்ணி இருக்கிலும் இருக்கும். அந்தத் துண்டின்ரை தோப்பை ஒருக்காப் பார்க்கலாமெண்டு யோசிக்கிறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியகாரன் நயினாரின் யோசனை சரியானதென்று சூரனுக்குப் பட்டது.

நான்கு பத்து நாட்களாக மணியகாரன் அந்தக் கல்லுப் பூமியின் தோம்பைத் தேடத் தொடங்கிவிட்டார். கடைசியில் தோம்பு அகப்பட்டுவிட்டது.

பம்பிடிசிங்கியின் கணவன் வழியில் யாரோ ஒரு மலட்டுக் குடும்பப் பேரில் அதற்குத் தோம்பு பேசியது. "ஓடாவி காடு" என்று அதற்குத் தோம்புத் திருநாமமும் இருந்தது. இப்போது அந்த ஓடாவி காட்டுக்கு உரிமைக்காரி என்று இருக்கும் ஒரே ஒருத்தி பம்பிடிசிங்கி மட்டுந்தான்.

வயது பம்பிடிசிங்கியை இன்னும் சரியாகத் தின்னத் தொடங்கவில்லை.

அவள் இப்போதும் குறுநாட்டுக் கொய்சகக்கட்டும் கொய்சக வீச்சுமாகவே தான் இருந்தாள்.

முகத்தில் தசைநார்கள் சற்றுச் சுருக்கமெடுத்திருந்தன.

பற்களில் ஒன்றுகூட இன்னும் ஆட்டம் காணவில்லை.

இப்போதும் வெற்றிலை பாக்கைத் துவைக்காமல் தான் தின்று வருகிறாள்.

ஒருநாட் காலை விடிவதற்கு முன் பம்பிடிசிங்கியின் புறாப் பொறுக்கியடிக் கொட்டிலின் படலைக்குள், மணியகாரன் நயினாரும், சூரனும் நின்று கொண்டிருந்தனர்.

இரவு பம்பிடிசிங்கிக்குச் சற்று மட்டத்திற்கு மேலான வெறி ஆண்பனைக் கள்ளு குடிப்பதற்கு வாய்க்கு இதமாக இருந்ததனால் சற்று அதிகம் குடித்துவிட்டாள்.

வெயில் மேலே வந்தபோது அவள் படலையை அவிழ்த்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அவளுக்கு முன்னால் நின்றது மணியகாரனும் சூரனும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன நயினார் வெள்ளனத்தோடை? ஆள் அனுப்பியிருந்தா நான் வந்திருப்பன்.''

''உன்னெட்டை அவசரமான அலுவலொண்டு கிடக்கு அதுதான் வந்தனாங்கள். ஏன் நான் உன்ரை வீட்டுக்கு வரப்படாதெண்டு சட்டத்திலை எழுதிக்கிடக்கே?''

இப்படி மணியகாரன் பதில் சொல்லிவிட்டு குடிசைக்குள்ளேயே நுழைந்து விட்டார். சூரனும் பின்னால் சென்றான்.

பம்பிடிசிங்கி ஒப்புக்குச் சிரித்தாளே தவிர மணியகாரன் நயினார் வந்ததுக்கான காரணத்தை அவளின் உள் மனது துருவிக்கொண்டே இருந்தது.

''பம்பிடி, கோயிலுச் சந்தைக்குத் தெற்காலை, அத்துளு அம்மன் கோயிலுக்கு மேற்காலை கல்லொழுங்கை அருகோடை உனக்கு ஒரு காணித்துண்டு கிடக்கு!''

மணியகாரன் சொல்லி வாய் மூடுமுன்,

''என்னவாக்கும் பம்பிடிசிங்கிக்கொ, காணித்துண்டோ நயினார் பகிடி விடுகிதாக்கும்'' என்று பம்பிடிசிங்கி பதில் கேள்விகளைக் கேட்டாள்.

''நான் ஒரு பகிடியும் விடேல்லைப் பம்பிடி, உன்ரை புருசன் கதிரவேலன் ஓடாவியின்ரை வழிவழியிலை வந்த மலட்டுச் சொத்து. இப்ப அதுக்கு நீதான் உரிமைக்காறி, உனக்கும் காணியைத் தெரியும், அதுதான் அந்த, கருங்கல்லுப் பிட்டியாக் கிடக்கிற துண்டு! இப்பதான் அதுக்கு உரிமைக்காறி நீதான் எண்டதைக் கண்டுபிடிச்சம்!''

''அப்ப பம்பிடிசிங்கியும், காணிபூமிக்காறிதான் எண்டு சொல்லுங்கோவன்! இப்ப நான் என்ன செய்ய வேணும். நயினார் சொல்ல பம்பிடி செய்வாள்!''

சூரனின் மனது 'ஜில்'லிட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பம்பிடி, எங்கடை குடிமக்கள் பொடி பொட்டையள் நல்ல தண்ணி இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள் எண்டது உனக்குத் தெரியாத காரியமில்லை. எத்தினை தலைமுறையாக் கஷ்டப்படுகுதுகள். உன்ரை காணித் துண்டு சுருங்கல்லுப் பூமி எண்டதாலை அதிலை நல்ல தண்ணி இருக்குமெண்டு நினைக்கிறன். அதுதான் பம்பிடி சிங்கி...''

மணியகாரன் நயினார் பேச்சை முடிக்கவில்லை.

''நயினார், விழுடி கிணத்துக்கை எண்டாப் பம்பிடி சிங்கி விழுவாள் எண்டதைத் தெரிஞ்சு கொண்டும் நயினார் இதைக் கேக்கவோ, அதுவும் இந்தச் சனங்களுக் காகப் பத்துத்தரமும் சிங்கி விழுவாள். என்ன செய்ய வேணும், ஆற்றை பேரிலை உறுதிக்குக் கையெழுத்துப் போடவேணும்? உறுதியை எழுதிப்போட்டுக் கேக்க! பம்பிடி சொன்னாச் சொன்னதுதான்.''

பம்பிடிசிங்கி மணியகாரனுக்கு உறுதியளித்து விட்டாள்.

''பம்பிடி, கிணத்துக்கு நிலமெடுக்கிற சாத்திரியைக் கொண்டு நல்ல தண்ணீரும் பாப்பிச்சு, நிலமும் நாளைக்கு எடுப்பிக்கப் போறன். நாளைக்கு மத்தியானம் பன்ரெண்டு மணிக்குச் செய்யலாம் எண்டு யோசிக்கிறன். நிலம் எடுத்துச் சரி கண்டதும் வாற கிழமை மட்டிலை உறுதியை எழுதிக் கையெழுத்துப் போடலாம்! நீயும் ஒருக்கா நாளைக்கு மத்தியானம் அதிலை வாவன்!'' என்று கூறிவிட்டு மணியகாரன் புறப்பட்டு விட்டார்.

''சூரன், அவள் மனிசி எண்டால் மனிசிதான்! உவளைப் போலை பிறவி எத்தனை எடுத்தாலும் தகும்!'' என்று வழியிலை போகும்போது சூரனைப் பார்த்து மணியகாரன் கூறினார்.

மறுநாள் மத்தியானம் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியகாரன், சூரன், நிலம் எடுக்கும் சாஸ்திரி ஆகியோர் அந்தக் கல்மேட்டில் ஏறி நின்றனர்.

காணித்துண்டின் அகல நீளத்தைக் கணக்கெடுத்த போது முக்கால் பரப்புக்குமேல் தேறியது.

இந்த முக்கால் பரப்பும் நிறையக் கல்மேடுதான்.

சாஸ்திரி தனது கணக்கைப் போட்டுக் கொண்டிருந்தார்.

கோயில் சந்தையிலும் அத்துளுக் கோவில் வீதியிலும் வீதி ஓரங்களிலும் நின்ற பலர் புதினம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''ஏன் காணியை அளக்கிறியள்?'' என்று யாராவது ஒருதர் கேட்கவில்லை. ஏனெனில் நின்று கருமம் பார்ப்பது மணியகாரனாக்கும்.

''இது கோயில் காணித் துண்டு இதை ஏன் அளக்கிறியள் ஐயா'' இப்படி கோவில் குருக்களிட மிருந்து ஒரே ஒரு கேள்விதான் எழுந்தது.

''கோவில் எல்லைப் பூவரசுகள் அங்கை நிக்கிறது குருக்களுக்குத் தெரியேல்லைப் போலை கிடக்கு!'' என்று மணியகாரன் குருக்களுக்குப் பதில் சொல்லிவிட்டார்.

கோவில் சந்தைக்கு நடுவாக பம்பிடிசிங்கி, வருவது தெரிந்தது.

அதே குலுக்கல்

அதே கொய்சக வீச்சு!

இவள் எங்கே வந்தாள்? என்று மனதுக்குள் கேட்டுக் கொண்ட ஒருவர் ''எங்கை பம்பிடி இந்தப்பக்கத்தாலை?', என்று கேட்டார்.

''என்ரை காணித்துண்டுக்கை நளவர் பள்ளர் பறையருக்கு நல்லதண்ணிக் கிணறு வெட்டிக் குடுக்கப்போறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் நிலம் எடுக்கப் போறன்!'' என்று பம்பிடிசிங்கி துடுக்காகக் கூறிவிட்டு கல்மேட்டில் எந்தவிதக் கஷ்டமும் இன்றி ஏறி மணியகாரன், சூரன், சாஸ்திரி ஆகியோர்களுடன் கலந்து விட்டாள்.

''எட இது பம்பிடிசிங்கியின்ரை காணித்துண்டே, எங்களுக்கு இண்டையவரையிலை தெரியாமல் போச்சு? ஓடாவி காசெண்டு சும்மா கதைக்குக் கதைச்சினமெண்டெல்லே நினைச்சன்'' என்று ஒரு வயதான கிழம் மனதுக்குள் கூறிக்கொண்டது.

உச்சி வெயில்.

தகிக்கும் கல்லு.

இதற்குமேல் சாஸ்திரியாரால் நட்டுக்கு நடுவே நிலம் எடுக்கப்பட்டு விட்டது.

''தண்ணி பிழையில்லாமல் இருக்குமோ?'' என்ற மணியகாரனின் கேள்விக்கு, ''தங்கமான தண்ணி வரப் போகுது! எண்டாலும் கொஞ்சம் ஆழத்துக்கு மேலைதான் தண்ணி வரும். அடித்தளத்தை அகலமா போடச் சொல்லிப் போடுவிச்சுப் போடுங்கோ. இடையிலை மண்கண்டத்துக்கு இடமில்லை கடைசிவரையிலை கருங்கல்லுத்தான். தெண்டிச்சு வெட்டி எடுத்துப்போட்டா... வத்தாத நீர் வரும். பேந்தென்ன கங்கைதான்!''

சாஸ்திரியாரின் இந்த வாக்குறுதி போதும்!

''என்னவோ அம்மாளாச்சியின்ரை புண்ணியத்திலை எல்லாம் மங்களகரமாகத்தான் முடியும்'' என்று அம்மன் கோவில் கோபுரத்தை நோக்கிக் கைகூப்பி வணங்கிக் கொண்டாள் பம்பிடிசிங்கி.

ஆலயத்தின் நடுப்பூசை வேளைக்கான மணியும் சொல்லி வைத்தாற்போல அடித்தது.

நான்கைந்து நாட்களாக ஊருக்குள் எல்லாம் இது பற்றிய கதைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பம்பிடிசிங்கி அத்துளுவிலை கிடக்கிற தன்ரை கல்லுத் தறையை நளம் பள்ளுகளுக்கு கிணறு வெட்டக் குடுத்திட்டாளாம்!''

நான்கு நாட்கள் ஓடிவிட்டன!

இரவு மணி பத்துக்குமேல் பம்பிடிசிங்கியின் கொட்டிலை யாரோ சிலர் இடித்துக்கொண்டிருந்தார்கள்.

''ஆரடா மோனை இந்த ஒண்டுபாதியிலை?'' என்று கேட்டுக் கொண்டே பம்பிடிசிங்கி கொட்டிலின் உள் கட்டை அவிழ்த்தாள்.

சற்று முன்புதான் அவள் திடலிலிருந்து இரண்டு சிரட்டை கள்ளு அடித்து விட்டு அந்த உசாரில் வந்திருக்கிறாள்.

உள்ளே சிணுங்கிய வெளிச்சத்தில் வந்திருப்பவர்களை அவள் அடையாளம் கண்டுவிட்டாள்.

ஒருவன் செத்துப்போன மூத்ததம்பிக்கு வாரிசாகக் கிடைத்த முருகுப்பிள்ளை நயினார்.

மற்றவன், காலஞ்சென்ற விதானையாரின் தங்கை மகன் அருணாசலம் நயினார்.

மூன்றாமவனை அவளால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனாலும் அவனும் வயதில் சிறியவன் தான்.

''என்ன சின்னக் கமக்காறரவை மூண்டுபேரும் ஒண்டாச் சேர்ந்து வந்திருக்கிறியள்? ஏதும் அவசியமான தொண்டுமில்லாமல் வரமாட்டியள்!''

பம்பிடிசிங்கி சற்றுப் பொடி வைத்துத்தான் கேட்டாள்.

''அத்துளுவுக்கை உனக்கு ஒரு கல்லுத்துறை கிடக்காம்; அதை நீ திடலு நளவருக்கு விக்கப்போறியாம்! அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனாங்கள்!'' மூத்ததம்பியரின் இறங்கல்கண்ணர் முருகுப்பிள்ளை நயினார் பதில் சொன்னார்.

''ஆர் சொன்னது திடலு நளவருக்கு அதை நான் விக்கப்போறனெண்டு?''

பம்பிடிசிங்கி படக்கென்று இக்கேள்வியைக் கேட்டாள்.

''ஊரெல்லாம் கதையாக் கிடக்கு, அதிலை கிணறு வெட்டச் சாத்திரியும் வந்து நிலமெடுத்துப் போட்டானாம்!''

முருகுப்பிள்ளை நயினாரே மீண்டும் பேசினார்.

''எனக்கென்னடா தம்பியவை விசரே அவங்களுக்குக் காணியை விக்க? ஐஞ்சாறு தலைமுறையாக நல்ல தண்ணிக்குக் கஷ்டப்படுற அவங்கடை பேரிலை அதை தரும சாதனமா எழுதப்போறன்!''

பம்பிடிசிங்கியின் இந்தப் பதில் அவர்களைக் குலுக்கி விட்டது.

''என்ன திடலாங்களுக்குத் தருமசாதனமாக எழுதப் போறியோ? கிழடி! சொல்லிப்போட்டன், நாளைக்கு நீ என்ரை பேரிலை அதுக்குக் கையெழுத்துப் போட்டுத் தரவேணும், இல்லாட்டாப் பிறகு என்ன நடக்குமெண்டு நான் சொல்லமாட்டன்? விடிய வெளிக்கிட்டு நில்! எழுத்துக்காறன் வீட்டை போக வாறம். உன்ரை கடைசிகாலச் செலவுக்குத் தக்க காசு தருவன். வேணுமெண்டா அஞ்சைப் பத்தைக் கூடவெண்டாலும் கேள் தாறன்! உன்ரை செத்தவீட்டுச் செலவும் என்ரை கணக்கு!''

முருகுப்பிள்ளை நயினார் பேசி முடித்துவிட்டுப் புறப்படத் தயாரானார்.

''இஞ்சை தம்பி பம்பிடிசிங்கியை வெருட்டினவை கனபேர்! நான் என்ரை காணியை ஆருக்கும் விற்பன், சும்மா குடுப்பன் அதைக்கேக்க நீர் ஆர் எண்டு கேக்கிறன்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பிடிசிங்கி துடுக்காகப் பதில் சொன்னாள்.

"எணை பிலனாக் கதையாதையெணை? அவற்றை தேப்பனைத் தெரியுமெல்லே கோபம் வந்தாத் தேப்பனைப் போலை எதை எண்டாலும் செய்து போடுவார், எப்பன் யோசிச்சுச் செய்யெணை!"

இப்படி அருணாசலம் நயினார் சற்றுத் தணிவாகப் பேசினார்.

"ஆர் உவற்றை தேப்பனையோ? எனக்கு நல்லாத் தெரியும் நயினார். இவர் நினைச்சுக் கொண்டிருக்கிறார் செத்துப்போன மூத்ததம்பி நயினார்தான் தன்ரை தேப்ப னெண்டு! நல்லகதை? எனக்கு உவற்றை தேப்பனையும் தெரியும், வல்லிவிரக் கோவில் தீத்தத் திருவிழாவிலை நான் பக்கத்தை இருந்து கண்டனான். கண், காது, மூக்கு, கழுத்து எல்லாம் உரிச்சுப் படைச்சு இவர்தான். ஆளை ஆள் மாத்தலாம்; உவர் சொல்லுறார்... ஒருவழியிலை பாத்தா உவற்றை தேப்பன் நல்லதம்பியர் எனக்கும் தூரத்துச் சொந்தமாயிருக்கும். ஏன் ஐமிச்சமெண்டா அன்னப்பிள்ளை நாச்சியார் கஞ்சியிக் கல்லுப்போலை இன்னும் இருக்கிறா கேட்டுப் பாக்கட்டுக்கன்! உவரைப் பிறந்த வீட்டுக்கை கழுத்தை நெரிச்சுக் கொல்லப்போன மூத்ததம்பி நயினாரை, அது முழுவியளப் பிழை எண்டு மறிச்சு வைச்சவள் இந்தப் பம்பிடிசிங்கி தெரியுமோ உனக்கு?"

பம்பிடிசிங்கி ஆக்ரோசமாகப் பேசிமுடித்துவிட்டாள்.

அவளுக்கு இளைப்போ களைப்போ வரவில்லை.

மூவரும் கல்லாக நின்றனர்.

சற்று வேளைக்குப் பின் முருகுப்பிள்ளை நயினார் மடமடவென்று திரும்பி நடக்க, மற்ற இருவரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது விடிந்து வெகு நேரமாகியும் பம்பிடிசிங்கி யின் குடில் வெளிக்கட்டுப் போட்டுக் கட்டியபடியே இருந்தது.

நடுப்பகல் வந்து கழிந்தது.

மாலையும் வந்தது.

பம்பிடிசிங்கியின் படலை கட்டப்பட்டபடியே இருந்தது. யாரும் இதில் அக்கறைப்படவில்லை.

தற்செயலாக அந்த வழியால் வந்துகொண்டிருந்த சின்னியின் இளையமகள் படலைக் கட்டை அவிழ்த்து விட்டு உள்ளே பார்த்தாள். பார்த்தவள் வீறிட்டுக் கத்தி விட்டாள்.

அவலச் சத்தம் கேட்டு அங்குமிங்குமிருந்து பலர் வந்து சேர்ந்தனர்.

பம்பிடிசிங்கி நிலத்தில் நீட்டி நிமிர்ந்து கிடந்தாள்.

அவளின் கழுத்தை ஒரு துணி இறுக்கி இருந்தது.

உடல் விறைப்பேறி விட்டது.

திடலே ஒன்று கூடி விட்டது.

மணியகாரனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

விடியும்வரை திடல் பம்பிடிசிங்கியின் உடலுக்கு மரணச்சடங்குகள் செய்ய எந்த நயினாராவது, நயினாத்தி யாவது, அல்லது வேறு எந்த இடை இட்ட சாதியாவது முன்வரவில்லை.

அப்போதுதான் மாதனும் மாதியும் அங்கு வந்து சேர்ந்தனர்.

"என்ன எல்லாரும் ஏங்கிப்போய் இருக்கிறீங்க? சிங்கி ஆச்சியைத் தூக்குங்கு! நாமதான் அவவுக்கு சொந்தக் காரங்க!" என்று குரல் வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பிடிசிங்கியின் உடல் திடலுக்குத் தூக்கிவரப் பட்டது.

சின்னியின் கலியாண வீட்டு வைபவத்திற்குப் போடப் பட்ட தட்டுப் பந்தல் அதே இடத்தில் போடப்பட்டது.

திடலில் என்றுமில்லாத விதமாக ஜனத்திரள் மொய்த்தது.

எங்கெங்கெல்லாமோ இருந்து பம்பிடிசிங்கியைப் பார்க்க வந்து அழுதவர்களின் எண்ணிக்கை அந்தத்திடல் என்றுமே கண்டிராது.

சூரன் பம்பிடிசிங்கியின் தலைமாட்டில் தொடர்ச்சி யாக இருந்து தேவார திருவாசகப் பண்களை ஓதிக் கொண்டிருந்தான்.

மணியகாரன் நயினார் நீண்ட வேளையை அங்கேயே கழித்தார். இப்படி எந்த நீண்ட வேளையையும் அவர் இதற்கு முன் எந்த இழிவு வீட்டிலும் கழித்ததில்லை.

மணியகாரன் புறப்பட்ட பின்னர் மகன் உடையார் நயினாரும் அங்கே வந்து சிங்கியின் மரணச் சடங்கில் கலந்து கொண்டார்.

சிங்கி ஆச்சியின்ரை மையத்தை எங்கடை குல முறைப் படி தாக்கிறதா? இல்லாட்டி, கட்டையிலை ஏத்திச் சுடுகிறதா?''

இப்படிப் பலர் பலவிதமாகத் தங்களுக்குள்ளேயும் வெளியேயும் கேட்டுக் கொண்டனர்.

''சிங்கி ஆச்சியைக் கட்டையிலை வைச்சுத்தான் சுட வேணும்!'' இப்படிப் பல குரல்கள் பதில் தந்தன.

''நயினார்மார் சும்மா விடுகினமே? திடலாங்க ளின்ரை மையத்தை இத்தயவரையிலை கட்டிலை வைச்சுச் சுட்டதில்லை!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இரண்டொரு குரல்கள் எழுந்தன.

''என்ன வந்தாலும் சிங்கி ஆச்சியைக் கட்டையிலை வைச்சுச் சுடுகிறதுதான். என்ன தலையா போயிடும்?'' இப்படித் தீர்மானந்தான் முடிவில் எடுக்கப்பட்டது.

உடையார் நயினாரும் அந்தத் தீர்மானத்தை ஆமோதித்துச் சொன்னார்.

கட்டையில் எரிக்கும் சடலம் முறைப்படி குளிப்பாட்டப் படவேண்டும்! அது நடந்தது.

கமுகந்தடியால் பாடைத்தடல் ஒன்று கட்டப்பட்டது. படலில் சிங்கியின் மையம் வளர்த்தப்பட்டபோது சின்னி அவசர அவசரமாக சிங்கி ஆச்சியை நெருங்கி வந்தாள்.

தனது கால் பெருவிரலில் போடப்பட்டிருந்த வெள்ளி மோதிரத்தைக் கழற்றினாள்; சிங்கி ஆச்சியின்ரை கால் விரலில் அணிந்து விட்டாள்.

சிங்கி ஆச்சி ஒருநாள் கல்யாணப் பரிசாகக் கொடுத்த வெள்ளி மோதிரம் அது.

மனப்பாரம் தாங்காமல் சின்னி சிறுபிள்ளையைப் போலக் கதறினாள்.

# 25

இன்று சிங்கி அம்மாள் செத்துப்போய் சரியாக முப்பத்தி ஓராம் நாள்.

கோயில் சந்தையும், ஏன் அதிலிருந்து நெல்லியடிச் சந்தை வரையும் அத்துளு அம்மன் கோவிலும் இப்படி ஒரு சனத்திரளை என்றும் கண்டதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை பத்து மணிக்கு கல்லுமேட்டில் கிணறுவெட்ட முதல் கிடங்கு வைப்பதென்று ஏற்பாடாகி இருந்தது. நான்கைந்து நாட்களுக்கு முன்னதாகவே ஊருக்கு வெளித்துவிட்டது.

கரவெட்டிப் பிரதேசம் எங்குமிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டம் கூட்டமாகக் காலையிலிருந்தே திரள ஆரம்பித்து விட்டனர்.

சூரன் தலைமையில் சுமார் ஐம்பது பேர்வரை.

அல்வாய் ஆறுமுகம் பரியாரி தலைமையில் ஏறக் குறைய நாற்பது பேர்வரை.

தெடுத்தனைச் செல்லன் தலைமையில் அறுபது பேர் வரை.

கரவெட்டி மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் இருநூறு பேர்வரை.

துன்னாலை வேம்படியிலிருந்து தொட்டந் தொட்ட மாக முப்பது நாற்பது பேர்கள்வரை.

புறாப் பொறுக்கியிலிருந்து எண்பதுக்கும் அதிக மானோர்.

உடுப்பிட்டி பகுதியில் இருந்து கூட நாற்பது பேர் களுக்கு மேல்.

பருத்தித்துறைச் சல்லிறோட்டுப் பகுதியிலிருந்தும், வராத்துப்பளை, சந்தா தோட்டம் பகுதியிலிருந்தும் மற்றும் நல்ல தண்ணீர் இல்லாப் பகுதியிலிருந்தும் அதிகமானோர்.

இந்தச் சனக் கூட்டத்தைக் கண்டு அத்துளுவே கலங்கி விட்டது.

நான்கு நாட்களுக்கு முன்னதாகவே வால்களை முறுக்கிக் கொண்டவர்கள் அவைகளை மடக்கிக் கொண் டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்கள் பலரிடம், பிக்கான், கொந்தாலி, கடப்பார், அலவாங்கு, மண்வெட்டி, கடகம் ஆகியவை இருந்தன.

வால்களைச் சுருக்கிக் கொண்டவர்கள் கோவில் சந்தைக்குள்ளாகவே அடங்கித் தங்கள் தங்கள் தலைகளை மட்டும் நீட்டி நீட்டி எதையோ யாரையோ எதிர்பார்த்து எதிர் பார்த்து நின்றனர்.

மணி பத்தாயிற்று.

சரியாக மணியகாரனும், தனது பழைய வில்லுவண்டியில் வந்திறங்கினார்.

அதைத் தொடர்ந்தாற்போல் பொலிஸ் வண்டி ஒன்றும் காற்று வேகத்தில் பறந்து வந்து கல்மேட்டருகே நின்றது.

பொலிஸ் வண்டிக்குள் இருந்து கோவில் குருக்களும் கையில் பிரம்பு தாங்கிய பொலிஸ் அதிகாரி ஒருவரும், இரண்டு சாதாரண பொலிசாரும், மூத்ததம்பி நயினாரின் தூங்கல் கண் மகனாரும் வந்திறங்கினர். கோயில் குருக்களும் கூடவே வந்தார்.

மணியகாரன் கல்மேட்டில் நின்றார்.

''சூரன், மாதன், சின்னான், மூண்டுபேரும் வந்து முதல் கல்லை உடையுங்கோ!'' என்று மணியகாரன் பணிக்கவே மூவரும் பிக்கானுடனும், கடப்பாருடனும், கொந்தாலியுடனும் கல்மேட்டில் ஏறினர்.

பொலிஸ் அதிகாரி முன்னே வந்தார்.

''இந்தக் காணி கோயில் காணி. இதிலை நீங்க பலாத்காரமாக கிணறு வெட்டப் போறியள் என்று எமக்குக் கொம்பிளைன் வந்திருக்குது சேர்!'' என்று அவன் மணியகாரனுக்கு 'சேர்' மரியாதை வைத்துப் பேசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியகாரன் ஓய்வு பெற்றுக் கொண்டாலும் அவருக்குரிய மரியாதைகளைப் பொலிஸ் அதிகாரி கொடுக்கத் தவறவில்லை.

மணியகாரன் தனது நீண்ட அங்கியின் பைக்கற்றிலிருந்து ஒரு உறுதிக் கட்டைப் பொலிஸ் அதிகாரியிடம் கொடுத்தார்.

பொலிஸ் அதிகாரி மேலோட்டமாக அதைப் படித்தான். பழையது சிலவற்றை விட்டுவிட்டுப் புதியதைப் படித்தான். மனதுக்குள் படித்தான்.

இங்கு கூடியிருக்கிற எல்லோரும் அறிய அதை படிப்பித்தால் நல்லது என்று மணியகாரன் ஆங்கிலத்தில் கூறவே பொலிஸ் அதிகாரி அதைத் தனது உதவி அதிகாரியிடம் கொடுத்து உரக்கப் படிப்பித்தான்.

''யாழ்ப்பாணம் டிஸ்திரிக், வடமராட்சிப் பிரிவு இல. 1871 முன் பதிவு இலக்கம் 120. இத்தால் சகலருமறிய கோவில் சந்தையைப் பிறப்பிடமாகக்கொண்ட கதிரவேலு கைம்பெண் சின்னப்பிள்ளை என்னும் பம்பிடிசிங்கி என்று அழைக்கப்படுபவளாகிய நான், கீழே குறிப்பிடப்படும் எல்லைகளுக்கு உட்பட்ட முக்கால் பரப்பும் ஒரு குழியுமாகிய ஓடாவி காடு என்னும் பிதுராஜ்யவழியில் எனக்குச் சொந்தமாகிய இக் காணித்துண்டிலே, இந்த வடமராட்சிப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக நல்ல தண்ணீர் பெறும் கஷ்டத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கென ஒரு கிணறு தோண்டித் தண்ணீர் பெற்று, இவர்களும், இவர்களின் வழிவந்தோரும், ஆண்டாண்டு காலம் இதை அழிவில்லாத தங்கள் சொத்தாக ஆண்டு அனுபவிக்க எனக்குள்ள சகல உரிமைகளையும் இவர்களுக்குத் தரும சாதனமாகக் கையளித்து எனது முழுமனச் சம்மதத்துடன் இதன்கீழ் ஒப்பமிடுகிறேன்.

க. சின்னப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சிகள் : 1. இ. சித்தமணியகாரன்
2. க. சூரன்

இந்தத் தர்மசாதன உறுதி, யார் மூலமாவது எந்தவித வற்புறுத்தலுமின்றி எனது முன்னிலையில் 1950-ம் ஆண்டு வைகாசி மாதம், முதலாந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டு உறுதி முடிக்கப்பட்டதென்று நான் இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன்,

பிரசித்த நொத்தாரிசு
செ. இளையதம்பிப்பிள்ளை.

ஓடாவிகாடு என்ற இக்காணித்துண்டின் எல்லைகள் ஆவன:

வடக்கு : கோவில் சந்தை

கிழக்கு : அத்துளு அம்மன் கோவில்

மேற்கு : கிரவல் மண் ஒழுங்கை

தெற்கு : கணவதிப்பிள்ளைக்கும், மறுபேருக்கும் உள்ள ஆதனம்.

உறுதி பகிரங்கத்தில் படிக்கப்பட்டு முடிந்தது.

''இங்கே கூடியிருக்கிற எல்லோரும் சிரமத்திற்கு மன்னிக்க வேணும்'' என்று ஆங்கிலத்தில் கூறி, மணியகாரனுக்குச் சல்யூட் ஒன்றைப் போட்டுவிட்டு பொலிஸ் அதிகாரி அத்திடலை விட்டுக் கீழிறங்கித் தனது உதவி அதிகாரிகளுடன் வண்டியில் தாவிக்கொண்டார்.

கோயில் குருக்களும், மூத்ததம்பிக் கமக்காரனின் தூங்குகண் மகனும் அநாதைகளாகத் தனித்து நின்றனர். பொலிஸ் வாகனம் அவர்களை விட்டு விட்டுப் போய் விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதன் முதலாவது கொந்தாலிக் கொத்தைப் போட்டான்.

சூரன் இரண்டாவது பிக்கான் கொத்தைப் போட்டான்.

சின்னான் மூன்றாவது கடப்பாறைப் போட்டான்.

கிணறு வெட்டு உத்தியோக பூர்வமாகத் தொடங்கி விட்டது.

மாதங்கள் ஐந்து ஓடிவிட்டன. இன்னும் ஐந்து முழங்கூட கிணறு ஆழப்படவில்லை.

அந்தக் கருங்கற் பாறையை ஒரு அங்குலக் கனம் இறக்குவதென்பது ஒரு பெரிய சுமையான வேலையாகி விட்டது.

சாஸ்திரி சொன்னதுபோல முப்பது முப்பந்தைந்து முழ ஆழத்தை மனதில் கொண்டு முப்பதடிக் குறுக்கு விட்டத்தில் மேல் கிடங்கு போடப்பட்டது. அதுகூட இன்னும் ஐந்து முழம் இறங்கவில்லை. கிட்டத்தட்ட முதல் விட்டம் பத்தடி வரையிலாவது இறங்கினால் தான் சற்று அகலத்தைக் குறைத்து இரண்டாவது விட்டத்தை அமைக்கலாம்.

ஊருக்கு ஊர் கிராமத்துக்குக் கிராமம் முறை வைத்து ஒன்று மாறி இன்னொன்று அது மாறி மற்றொன்று இப்படி முறை ஒழுங்காகவே போய்க்கொண்டிருந்த இந்த ஒழுங்கின் வேகத்திற்கு ஆழம் மட்டும் போகவில்லை.

ஒருவிதமாகப் பத்து முழம் வரையிலான முதல் விட்டத்தைப் பூர்த்தி செய்து முடிய மாதங்கள் பத்தாகி விட்டன.

செலவு சித்தாயத்திற்கென ஊர் ஊராகக் கிராமம் கிராமமாகப் பணம் சேகரிக்கப்பட்டது. இந்தப் பொதுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண தலைச்சன் பதவியை ஏற்றுக் கொண்டவன் சூரன் தான்.

இதுவரை இதற்கான வரையறுக்கப்பட்ட கூலி என்று யாருக்கும் இல்லை. அப்போதைக்கப்போது கிடைப்பதைப் பங்குபோட்டுக் கொண்டனரே தவிர யாரும் குறைப் பட்டுக் கொண்டதாக இல்லை.

கணக்கு வழக்கெல்லாம் சூரன் கையில் இருந்ததால் இதுவரை நடந்த செலவினங்களை அவன் கணக்கிட்ட போது ரூபா எட்டு ஆயிரம்வரை வந்து போய் விட்டது.

முதல் விட்டத்தில் படிக்கட்டு வெட்டு எடுத்து இரண்டாவது விட்டத் தொடக்கத்தில் ஒருநாள் சூரன் கேட்டான், ''எவ்வளவு நாளையிலை நாங்கள் தண்ணி காணுவம்'' என்று

இதற்கு யாரும் ஒழுங்காகப் பதில் சொல்லவில்லை.

''இன்னும் ஆறுமாதத்துக்குள் எப்பிடியும் தண்ணி கண்டிடுவம்.''

''இதென்ன விசர்க்கதை இன்னும் பத்து மாதமாவது செல்லும்!'' என்றான் வேறொருவன்.

''சிங்கி ஆச்சி செத்து ஆட்டத்திவசத்துக்கு இன்னும் ரெண்டு மாசம் இருக்கு, அதுக்கிடையிலை ரெண்டாவது விட்டத்தை முடிச்சிடுவம். எப்பிடி எப்பிடிக் கூட்டிக் குறைச்சுக் கணக்குப் பாத்தாலும் ஆச்சியின்ரை ரெண்டாவது திவசத்துக்கு தண்ணி எடுத்துத்தான் ஆகவேணும், இதை ஒரு சபதமாய் ஏத்துக்கொள்ளுவமாக இருந்தா இரண்டாவது ஆட்டத்திவசத்திற்குக் கட்டாயம் தண்ணி கண்டிடலாம்!''

இப்படி சபதமேற்கும் தோறணையில் மாதன் பேசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்காலம், சனி ஞாயிறு, கோயில் திருவிழா, விரதம் கிரதம், கலியாணவீடு செத்தவீடு என்ற எந்தவிதமான ஓய்வு ஒழிச்சலுமின்றி வேலை தீவிரமடைந்து விட்டது.

இரண்டாவது விட்டம், ஏறக்குறைய எட்டடி முடிக்கப்பட்டு, அதற்கான ஏத்த இறக்கப் படிக்கட்டு களும், வெட்டப்பட்டு மூன்றாவது விட்ட வேலை தொடங்கிவிட்டது.

அந்த மனித ஜீவன்கள் எல்லாம் கிணற்றுக்குள் குமைந்து மாடாக உழைத்தன.

மூன்றாவது விட்ட வேலை ஆரம்பித்ததும், மணிய காரன் பனங்காணி ஒன்றுக்குள் இருந்து பனைமரங்கள் பல தறித்துப் பிளக்கப்பட்டு முதல் விட்டத்திற்கு நிரைக்கு அடுக்கப்பட்டு, கீழ இருந்து கற்களைச் சுமந்து எடுத்து வரும் மேல்படி வாயிலில் சிறுவழி ஒன்று விடப்பட்டு உள்ளே ஒருதுளி வெயிலும் போகாமல் தடுத்து நிறுத்தப் பட்டது.

மணியகாரன் நயினார் வீட்டிலிருந்து பெண்கள் அடிக்கடி நிரைகட்டித் தண்ணீர் எடுத்து கிணறு வெட்டு வோருக்குச் சிரமதானம் செய்து கொண்டிருந்தனர்.

கிணற்றுக்குப் பக்கவாட்டிலேயே வேலை செய்பவர் களின் மதியச் சாப்பாட்டுக்கான வேலையை மாதியும், சின்னியும் வேறு சிலரும் நிரந்தரமாகப் பொறுப்பெடுத்து விட்டனர்.

ஒரு பானை பெரு அவியல்.

ஒரு பூசனிக்காய்க் குழம்பு.

ஒரு கத்தரிக்காய்ச் சொதி. அவ்வளவுதான்!

உணவுக்காகத் தட்டுவங்கள் அளவுக்கு அதிகமாகக் கிடக்கும். சில வேளைகளில் வேலை செய்பவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கைமுப்பதுக்கு மேலும் போய்விடுவதுண்டு. ஆகக் குறைந்த அளவென்றால் இருபதுக்குக் குறைச்சலாகாது.

இதன் சராசரிக் கணக்கை மாதி எடுத்துக்கொண்டு திருப்தியாகவே செய்தாள்.

மதியம் பத்து மணிக்குமேல் ஒவ்வொரு பனங்கட்டிச் சிறுகுட்டானும் ஒருசிரட்டை தேநீரும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். சாயந்தரமும் அப்படியே!

மூன்றாங் கட்ட விட்டமும் ஆறடி தாழ்ந்துவிட்டது,

அதற்கான படிக்கட்டும் வெட்டப்பட்டு நாலாம்கட்ட விட்டம் ஆரம்பித்துவிட்டது.

ஏறக்குறைய முப்பது முழத்துக்குமேல் போய்விட்டது.

நான்காவது விட்டம் நான்கடி வரை தாழ்ந்தபோது கருங்கல்லுப் பாறையில் கசிவு கண்டது.

இந்தக் கசிவு எல்லோர் மனதையும் குளிர வைத்தது. ஆனால் கண்ட கசிவோ மேலும் ஒரு முழம் வரை சென்று நின்று விட்டது.

குறிப்பிட்ட சிங்கி ஆச்சியின் இரண்டாவது ஆட்டைத் திவசநாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

நாள்படி கணக்குப் பார்த்தால் ஐம்பது நாள்வரை தான்!

மாதனுக்கு மனதில் உற்சாகம் குறையவில்லை,

"சிங்கி ஆச்சியின் திவசத்திற்கு இந்த மாதன் நல்ல தண்ணி எடுத்துக் குடிக்காட்டி உசிரை விட்டிடுவான்!" என்று அவன் அடிக்கடி சபதமெடுத்துக் கொண்டான்.

ஐம்பதாம் நாளிலும் பாதி போய்விட்டது.

இன்னும் இருப்பதுவோ இருபத்தைந்து நாள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது விட்டமும் ஐந்தடியில் நின்று ஆறாவது —அதாவது குழிக்கிடங்கு தொடங்கிவிட்டது.

ஈரமாவது பசைப்பிடிப்பாவது!

குழிக்கிடங்கிலும் பதினைந்து போய்விட்டது.

இன்னும் இருப்பது பத்தே பத்து நாள்தான்.

''சிங்கி ஆச்சி! எங்க தாயே! மாதன் உசிரை விட்டிடுவான் கருணைகாட்டு தாயே! சிங்கி ஆச்சி கருணை காட்டு தாயே!''

இப்படி அவன் அடிக்கடி குரல்வைத்துக் கொண்டான்.

குழிக்கிடங்கு நான்கு முழத்துக்குப் போய்விட்டது.

அதிலும் சிறு படிக்கட்டு வெட்டப்பட்டது.

ஐந்து நாள் தீர்ந்தது.

இன்னும் இருப்பதுவோ ஐந்தே நாள்தான்.

அடுத்த வெள்ளிக்கிழமை சிங்கி ஆச்சியின் திவசநாள்!

தண்ணீராவது கசிவாவது!

மோவாய்க் கட்டையை குழிக்கிடங்கு நடுவே வைத்து முகர்ந்து முகர்ந்து பார்த்தான் மாதன்!

ஒரு சுவடும் தெரியவில்லை.

ஒரு இடத்தில் அலவாங்கை ஊன்றி வைத்துத் துளை போட்டுப் பார்த்தான். ஒன்றுமில்லை.

மேலும் குழிக்கிடங்கு ஓரடி தாழ்ந்தது.

இன்று விட்டு நாளைபோனால் நாளைக்கு மறுநாள் சிங்கி ஆச்சியின் திவசம்!

சின்னஞ்சிறு கொந்தாலியால் கடைசிக் குழியை ஒருத்தன் மட்டசுத்தமாக சீமேந்துப் பூச்சுப்போல, பொழிந்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்தான் அவன் அப்படிச் செய்தானோ தெரிய வில்லை.

ஒருநாள் விடிந்தது.

மறுநாளும் வந்தது.

சிங்கி ஆச்சியின் திவசத்திற்கு இன்னும் இருப்பதுவோ ஒரே ஒரு பகலும் ஒரே ஒரு இரவுந்தான்.

மாதன் எதையோ நினைத்துக் கொண்டான்.

உடுத்திருந்த உடையை அவிழ்த்து இறுக்கமாகக் கொடுக்குப் போட்டுக் கொண்டான். தலைத் துண்டை உதறிக் கட்டிக் கொண்டான்.

அலவாங்குக் கம்பியை எடுத்தான்.

குறிப்பாக ஒரு இடத்தில் குத்தவைத்தான்.

பக்கத்தே நின்ற சின்னானிடம் சொன்னான் ''சின்னார் அண்ணை போடண்ணை பிலமாக நாலு!''

சின்னான் பெருமடத்தலால் பலமாக நாலு இறுக்கு இறுக்கினான்.

''சிங்கி ஆச்சி! தாயே! இண்ணைக்கு நல்லதண்ணி எடுக்காட்டி உம்மவன் மாதன் நாளை செத்துப்போயிடு வான் தாயே!'' என்று பலமாகக் குரல் வைத்தான்.

சின்னானின் நான்காவது அடியில் அலவாங்குக் கம்பி படக்கென உள்ளே புகுந்தது.

மாதன் கம்பியை இழுத்தான்.

நாகபாம்பு சீறி எழுவதுபோல கம்பி இழுத்த துவாரத்திலிருந்து நீர் மேல் எழுந்து பாய்ந்து மாதனின் முகத்தில் அடிக்க,

''அம்மா தாயே! சிங்கியாச்சி மாதன்ரை உயிரைக் காப்பாத்திட் டாய் தாயே!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மாதனின் குரல் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போய் மடமடென்று கடைசிக் குழிக்குள் இறங்கினர்.

பாய்ந்தடித்த முகத்து நீர் வழிந்து மாதனின் உதட்டில் உள்ளாலே நாவைத் தொட்டுவிட்டது.

அது வெறும் தண்ணீர் அல்ல அமிர்தம்.

''யாருந் தண்ணியிலை வாயிலை விட்டிடப்பிடாது. சிங்கி ஆச்சிக்குப் பொங்கல் செய்தப்புறந்தான் வாயிலை விடணும்!''

வெளியே நின்று மாதி குரல்வைத்தாள்.

பொழுது உதயத்திற்குப் பொங்கல்!

''விடிவெள்ளி முளைச்சதன்மேல் என்னை அருட்டி விடுங்க. நான் மொதல்லை கிணத்தடிக்கு போகவேணும், நீங்க அப்புறமாக வாங்க, மாதி புதுப்பானை சட்டி வாங்கியரப் போனவ, விடியலுக்கு முந்திக் கிணத்தடிக்கு வந்திடுவா''

என்று கூறிவிட்டுத்தான் மாதன் சின்னானின் கொட்டிலின் உள்ளே படுத்திருந்தான்.

விடிவெள்ளி முளைத்து விட்டது.

சின்னான் மாதனை அருட்டி விடவே மாதன் எழுந்து போர்த்து மூடிக்கொண்டு ''விடியறதுக்கிடையிலை வந்திடுங்க!'' என்று சின்னானுக்கு கூறிவிட்டுச் சென்றான்.

மாதன் கிணற்றடியைக்கிட்டியபோது, யாரோ ஓரிருவர் கிணற்றுச் சிறுவாசலால் தாவி ஓடியது போன்ற ஒரு அசுகை தெரிந்தது.

மாதனுக்கு மனதுக்குள் ஒரு மாதிரியாக இருந்தது.

சிறு வாயிலால் அவன் உள்ளே படிக்கட்டுகளால் இறங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே கடும் இருள்தான்

இரண்டு வருடங்களாக அவன் ஏறி இறங்கிய படிக் கட்டுக்கள் அவை.

அவன் அடிக் குழிவரை இறங்கி விட்டான்.

ஏதோ துர்வாடை வீசியது.

கிணற்றுச் சிறு குண்டு நீரைத் தொட்டான்.

அது ஈயம் போன்று குளிர்ந்தது. ஆனாலும் அதி லிருந்து வீசிய துர்வாடை அவனை ஒருமாதிரிச் செய்தது.

குனிந்து இருகரத்தாலும் தண்ணீரைக் கிள்ளி எடுத்து மடமடவென்று குடித்தான்.

உவட்டிக்கொண்டு வந்தது.

தலையைச் சுழற்றியது.

எதுவும் நிதானித்துச் செய்ய முடியவில்லை.

அப்புறம்............

அப்புறம்............

விடிந்துவிட்டது.

பொங்கலுக்காகச் சனத்திரள் கிணற்றடியைச் சூழ்ந்து விட்டது.

எல்லோரும் வந்தாய்விட்டது.

சூரன் அப்போதுதான் அவசரமாக வந்துசேர்ந்தான.

மாதனைத்தான் இன்னும் காணவில்லை.

நன்றாக விடிந்து கிணற்றுக்குள் சூரியஒளி பரவியது.

சின்னான் படிக்கட்டு வழியால் உள்ளே எதையோ உற்றுப் பார்த்தான்.

ஏதோ ஒன்று.

மனிதக் கட்டை போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயோ'' என்று கத்திக்கொண்டே சின்னான் படிக்கட்டில் ஓடி ஓடி இறங்கினான்.

அங்கே தண்ணீருக்குள் அவன் கண்டது மாதனின் கட்டை...............

எல்லோரும் உள்ளே குரல்வைத்துக் கொண்டு சென்று விட்டனர்.

சூரனின் கண்களில் கண்ணீர் ஆறாய் ஓடியது.

அவன் கிணற்றின் அழுத்தமான குன்றைப் பார்த்தான். அதில் சிவப்பால் எழுதி இருந்த மூன்று எழுத்துக்கள். 'நஞ்சு' என்பது.

மாதனின் கடவாயில் இரத்தமும் கைப்பெருவிரல் துண்டும் கிடந்தது.

அவனின் பெருவிரல் கடித்துப் பிடுங்கப்பட்டிருந்தது.

மாதியின் குரல் கிணற்றுக்குள்ளே குமைந்து எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

461458

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே. டானியல்

இந்தத் தண்ணீருக்குள் நீங்கள் இறங்கும்போது எனது முந்தைய நாவல்களில் எல்லாம் கண்டிராத பல புதிய காரியங்களைக் காண்பீர்கள்.

எனது பஞ்சமர் நாவல் வரிசைக்குள் தண்ணீரையும் உட்படுத்தினால் முறையே பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள் என்பவற்றோடு தண்ணீரையும் சேர்த்துக் கொள்வீர்கள். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலத்திலிருந்து பஞ்சம மக்கள் தண்ணீருக்காகப் பட்ட கஷ்டங்கள், வேதனைகள், மனக் கொதிப்புகள், போராட்டங்கள், ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றினைத் தண்ணீருக்குள் நீங்கள் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org